


Tamil Comics Ulagam - King Viswa



வாசக நண்பர்களே,

கடைசியில் சொல்ல வேண்டியதை முதலிலேயே சொல்லி விடுகிறேன்-

நன்றி!

எங்களின் இந்தப் புதுமையான முயற்சிக்கு அருமையாக ஒத்துழைப்பு கொடுத்ததற்கு மிகப் பெரிய நன்றி!

"ரூ 10/-விலையில் காமிக்ஸா? சரிதான்!" என்று நிறையப் பேர் பயமுறுத்திய போது கூட, விடா முயற்சியாய் இத்திட்டத்தை தொடர்வதற்கு எனக்கு உறுதி தந்தது உங்களது வரவேற்புக் கடிதங்கள் தான்! அது உதவி நம்பர் 1.

நாங்கள் அனுப்பியிருந்த விண்ணப்பப் படிவங்களை ஆர்வத்தோடு பூர்த்தி செய்து, விற்பனையாளர்களிடம் பதிவு செய்து கொண்டீர்களே - அது உதவி நம்பர் 2-ஏனெனில், உங்களது ஆர்வமும், உற்சாகமும், விற்பனையாளர்களிடமும் தொற்றிக் கொண்டு விட்டது!

இது வரை வந்திருக்கும் நமது ஸ்பெஷல்களையெல்லாம் விட இந்த சூப்பர்-ஸ்பெஷலுக்கு ஒரு தனி appeal உள்ளது! சொல்லப் போனால், இது ஒரு ராட்சஸ-பட்ஜட்டுடன் எடுக்கப்பட்ட Multi-star மசாலா படத்தைப் போன்றது!

கொஞ்சம் காமெடி (லக்கி லூக், விச்சு, கிச்சு) கொஞ்சம் திகில் (கறுப்புக் கிழவி, ஜானி) கொஞ்சம் மசாலா (ஸ்பைடர், BATMAN etc-) கொஞ்சம் டிராஜெடி (XIII) என்று எல்லோர் ரசனைக்கும் இந்த இதழில் கதைகள் உள்ளன!

இதே கதைகளை தனித் தனி இதழ்களாகப் பிரித்து நாங்களே வெளியிட்டால் கூட, மொத்த விலை ரூ. 12 -க்குக் குறையாமல் ஆகும்! அப்படிப் பார்த்தால் ஒரு முழுக் கதை உங்களுக்கு இந்த இதழில் ஃப்ரீயாகக் கிடைக்கிறது! (வீட்டில் திட்டு வாங்க நேரிட்டால் இந்த விளக்கத்தை சொல்லிப்பாருங்களேன்)

இந்த ISSUE முதல் "ஹாட்-லைன்" என்ற புதுப் பகுதி ஆரம்பமாகிறது! பக்கம் 398ல் மேற்கொண்டு விபரங்கள் உள்ளன!

சூப்பர்-ஸ்பெஷல் பற்றிய உங்களது விமர்சனங்களை அனுப்பும் போது, 'ஹாட்-லைனைப்' பற்றிய உங்கள் அபிப்ராயத்தையும், சேர்த்து எழுதி அனுப்புங்களேன்!

தீபாவளி வாழ்த்துக்களுடன்,

S. விஜயன்.


பயங்கரப் பொடியன்!
1859-ல் ஒருநாள்- பார்ன்னி பண்ணையில் ஏகப்பட்ட கோலாகலம்-
நீண்ட காலத்திற்குப் பின் பான்னி தம்பதியினருக்கு ஒரு வாரிசு பிறந்திருந்தது-
எங்களுக்கு செல்வப் புதல்வன் பிறந்திருக்கும் செய்தியை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். —பான்னி தம்பதியினர்.
செல்லமாக பில்லி என்றழைக்கப்பட்ட வில்லியம் பான்னி அருமை பெருமையோடு சீராட்டி வளர்க்கப்பட்டான்-
இந்தா பால் குடிடா கண்ணு!
பில்லிக்கு கோபம் வர காரணமே தேவையிருக்கவில்லை. துரதிர்ஷ்ட வசமாக பெற்றோர் அதை ஒரு வேடிக்கையாகவே எடுத்துக் கொண்டனர்.
அவனுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டுப் பொருள்- அப்பாவின் ரிவால்வர். [தோட்டா நீக்கப்பட்டதுதான்]


பில்லி வளர்ந்தான். ரிவால்வர் மீதான மோகம் கொஞ்சமும் குறையவில்லை-
தன் மகன் ரிவால்வரை வைத்து விளையாடும் அழகைக் கண்டு பூரித்துப் போனார் பான்னி.
கோச்சு வண்டிப் பயணிகளை தாக்கப் போகிறாயா கண்ணு?
எத்தனை நாளைக்குத்தான் வெற்று ரிவால்வரை வைத்து விளையாடுவது? தோட்டாக்களைத் தேடி எடுத்தான் பில்லி-
நிறைய தடவை விளையாடிவிட்டோம் இந்த ஆட்டத்தை. அலுப்பூட்டுகிறது! அங்கிள். பாங்கிற்கு தங்கத்தை எடுத்துக் சென்று கொண்டிருக்கிறேன். சமர்த்தோல்லியா• வீட்டுக்குப் போடா கண்ணு!
ஆனால் விளையாட்டில் இன்றோடு மாற்றம்-
டமீல்!
!?!
?
?!


!!!
கொள்ளையடிக்கவா செய்கிறாய், திருட்டுப் பயலே- உன் முதுகுத் தோலை உரிக்கிறேன் பார்!
நகைப் பெட்டியைப் போய் ஷெரீப்பிடம் சேர்ப்பித்துவிட்டு வருகிறேன்! இப்படி ரௌடித்-தனம் செய்தால் இனிப்பு எதுவுமே கிடையாது உனக்கு ஆமாம்!
வாாாா!
கோச்சு வண்டிகளை தாக்கும் ஜாலி-யையும் விட முடியவில்லை. இனிப்புகள் மீதுள்ள ஆசையையும் விட முடியவில்லை. வெறுப்புற்று ஒருநாள் வீட்டை விட்டே வெளியேறி விட்டான் பில்லி-
பில்லியும் மூர்க்க குணமும் ஒன்றாக வளர்ந்தார்கள். ஆயுதங்களை கையாளுவதில் சாகஸங்கள் புரிந்தான். ரௌடி என்று பெயர் வாங்கினான். அவனைக் கண்டு மற்ற போக்கிரிகள்கூட ஒதுங்கிப் போக முற்பட்டனர்-
யாயா-ர்ர்-பிபிப்-பில்லியா!
என்ன திமிர்! தொப்பியை எடுத்து மரியாதை செலுத்த மாட்டாயோ?
டுமீல்!


பயங்கரப் பொடியன் பில்லி!
பிடித்துக் கொடுப்பவர்களுக்கு
10,000 டாலர்!
அவனை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பெருந்தொகை சன்மானமாக தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அவன விஷயத்தில் தலையிட யாருக்கும் தைரியம் வரவில்லை-!
வீக்லிங் நகர் ஷெரீப்பின் அலுவலகத்தில்-
ஷெரீப்-பில்லி இங்கே வந்த நாளிலிருந்து நகரில் அச்சமும் பீதியும் நிலவி வருகிறது மக்கள் வீட்டை விட்டு வெளியே வரவே பயப்படுகிறார்கள்-
நான் என்ன செய்ய முடியும்-ஜோஸ்!
சமூக விரோதியை கைது செய்ய வேண்டியது உங்களுடைய கடமையல்லவா?
ஆனால்-எனக்கும் பெண்டாட்டி பிள்ளைகள் இருக்கிறார்களே!
அவனை கைது செய்ய, அவனைவிட பத்து மடங்கு நெஞ்சுரமும், புத்திசாலித்தனமும் கொண்ட ஒரு நபர் தேவை-
ஆனால், அப்படிப்பட்ட நபர் இங்கே யாரும் இல்லையே?
SHERIFF
அப்பொழுது ஊருக்குள் நுழைந்தான் ஒரு குதிரை வீரன்! அவன் பெயர் லூக்-லக்கி லூக்!


என்ன இது- தெருவில் ஒரு ஈ காக்கா-
வைக் காணுேமே! வீக்லிங் மிகவும்
பரபரப்பான நகரமாயிற்றே. விஷ
சுரம் காலரா மாதிரி ஏதாவது
தொற்று நோய் பரவியிருக்குமோ?
FORT WEAKLING HOTEL
சுச்சுச்- சுடாதே!
என்ன பேத்துகிருய்? உன்னே சுட்டு
கொல்லவா இங்கே நான் வந்தேன்
எனக்கு ஒரு அறை வேண்டும்!
ஒகோ-
அறையா?


அருமையான ஹோட்டல்-அறை ஏதாவது காலி இருக்குமா?
அத்தனை அறைகளுமே காலி தான்!
இவ்வழியாகச் செல்லும் பயணிகள் யாரும் இந்நகரில் தங்கப் பிரியப்படுவதில்லை. என் கடைசி வாடிக்கையாளர் சற்று முன்னர் அரை குறையாக குளித்துவிட்டு கட்டிய துண்டோடு குதிரை மீது தாவி பறந்தோடிப் போய் விட்டார்!
ஆனல் நான் இங்கே நிரந்தரமாக தங்குவேன். உருப்படியானதொரு வேலை கிடைக்கும் பட்சத்தில்!
வாடகையை கட்டாயமாக முன்பணமாக செலுத்திவிட வேண்டும். பிறகு என்ருல் என்ருல் வசூலிக்க சந்தர்ப்பம் இல்லாது போய் விடலாம்.
உங்களுக்கு 'விபத்து' நேரிட்டால் தெரிவிக்க வேண்டிய முகவரியை சொல்லுங்கள்- அது தான் முக்கியமாய்த் தேவைப்படும்!
வேடிக்கையான நகரம்- இங்கே எனக்கொரு நல்ல வேலை கிடைக்குமா?
!!?!!



ம்- கைகளை உயரே தூக்கு!
ஊருக்கு புதுசு- அப்படித்தானே? இல்லாவிடில் அடாவடி மன்னன் பில்லி எதிரே வந்தால் தொப்பி-யை எடுத்து மரியாதை செலுத்த வேண்டுமென தெரிந்திருக்குமே?
குள்ளக் கத்தரிக்காய் மாதிரி இருந்து கொண்டு இது என்ன சேஷ்டை- யார் நீ?
?
ஹாஹ்ஹா- உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. என்னை கண்டு நடுநடுங்காத முதல் பயல் நீ தான்!
வா கௌ பாய்- உன் நெஞ்சுறுதியை பாராட்டி உனக்கு என் செலவில் டிரிங்க்ஸ் வாங்கித் தருகிறேன்!


ஸாம்- க்ரீம் கேக்குகள்- இரண்டு கப் சாக்லேட் கொண்டு வா!
இ- இதோ மிஸ் ர் பில்லி!
எனக்கு கேக்கும் சாக்லேட் பானமும் ரொம்பப் பிடிக்கும். இங்கே இந்த இரண்டைத் தவிர வேறு எதையுமே பரிமாறக் கூடாது என்று ஸாமுக்கு உத்தரவிட்டிருக்கிறேன் என்றால் பார்த்துக்கொள்!
படார்!
ப்ளாப்!
டுமீல்!
ஹீ-ஹீ-ஹீ! எப்படி ஒரு ஜோக் பார்த்தாயா?
அடேய் குட்டிக் குரங்கே, இன்னொரு முறை என்னிடம் இப்படி விஷமம் செய்தாயோ தோலை உரித்து விடுவேன்- ஜாக்கிரதை!


?
?
ஹீ! ஹீ!
உன்னை எனக்கு பிடிக்கிறது ரொம்பப் பிடிக்கிறது. நான் இம்மாதிரி வாய் விட்டுச் சிரித்து வெகு காலமாகி விட்டது!
ஏனோ எனக்கு உன் மீது கோபமே வரவில்லை- குட் பை!
அடுத்து என்ன விபரீதம் நிகழுமோ? நீங்கள் ஆபத்தை விலை கொடுத்து வாங்கியிருக்கிறீர்கள்!
அலட்டிக் கொள்ளாதே- போய் சூடாக இன்னொரு கப் சாக்லேட் கொண்டு வா!
12


SHERIFF
ஷெரீப்! அதிசயம்- ஆனல் உண்மை! பில்லியிடம் முறைத்துக் கொண்ட நபர் அங்கே என் ஹோட்டலில் இருக்கிறர்- இன்னமும் உயிரோடு!
ஸாம்! என்ன உளறுகிறய்- உன் சாக்லேட் பானத்தைக் குடித்ததில் மறை கழன்று விட்டதா?
நிஜமாகத்தான். ஒரு க்ரீம் கேக்கை அப்படியே பில்லியின் மூஞ்சியில் வைத்து தேய்த்து விட்டான்!
அப்படியா?
நமக்கு அந்த ஆள் ரொம்ப உபயோக மாக இருப்பார் போலிருக்கிறதே ஷெரீப்!
ஆமாம்! ஆமாம்!
வாருங்கள் போய் பார்ப்போம்!
SHERIFF
13


பில்லிக்கு 'தண்ணி' காட்டிய நபர் நீதானா?
யாரது பில்லி- அந்த விஷமக் கொடுக்கா? ஆமாம் நான் தான்! அதற்கென்ன?
ஸாம்- எல்லோருக்கும் பானம் கொண்டு வா!
எப்போதும் இந்த சூடான சாக்லேட் பானம்தானா? வேறு எதுவுமே கிடையாதா இங்கே?
பில்லி அவர்களின் அனுமதியுடன் குளிர்ந்த தண்ணீரையும் அவ்வப் போது பரிமாறுவதுண்டு!
???
பில்லி ஒரு சரியான எத்தன்! வம்புக்கு இழுக்க நல்லவர்களிடையே யாரும் அகப்படாமல் போனால் பிற துஷ்டர்களிடம் போய் மோதிப் பார்ப்பான்!


எமகாதகப் பயல்!
பேப்பர் ஏதாவது இருந்தால் கொடுங்கள்!
?
?
மின்னல் வேகத்தில் துப்பாக்கி முழங்கியது-
ஓ! அட்டகாசம் பண்ணிவிட்டாய்- அந்தப் பயலை சமாளிக்க நீதான் சரியான ஆள்! இக்கணமே உன்னை உதவி ஷெரீப்பாக நியமனம் செய்ய நாங்கள் தயார். சம்மதம் தானே?
வேலை தேடித்தான் இங்கே வந்-தேன். ஆனால் இத்தனை சீக்கிரம் பலிக்கும் என்று நான் நினைக்கவேயில்லை!
ஸாம்! இன்னொரு கப் கொண்டு வா- எல்லோருக்கும்!
15



என் பெயர் ஜோஸ்- இங்கே பிரபல் மாக உள்ள ' க்ளாரியன் ஆப் வீக்- லிங்' பத்திரிக்கையின் ஆசிரியர். பில்லியை ஒழித்து கட்டுவதற்- கென ஒரு தனி குழுவை ஏற்படுத்தியிருக்கிறேன்!
குழுவின் தலைவரும், ஒரே ஒரு உறுப்பினரும் நான்தான்! குழுவில் சேர மற்றவர்களுக்கு 'தில்' கிடையாது!
பிரச்சனை என்னவென்றால் நான் பில்லியை அரெஸ்ட் செய்தால் அவனுக்கு எதிராக சாட்சியம் சொல்ல ஒருவருமே முன் வருவதில்லை!
இதற்கிடையே-
பணம் தேவைப்படுகிற நேராக பாங்க்குக்கு செல்ல வேண்டும்!
குட்மார்னிங்!


இதோ பணப்பெட்டி- வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்!
இல்லை! நான் என்முறை வரும்வரை காத்திருக்கத் தயார்- முன்னால் நிற்பவர்கள் பணத்தை செலுத்தட்டும்!
இந்தாருங்கள் மிஸ்டர் பில்லி- எண்ணிக் கொள்ளுங்கள்!
அவசியமில்லை- உன்னை நம்புகிறேன்!
BANK
மிஸ்டர் பில்லி- சில கரன்ஸிகளை கீழே நழுவவிட்டு விட்டீர்கள்!
கவனி- பாங்க்கை கொள்ளையடித்து விட்டுபோகிறான்!
அரெஸ்ட் செய்ய அருமையான வாய்ப்பு!
விசாரணை நடக்கும் போது பார்! என்ன நடக்கிறதென்று!


FORT WEAKLING BANK
வாருங்கள் அங்கே செல்வோம்!
ஜென்டில்மேன்! இதோ என் புது உதவியாளர்- பெயர் லக்கி லூக்!
அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக!
இங்கே சற்றுமுன் பில்லி என்ன அட்டூழியம் புரிந்தான் என்று விசாரணை நடத்த வந்திருக்கிறோம்!
கோழைகள்! தொடை நடுங்கிகள்! அவன் உங்களுடைய பாக்கெட்டுகளை காலி செய்த போது வாயை மூடி கை கட்டி நின்றீர்களாக்கும்?
அட்டூழியமா- இங்கேயா- இல்லையே!
பில்லியா? நாங்கள் பார்க்கவில்லையே!
யாரது பில்லி?


என் உடம்பை தோட்டாக்கள் சல்லடைக் கண்களாக துளைப் பதைவிட பாக்கெட் காலி செய்யப்படுவது தேவலை என்று நான் தீர்மானித்தது தப்பா?
இன்னொரு விஷயம்- நகரை விட்டு வெளியேறக் கூட இவன்களுக்கு தைரியம் போதாது- அதற்கும் தடை விதித்திருக்கிறான் பில்லி!
இவர்களுடைய நல்லெண்ணத்தை சம்பாதிக்க வேறு ஏதாவது உபா-யம் செய்தாக வேண்டும்!
இந்த நிலைமை மாறியாக வேண்டும். நெஞ்சில் தம்மாத்தூண்டு தைரியமா-வது இருக்கிறவர்கள் இங்கே இருக்-கட்டும்- மற்றவர்கள் போகலாம்!
மறுகணம்-
மிஸ்டர் ஜோஸ்- உங்களுடைய பிரச்சனையின் பரிமாணம் தெளிவாக புரிகிறது!
நாங்கள் உன்னைத்தான் மலை போல நம்பி இருக்கிறோம்!
19


இதுதான் என் ஆபீஸ் லக்கி! அடுத்து என்ன செய்வதென தீர்மானிப்போம்- வா!
The FORT WEAKLING
CLARION
இவர் மிஸ்டர் லெட்! கடந்த முப்பது வருடங்களாக இங்கே அச்சுக்கோர்ப் பவராக இருந்து வருகிறார்!
குட்மார்னிங்!
கு ட் மா ர் னி ங் !
உங்களுடைய பத்திரிக்கை மூலமாக மக்களிடையே எழுச்சியூட்டுவோம்! மக்களை தட்டி எழுப்பும் வகையில் தலையங்கத்தை தீட்டுவோம்!
ஒருமணி நேரம் கழித்து-
இதை உடனே அச்சுக் கோர்த்து கொண்டு வா!


நாம் அனைவரும் திரண்டு எழுவோம் பில்லிக்கு எதிராக...
பில்லிக்கு எதிராக-
ஏய் லெட்! எங்கே ஓடுகிறாய் தலை தெறிக்க?
வேலையை இராஜினாமா செய்கிறேன்-நகரை விட்டே வெளியேறத் தீர்மானம்!
ஹூம்! பில்லி என்ற ஒரு வார்த்தை குலை நடுக்கத்தை ஏற்படுத்துகிறது அத்தனை பேருக்கும்!
பரவாயில்லை- பத்திரிக்கையை நாமே அச்சிடுவோம்!
இதோ-ரெடி! மக்களிடையே என்ன மாற்றம் நிகழ்கிறது பார்ப்போம்!
க்ளாரியன்! விஷேட பதிப்பு! வாங்கிப் படியுங்கள்! க்ளாரியன் - க்ளாரியன்!


ஆனால் பில்லிக்கு எதிராக எழுதப்பட்டிருந்த அந்த கனல் பறக்கும் தலையங்கத்தை படித்த மக்களின் மனதில் ஊற்றடித்த உணர்ச்சி என்ன தெரியுமா? பயங்கர பீதி!
நெடுநாள் வாசகர்கள் கூட-
இதோ-உங்கள் பிரதி-மிஸ்டர் ஜோன்ஸ்!
க்ளாரியனை தொடர்ந்து படிக்க மறுத்தனர்-
சத்!
க்ளாரியனு?-ஒன்று கொடு-
இந்தாருங்கள்-ஸார்!
ஊ-ப்ப்!
என்ன 'ஊப்ப்'-? அப்படி அந்தப் பத்திரிக்கையில் என்னதான் இருக்கிறது!



எல்லோருக்கும் ஆர்வத்தை தூண்டும் விஷயம் அதில் ஏதோ இருக்கிறது-எனக்கு படிக்கத் தெரியாது-கொஞ்சம் படித்துக் காட்டேன்!
ம்-ம்-வந்து-அப்படி விசேஷமாக எதுவுமே இல்லை! இதில் போட்டிருக்கிறதை அப்படியே நம்ப வேண்டும்-என்ற கட்டாயமும் இல்லை!
விஷயம் என்ன என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்-இப்போது படிக்கப் போகிறாயா-இல்லையா?
ம்- வா என்னோடு!
என் வீட்டில் சந்தடியில்லாமல் இருக்கும். அங்கே வந்து எனக்காக இதைப் படி!
முன்னொரு காலத்தில் ஓர் அழகான நாட்டில் நல்ல அரசன் இருந்தான். அவனுக்கு மூன்று குமாரர்கள்- அவர்களில் இளையவன்-
கட்டை விரலைச் சப்பிக் கொண்டே படுத்தான் பில்லி-
23



ம்- பயல் தூங்கி விட்டான்!
கொர் ர்ர்
அப்பாடா ஒருவழியாக வந்து சேர்ந்து விட்டீர்களா? ஏன் தாம தம்- ஒரே கலக்கமாகிவிட்டது எனக்கு!
நடந்ததை நான் சொன்னால் நீ கொஞ்சம் கூட நம்ப மாட்டாய்!
-அங்கே-
ம்- எங்கே போய்த் தொலைந்தான்கிழவன்!
கதையின் முடிவை கேட்டறியத் துடிப்பாக இருக்கிறது எனக்கு!
ஐயையோ- இங்கேயே வந்து விட்டானே!


பயல் வருகிற வேகத்தைப் பார்த்தால் இத்தோடு நாம் தொலைந்தோம் என்று நிச்சயமாகத் தெரிகிறது!
உங்களுடைய பத்திரிக்கையிலுள்ள ஒரு விஷயம் என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. ஒரு பிரதி வேண்டும் எனக்கு!
இந்தா- கொண்டு போ!
ஹூம்!
கொடு இப்படி!
இங்கே பீதியை கிளப்பிக் கொண்டு அலையும் தறுதலை பில்லிக்கு எதிராக நாம் ஒன்றுபடுவோம்!
ஐயோ! இது இல்லை- அந்த ராஜா ராணி கதையைப் படி!


கொஞ்சம் பொறு! இப்போ சுற்றுமுன் படித்தாயே- அதை, திரும்ப படி!
அதாவது உன்னை நாடு கடத்தி கடுஞ் சிறையில் அடைக்க. இந்நகர மக்கள் ஒன்று திரண்டு வர வேண்டும் என்று அறை கூவல் விடுத்திருக்கிறேன்!
ஹா-ஹா-ஹா! நல்ல தமாஷ்! இங்கே என்னை மகிழ்விக்கும் ஒரே நபர்- நீதான் கௌபாய்! மற்றவர்களுக்கெல்லாம் என்னைக் கண்டாலே விழி பிதுங்கி விடுகிறது!
ஆனால் எப்போது எனக்கு உன்னை பிடிக்காமல் போகிறதோ அப்போது சும்மா விடமாட்டேன்-ஜாக்கிரதை!
அதற்கு ஏகப்பட்ட சாமர்த்தியம் தேவைப்படும் சுட்டிக் குரங்கே!
இதோ பார்- ஒரு காரமெல் மிட்டாய்!
அப்படியே இதை நழுவ விடுகிறேன்- கவனி!
அது தரையைத் தொடுமுன் என் துப்பாக்கியை உருவி எடுத்து விட்டேன் பார்- எப்படி என் சாமர்த்தியம்?
சரக்!



மோசமில்லே பொடியா! இன்னெரு காரமெல்லே எடுத்துக் கொடு- என்னிடம்!
ஓ.கே - இந்தா!
கவனி- அப்படியே இதை நழுவவிட்டு!
என் துப்பாக்கியை உருவி எடுத்து-
சரக்
மீண்டும் செருகி-
காரமெல் தரையைத் தொடுமுன் அதை பிடித்து விட்டேன் பார்!
!?!?!?!
பொடியா- ஐயாவோட சாமர்த்தியத்தைப் பற்றி நீ என்ன நினேக்கிருய்?


என்னமாய் லந்து பண்ணி விட்டான்! சே- பெருத்த அவமானம்!
உயிரோடு வீடு திரும்பப் போவதில்லை நாம் என்று நடுநடுங்கிக் கொண்டிருந்தேன்-இத்தனை நேரமும்!
வீக்லிங் நகர மக்களின் வீர உணர்ச்சியை தட்டி எழுப்ப ஏதாவது ஒரு வழிமுறையை கண்டுபிடிக்க வேண்டும்-
அங்கே கவனியுங்கள்- பயல் வீட்டை விட்டு வெளியே எங்கே போகிருன்?
சைத்தானுக்குத்தான் தெரியும்!



ஒ ந கிழவரை மடக்கி எங்கோ கொண்டு போகிறான்.
இந்த 'விஷமி' உங்களுக்கு தொல்லை கொடுக்கிறானா?
ஓ நோ- அப்படியெல்லாம் எதுமில்லை- தலைவிதி!
கதையின் முடிவை விபரமாகச் சொல். நல்ல கனவு வர வேண்டும் இன்றைக்கு!
பிறகு அந்த கொடுமைக்கார சூனியக்காரி-
ஊஹூம் கொடுமைக்காரி எல்லாம் எனக்குப் பிடிக்காது-கெட்ட சொப்பனம் வந்திடும்!
பிறகு அந்த அன்புள்ளம் கொண்ட சூனியக்காரி-
கொர்ர்!



ம்- நேற்றிரவு... அருமையான தூக்கம்!
ஹே-கௌ-பாய்-என்ன இது நோட்டீஸை நீயே ஒட்டுகிறாய்?
என்ன செய்வது-வழக்கமாக நோட்டீஸ் ஒட்டும் ஒரு கோழை-மாட்டேன் என்று ஓடிப்போய் விட்டான்!
பலே, பலே- எல்லா நோட்டீஸ் களிலும் பெரிசா என் படம் அச்சிடப்பட்டிருக்கிறதே என்ன விஷயம்?
பில்லி மீது குற்ற வழக்குப் பதிவு செய்யத் தேவையான ஆதாரங்களை கொண்டு வந்து சேர்ப்பிக்கும் நபருக்கு 5000 டாலர்கள் பரிசு!


ஹீ-ஹீ-ஹீ! எனக்கு எதிராக ஒரு பயல் சாட்சியம் சொல்லத் துணியமாட்டான்! போகப் போக நீயே புரிந்து கொள்வாய்!
கோச்சு வண்டி
பழைய சுரங்கத்தினருகேயுள்ள குறுகலான கணவாய் பகுதியை, வீக்லிங்கிற்கு வரும் கோச்சு வண்டி எப்போது கடக்கும்?
இன்னும் இரண்டு மணி நேரத்தில் மிஸ்டர் பில்லி!
தாங்க்ஸ்- ஏகப்பட்ட அவகாசம் இருக்கிறது அங்கே நான் போய்ச் சேர!
கோச்சு வண்டியைத் தாக்க திட்டமிட்டிருக்கிருன் அந்த குட்டிச் சாத்தான்!
இதைப் பற்றி நாம் யாரிடமும் மூச்சுக்காட்டக் கூடாது!
பாஸ்!


கணவாய் பகுதியில்-
ம்- கோச்சு வண்டி வருகிற சத்தம் கேட்கிறது!
நிறுத்து!
இது ஒரு வழிப்பறிக் கொள்ளை- கையை தூக்குங்கள்!
இதோ மிஸ்டர் பில்லி!
?


உன் மேலாடை, தொப்பி, சிகரெட் அனைத்தையும் அப்படி வைத்து விட்டுப் போ!
யெஸ்-மிஸ்டர் பில்லி- உங்களுக்கில்லாததா?
ம்- நாங்கள் இனி போகலாமா?
தொலையுங்கள்!
ம்- ஓடு ஜல்தி!
ஆச்சரியமாக இருக்கிறதே- கோச் வண்டி இன்று ஏன் இன்னும் வந்து சேரவில்லை?



?
?
உங்களுடைய பயண சாமான்களை எங்கே- ஏன் இப்படி எல்லோருடைய முகமும் வெளுத்-துப் போயிருக்கிறது? ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டிருக்கிறது!
இல்லை- அப்படி எதுவுமே இல்லை!
உங்களுடைய தொப்பி? மேலாடை?
குறைந்த சாமான்- நிறைந்த வசதி- இது என் கோட்பாடு! தவரு?
34
ஹலோ- கௌபாய்!
?


!
எங்கேயிருந்து வருகிறாய்-குட்டிச் சாத்தானே!
தெரியவில்லை- ஷாப்பிங் போய் விட்டு வருகிறேன்! ஹீ-ஹீ!
நீ கோச்சு வண்டி பயணிகளிடம் வழிப்பறி செய்திருக்கிறாய் என்கிறேன் நான்!
சாட்சிகள் சுலபமாக கிடைப்பார்கள்-இல்லையா?
அதிலும் என் மீது குற்றம் சாட்ட துணியும் நபருக்கு 5000 டாலர்-கள் வெகுமதி என்று வேறு அறி-விக்கப்பட்டிருக்கிறது. அப்போ நான் வரட்டுமா!
சகிக்கவில்லை! தூ-காரமெல் தேவலாம்!


கோச்சு வண்டி
வண்டியோட்டியையும் பயணிக
யும் கூடத்திற்கு வரச்சொல். அவ
களோடு நான் விவாவதிக்க
வேண்டும்!
சற்று நேரம் கழித்து-
உங்களை நான் இங்கே வரவழைத்த
நீங்கள் பில்லிக்கு எதிராக வாக்குமூ
கொடுக்க வேண்டும் என்பதற்காக
பில்லிக்கு எதிராக வாக்குமூலமா?
சமர்த்துப் பிள்ளை - பரோபகா
அவனுக்கு எதிராக-
நாங்களா?
எதற்கு - எப்படி?
அவனை நான்
பார்க்கவில்லையே


ஏய் வண்டியோட்டி- நீ இம்மாதிரி ரௌடிகளை நிறையபார்த்திருப்பாயே உன் நீண்ட கால அனுபவத்தில்!
ஆமாம்- ஆமாம்! செவ்விந்தியர்கள் என்ன-டால்டன்என்ன- ஜெஸ்ஸி ஜேம்ஸ் என்ன- ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த வில்லி தரன் வெற்றி பெற்றான்!
அப்படிப்பட்ட சுத்த வீரன் நீ ஒரு அற்ப பொடியனைக் கண்டு அஞ்சுவதா?
சரியாகச் சொன்னாய்!
இதோ - உண்மையை நான் எடுத்-
ஹலோ-விவாதத்தில் நானும் பங்கேற்கலாமா? ஸாம்-எல்லோருக்கும் சாக்லெட் பானம் கொடு!


ம்... நான் வந்து குறுக்கிட்ட போது என்ன சொல்லிக் கொண்டிருந்தாய்?
நானா... இல்லையே!
இல்லை ...ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாய்...ம்— பேசு!
நா... நான் ஓய்வு பெற்று இந்தப் பகுதியிலிருந்து சென்றுவிடப் போவதாக சொல்லிக்கொண்டிருந்தேன்.
ஆமாம்... நான் அப்படி தான்கேள்விப் பட்டேன்
ஏன்,குடிக்காமல் அப்படியே வைத்திருக்கிறீர்கள்? சாக்லேட்பானம்பிடிக்காதா?
நோ...நோ-ரொம்பப் பிடிக்கும்!
ஆனால் ரொம்ப சூடாக இருக்கிறது!



இப்போதே குடிக்கப் போகிறீர்களா... இல்லையா?
படக்
மடக்
சடக்!
கடக்
ஆவ் . பயங்கர சூடு— எப்படித்தான் குடித்தீர்களோ?
ம் – எனக்கு எதிராக பேச இஷ்டமில்லாதவர்கள் வெளியேறி விடலாம்..
$\frac{1}{10}$ விநாடிகளுக்குப் பின்—
ப்போது - நானும் நீயும்
ன் இங்கே..! அத்தோடு
ரு கப் சாக்லேட் பானம்!


இம்முறை நீ வென்று விட்டாய் சனியனே! உனக்குஎதிராகவாக்கு மூலம்கொடுக்கயாராவது ஒருநபர்கிடைக்காமலா போய்விடுவான்?
ஹீ..ஹீ..இந்த ஆள்சரியான கோமாளி. என்னை எப்படியா வது சிரிக்கவைத்து விடுகி றுனே.,ஹா..ஹ்ற..ஹா!
ஐயோ...காரமெல் அத்தனையும் போச்சு...இப்படி அநியாயமாக கொள்ளையடித்துவிட்டு ஓடுகி றுனே . பாவி...!



இப்போது நீ என்ன சொன்னாய்?
ம்... என்ன?..யார்..நானா? இல்லையே?
பில்லி கொள்ளையடித்துவிட்டு ஓடுகிறான் என்று நீ இப்போது சொன்னாயல்லவா... இதை அப்படியே நீ வாக்குமூலம் கொடுக்கிறாய்!
?!?
வேண்டாம்... கருணை காட்டுங்கள்.. நான் பிள்ளை குட்டிக்காரன்!
காவல் துறையினருக்கு ஒத்துழைப்பு நல்க மறுத்தால் நீதான் கம்பி எண்ணப்போக வேண்டியிருக்கும்!
இப்போதிருக்கும் நெருக்கடி நிலைமையில் உன்னை தூக்கிலிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை —ஜாக்கிரதை!
மாஸ்டர். மாஸ்டர் உங்களுக்குளன்ன ஆச்சு?
ம் இனி நான் போய் பில்லியை கைது செய்யலாம்!



படீர்!
பில்லி.. உன்னை நான் கைது செய்கிறேன்!
?!
அந்த நல்ல குணம் படைத்த மூன்றாவது இளவரசன்..
இங்கே என்ன நடந்தாலும் நீபாட்டுக்குகதையை சொல்லிக் கொண்டுபோ!
சரி.. மிஸ்டர் பில்லி! மூன்றாவது இளவர காட்டுக்குச் சென்
என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம்?
அங்கே.. விறகு வெட்டி குறிப்பிட்ட அந்த மாயா ஜாலமரத்தைத் தேடினான்..
காரமெல்களை திருடியதாக!



... அந்த மரத்தின் அருகே ஒரு பெண் மான் நடுங்கியவாறு நின்றுகொண்டிருந்தது..
கைகளை உயர்த்து .. பில்லி!
நட ...நேராக ஸ்டேஷனுக்கு!
த வேடிக்கை எனக்கு ம்ப பிடித்திருக்கிறது கௌ-பாய்!
..அந்தப்பெண் மான், இளவரசனிடம் கூறியது...
ஓ .அன்பான இளவரசனே! உண்மையில் நானொரு இள வரசி.. சூனியக்காரி ஒருத்தி யின் சாபத்தில் இப்படி உருமாறி நிற்கிறேன்..


ஷெரீப்..குற்றவாளி ஒருவனை பிடித்து வந்திருக்கிறேன்
உள்ளே போட்டு அடைத்து வை!
44


ஏ..ஏ. ஏதோ- தப்பு நடந்துவிட்டிருக்கிறது!
இல்லை-முறைப்படி தான் நடக்கிறது!
இந்த அயோக்கிய ராஸ்கலுக்கு எதிராக புகார் மனு கொடுக்கவும் சாட்சிசொல்லவும் ஒரு நபர் ரெடி!
சாவி என்னிடமே இருக்கட்டும்! இனி நான்போய் வாதியை அழைத்து வருகிறேன்!
இதையெல்லாம் மனசில் வைத்துக் கொள்ளாதீர்கள் மிஸ்டர் பில்லி- செய்வது! சரி— இரவு உணவு எப்படி வேண்டும் உங்களுக்கு!
ஆனால்- பிரதிவாதியைக் காணவில்லை!
ஆசாமி ஓடிப்போய் விட்டானே...!


கமான்.. ஜாலி ஜம்ப்பர்! பயந்தாங்கொள்ளி கடைக் காரன் அதிக தொலைவு சென்றிருக்க மாட்டான்..
ம்.. ஜல்தி!யாரோ குதிரையில் துரத்திக்கொண்டு வருகிருர்கள்.
நிச்சயமாக அது லக் லூக்காகத்தான் இருக்கும்!
பாரத்தை குறை ஸாரா..!
நெருங்கி விட்டான்..!
பாரத்தை குறை ஸாரா!
அவர்களை பிடித்து விட் லாம் ஜாலி ஜம்ப்பர்!



பாரத்தை குறை ஸாரா!
இனியும் எப்படி குறைப்பது? வண்டியில் நானும் குழந்தைகளும்தான் மிச்சம்!
மிஸ்டர் ராஸ்ஸன்.. ஷெரீப்பை நீங்கள் சந்திக்க வேண்டும் என்பதை மறந்து விட்டு எங்கே ஓடுகிறீர்கள்!
திருப்புங்கள் வண்டியை.. வழியில் சாமான்களை சேகரித்துக்கொள்ளலாம்!


வான்கோழி பிரியாணி, சிக்கன் சிக்ஸ்டி பைவ்.. டுட்டி..ப்ரூட்டி என் இம்மாத சேமிப்புமொத் தமும் காலி!
ஷெரீப் .. இதோ மிஸ்டர் ராஸ்ஸன்..புகார் செய்ய போகிறார்
ம்....மிஸ்டர் ராஸ்ஸன் உங்களுடைய வாக்குமூலத் தை நீங்கள் கொடுக்கலாம்!
க்ளக் ..!
என்னை மன்னிக்க வேண்டும் மிஸ்டர் பில்லி — இந்த விவகா ரத்தில் என்பங்குஎதுவுமேயில்லை சிவப்பு காரமெல்லை நேராக உங் கள் வீட்டிற்கே கொண்டுவந்து கொடுக்க தயாராக இருக்கும் என்னைப்போய் .. இவர்கள்-
காவல்துறையினரோடு ஒத்து ழைக்க மறுக்கிறீரா.. ஷெரீப் இந்த நபரையும் பில்லி இருக் கிற அறையினுள் போட்டு அடைத்து வையுங்கள்.


ராஸ்ஸன், எனக்கு இதெல் லாம் கொஞ்சமும் பிடிக்க வில்லை. வாக்குமூலம் தரப் போகிறீரா.. இல்லையா?
மிஸ்டர் பில்லி என்னிட மிருந்து சில காரமெல் களை எடுத்துக் கொண்டது வாஸ்தவம்தான்... ஆனால்அதுஅற்பவிஷயம்!
பில்லி மாதிரியான ஆசாமி கள் விஷயத்தில், இப்படி நீ நடந்துகொண்டால் உனக்கு 512 ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைக்கக்கூடும்!
உஷ்... ராஸ்ஸன்!
எ..எ..என்ன மிஸ்டர் பில்லி!
டிஷ்..ஷூம்...!
ஐய்...யோ!
ஹி..ஹி..ஹி!
சைத்தானே!
பார்த்துக் கொண்டுதானே இருந்தாய் அவன்என்னைச் சுட்டதை!
வழக்கை சீக்கிரமாகவிசா ரிக்கஏற்பாடு செய்ய வேண்டும். இந்ததொடை நடுங்கி கிழவன் எந்த வினாடியும் ஊரைவிட்டு ஓடிப்போகலாம்.
49



இப்போது நீ போகலாம்-சம்மன் வரும்-வந்து சேர்! மறுபடியும் ஊரைவிட்டு ஓட எண்ணாதே!
லக்கி லூக்-எங்கே போகிருய்?
ஜட்ஜின் வீட்டுக்கு! பில்லி மீதுள்ள வழக்கை உடனே விசாரிக்கச் சொல்லப் போகிறேன்!
என்ன ஒரு அஞ்ஞானம்! பில்லி குற்றவாளி என்று தீர்ப்பளிக்கும் நெஞ்சுரம் கொண்ட ஜட்ஜ் இந்த நகரில் யாரேனும் உண்டோ?
ஜட்ஜ் ராம்ஸன், பில்லியின் மீதுள்ள குற்றச் சாட்டை நீங்கள் விசாரிக்க வேண்டும்!
பில்லியின் வழக்கையா?
எப்போதுமே கடமையை
ம்-வழக்கை என்றைக்கு விசாரிக்க வேண்டும்!
50


அடுத்த பதினைந்தாவது நிமிடம்!
ஜூரிகளை வரவழைக்க உடனே ஏற்பாடு செய்யுங்கள் - நான்போய் பில்லியை இட்டு வருகிறேன்!
வந்து - நான் -
ஆஆ - வ்!
எப்படி விரலை சுட்டுக் கொண்டீர்கள்?
கேட்காதே - எதையுமே கேட்காதே - போதாதவேளை!
ஷெரீப் - பிரமாதமாக அமைந்து விட்டது உங்களுடைய சமையல். ஆனால் ஆம்லேட்டில் தான் கொஞ்சம் உப்பு தூக்கல்!
அடுத்த தடவை இந்த தவறு நேரிடாது - மிஸ்டர் பில்லி!
தேவதைகளின் அரசி திரும்பி வருவதைக் கண்ட அரசன் -


ஓ.கே. பில்லி-போதும் சேஷ்டை! நட-கோர்ட்டுக்கு!
மிக்க மகிழ்ச்சி கொள-பாய்!
சிரிப்பதை நிறுத்தித் தொலே சனியனே! எரிச்சல் வருகிறது எனக்கு!
JURY ROOM
ஆட்களேயே காணுமே!
சே-குற்றவாளி நுழைந்த வுடன், ஜட்ஜ் உள்பட அனேவரும் எழுந்து நிற்கும் கண்ருவியை முதன் முதலாக இங்கேதான் பார்க்கிறேன்!



ம்-சீக்கிரம் ஆகட்டும்! நான் அவசரமாக போக வேண்டும்!
ம்-மிஸ்டர் பில்லி-உங்களுக்கு ரொம்ப பிடிக்குமே என்று கொஞ்சம் கார-மெல்கள் கொண்டு வந்தேன்!
ஜட்ஜ்-நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள்!
வில்லியம் எச். பான்னி! ராஸ்-ஸனின் கடையிலிருந்து காரமெல்களை திருடியதாக உங்கள் மீது குற்றம் சாட்-டப் பட்டிருக்கிறது!
விசாரணையை உடனே ஒத்திவைக்க வேண்டிய நெருக்கடி!
வாதி மயக்கம் போட்டு விழுந்து விட்டார்!


போய் ஒரு வாளி நிறைய தண்ணீர் கொண்டு வா... சொல்கிறேன்!
ஆக இது நிஜம்தானு...? கெட்ட சொப்பனம் இல் லையா? நிஜமாகவே நான் மிஸ்டர் பில்லிக்குஎதிராக வாக்குமூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறேனு?
இந்தா .. இன்னெரு வாளிகொண்டு வா!
நான்குவாளி தண்ணீரை 'அபிஷேகம்' செய்த பின்-
ம்...மிஸ்டர் ராஸ்ஸன்- உங்களுடைய வாக்கு மூலத்தைசொல்லுங்கள்.
ஹூம்,,!ஒருவேளை மிஸ்டர் பில்லி என்னிடமிருந்து சில காரமெல்களை கடஞக பெற் றிருக்கக்கூடும். அதற்காக அவரை நான் மன்னித்து விடுகிறேன்!
54


ஜூரிகளே... டால்டன் சகோதரர்கள், ஜெஸ்ஸி ஜேம்ஸ், பயங்கரவாதி ஜேன் வரிசையில் வந்திருக்கும் கொடிய சமூகவிரோதி பில்லியை ஒழித்துக்கட்ட இது ஓர் அரிய வாய்ப்பு...
... இம்மாதிரியான சமூக விரோதிகள் மனித மேம்பாட்டுக்கு முட்டுக்கட்டைகளாவர்! கூடி ஆலோசனை செய்து, நல்லதொரு தீர்மானத்திற்கு வாருங்கள்
ஆலோசிக்க இதில் என்ன இருக்கிறது? இந்தக் குற்றவாளி ஒரு நிரபராதி.!
குற்றவாளியை விடுதலை செய்கிறேன்!
பலே.. பலே!
கன்கிராஷுலேஷன்ஸ் மிஸ்டர் பில்லி!


இந்த வேடிக்கையும் எனக்கு ரொம்ப பிடித்திருந்தது... கௌ-பாய்! பின்னர் சந்திப் போம்
கோர்ட்டுக்குள்ளேமழை பெய்ததாக ஒரு பிரமை.... நன்ருக ஜலதோஷம்பிடித் துக்கொண்டு விட்டது, எனக்கு! ப்ப்புர்ர்ர்...
CLARION
ஏற்கனவே நான் உன்னை எச் சரித்தேன்.. இந்தக் கோழைகள் பில்லிக்குஎதிராக வாக்குமூலம் கொடுக்க துணியமாட்டார்கள்
இனி ஒரே வழி நான் அவனேடு நேரடியாக மோதுவதுதான்!
ஆனல், நீ செய்வதை எல் லாம் அவன் வேடிக்கையா கவே எடுத்துக்கொண்டு விடுகிருனே?
இல்லை-இம்முறை அவனு டைய பொருமையை தூண்டி வலையில் வீழ்த்தப் போகிறேன்!


அவனையும் மிஞ்சிய பயங்கர வாதியாக மாறி அவனை மட்டம் தட்டப்போகிறேன்
அன்றிரவு லக்கிலூக்கும் ஜோஸ-ும் பில்லியின் வீட்டிற்கு சற்று தொலைவில் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தனர்.
ரொம்ப விபரீதமான திட்டம் உன்னுடையது லூக்!
...இரக்க சிந்தை கொண்ட இளவரசன், சபிக்கப்பட்ட இளவரசியின் மாளிகை நோக்கி.
அதிர்ஷ்டம் துணை நிற்கட்டும் உனக்கு லக்கி!
நன்றி!
ஜாலி ஜம்ப்பர் இப்போதுமுதல் நீயும் நானும் துஷ்டர்கள் --புரிகிறதா?
?
சும்மா நடிப்புத்தான் .. கொஞ்ச நாட்களுக்கு...
நான் பிரமாதமாக நடிப்பேன் — தெரியுமோ இல்லையோ?


முதலில் கிழவன் ராஸ்ஸ னின்கடையில் நம் கைவரிசையைக்காட்டுவோம்!
முட்டைகோஸ் என்ருல் உனக்கு ரொம்ப இஷ்டமாயிற்றே!
எந்த குதிரைக்குத் தான் பிடிக்காது!
ம் இஷ்டத்திற்கு சாப்பிடு!
க்ரஞ்ச்... க்ரஞ்ச்
நிஜமாகத்தான் சொல்கிறீர்களா பாஸ்? மறைகிறை கழன்றுவிடவில்லையே?
ஐயோ... இங்கே என்ன நடக்கிறது?


???
என் குதிரையை நிம்மதியாக சாப்பிட விடாமல் யாரும் தொந்தரவு செய்தால் அதை என்னுல் பொறுத்துக்கொள்ள முடியாது?
உன்னிடம் எனக்கு எந்த விரோதமும் கிடையாது. அதை நிரூபிக்க, இதோ உன் ஆப்பிள்களில் உள்ள புழுக்களை கொல்லப்போகிறேன் பார் .. ம்—ஆப்பிள்களை மேலே தூக்கிப்போடு ..
ஆப்பிள்களை மேலே தூக்கிப் போடு — என்று சொன்னேன்...
இ.. இதோ —
டுமீல்! டுமீல்! டுமீல்!
பெர்று—தோட்டாக்களை மீண்டும் நிரப்பிக் கொள்கிறேன்!
பின்னர்—
ராஸ்ஸன்...பிறகு ஒருநாள் 18 ஆப்பிள்கள்... 15 லெட்டூஸ்க்கு காசு கொடுக்க வேண்டும்!


இங்கே கொஞ்சம் நில்.. ஜாலி ஜம்ப்பர்...
ஹலோ.. மிஸ்டர் லூக்!
ஒரு ஐஸ் பீர் கொடு!
பீப் .பீப். பீரா? இங்கே சாக்லேட் பானம் தவிர வேறு எதையும் வினியோகிக்கக் கூடாது என்று பில்லி ஆணையிட்டிருப்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!
எனக்கு இப்போது ஐஸ் பீர் வேண்டும் என்றால் வேண்டும்! ...பத்துவரை எண்ணுவேன்......
ஒன்று...
டுமீல்!
McNISH'S
Doctor's Special
COCOA
An Ideal Beverage
க்ராஷ்!
இரண்டு..


டிங்!
மூன்று..
இ..இந் தாருங்கள் மிஸ்டர் லூக்-ஐ..ஐ.. ஐஸ் பீர்!
ஊஹ‍ூம்... குளிர் போதாது. நான் கொஞ்ச நேரத்தில் திரும்பி வருவேன். 'ஜில்' லென்று பீர் ரெடிசெய்துவை. இல்லையேல் தொலைத்துக் கட்டிவிடுவேன் ஜாக்கிரதை!
ஓ. யெஸ். 'மிஸ்டர் லூக்- ரெடிபண்ணி வைக்கிறேன்..
ஒரு விளக்கு, ஒரு கண்ணாடி, விசை பியானோ, ஒரு பீர் .. என் திட்டம் ஏகப்பட்ட செலவு பிடிக்கும் போலிருக்கிறதே!



செலவைப்பற்றி கவலைப் படாதே! வேண்டிய பணம் ஏராளமாக இருக்கிறதுஎன் னிடம்! மக்களின் சுபிட்சத் திற்காக தாராளமாக நான் செலவிடத்தயார்!
ஹே! கோச்சு வண்டி போக்குவரத்து கழக இயக்குநர்.. அவருடைய உத்வி தேவை என்பதால் நான்தான் வரச் சொன் னேன்!
ஒருமணி நேரம் கழித்து--
எனக்கு சம்மதம்..! அருமையான சூழ்ச்சி திட்டம் உங்களுடையது! ஒருகோச்சு வண்டியையும் நம்பிக் கைக்குரிய சில ஆட்களையும் உங் கள் வசம்விட்டுவைக்கிறேன்!
கிளம்புவோமா... கோச்சு வண்டி பயணிகளை கொள் ளையடிக்க?
ஓ... அதோ.. தயாராக யிருக்கிருர்கள், பலே!
பேசாமல் அந்த காய்கறிக் கடைமீதே கவனம் செலுத்து வோம் பாஸ்!


ஹலோ லக்கி லூக். முன்ன
தாகவே நேரம் குறிப்பிடப்
பட்டு நான் ஒரு தாக்கு
தலுக்கு ஆளாவது இதுவே
முதல் தடவை!
ஓ. கே. உடுப்புகளை களைந்து
வைத்து விட்டு அப்பால்
நகருங்கள்!
இந்தக் கட்டு
எப்படியிருக்கு?
அட்டகாசம்
போ!
ஹே லூக்- அந்த புது தொப்பி
என்னுடையது- மறந்து
போய் விடாதே!
கச்சிதம்! நீங்கள் முன்னால்
போங்கள் - நான் சற்று
நேரம் கழித்து நகரினுள்
வருகிறேன்!


தொடர்ந்து-
ஊய்ய் - என்ன இது கோலம்?
?
??


என்ன நடந்தது?
ஒ-ஒன்-றுமில்லே! புழுக்கமாக இருந்ததால் குறைந்த உடைகளோடு பயணம் செய்து வந்தோம்-
இந்த துளேகள்?
புழுக்கமாக இருந்ததால், காற்ரேட்டத்திற்காக அப்படி-ஒரு ஏற்பாடு!
ஹலோ-பார்ட்னர்!
???
????
கவனித்தீர்களா?
பில்லியே தேவலே என்று தோன்றுகிறது!
ஆமாம்-பில்லியோடு அனுசரித்துப் போய் நமக்கு பழக்கமாகி விட்டது!



திட்டம் கச்சிதமாக அமலாகி வருகிறது!
பிரமாதம்! பாங்க்கர் என்னுடைய அலுவலகத்தில் காத்துக் கொண் டிருக்கிறார் நமக்காக!
உங்களுடைய திட்டம் அபார மானது! பூரண ஒத்துழைப்பு நல்க நான் தயார்!
ஒத்தாசைக்கு இன்றிரவு ஆள் அனுப்புகிறோம்! விடிவதற்குள் அனைத்தையும் செட்-அப் செய்துவிட வேண்டும்!
புரிகிறது!
மறுநாள் காலை-
அங்கே என்ன கூட்டம்?
BANK
?
பாங்க் இழுத்து மூடப் பட்டு விட்டது நிரந்தரமாக!
அதெப்படி? அதற்கு நான் அனுமதி வழங்க வில்லையே!


???
என்ன ஆச்சு?
ஊஹும் ஏதுமில்லை- ஒரே நாளில் ஓட்டாண்டியாகிவிட்டேன்!
நிஜத்தைச் சொல்!
வந்து- எல்லாம் அந்த லக்கி லூக்கின் கைவரிசை!
விஷயத்தை உன்னிடம் நான் உளறிக் கொட்டிவிட்ட உண்மையை அவனிடம் சொல்லி விடாதே! சரியான கிராதகன்- என்னை வெட்டிப் புதைத்து விடுவான்!
??
?????
67


திட்டத்தின் அடுத்த கட்டத்தை கவனிப்போமா?
ஆனாலும். உங்களுடைய தியாகம் அபாரமானது, ஜோஸ்!
இந்த தலையங்கத்தை அச்சுக் கோர்க்க எனக்கு கொஞ்சம் ஒத்தாசை செய்யேன்!
அருமையான வாசகம்!
கடைசிவரை படிக்க ஒரு பயலுக்கும் தைரியம் இராது!
க்ளாரியன்-விசேடப் பதிப்பு!



தாமஸ்- அந்த துக்கிரி பொடிய-
னோடு என்ன விளையாட்டு!
வா- உள்ளே!
ஆங்- என்
தொப்பிபிசசச!
?
ஹேய்-
கிழம்!
என்னோடு வீடுவரை வந்து
இதை படித்துக் காட்டும்!
முன்னொரு காலத்தில் ஒரு ஏழை
விறகு வெட்டி!
ஊஊம்! அந்த பத்திரிக்கையில்
உள்ளதை உள்ளபடி படி!
69


ம்- படிக்கப் போகிருயா- இல்லையா?
ல-லக்கி லூக் மாதிரி ஒரு அயோக் கிய சிகாமணியை உலகம் இது வரை கேள்விப்பட்டதுகூட
பொய்-பொய்! அயோக்கியத் தனத்தில் எனக்குத் தான் முதலிடம்!
ம் - மேலே படி!
குரூரத்தில். நம்பிக்கை மோசம் செய்வதில், வஞ்சனையில், முரட்டுத்தனத்தில்... லக்கி லூக், ஆனைப்பட்ட பில்லியையும் மிஞ்சி விட்டான்!
நோ- நோ! மோசடி, பித்தலாட்டம் அநியாயம்- என்ன ஒரு அவமானம் எனக்கு- ஹோஓஓ!



வருத்தப்படாதே! எனக்குத் தெரியும் - நீ தான் கொடுமைக்காரன், நயவஞ்சகன்-எல்லோராலும் வெறுக்கப்படுபவன்!
இல்லை-நீ என்னை சமாதானப் படுத்தவே இப்படிச் சொல்கிறாய்!
இப்படி எழுத அந்த பத்திரிக்கைகாரனுக்கு என்ன ஒரு துணிச்சல்!
இப்போதே போய் அவனையும் அவனுடைய பத்திரிக்கை ஆபீஸையும் உண்டு இல்லை என்று பண்ணாவிடில் என் பெயர் பில்லி இல்லை!
?
CLARION


?
உ-உ-ங்களுக்கு என்ன நேர்ந்தது!
லக்கி லூக்கிற்கு அவனைப் பற்றி நான் பத்திரிக்கையில் எழுதியிருந்தது பிடிக்காமல் போய்விட்டது!


லக்கி லூக் நம் நகருக்கு வருவ-தற்கு முன் நாம் நிம்மதியாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம்!
!
என்ன- என்னை நீங்கள் ஒரு தொல்லை என்று நினைக்க வில்லையா?
சேச்சே-அதெப்படி - நீங்கள்தான் எங்களுடைய குடும்பத்தில் ஒருவர் போல் ஆகிவிட்டீர்களே- நிஜத்தை சொல்வதானால் உள்ளுக்குள் நாங்கள் அனைவரும் உங்களை ஆழமாக நேசிக்கிறோம்!
இல்லை-பொய்-ஐயோ இதைக் கேட்டபின்னரும் என் உயிர்போகாமலிருக்கிறதே! நான் தான் உலக மகா அயோக்கியன்-என்னை மிஞ்சி எவனும் இல்லை. இனி ஒருவன் பிறக்கப் போவதும் இல்லை!
ஓடுங்கள்- அவன் வருகிறான்!
விலகு- வழியை விடு!
உ..
ஐயையோ- தொலைந்தோம்!
CLARION


ஹோட்டலினுள்ளே துப்பாக்கி முழக்கம் கேட்கிறதே!
?
ஹலோ விஷமி- இப்படி ஏதாவது ஒரு வேடிக்கையை ரசித்தவாறு பீர் பருகுவதில் உள்ள ஆனந்தமே தனி!
அந்தப் பக்கம் திரும்பாதீர்கள் மிஸ்டர் லூக்! ப்ளீஸ் உங்களுடைய கவனம் இங்கேயே இருக்கட்டும்- பிள்ளை குட்டிக் காரன் நான்!
?
74


பீரா? சாக்லேட் பானம் தவிர வேறு எதையும் இங்கே விற்கக் கூடாது என்று நான் தடை விதித்திருக்கிறேனே- மறந்து விட்டதா?
இல்லை- ஆனால் பீர் கொடுத்தால் தான் ஆயிற்று என்று மிஸ்டர் லக்கி வற்புறுத்தினார்!
இந்தா- மறுபடியும் தோட்டாக்களை நிரப்பிக் கொடு!
கொடுங்கள்- இப்படி!
இந்தாருங்கள்!
நன்றி! இன்னும் விரைவாக தோட்டாக்களை நிரப்ப நீ கற்றுக்கொள்ள வேண்டும்- என்ன?
மடக்! மடக்!
பிறகு சந்திப்போம் துஷ்டனே!
மிஸ்டர் பில்லி- இரக்க சிந்தனை- யுடைய நீங்கள்தான் என்னை அந்த சண்டாளனிடமிருந்து காப்பாற்ற வேண்டும்!



தொடர்ந்து-
பொடியன் பில்லி
சன்மானம்! லக்கி லூக் $10,000
என்ன- காரமெல்கள் இல்லையா?
இல்லை மிஸ்டர் பில்லி, லக்கி அத்தனையையும் அள்ளிக் கொண்டு போய் விட்டான்!
பி-பில்லி என்னை நீங்கள்தான் காப் பாற்ற வேண்டும். துப்பாக்கியை கையாளுவதில் வல்லவர்- அதி- பராக்கிரமசாலி நீங்கள்!
?!
ஆமாம்- எங்களை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்!
எங்கள் ரட்சகர் மிஸ்டர் பில்லி வாழ்க- மிஸ்டர் பில்லி இருக்க பயமேன்!
போதும்- அவமானம்! கேவலம்- சே!



பயல் என்ன ஒட்டம் ஒடுகிருன் என்று சற்று இங்கே வந்து பாருங்களேன்!
ஆர்ப்பாட்டத்திற்கு உடனே ஏற்பாடு செய்கிறேன்!
அதென்ன கூச்சல்- வெளியே!
பில்லி நீடுழி வாழ்க!
எங்களை ரட்சிக்கவந்த பெரும் தலைவர் பில்லி வாழ்க!
!!!
பில்லி வாழ்க!
அடுத்த ஷெரீப் பில்லி தான்!
பில்லி
நமது தலைவர்!



மிஸ்டர்லக்கி! பில்லி சொல்லி-யனுப்பினார் நீங்கள் உடனே அவருடைய வீட்டிற்கு வரவேண்டுமாம்!
அங்கே போகாதே- ஆபத்தாகி விடலாம்!
இல்லை - அங்கே நான் போக வேண்டியது அவசியம்!
நேரடி மோதலை பில்லி ஏற்றாக வேண்டிய நெருக்டி. இத்தோடு தொலைந்தான் - பயல்!
வரச் சொன்னையாமே- தடிப் பயலே!
ஆமாம் கௌ-பாய்- உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்!
78



உன்னை நான் தப்பாக கணித்து விட்டேன். நீயும் ஒரு சரியான அடாவடி பேர்வழி என்பது தெளிவாகி விட்டது. நாமிருவரும் கூட்டுச் சேர்ந்து கொண்டால் மேலை நாடு முழுவதும் கொடி கட்டிப் பறக்கும் நம் அதிகாரம்- என்ன சொல்கிறாய்?
ஹா-ஹாஹா!
தறுதலையாக வளர்ந்து விட்ட விளையாட்டுப் பிள்ளை நீ- அவ்வளவு தான்! உதவாக்கரை பொடியனோடு கூட்டுச் சேர்ந்தால் எனக்கு அவமானம்!
இந்த சிறிய நகரில் இருவருக்கு இடமில்லை- உன்னை ஒழித்துக் கட்டி விட தீர்மானித்து விட்டேன்!
நீ- என்னை? இந்தா- இந்த காரமெல்களை பொறுக்கி எடுத்துச் சென்று ஒரு மூலையில் உட்கார்ந்து சமர்த்தாக ரசித்துச் சாப்பிடு தம்பி- வீணாக அலட்டிக் கொள்ளாதே!
ஐயோ-எவ்வளவு கேவலமாக பேசிவிட்டுப் போகிறான் என்னை - அவமானம்!
மடார்!


பில்லி- வரவேண்டும் உடனே!
லக்கி லூக்கை ஒழித்துக்கட்ட துணை புரிய வேண்டும்!
வீராதி வீரா பில்லி வாழ்க!
ஏன் இப்படி கூச்சல் போடுகிறீர்கள்- போய்த் தொலையுங்கள் இங்கிருந்து!
அதோ- பில்லி!
ஹாய்- ஹாய்!
என்னை கொஞ்சம் நிம்மதியாக இருக்க விடுங்கள்!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
சுடுகிறான்- வாருங்கள் ஓடிப் போய் விடலாம்!
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!


லக்கீ இது ஆபத்தான முயற்சி என்பது என் கருத்து!
துப்பாக்கியை கையாளுவதில் நிகரற்ற சாமர்த்தியசாலி அந்த பொடியன் என்பதை மறந்துவிடாதே!
அதோ-அந்த இறகுகளை சற்றே கவனியுங்கள்-
எதற்கு?
டிங்!
வெட்கம் கெட்ட கோழைகள்-சுடும் திறனை நிரூபித்துக் காட்ட அவர்களுக்கு நான் தானா அகப்பட்டேன்!


இனியும் விவகாரத்தை இப்படியே நீட்டிக் கொண்டு போவதில் அர்த்தமில்லை!
இந்தா-இதைக் கொண்டுபோய் பில்லியிடம் கொடுத்துவிட்டு வா- உனக்கு லாலி பாப் தருகிறேன்!
கொடுக்கிற லாலி-பாப்பை முதலிலேயே கொடுத்து விடுங்களேன்!
லக்கி லூக் இதை கொடுக்கச் சொன்னார்!
?
ம்- உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்!
எ-எஸ்- மிஸ்டர் பில்லி!
இதில் என்ன எழுதியிருக்கிறது- படியும்!


???
என்ன ஆச்சு?
ஊஹூம் ஏதுமில்லை- ஒரே நாளில் ஓட்டாண்டியாகிவிட்டேன்!
நிஜத்தைச் சொல்!
வந்து- எல்லாம் அந்த லக்கி லூக்கின் கைவரிசை!
விஷயத்தை உன்னிடம் நான் உள-
றிக் கொட்டிவிட்ட உண்மையை
அவனிடம் சொல்லி விடாதே!
சரியான கிராதகன்- என்னை
வெட்டிப் புதைத்து விடுவான்!
??
?????


திட்டத்தின் அடுத்த கட்டத்தை கவனிப்போமா?
ஆனாலும், உங்களுடைய தியாகம் அபாரமானது, ஜோஸ்!
இந்த தலையங்கத்தை அச்சுக் கோர்க்க எனக்கு கொஞ்சம் ஒத்தாசை செய்யேன்!
அருமையான வாசகம்!
கடைசிவரை படிக்க ஒரு பயலுக்கும் தைரியம் இராது!
க்ளாரியன்-விசேடப் பதிப்பு!


தாமஸ்• அந்த துக்கிரி பொடிய-
ளுேடு என்ன விளையாட்டு!
வா- உள்ளே!
ஆங்- என்
தொப்பிபிஈஈஈ!
?
ஹேய்-
கிழம்!
என்னுேடு வீடுவரை வந்து
இதை படித்துக் காட்டும்!
முன்ஞெரு காலத்தில் ஒரு ஏழை
விறகு வெட்டி!
ஊஊம்! அந்த பத்திரிக்கையில்
உள்ளதை உள்ளபடி படி!
69


ம்- படிக்கப் போகிறாயா- இல்லையா?
ல-லக்கி லூக் மாதிரி ஒரு அயோக்கிய சிகாமணியை உலகம் இது வரை கேள்விப்பட்டதுகூட இல்லே!
பொய்-பொய்! அயோக்கியத் தனத்தில் எனக்குத் தான் முதலிடம்!
ம் - மேலே படி!
குரூரத்தில். நம்பிக்கை மோசம் செய்வதில், வஞ்சனையில், முரட்டுத்தனத்தில்... லக்கி லூக், ஆனானப்பட்ட பில்லியையும் மிஞ்சி விட்டான்!
நோ- நோ! மோசடி, பித்தலாட்டம், அநியாயம்- என்ன ஒரு அவமானம் எனக்கு- ஹோஓஓ!


வருத்தப்படாதே! எனக்குத் தெரியும் - நீ தான் கொடுமைக்காரன், நயவஞ்சகன்-எல்லோராலும் வெறுக்கப்படுபவன்!
இல்லை- நீ என்னை சமாதானப் படுத்தவே இப்படிச் சொல்கிறாய்!
இப்படி எழுத அந்த பத்திரிக்கைகாரனுக்கு என்ன ஒரு துணிச்சல்!
இப்போதே போய் அவனையும் அவனுடைய பத்திரிக்கை ஆபீஸையும் உண்டு இல்லை என்று பண்ணாவிடில் என் பெயர் பில்லி இல்லை!
CLARION
?


?
உ-உ-ங்களுக்கு என்ன நேர்ந்தது!
லக்கி லூக்கிற்கு அவனைப் பற்றி நான் பத்திரிக்கையில் எழுதியிருந்தது பிடிக்காமல் போய்விட்டது!
72



லக்கி லூக் நம் நகருக்கு வருவதற்கு முன் நாம் நிம்மதியாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம்!
!
என்ன- என்னை நீங்கள் ஒரு தொல்லை என்று நினைக்க வில்லையா?
சேச்சே-அதெப்படி - நீங்கள்தான் எங்களுடைய குடும்பத்தில் ஒருவர் போல் ஆகிவிட்டீர்களே-நிஜத்தை சொல்வதானால் உள்ளுக்குள் நாங்கள் அனைவரும் உங்களை ஆழமாக நேசிக்கிறோம்!
இல்லை-பொய்-ஐயோ இதைக் கேட்டபின்னரும் என் உயிர்போகாமலிருக்கிறதே! நான்தான் உலக மகா அயோக்கியன்-என்னை மிஞ்சி எவனும் இல்லை. இனி ஒருவன் பிறக்கப் போவதும் இல்லை!
ஓடுங்கள்- அவன் வருகிறான்!
விலகு- வழியை விடு!
?
ஐயையோ- தொலைந்தோம்!
The CLARION


ஹோட்டலினுள்ளே துப்பாக்கி முழக்கம் கேட்கிறதே!
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
?
ஹலோ விஷமி- இப்படி ஏதாவது ஒரு வேடிக்கையை ரசித்தவாறு பீர் பருகுவதில் உள்ள ஆனந்தமே தனி!
அந்தப் பக்கம் திரும்பாதீர்கள் மிஸ்டர் லூக்! ப்ளீஸ் உங்களுடைய கவனம் இங்கேயே இருக்கட்டும்- பிள்ளை குட்டிக் காரன் நான்!
டுமீல்
டுமீல்டுமீல்
டுமீல்டுமீல்!
டுமீல்! டுமீல்!
?



பீரா? சாக்லேட் பானம் தவிர வேறு எதையும் இங்கே விற்கக் கூடாது என்று நான் தடை விதித்திருக்கிறேனே- மறந்து விட்டதா?
இல்லை- ஆனால் பீர் கொடுத்தால் தான் ஆயிற்று என்று மிஸ்டர் லக்கி வற்புறுத்தினார்!
இந்தா- மறுபடியும் தோட்டாக்களை நிரப்பிக் கொடு!
கொடுங்கள்- இப்படி!
இந்தாருங்கள்!
நன்றி! இன்னும் விரைவாக தோட்டாக்களை நிரப்ப நீ கற்றுக்கொள்ள வேண்டும்- என்ன?
மடக்!மடக்!
டுமீல்!
டுமீல் டுமீல்!
பிறகு சந்திப்போம் துஷ்டனே!
மிஸ்டர் பில்லி- இரக்க சிந்தனை யுடைய நீங்கள்தான் என்னை அந்த சண்டாளனிடமிருந்து காப்பாற்ற வேண்டும்!
75



தொடர்ந்து-
பொடியன் பில்லி
சன்மானம்! லக்கி லூக் $10,000
என்ன- காரமெல்கள் இல்லையா?
இல்லை மிஸ்டர் பில்லி, லக்கி அத்தனையையும் அள்ளிக் கொண்டு போய் விட்டான்!
பி-பில்லி என்னை நீங்கள்தான் காப் பாற்ற வேண்டும். துப்பாக்கியை கையாளுவதில் வல்லவர்- அதி- பராக்கிரமசாலி நீங்கள்!
!?
ஆமாம்- எங்களை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்!
எங்கள் ரட்சகர் மிஸ்டர் பில்லி வாழ்க- மிஸ்டர் பில்லி இருக்க பயமேன்!
போதும்- அவமானம்! கேவலம்- சே!



பயல் என்ன ஓட்டம் ஓடுகிருன் என்று சற்று இங்கே வந்து பாருங்களேன்!
ஆர்ப்பாட்டத்திற்கு உடனே ஏற்பாடு செய்கிறேன்!
அதென்ன கூச்சல்- வெளியே!
பில்லி நீடுழி வாழ்க!
எங்களை ரட்சிக்கவந்த பெரும் தலைவர் பில்லி வாழ்க!
!!!
அடுத்த ஷெரீப் பில்லி தான்!
பில்லி


மிஸ்டர்லக்கி! பில்லி சொல்லி-யனுப்பினர் நீங்கள் உடனே அவருடைய வீட்டிற்கு வரவேண்டுமாம்!
அங்கே போகாதே- ஆபத்தாகி விடலாம்!
இல்லே- அங்கே நான் போக வேண்டியது அவசியம்!
நேரடி மோதலே பில்லி ஏற்றுக வேண்டிய நெருக்டி. இத்தோடு தொலேந்தான் - பயல்!
வரச் சொன்னயாமே- தடிப் பயலே!
ஆமாம் கௌ-பாய்- உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்!


உன்னை நான் தப்பாக கணித்து விட்டேன். நீயும் ஒரு சரியான அடாவடி பேர்வழி என்பது தெளிவாகி விட்டது. நாமிருவரும் கூட்டுச் சேர்ந்து கொண்டால் மேலே நாடு முழுவதும் கொடி கட்டிப் பறக்கும் நம் அதிகாரம்- என்ன சொல்கிறாய்?
ஹா-ஹாஹா!
தறுதலையாக வளர்ந்து விட்ட விளையாட்டுப் பிள்ளை நீ- அவ்வளவு தான்! உதவாக்கரை பொடியனோடு கூட்டுச் சேர்ந்தால் எனக்கு அவமானம்!
இந்த சிறிய நகரில் இருவருக்கு இடமில்லை- உன்னை ஒழித்துக் கட்டி விட தீர்மானித்து விட்டேன்!
நீ- என்னை? இந்தா- இந்த காரமெல்களை பொறுக்கி எடுத்துச் சென்று ஒரு மூலையில் உட்கார்ந்து சமர்த்தாக ரசித்துச் சாப்பிடு தம்பி- வீணாக அலட்டிக் கொள்ளாதே!
ஐயோ- எவ்வளவு கேவலமாக பேசிவிட்டுப் போகிறான் என்னை - அவமானம்!
மட்! மட்!
மட்!
மடார்!


பில்லி- வரவேண்டும் உடனே!
லக்கி லூக்கை ஒழித்துக்கட்ட துணை புரிய வேண்டும்!
வீராதி வீரர் பில்லி வாழ்க!
ஏன் இப்படி கூச்சல் போடுகிறீர்-கள்- போய்த் தொலையுங்கள் இங்கிருந்து!
அதோ- பில்லி!
ஹாய்- ஹாய்!
என்னை கொஞ்சம் நிம்மதியாக இருக்க விடுங்கள்!
டுமீல்!
டுமீல்!
சுடுகிறான்- வாருங்கள் ஓடிப் போய் விடலாம்!
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!



லக்கி இது ஆபத்தான முயற்சி என்பது என் கருத்து!
துப்பாக்கியை கையாளுவதில் நிக-ரற்ற சாமர்த்தியசாலி அந்த பொடி யன் என்பதை மறந்துவிடாதே!
அதோ-அந்த இறகுகளை சற்றே கவனியுங்கள்-
எதற்கு?
டிங்!
வெட்கம் கெட்ட கோழைகள்-சுடும் திறனை நிரூபித்துக் காட்ட அவர்களுக்கு நான் தானா அகப்பட்டேன்!


இனியும் விவகாரத்தை இப்படியே நீட்டிக் கொண்டு போவதில் அர்த்தமில்லை!
இந்தா-இதைக் கொண்டுபோய் பில்லியிடம் கொடுத்துவிட்டு வா-உனக்கு லாலி பாப் தருகிறேன்!
கொடுக்கிற லாலி-பாப்பை முதலிலேயே கொடுத்து விடுங்களேன்!
லக்கி லூக் இதை கொடுக்கச் சொன்னார்!
?
ம்· உன்னைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்!
எ-எஸ்- மிஸ்டர் பில்லி!
இதில் என்ன எழுதியிருக்-கிறது- படியும்!


ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு-
நோ- அதில் இருப்பதை படி!
உன் கூற்று சரிதான்-இந்நகரம் நம் இருவரையும் தாங்காதுதான்! இப்-போதிலிருந்து சரியாக ஒருமணி நேரத்தில் கிராண்ட்-ரியோ திறந்த வெளியில் ஒற்றைக்கு ஒற்றை மோ-திப்பார்த்து விடுவோம்-உனக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக லக்கி லூக்!
பார்த்து விடலாம்!
இன்னும் ஒரு மணி நேரத்தில் பில்லி லக்கி லூக்கை மோதலில் கொல்-லப் போகிறுன்!


சரி நான் அங்கே போகிறேன்!
குட் லக்-லக்கி!
தன்னம்பிக்கையோ
உற்சாகமாக களத்தை
நோக்கி வந்தான் பில்லி
கமான்-பில்லி!
அந்த சண்டாளனை ஒழித்துக்கட்டி
நகரை காப்பாற்று பில்லி!


வீக்லிங் நகர மாந்தரை உய்விக்க வந்த வீரரே- வாழ்க!
மக்கள் நலம் நாடும் தொண்டரே- நல்வாழ்த்துக்கள்!
ஐயோ- போய்த் தொலையுங்கள் எல்லோரும்! இப்படியெல்லாம் சொல்லி என்னை ஏன் அவமானப்படுத்துகிறீர்கள்? நான் நல்லவனல்ல- உலக மகா துஷ்டன், விஷமி, கிராதகன்!
வவாாாா!



ஐயோ! வெட்கக்கேடு-
அவமானம்!
பில்லி சட்டத்தின் பெயரால் உன்னை நான் கைது செய்கிறேன்!
ஆனால், அதற்குமுன், நீண்ட நாட்களாக நான் செய்ய விரும்பிய ஒன்றை செய்து முடிக்கப் போகிறேன்!
பொத்!
பொத்!
ஆவ்! ஐயோ-
செத்தேன்!


நட-ஸ்டேஷனுக்கு!
ஊம்-ஊம்!
லக்கி லூக்-வென்று விட்டாய்! உனக்கு என் பாராட்டுக்கள்!
நகர ஜனங்கள் அனைவரையும் வரவழையுங்கள். அவர்களுக்கு நான் சில விஷயங்கள் சொல்ல வேண்டும்!
உன்னைப் பற்றி ரொம்ப மிரண்டு போயிருக்கிறார்கள். பயந்து போய் ஒருவர் தவறாமல் கூட்டத்திற்கு வந்து சேர்வது நிச்சயம்!
அடுத்து-
நான் சொல்வதைக் கேளுங்கள்-உண்மையில் நானொரு ரௌடி அல்ல. பார்வைக்கு கேடிபோல் தோற்றமளிப்பவனெல்லாம் பயங்கரவாதி அல்ல என்ற உண்மையைஉங்களுக்குதெளிவு படுத்தவே நாடகமாடினேன்!
நேர்மையும், திட சித்தமும் இருந்து விட்டால் எப்படிப்பட்ட பயங்கர வாதியையும் வென்று விடலாம்!



இதை புரியவைக்கும் முயற்சியில் நான் சேதப் படுத்திய பொருட்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையாக வழங்கப்படும்!
லக்கி லூக்! நீடுழி வாழ்க-
ஹோட்டல் உரிமையாளர்-ஒரு விளக்கு, ஒரு கண்ணாடி, ஒரு பியானோ, ஒரு பீர்-
பீர்-அது நானாக வழங்கியது! அதுக்கு காசு வேண்டாம்!
வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்தது-தாமதமின்றி!
இம்முறையோ பெருத்த மாறுதல்-







சாட்சிகள் விருப்பு வெறுப்போ, பயமோ இன்றி வாக்குமூலம் கொடுத்தனர்-
காரமெல் திருட்டு அற்பமானதுதான் ஆனுல் ஒரு கொள்கைகாகத்தான் பில்லி மீது வழக்கு தொடர்கிறேன்!
அடுத்து நியூஸ் பேப்பர் கிழவர்-
அச்சுறுத்தப்பட்டேன் யுவர் ஆனர்!
ஒன்பது விஞடிகளே நீடித்த ஜூரிகளின் விவாதத்தின் முடிவில்-
குற்றவாளி என்பது எங்கள் தீர்மானம்!
JURY ROOM
பில்லி என்றைக்கப்படும் வில்லியம் எச். பான்னிக்கு 1247 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்!
டம்!
அதையடுத்து-
நாம் அவனேடு சாகவாசம் வைத்துக் கொள்ளலாகாது ரொம்ப மோசமான பேர் வழி!
மடார்! மடார்!


லக்கி லூக் உணர்த்திய வீரம் வீக்லிங் நகர மக்களின் இரத்தத்தில் கலந்து ஓடத் தொடங்கி விட்டதால். எந்தப் பிரச்சினையையும் நம்பிக்கையோடு எதிர் கொள்ளத் தயாராகி விட்டனர்-
இந்த காட்சியைத்தான் பாருங்களேன்-
இந்தாப்பா- உன்னைத் தான்!
ம்ம்!
நான் தான் ஜெஸ்ஸி ஜேம்ஸ்! மரியாதையாக பணப்பெட்டி எடுத்துக் கொடு- இனி நான் இங்கேயே தங்குவது என்ற மானத்தோடு வந்திருக்கிறேன்!
நிஜமாகவ
அடேய் பசங்களா-
இங்கே
உனக்கு என்ன ஆயிற்று? நான் ஜெஸ்ஸி ஜேம்ஸ் என்று சொன்னதை காதில் வாங்கிக் கொள்ள வில்லையா நீ?


உன்னைப் போன்ற சோதாப் பசங்களிடம் சொல்லி வை- வீக்லிங் நகர மக்களிடம் பாச்சா பலிக்காதென்று!
?!?
தார் குளியலுடன் விரட்டியடிக்கப் பட்டான் ஜெஸ்ஸி-
நிஜமாகவே புறப்பட்டு விட்டாயா?
ஆமாம்! எல்லாம் ஒழுங்கு செய்யப் பட்டுவிட்டது. இனியும் இங்கே எனக்கு என்ன வேலை?
இங்கே நீ நிகழ்த்திய சாதனை பற்றி என் பத்திரிக்கையில் விபர மாக எழுதி அதற்கு அமரத்துவம் கொடுக்க முடிவு செய்துள்ளேன்!
ஹூம்- வாய்ப்பு கிடைத்தபோதே இன்னும் சில லெட்டூஸ்களை நான் தின்றிருக்க வேண்டும்!
''தனிமையே என் வாழ்க்கை... தனிமையே என் துணைவன்!
முற்றும்.


டைகர்ஸ்!
நண்பர்கள் மூவர் சங்கி, பிப் மற்றும் [redacted] ஸ்மித் சேர்ந்து சங்கியின் தலைமையில் 'டைகர்ஸ்' என்ற குழுவை அமைத்தனர். ஒரு இனிமையான காலைப் பொழுதில்...
சங்கி உன்னால இது முடியுமா?
நான்தானே தலைவன் அதனால் எப்படியும் போட்டியில் ஜெயிக்க வேண்டும். தவிர நான் விளையாட்டு வீரன் தானே!
எதிரிக் குழு 'கார்பீல்டி'ன் தலைவன்தான் பார்ட்டன்.
ஏய்! குண்டன் எதையோ தள்ளிட்டு வரான்.
யாரோ அவனிடம் சாக்கை தந்திருக்கிறார்கள்.
பார்ட்டன் ஒரு செங்கலை எடுத்து-
இதை சங்கியின் வண்டி சக்கரத்தின் அடியில் போடுகிறேன் பிறகு பார்க்கலாம் வேடிக்கையை.
சங்கி, அதோ பார்!
ஐயோ... செத்தேன்!


கவண்கல் வைத்து அடித்த மாதிரி சாக்கு செல்ல-
ஐ...ய்...ய்...ய்...யோ
ஆ! சரியாக பார்ட்டனின் மேல் போய் விழுந்து விட்டதே!
அம்மா! என்ன நடந்தது?
நான் வண்டி தள்ளுதலுடன் இணைந்தபடகுப் போட்டிக்கு பயிற்சி செய்தேன். இது பழைய விளையாட்டு.
போட்டி நாலு மைல் தூரத்திற்கு லண்டனி-லிருந்து பேட்னிக் வரை 2மைல் தூரம் 100கிலோ சாக்கை வண்டியில் வைத்து தள்ளணும். மீதி தூரத்தை ஆற்றில் சென்றுகடக்கணும்!
என்னை பற்றி நானே சொல்லிக்க கூடாது. ஆனாலும் நான் தான் ஜெயிப்பேன்.
இது பத்தி எனக்கு தெரியாமல் இருந்திருந்தால்-
நானும் போட்டியில் சேரப் போகிறேன். அதற்கு முன் சங்கி ஜெயிக்காமல் இருக்க ஏதாவது வழிசெய்யணும்!
கவலைப்படாதே செய்திடலாம்.
சங்கி பயிற்சி செய்து கொண்டிருக்கிறான்-
சீக்கிரம் படகை பின்னால் கொண்டு வாருங்கள். நான் துடுப்பில் கால் வைத்து நின்றுகொண்டிருக்கிறேன்
சங்கி நீ படகில் தான் இருக்க வேண்டும். போட்டியின் போது இப்படி வெளியேரக் கூடாது.


பின்பு
அவன் என்ன செய்கிறுன் என்றே தெரியவில்லையே!
துடுப்பு போடுகிறுனா பொங்கல் கிண்டுகிறுனா
அவர்கள் பேசுவது எனக்கு கேட்காதது மாதிரிநடிக்கணும். என்னை ஊக்கப் படுத்தத்தான் அப்படிப் பேசுகிறுர்கள்.
அரைமைல் தூரம் சென்றதும்-
ஹாம்...ம்...ரொம்ப கஷ்டமா இருக்கே இதில் சேர்ந்திருக்க கூடாதோ...
ஆ! உயிர் போகுதே...
பார்ட்டனின் நண்பர்கள் காத்திருக்கிறுர்கள்-
நாம் கவலையே பட வேண்டாம். அந்த குண்டு சங்கி கடைசியில்தான்வருகிறுன்
இருந்தாலும் நாம் செய்ய வேண்டியதை செய்து விடுவோம்.



நன்ருக ஓடு.போ.
சர்ர்...ர்
எதிர்பாராத விதமாக பக்கத்தில் ஒரு பெரிய சரிவு
ஆ! பள்ளம் செத்தேன்!
பள்ளத்தில் சரிந்து போகிருன். இனி எங்கே இவன் போட்டிக்குப் போவது?
நல்ல சுத்துது கைபிடியை கொஞ்சம் விட்டிருந்தால் சட்னியாகிருப்பேன்
ஈான் பார்ட்டன் ஆற்றை நெருங்கி விட்டான்.
நான் தான் முதல் என் நண்பர்கள் சங்கிலை நன்ருககவனித் திருப்பார்கள்.
அதற்குள்-
ஐயோ! ஆகாயத்தில் பறக்கிற மாதிரி இருக்கே. ஜாலியா வுமிருக்கு பயமா வுமிருக்கே!
நம்பர் 13 வந்துவிட்டார்.
ஆ! என்ன வேகம் பறப்பது போல் அல்லவா வருகிருர்!


சடார்!
சபாஷ், சங்கி மிகச் சரியாக போட்டில் ஏறி விட்டாரே?
இது சங்கி அல்லவா! எப்படி இது வரை வந்தான்?
அப்பாடா, வேகமாய் போகணும். கவனமில்லாம தண்ணிக்குள்ள விழுந்திடக் கூடாது!
ஆனால் அதே நேரத்தில் சங்கி திடீரென்று வழுக்கி போட்டின் உள்ளேயே விழுந்து விடுகிறான்.
நல்லவேளை யாரும் பார்க்கவில்லை. தட்டிவிட்டுட்டேன்,


ஐயையோ சங்கி
பார்ட்டன் மறுபடி கவனக்குறைவா இருக்கிறானே!
ஐயோ! தண்ணிக்குள்ள விழுந்திட்டானே!
ஆகா சங்கி தான் முதலில் வர்றான்!
எப்படியோ, அவன் தான் ஜெயிக்க போகிறான் முடிவில்-
சங்கி வேகமாக வா கோட்டை விட்டிடாதே.
FINISH
கடைசி நிமிட கடும் போட்டி-
சங்கி ஜெயிச்சுட்டான்!
FINISH
வடகர்ஸ் வென்றுவிட்டனர்!
சங்கி பரிசு வாங்கிய நேரத்தில் பார்ட்டன் நண்பர்களுக்கும் சரியான பரிசு கிடைத்தது.
சார்! அடிக்காதே. எங்க தப்பு இல்லே. ஐயோ அடிக்காதே.
முற்றும்.


கேப்டன் பிரின்ஸ், பார்னே, பொடியன் ஜின் ஆகிய மூவரை சுமந்துகொண்டு ''கழுகு'' என்ற அந்தப் படகு பசுபிக் தீவு ஒன்றில் நின்று கொண்டிருந்தது! அப்பொழுது-
ஹலோ- நான் மேலே ஏறி வர வசதியாக ஏணி ஏதாவது இருந்தால் கீழே இறக்கு!
விசித்திரப் பாடம்


யார் நீ?
விசாரணையெல்லாம் அப்புறம்! என் கடல்-விமானத்தில் ஏதோ கோளாறு-பறக்க மறுத்து உட்கார்ந்து விட்டது! அவசரமாக நான் ஹோனலூலூ போக வேண்டும்-உன் படகும் அங்கே தான் போகிறது என்று கேள்விப்பட்டேன்!
என்னையும் பயணியாக ஏற்றிச் செல். பயப்படாதே கட்டணத்தை கொஞ்சம் கணிசமாகவே கொடுத்து விடுகிறேன். ம்- சீக்கிரம் ஆகட்டும்!
ஜெனிபர் மோரான் என் பெயர்- எங்க அப்பா ஒரு கோடீஸ்வரர். என் பயண மூட்டைகளை எங்கே வைக்க வேண்டும் என்று என் பணியாளிடம்-இல்லையில்லை- ...பைலட்டிடம் சொல்!
நிலவரம் புரியாமல் நீ ஏதேதோ பேசுகிறாய் மிஸ்-
கழுகில் நாங்கள் பயணிகளை ஏற்றிச் செல்வது கிடையாது - அத்தோடு, மொத்தத்தில் மூன்று பேருக்குத் தான் படுக்கை வசதி இருக்கிறது!
நீங்கள் மூவரும் எப்படியாவது முண்டியடித்துப் படுத்துக் கொள்ளுங்கள் - மற்ற இரண்டு படுக்கைகளில்!


மிஸ் மோரான்- வேண்டுமானால் நான் உடனடியாக உன்னுடைய பிரச்சனை குறித்து உன் தந்தைக்குத் தகவல் அனுப்பத் தயார்!
அதற் கெல்லாம் அவகாசம் இல்லே- காப்டன்! ஒருவேளே, பணம்தான் பிரச்னை என்றால்-
இந்தா-ஒரு லட்சம் டாலருக்கு செக்! படகையே என்னிடம் விற்றுவிட்டு என் வேலேக்காரனுக பணியாற்று! ம்ம்ம்- சீக்கிரம் கிளம்பு!
காப்டன்! என்ன இது- அவள்தான் புரியாமல் திமிராக பேசுகிறள் என்றால் நீங்கள் ஏன் செக்கை வாங்கினீர்கள்?
ஒரு திட்டத்தோடுதான் வாங்கினேன். ஆத்திரப்படாதே பையா- மிஸ்டர் மோரானே எனக்கு நன்கு தெரியும். தங்கமான மனிதர்!


அவர் இப்போது எங்கிருப்பார் என்று யூகிப்பதிலும் கஷ்டமில்லை!
வில்லியம் டெரென்ஸ் மோரான். P. P. கால்! ஆமாம் காத்திருக்கிறேன்!
காப்டன் பிரின்ஸிடமிருந்தா? என்ன- என் மகளைப் பற்றியா? ஓ. கே. உடனே தொடர்பு கொடு!
உன்னுடைய அறையில் தான் அவளை உட்கார வைத்திருக்கிறேன். வேறு வழியில்லை- பைலட் அப்போதே இறங்கிச் சென்று விட்டான்!
நல்லது மிஸ்டர் மோரான்- எங்களுக்கும் சம்மதம்தான். ஆகட்டும், அப்படியே செய்து விடலாம்!
நம் எஜமானிக்கு வேண்டிய வசதி எல்லாம் செய்து கொடுத்து விட்டாயல்லவா? வெரிகுட். கதவை சாத்தி விட்டு வநது நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொள்!



ஆறு மணி நேர இடைவெளிக்குப் பின் நடுக்கடலில் ஜூன் மாத சூரியனின் ஆதிக்கத்தின் கீழ்........
இந்தப் பயணம் ரொம்ப பிடித்திருக்கிறதோ மிஸ்-ஆனந்தமாய் அனுபவித்து ரசிப்பது போல் தோன்றுகிறது!
அலுங்காமல் குலுங்காமல் செல்கிறது படகு- நகருகிற மாதிரியே தோன்றவில்லை எனக்கு!
இல்லையில்லை,போய்க் கொண்டு தானிருக்கிறோம்!
வேகத்தை அதிகப்படுத்து!
மோட்டாரில் ஏதோ கோளாறு- அத்தோடு நேரம்பற்றுக்குறையால் இறக்கப்படாமல் விடுபட்டு போன வெடிமருந்து வேறு கணிசமாக படகில் இருக்கிறது!
என்ன வெடிமருந்தா? சும்மா பயமுறுத்துகிறாயா?
102


டூம்!
தொலைந்தோம்!
கமாண்டெண்ட்! பாய்லர் வெடித்து விட்டது - விரைவிலேயே படகு முழுவதும் தீ பரவி விபரீதம் நிகழப் போகிறது குதித்து தப்பியோடுவதை தவிர, உயிர் பிழைக்க வேறு வழி-யில்லை-
ஐயையோ- எந்த விநாடியும் படகு வெடித்துச் சிதறிவிட-லாம். மிஸ்- சீக்கிரம் ஓடி வா குதித்து விடுவோம்!
103


நீரில் குதித்து மிதவையில் விரைந்து சென்று விலகி விடுவோம்! ம்- குதி!
ஆனல் வந்து-
ஆனல்-வந்து-எல்லாம் இப்போது கூடாது!
நீந்தி வந்து என் கையை பற்றிக் கொள்!


மிதவையை செலுத்த ஒத்தாசை செய்·
என் உடுப்புகள், நகைகள்· அனைத்தும் படகில் அகப்பட்டுக்கொண்டு விட்டன!
குளிரில் உடம்பெல்லாம் நடுங்கு-கிறது! எதையாவது உடனே போர்த்திக் கொண்டாலன்றி செத்து விடுவேன்!
வெடி விபத்தின் பாதிப்பு கரைவரை இருக்கலாம்·முதலில், கரையை அடைந்து விலகி தொலைதூரம் ஓடி உயிரை காத்துக் கொள்வோம்-பிறகு கதகதப்புக்கு ஏதாவது வழி செய்வோம்-
என்னைவிட்டு விட்டு ஓடாதே-நில்-நானும் வந்து கொள்கிறேன்!
சைத்தானே· நடக்கக் கூட திராணியற்ற பிண்டமே! உன்னல் என் உயிருக்கும் ஆபத்து வந்து தொலைக்கப் போகிறது· எழுந்து ஓடி வா!
சரியான முரடன்!


அந்தத் தாடியும், பொடியனும் என்னுடைய பயண மூட்டைகளை தூக்கிக் கொண்டு வருவார்-கள்ல்லவா?
மாட்டார்கள்! அவர்களுக்கு மட்டும் உயிரின் மீது ஆசை யிராதா என்ன? நமக்கு முன் படகிலிருந்து பறந்து விட்டிருப்பார்கள்!
உன் உடம்பில் நீ அணிந்து கொண்டிருப்பவைதான் இப்போதைக்கு உன் ஆடையணிகலன்கள்- வளவளவென பேசிக்கொண்டிராமல் போய் காய்ந்த சுள்ளிகளை பொறுக்கி வா-
என்னை என்ன உன் வேலைக்-காரி என்று நினைத்தாயா? இஷ்டத்திற்கு விரட்டுகிறாயே! நான் பணக்காரி- எடுபிடி வேலையெல்லாம் செய்ய மாட்டேன்!
ஓகோ! சரி-நானே பார்த்துக் கொள்கி றேன்!
இந்த சிறு வேலையைக் கூட உன்னால் செய்யமுடியவில்லை அல்லவா? அவஸ்தைப் படு-
ஐயோ-குளிர் தங்க வில்லை-கொஞ்சம் இரக்கம் காட்டக் கூடாதா?


குளிர், ஊசியாக குத்துகிறது-எலும்புக்குள்ளே!
சரி-மிச்ச வேலையையாவது-பகிர்ந்து கொள்வாயல்லவா?
பிரச்னை நம் இருவருக்கும் பொதுவானது-வேலையையும் பகிர்ந்துகொள்வோம்-நான் தீமூட்டினேன். சமையல் வேலையை நீ கவனி. என் கைப்பையில் உணவு டப்பாக்கள் இருக்கின்றன! வேலை செய்ய இஷ்டமில்லை என்றால் நான் மூட்டிய தீ அருகே வராதே! பட்டினி கிட!
நீ- நீ- ஒரு அரக்கன்!
நான் சொன்னால் சொன்னது தான்- இனி உன் இஷ்டம்!
முன்னே பின்னே செய்து பழக்க-மில்லை போலிருக்கிறது-
ஆமாம்! கொஞ்சம் கருகி விட்டது- இல்லையா?



சரி சரி, எழுந்திரு- தூங்கியது போதும்! இதமான விடிகாலை பொழுதிலேயே நாம் நீண்ட தூரத்தைக் கடந்துவிட வேண்டும் இல்லையேல் சூரியன் தகிக்கும்- களைப்பாகிவிடும்!
ஹா- ஆவ்!
நாம் எங்கே போகிறோம்!
இந்த தீவின் மேட்டுப் பகுதிக்கு! அங்கிருந்து ஏதாவது குடியிருப்பு பகுதி தென்படுகிறதா-என்று பார்ப்போம் வா!
ஓ - என் பாதம் நோகிறது- இப்படி நடந்து எனக்குப் பழக்கமில்லை!
நீ தூங்கிக் கொண்டிருக்கையில் படகு நீரினுள் அமிழ்ந்து விட்டது- மீண்டும் உயிரோடு ஊர் திரும்ப வேண்டுமானல் நடப்பதை தவிர வேறு வழியில்லை! இனி உன்- இஷ்டம்!
ஆ ஆ!


செருப்பு அறுந்துவிட்டதா? கவலைப்படாதே என் கைப்-பையில் ஒரு ஜோடி காலணி இருக்கிறது! -
கொஞ்சம் பெருசு என்று நினைக்கிறேன் - சமாளித்துக் கொள்!
உன்னை நான் வெறுக்கிறேன்!
சரி சரி- புலம்பாமல் வா- மூச்சு வாங்கப் போகிறது!
அப்பாடா- அதோ ஒரு வீடு!
எழ்மையை பறை சாற்றும் குடிசை!
உன்னிடம் போன் இருக்கிறதா- அல்லது ஏதாவது ஒரு வாகனம்-? அவசரமாக செய்தி அனுப்ப வேண்டும்- நிறைய பணம் தருகிறேன்!
அங்கோ- ஹோ ஓ!
ஒரு இழவும் புரியவில்லையே?


ஹே-பிரின்ஸ- நம் துரதிர்ஷ்டம்-இவனுக்கு பணம் என்றால் என்ன என்றுகூட தெரியாது போலிருக்கிறது-பரிதாபம்!
விலகு - நான் பேசிப் பார்க்கிறேன்!
இவர்களுடைய பாஷை உனக்குத் தெரியுமா?
டாஹாங்-ஓ-வாஹெஸோ?
ஓவா!
ஓரளவு! வாய் வார்த்தையைவிட தெளிவாக கருத்துப் பரிமாற்றத் திற்கு உதவும் வேறொரு வழி உள்ளது! அதற்கு அன்பு தோழமை என்று பெயர்!
வறுமை இருந்தும் உணவுக்கு பணம் வாங்கிக் கொள்ள மறுத்து விட்டானே - அங்கே பாருங்கள் பரிதாபத்திற்குரிய அந்தப் பெண்ணை!
உன்னைப் பற்றி அவளும் இதே மாதிரி நினைக் கலாம்!
110


இந்தா-வைத்துக் கொள் - உனக்குத் தான்!
மிஸ்டர் பிரின்ஸ்-நாம் இந்த இக்கட்டிலிருந்து விடுபட்டதும்; இந்த பாமர ஜனங்கள் சந்தோஷமாக வாழ ஏதாவது செய்ய விரும்புகிறேன்-ஒரு வீடு,-ஒரு-
உண்மையான மகிழ்ச்சி என்பது நீ உன் மனதில் உருவகப்படுத்தி வைத்திருக்கிற மாதிரியானது அல்ல என்று புரிந்து கொள்-
அது மிகவும் எளிய சூழலிலும் சம்பவிக்கலாம்-இதோ-
எ-என்னை மன்னியுங்கள்-இந்த உண்மைஎனக்கு இத்தனை காலமும் புரியாமல் போய்விட்டது!
படகு விபத்து நிகழ்ந்ததும் ஒருவகையில் நல்லதுக்குத் தான்! உலகை புதிய-சரியான கோணத்தில் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு கிட்டியதல்லவா-நான் மாறி விட்டேன் - முற்றிலுமாக!
இந்தப் போலி நாடகம் இத்தனை சீக்கிரத்தில் பலனளிக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!



நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?
கோபித்துக் கொள்ள மட்டேன் என்று சத்தியம் செய்- விளக்கமாக சொல்கிறேன்!
பொறு- அடுத்து நடக்கவிருக்கும் நடவடிக் கைகளே உனக்கு உண்மையை உணர்த்தி விடக் கூடும் என்று தோன்றுகிறது!
?
அதோ வருவது- உங்களு டைய படகு அல்லவா? அது வெடித்துச் சிதற வில்லையா?
எங்கேயாவது பைன் ஆப்பிள் கள் வெடித்ததாக நீ கேள்விப் பட்டிருக்கிறுயா?
பைனுப்பிள்களா?
ஆமாம் கழுகில் இருக்கும் சரக்கு- பைனுப்பிள்கள்தாம்! வேறொரு ஆச் சரியம் உனக்குமேலேவந்துகொண் டிருக்கிறது - கவனி!


எங்க அப்பாவோட கடல்-விமானம்! ஹைறய்யா!
தான் போட்ட திட்டம் வெற்றி பெற்றதா இல்லையா என்று தெரிந்து கொள்ளும் துடிப்போடு அவர் வந்து கொண்டிருக்கக் கூடும்!
திட்டமா? நீங்களும் அவரும் சேர்ந்தா? ஆரம்பத்திலேயிருந்தா?
பொறுப்பில்லாமல் கண்டபடி ஊர் சுற்றி அலையும் பெண்ணுக்கு உலகை சரியான கோணத்தில் புரிந்துகொள்ள வைக்கும் முயற்சி-
நீங்கள் பலே ஆசாமிதான்!
ப்ச்!
ஹலோ பிரின்ஸ்- என்ன ஆயிற்று?
நான் சொல்கிறேன் டாடி- என் உல்லாசப் பயணம் வியத்தகு விதமாய் அமைந்தது. அவ்வளவுதான்! அவ்வளோதான்! இல்லையா மிஸ்டர் பிரின்ஸ்?
மிஸ் மோரான்- இதோ நீ என் பட்குக்கு விலையாக கொடுத்த செக்! பட்கிலுள்ள பைஜுப்பிள்களை குறித்த கெடுவில் உரியவர்களிடம் கொண்டு போய் சேர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு பாக்கியிருக்கிறது எங்களுக்கு. நாங்கள் விடை பெறுகிறோம்!
113
முற்றும்.



நடுக் கடல் கொள்ளை!
அழிவு, தீமை, கொள்ளைக்கழகம் என்று தங்களுக்குப் பெயரிட்டுக்கொண்டு உலகின் பலபாகங்களிலும் நாசம் விளைவித்துவந்த சமூக விரோத சக்தியை வேரறுக்க, இணைந்து செயலாற்றும் இரட்டை வீரர்களாக லாரன்ஸையும் டேவிட்டையும் நியமித்திருந்தது ஐ.நா. உளவுத்துறை! விலைமதிக்க முடியாத ப்ளாட்டினத்தை விமானத்தில் பதுமா கொண்டு சேர்க்கும் கடினமான பணி தற்போது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஏவுகணைகளை அனுப்பும் திறன்கொண்ட ஆங்கிலேய நாசகாரி கப்பல் ஒன்றை அ.கொ.தீ. கழகத்தினர் வசப்படுத்திக்கொண்டுவிட்டிருக்கும் உண்மை லாரன்ஸுக்கும், டேவிட்டுக்கும் தெரியாது.
இப்படி ப்ளாட்டினம் கொண்டு செல்லப்படும் செய்தி அ.கொ.தீ. கழகத்தினருக்கும்தெரியும் என்று சொல்கிறீர்கள்?
ஆமாம்! விமானத்தை ஹை-ஜாக் செய்யும் முயற்சியில் அவர்கள் இறங்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது!
அவர்களுடைய முகத்தில் கரியைப் பூசி விமானத்தை பத்திரமாக பதுமாகொண்டு போய்ச்சேர்க்கும் ஆற்றல் உங்களுக்குத்தான் உண்டு என்று உறுதியாக நம்புகிறோம்!
இரண்டாம் உலகப் போரில் பங்கேற்று உருக்குலைந்து போயிருக்கும் இந்த விமானத்தைவிடுத்துவேறொரு நல்ல புதிய விமானத்தை எங்களுக்கு நீங்கள் ஏற்பாடு செய்திருக்கலாம்!
சற்றைக்கெல்லாம்— பியாமி விமான தளத்திலிருந்து அவர்களுடைய விமானம் கிளம்ப ஆயத்தமானது—
கண்ட்ரோல் டவரிலிருந்து லாரன்ஸுக்கு! அதிர்ஷ்டம் உங்களுக்கு துணைபுரியட்டும்!
நன்றி ! அதிர்ஷ்டத்தின் துணை அவசியம் தான் எங்களுக்கு!
இரட்டைக் குழல் இயந்திரத் துப்பாக்கியின் விசைமீது டேவிட்டின் விரல்கள் தயார் நிலையில் இருந்தன
அந்தப்பயல்கள்மட்டும் கண்ணில் படட்டும்— சுட்டுத்தள்ளிவிடுகிறேன்..!
நீல்க்கடல் பரப்பின் மேலே விரைந்து கொண்டிருந்தது விமானம்—
ராடாரில் வேறு எந்த விமானமும் தென்படவில்லை!
யு.எஸ். விமானப்படை ஒதுங்கிக்கொண்டு விட்டது-ஆனால், அ.கொ.தீ. கழகத்தினர் நம்மைத் தாக்கும் பட்சத்தில் அவர்கள் நம்உதவிக்குவிரைந்தோடி வருவது நிச்சயம்!
ஒரு மணிநேர இடைவேளைக்குப் பின்—
ஒரு பிரிட்டிஷ் நாசகாரி, அதோ போகிறது...
ரொம்ப பழையகப்பல்—நம்முடைய விமானத்தைப்போல!
ஆனால், அந்தக்கப்பலின்தளத்திலிருந்த சிலர் அவர்களை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தனர்...
அதோ.. அந்த விமானம் தான்- எல்லோரையும் உஷார்ப்படுத்துங்கள்!
அது அ.கொ.தீ.க. கப்பல்
ஏவுகணைகள் இலக்கை நோக்கி சரி செய்யப் பட்டன.
ரெடி... ஃபயர்!


இரு ஏவுகணைகள் விமானத்தை நோக்கிக் கிளம்பின....
தங்களை நோக்கி ஆபத்து வந்து கொண்டிருப்பதை லாரன்ஸும் டேவிட்டும் தெரிந்துகொண்டனர்.
நம்மைத்தான் குறிவைத்து வருகின்றன!
சட்டென்று விமானத்தை சுழற்றிச்சரித்தார் லாரன்ஸ்.
ஆனால் ஏவுகணைகளிலிருந்த 'ட்ராக்கர்' அமைப்பு இலக்கை குறிவைத்து தேவையான திசைமாற்றத்தை கொடுத்தது...
சில வினாடிகளுக்குப்பின் — பேரழிவு...!
டம்-மால்!
தான் தலை குப்புற கீழே...கீழேபோய்க் கொண்டிருப்பது உறைத்தது லாரன்ஸுக்கு...
சட்டென்று பாராசூட்டை விரியச்செய்யும் விசையை இழுத்தார் அவருடைய சுயவுணர்வு மங்கிக்கொண்டே வந்தது-
நொறுங்கிப்போன விமானம் கப்பலிலிருந்து சுமார் அரை மைல் தொலைவில் கடலினுள் விழுந்தது—
விமானத்தை மீட்க உடனே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்!
விமானத்திலிருந்தவர்களை?
இன்னும் அவர்கள் உயிரோடிருந்தால் கண்ணில்பட்ட கணமே கொன்றுவிடுங்கள்!


டேவிட்டும் இறங்கிக் கொண்டிருந்தார்-பாரசூட்டின் உதவியோடு.....
சே என்ன ஒரு அசம்பாவிதம்!
நீரினுள் விழுந்த விநாடியே பாரசூட்டை கழற்றி எறிந்துவிட்டு, லாரன்ஸை நோக்கி நீந்தினார் டேவிட்-
அவருக்கு சுயவுணர்வு இல்லையென்று தோன்றுகிறது!
லாரன்ஸின் பாரசூட் அமைப்பைக் கழித்த டேவிட் அவரையும் இழுத்துக்கொண்டு மேலே நீர்மட்டத்திற்கு வர முயன்றார்-
நீர் மட்டத்திற்கு மேலே நீட்டிக் கொண்டிருந்த கடல் தாவரம் ஒன்றைப் பற்றிய வாறு பார்வையை நீளவிட்ட டேவிட் அதிர்ந்து போனார்...
அதோ வருகிறார்கள்— எங்களை சுட்டுவீழ்த்திய சண்டாளர்கள்!
மறைவாக குனிந்துகொண்டு நெருங்கி வந்த படகை ஆராய்ந்தார் டேவிட்...
ஆங்கிலேய கப்பற்படையைச் சார்ந்தவர்களல்ல அவர்கள்— அ.கொ.தீ. கழகத்தினர்!
நீரில் மிதந்த பாரசூட்டுகளை அ.கொ.தீ. கழக ஆசாமிகள் கண்டனர்...
விமான சிப்பந்திகள் மூழ்கிப் போயிருக்கக் கூடும்!
எதற்கும் நன்றாக தேடிப் பார்த்து விடுவது நல்லது
அதையடுத்து அந்தப்படகு அங்குமிங்குமாக சுற்றிச் சுற்றி வந்தது... அது அருகே வரும்போதெல்லாம் நீரினுள் அமிழ்ந்து மறைந்துகொண்டார் டேவிட்— லாரன்ஸோடு.
சில நிமிடங்களுக்குப் பின் தேடும் முயற்சியை முடித்துக்கொண்டு விட்டனர் எதிரிகள்
அவர்கள் செத்துப்போயிருப்பது உறுதி. இனி நா... பினாட்டினத்தை மீட்கு... முயற்சியில் ஈடுபடலாம்


விரைவிலேயே லாரன்-ஸ்க்குசுயவுணர்வுதிரும்பி விட்டது...
அ கெ ர தீகழகத்தினர் சரியானகபட நரிகள்... ஆங்கிலேய நாசகாரிகப்பலிலவசப் படுத்தி வந்து இப்படி தாக்குவார்களென்று யார் தான் யூகிக்க முடியும்?
விமானத்தை தேடும் பணி அங்கே மும்முரமாக நடைபெற்று வருவதைக் கண்டார்கள்
அந்தக்கப்பலை கவர்ந்து வரஎப்படி சாத்தியமாயிற்றோ - இவர்களுக்கு!
அவர்கள் பிளாட்டினத்தை மீட்டு தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டுபோய். விடாமல் எப்படியேனும் நாம் தடுத்தாக வேண்டும்.
விரைவிலேயே எதிரிகள், கடல் படுக்கையில் கிடந்த விமானத்தை கண்டுபிடித்துவிட்டனர்..
கொக்கி முனைகளைக் கொண்ட கேபிள்களை பயன்படுத்தி விமானத்தை பிணைத்தனர்...
.. நூறுமில்லியன் டாலர்கள் பெறுமான முன்ன ப்ளாட்டினம் மீட்கப்பட்டது ..
ம்...சீக்கிரம்—தாமதமின்றி நாம் இந்த இடத்தை விட்டு புறப்பட்டுச் சென்று விடவேண்டியது அவசியம்!
ஆனால் அந்தக் கப்பல் நகரத்தொடங்கியபோது இரு உருவங்கள் இரகசியமாக அதனுள் ஏறிக் கொண்டுவிட்டன...
சிறிது நேரம் பதுங்கிக்கிடந்தார்கள் லாரன்ஸும் டேவிட்டும்.
நம் அடுத்த நடவடிக்கை என்னஸார்?
கொஞ்சம்கூட சந்தடிசெய்யாமல் நிதானமாக நாம் செயலாற்ற வேண்டியது அவசியம் டேவிட்! தப்பு நேர்ந்ததோ அதுதான் நாம் செய்யும் கடைசித்தப்பாக இருந்துவிடும்!


மறுநாள் விடிகாலைவேளை-
நாம் சந்திக்க வேண்டிய கப்பல் — அதோ . !
இரண்டு கப்பல்களுக்கு மிடையே செய்திப் பரிமாற்றம் நடைபெற்றது.
விமானத்தை அந்தக் கப்பலுக்கு மாற்றி ஏற்றி பின் நாம் அனைவரும் அந்தக்கப்பலுக்கே செல்ல விட உத்தரவு!
மாறு வேடத்திலிருந்த அ.கொ.தீ.தலைவன்விஷமப் புன்னகை செய்தான்
இந்தக் கப்பலைவிட்டு நாம்வெளியேறுமுன் தடயம் எதையுமே இங்கே விட்டுச் செல்லலாகாது. பயணிகள் குறிப்பேட்டை அழித்துவிடுவதோடு இந்தக் கப்பலோடுநாம் சிறைபிடித்தகப்பல் சிப்பந்திகளையும் அழித்துவிட வேண்டும்!
ஆங்கிலேய கப்பலின் மாலுமிகள், கீழ் தளத்தில் குறுகிய அறை ஒன்றினுள் அடைபட்டுக்கிடந்தனர்
கதவைத் திறந்து எங்களை வெளியே விடுங்களடா சனியன்களா!
அப்போது—திடீரென்று அறைக்கு வெளியே காவல் நின்ற முரடன் லாரன்ஸ் அடித்து வீழ்த்தப்பட்டான்
சற்று நீ ஓய்வெடு ...அப்பனே!
அவ்!
இதற்கிடையே, இரு கப்பல்களும் ஒன்றையொன்று நெருங்கி வந்து நின்றன.
கதவைத் தள்ளிக்கொண்டு திடும் பிரவேசம் செய்தனர் ஸ்ட்ரென்லாம் டேவிட்டும்...
ஸாத்தான்களே...உங்களுடைய அட்டகாசத்திற்கு உரியவிலை கொடுக்கத்தான்...
அப்படியில்லை... நாங்கள் உங்களுக்கு உதவ வந்திருக்கும் நண்பர்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறேன், கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்.
இந்த பழுதடைந்த விமானத்தை அப்படியே அந்தக் கப்பலுக்கு மாற்றுங்கள். அதனுள்ளே விலைமதிக்கவே முடியாத அளவுப்ளாட்டினம் இருக்கிறது!
திடீரென்று —
ஆவ்வ்..


ஆங்கிலேய நாசகாரி கப்பலின் உண்மையான மாலுமிகள் புலி போல் பாய்ந்தனர்...
பிடியுங்கள்— விடாதீர்கள்...
ஹே.. ஜாக்கிரதை!
ஆ!
புதிதாக வந்து சேர்ந்த கப்பலி லிருந்து சீறியது ஒரு துப்பாக்கி-
அங்கே ஏதோ விவகாரம்- சுட்டுத் தள்ளு!
லாரன்ஸின் தலைமையில் மாலுமிகள் எதிரணி யினரின் கப்பலினுள் புகுந்தார்கள்—
அடித்து நொறுக்குங்கள்—
ஆனால் நாசகாரி கப்பலிலிருந்த இயந்திரத்துப்பாக்கி பயங்கரமாக பதிலடி கொடுத்தது. இயக்கியவர் - டேவிட்!
உங்களிடையே சமமாக பங்கு போட்டுக்கொள் ளுங்கள்!
ஆஆ!
எல்லாம் நல்லபடியாக முடிந்தபின் நாசகாரி கப்பலின் காப்டன் நன்றி பரிதலோடு லாரன்ஸ் டேவிட் இருவரோடும் கை குலுக்கினர்...
அந்த எதிரிகளின் கப்பலை இழுத் துச்சென்று முறைப்படி அதிகாரி களிடம் ஒப்படைக்கப்போகிறேன். அதில் கைதிகளாக உள்ள அ.கொ.தீ. கழக ஆசாமிகளோடு உங்களை நான் எங்கே கொண்டு போய்சேர்க்க வேண்டும் என்று சொல்லுங்கள்...!
பனாமாவுக்கு— ப்ளாட்டினத்தோடு
அதை அங்கே பத் திரமாக கொண்டு போய்சேர்ப்பிப்ப தாக உறுதி கூறி விட்டு வந்திருக்கி றோம். அதனால்தான்..!
மீண்டும் ஒரு முறை லாரன்ஸ், டேவிட் ஜோடிக்கு ஒரு வெற்றி!

# டாக்டர் ஆக்ரோவின் - விசித்திரச் சவால்!




விபரீதம முனைவிட்டது - யங்டவுன் மக்கள் புதியதொரு நெடுஞ்சாலையை உருவாக்க முயற்சியை மேற்கொண்ட போது!
அத்தியாயம்: 1 விசித்திர புரபஸர்!
நிறுத்துங்கள்! இனி தனியாருக்குச் சொந்தமான இடம்-போங்கள் அப்பால்!
புதிய நெடுஞ்சாலையின் வழியை அடைத்துக் கொண்டு நிற்கும் இந்தக் கட்டிடத்தை தனி-நபர் யாரும உரிமை கொண்டாட முடியாது. அரசாங்க உத்தரவு அப்படி!
அவனுக்கு அரசு அளித்த நஷ்டத் தொகையை ஏற்க மறுத்து விட்டான். மூன்று மாதத்திற்குள் இடத்தை காலி செய்ய வேண்டும் என்று விடுவிக்கப்பட்ட நோட்டீஸையும் அலட்சியம் செய்து விட்டான்!
121


யங்டவுன் உருவாவதற்கு முன்பிருந்தே அவன் இங்கே இருக்கிறான் என்ற ஒரே காரணத்திற்காக முன்னேற்ற திட்டங்களுக்கு தடையாக இருக்க அனுமதிக்காது அரசு. பலாத்காரத்தை பிரயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை!
பெரிய கொம்பன் என்று மனதில் நினைப்பு போலும்!
விஞ்ஞானி என்று கேள்வி- ஆனால் யாரும் அவனை சந்-தித்து உரையாடியதில்லை!
திடீரென்று-
ஹே- என்ன இது! ஆஆஆ!
போங்கள் அப்பால் என்று மாஸ்டர் சொன்னாரில்-லையா?


முஷ்டியை மடக்கி குத்துவிட முனைந்தான்-
வாய் வார்த்தையாக சொன்னால் உங்களுக்குப் புரியாது!
நோ-ஜேஸன் அவனை கீழே விடு! வேறொரு நல்ல உபாயம் இருக்கிறது!
டாக்டர் ஆக்ரோவின் முகத்தில் விஷமப் புன்னகை விரிந்தது-
முன்னேற்றத்தை பற்றி பேசுகிறார்கள் இந்த அறிவிலிகள் - முன்னேற்றம்-இதுவா முன்னேற்றம்? அவர்களுக்கு உரியமுறையில் பாடம் கற்பிப்போம்- நீ வா உள்ளே!
இதுவரை உலகம் கண்டிராத மதிநுட்பம் படைத்த தலைசிறந்த விஞ்ஞானிக்கு ஆத்திரமூட்டினால் என்ன ஒரு விபரீத விளைவு ஏற்படும் என்று விரைவிலேயே தெரிந்து கொள்ளப் போகிறார்கள்!


நூதன கருவிகள் குவிந்து கிடந்த ஆய்வுக்கூடத்தின் உள்ளே புகுந்தார் டாக்டர் ஆக்ரோ-
இவற்றையெல்லாம் அவர்கள் அழிப்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை-இவற்றின் உபயோகத்தையெல்லாம் தாண்டி வெகு தொலைவுக்கு வந்துவிட்ட என் ஆராய்ச்சி இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது!
கட்டிடத்தை தரைமட்ட மாக்க அவர்களை அனுமதிக்கப் போகிறீர்களா-மாஸ்டர்?
மறுபடியும் ஒரு விஷமப் புன்னகை இழை யோடியது-ஆக்ரோவின் முகத்தில்-
ஒதுக்குப்புறமாக, அமைதியான வேறு ரிடத்தை தேர்ந்தெடுத்து போய்விடுவோம் என் ஆராய்ச்சியின் இறுதிக் கட்டத்திற்கு பயனுள்ளவற்றை மட்டுமே நாம் எடுத்துச் செல்வோம்-குறிப்பாக-அதோ அந்தக் கருவி


ஒருமணி நேர இடைவேளைக்குப் பின்-
வெற்றி! அதோ கிளம்பி விட்டார்கள்! ஆனால் ஒரே ஒரு சூட்கேஸை மட்டுமே எடுத்துக் கொண்டு போகிறார்களே— இதற்கு என்ன அர்த்தம்?
முன்னேற்றத்துக்கு துதிபாடும் முட்டாள்களே-சிரிக்கிறீர்களா-சிரியுங்கள்-விரைவிலேயே உங்களுடைய சிரிப்புக்கு ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைக்கிறேனா இல்லையா-பாருங்கள்!
திடீரென்று சீரியஸாகிப் போனான் ஆக்ரோ-
ஹூம்-உங்களுடைய மூளை அபாரமானது மாஸ்டர்! ஒரு பயல் கிட்டே வர முடியாது!
என் சாதனையின் முழு பரிமாணமும் சரிவர வெளிப்பட வேண்டுமானால் அவர்களிடையே ஒருவனுக்காவது கிட்டத்தட்ட என் அளவு மூளை இருந்தால்தானுண்டு!


அதையடுத்து-
ஸ்பைடர் என்கிற பிரகிருதி யார், ஜேஸன்?
ஸாரி மாஸ்டர்! ஐந்தாண்டுகளுக்கு முன் நம் ரேடியோ சாதனம் பழுதுபட்ட பின் வெளியில் தொடர்பே சுத்தமாக அற்றுப் போய் விட்டது! நான் போய் ஒரு செய் தித் தாள் வாங்கி வரட்டுமா?
ஸ்பைடருக்கு மீண்டும் ஒரு வெற்றி! கொள்ளையர் கூட்டம் முறியடிப்பு!
ஸ்பைடரின் மற்றுமொரு சாதனையை பாராட்டி பக்கம் பக்கமாக எழுதியிருந்தார்கள்-
பயல் அசகாய சூரன்தான் போலிருக்கிறது! சற்றுமுன் நான் குறிப்பிட்ட அளவுக்கு தேறுவான் என்று தோன்றுகிறது! நான் என் வெற்றியை நடைமுறைக்கு கொண்டு வரும்போது இவனும் பங்கருகில் இருந் தால் நன்றாயிருக்கும்!
THE SPIDER


மாதம் ஒன்று கழித்த பின் ஒருநாள்-ஸ்பைடரின் ஹெலி-கார் யங்டிவுலே இலக்கு வைத்து பயணம் செய்து கொண்டிருந்தது-
அது வெறும் கட்டுக்கதை யாக இருக்கட்டும்-பாஸ்!
நானும் அப்படித்தான் நினைக் கிறேன்-பாஸ்! நம்மை வெட் டியாக இழுத்தடிக்கும் ஏமாற்று விவகாரம் இது என்று தோன்று கிறது!


ஆக்ரோஷமாக ஓங்கி ஒரு குத்து குத்தினான் ஸ்பைடர்!
உஷ்! வாயை மூடுங்கள்-எனக்குத் தெரியாதா- இது புத்தி பேதலித்து விட்ட ஒரு வீணனின் உளறல் என்று?
127


ஒரு வேளை இது நிஜமாக இருந்து நகரம் அழிக்கப்பட்டு விட்டால் எனக்கு எத்தனை அவப்பெயர்?
நியூயார்க் செய்தி
ரேடியோவில்
அறிவிப்பு!
சவால்!
இது ஒரு புனை பெயர் என்றால், ஆக்ரோ என்ற பெயரை தேர்ந்தெடுக்க காரணம்? தங்கப் புதையலை தேடி ஜேஸன் என்பவன் பயணம் செய்த கப்பலின் பெயர் அது-அந்தக் கப்பல் திசைமாறிச் சென்று புதிரானதொரு உலகுக்கு அவர்களை கொண்டுபோய் சேர்த்ததாக கதை! இதில்தான் ஏதோ குறிப்பு இருக்க வேண்டும். ஆனால் அது என்ன என்று எனக்குக்கூட விளங்கவில்லை!
எப்போதும் விழிப்புடனிருக்கும் என் ஆறாவது புலனும்கூட இந்த அச்சுறுத்தலில் நிஜமிருப்பதாக எச்சரிக்கிறது.
அந்த அயோக்கியனின் பெயர் டாக்டர் ஆக்ரோ என்று பேப்பரில் இருக்கிறது. ஆனால் மருத்துவர்கள் பட்டியலிலோ-டாக்டர் பட்டம் பெற்ற விஞ்ஞானிகள் பட்டியலிலோ இப்படியொரு பெயர் இடம் பெறவேயில்லை!


யங்டவுனை நெருங்கி விட்டார்கள்-
கட்டுக் கதையா இல்லையா என்று இன்னும் சற்று நேரத்தில் தெரிந்து விடும்-
அதோ-ஸ்பைடர்! சவாலை ஏற்று, முறியடிக்க வந்து விட்டான்!


ஸ்பைடர் தன் ஹெலிகாரை விட்டு வெளியேறியபோது-
மாஸ்டர்; நீங்கள் ரேடியோ சிற்றலை வரிசையில் விடுத்த செய்தி பலனளித்து விட்டது-பயல் வந்து விட்டான்!


டார்டர் ஆக்ரோ விகாரமாக இளித்தான்-
எனக்குத் தெரியும்! எந்தச் சவாலையும் அலட்சியம் செய்யக்கூடிய நபரல்ல அவன். இனியும் நாம் காத்திருக்க வேண்டியதில்லை, அந்த டிரான்ஸ்மிட்டரை இயக்கு!
மறுவினாடி அவனுடைய குரல் யங்டவுனின் மூலை முடுக்கு எங்கிலும் எதிரொலிக்கத் தொடங்கியது-
டாக்டர் ஆர்கோ பேசுகிறேன்- இதுவரை சரித்திரத்திலேயே இல்லாத அற்புத சாதனை ஒன்றில் நீங்களும் பங்கேற்கும் நேரம் வந்து விட்டது!


முன்னேற்றம், முன்னேற்றம் என்று பேசும் அறிவிலிகளே- நீங்கள் சாதித்திருப்பது நிஜமான முன்னேற்றம்தானா? இல்லை- பிரமையில் உழலும் உங்களுக்கு நிஜத்தை வெளிச்சம் போட்டு காட்டப் போகிறேன்- அதற்காக நாம் முந்தைய கால கட்டத்தை நோக்கி பயணம் செய்யப் போகிறோம்!
பயல் வெறும் ஏமாற்றுப் பேர்வழியில்லை ஸ்பைடர்! சரியான அரைக் கிறுக்கு!
அந்த பயணத்தில் நீயும் பங்கேற்க வேண்டும் என்பதாலே உன்னை இங்கு வரவழைத்தேன் ஸ்பைடர்! முதலில் உனக்கொரு சிறு பரீட்சை! நீ என் இருப்பிடத்தைக் கண்டு பிடி பார்க்கலாம்!
நீ வெற்றி பெற்றுவிட்டால், 'பரிசாக' காலப் பயணத்தில் பங்கேற்கும் அரிய வாய்ப்பை பெறுவாய்!
அவனிடமிருந்து ஒலிபரப்பாகும் ரேடியோ அலை கிளம்பும் இடத்தை துல்லியமாக காட்டிவிடும் இந்தச் சிறு கருவி- அதோ அந்த ஹோட்டல் மாடி- சந்தேகமேயில்லை!


அந்த இடத்தை நோக்கி ஸ்பைடர் ஓடியபோது-
மாஸ்டர்- பயல் ஓடி வருகிறான்!
என் திறமைக்கு ஏற்ற எதிரியை கண்டுபிடித்து விட்டோம் என்று நம்புகிறேன்! ம்ம்- ஆரம்பிப் போம் நம் கைவரிசையை!


அதைத் தொடர்ந்து-
இதோ தொடங்கி விட்டது!



மாடிப்படிகளில் ஸ்பை-டர் வேகமாக ஏறிச் சென்று கொண்டிருந்த போது நிகழ்ந்தது அந்த விபரீதம்-
அதென்ன விநோத-மான கிறீச்சிடும்ஒலி? எல்லாமே ஒரேயடி-யாக அதிர்கிறதே!
கூரையும் தரையும் ஒருங்கே சுழல்வதான பிரமை-தானும் வசமிழந்து எங்கோ ஈர்க்கப்படுவதாக உணர்ந்தான் ஸ்பைடர்-
எனக்கு என்ன ஆயிற்று?
133


அடுத்து மீண்டும் எல்லாமே சமனப் பட்டு விட்டது-
அங்கே உள்ளேயிருந்துதான் வந்தது அந்த ஒலி- டாக்டர் அங்குதானிருக்கக்கூடும்!
ஆனால்-
இங்கே யாரையும் காணோமே?
முழிக்கிறான் பார்- என் மாயத் திரையின் பின்னே நாம் நிற்பதால் நம்மை அவன் காண முடியவில்லை- நான் இஷ்டப்பட்டு காட்டுவதை மட்டுமே அவனால் பார்க்க முடியும்!


அப்போது கீழேயிருந்து ஆர்டினியின் கூக்குரல் கேட்டது-
பாஸ்- கீழே இறங்கி வாருங்-கள்- சீக்கிரம்!


அதையடுத்து- ஸ்பைடர் கூட பிரமித்துப் போனான்-
பாருங்கள் பாஸ்- அந்த குன்றுகளும் மரங்களும் திடீரென்று எப்படி அங்கே முளைத்தன?
பதினெட்டாம் நூற்றாண்டு அமெ-ரிக்கா! நவீன வசதிகளுக்காக மனிதன் அழித்த இயற்கை வளம் அந்நாளில் இருந்தது போல! வா ஜேஸன்- போய் பீதியில் உறைந்து போயிருக்கும் குழு-வினரோடு சேர்ந்துகொள்வோம்!


அவர்களிருவரும் கீழே இறங்கி வந்து சேர்ந்த போது
நிஜம்தானா- இல்லை பிரமையா? அங்கே வருவது செவ்விந்தியர் கூட்டமா?
ஸ்பைடர் இப்போது எப்-படி நடந்துகொள்வானோ எனக்கே தெரியாது!
டாக்டர் ஆக்ரோ பித்தலாட்ட பேர்வழியில்லை என்பதை இது உறுதிப்படுத்துகிறது! நம்மை முந்தைய காலத்துக்கு கொண்டு சென்று விட்டான்!


ஓடிச்சென்று எங்கே-யாவது பத்திரமாக பதுங்கிக் கொள்ளுங்கள்- பொறுப்பை என்னிடம் விட்டு விட்டு!


சட்டென்று அருகே நின்ற போலீஸ் வேனுக்கு
நுழைந்த ஸ்பைடர் சைரனை உச்ச தொனியில்
அலற விட்டான்—
ஊ ஊய்ய்!
ஐயோ - குகுமாகி தெய்வமே!
என்ன இது? ஊய்ய்!
குதிரைகள்
வெருண்டு
ஓடுகின்றன!


மறுபடியும்
இந்தப் பக்-
கம் தலை
காட்டவே
கூடாது!
ஓடு- ஓடு! அந்த சைத்தான் என்ன-
மாய் ஓலமிடுகிறது! இம்மாதிரியான
ஒரு பயங்கரத்தை நான் கேள்விப்-
பட்டது கூட இல்லை!


சற்றுத் தொலைவில்-
டொகாவா- அங்கே அப்படி ஊளையிடும் அந்த ஜந்து எது?
எதுவாக இருந்தால் என்ன? அரசனின் நெஞ்சுறுதி மிக்க படை வீரர்கள் நம் மனத்தில் அச்சத்திற்கே இடம் கிடையாது- நம்மை யாராலும் வெற்றி கொள்ள முடியாது!
அந்த ஜந்துவை நான் வீழ்த்துகிறேன்- நீங்கள் எதிரிகளை வளைத்துப் பிடியுங்கள்! இந்த அசம்பாவிதத்திற்கான காரணத்தை அவர்களிடமிருந்து கேட்டறிவோம்!


டொகாவின் வில்லிலிருந்து அம்பு ஒன்று கிளம்பிய மறுகணம் கார் சக்கரம் ஒன்று படீரென்று வெடிக்கும் ஓசை எழுந்தது—
சரியான அடி. அந்த ஜந்து எப்படி தள்ளாடுகிறது பார்! வலி தாளாமல் அது முணகும் ஓசை பரிதாபமாக இருக்கிறது!
அதனுள் அமர்ந்து பயணம் செய்து வந்த ஆசாமி தப்பியோடுகின்றான்—அவனை கைது செய்வோம்!
POLICE


தன் வாயு துப்பாக்கியை உருவி எடுத்தவாறு ஓட்டம் பிடித்தான் ஸ்பைடர்—
இவன்களோடு மோதிப் பார்ப்பதல்ல என் நோக்கம்!


வாயுத்துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட இழைகளைப் பற்றி மேலே தொற்றிக் கொண்டு விட்டான் ஸ்பைடர்-
டொகாவா, உன் கணிப்பு தவறு- சாதாரண மனிதனல்ல இவன்—இதைப் பற்றி குகுமாகியிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் நாம்!
என்னை முந்தைய கால கட்டத்துக்கு கொண்டு வந்து சேர்த்த அயோக்கியனை தேடிப் பிடித்து சரியானபடி பாடம் கற்பிக்க வேண்டும்!
ஆர்டினியும், பெல்ஹாமும் அங்கே வந்து சேர்ந்தனர்-
பாஸ்- உங்களை எங்கெல்லாம் தேடுவது? இரண்டு செவ்விந்தியர்கள் நகருக்குள் எப்படியோ இரகசியமாக நுழைந்து-
இரு நபர்களை அடித்து வீழ்த்தி தூக்கிச்சென்று விட்டார்கள்!
40


சீற்றத்தோடு பறந்தான் ஸ்பைடர்-
எல்லோரும் ஓடிச் சென்று பதுங்கிக் கொள்ளுங்கள் என்று நான் விடுத்த எச்சரிக்கையை அலட்-சியம் செய்ததால் வந்த வினை!
விரைவிலேயே ஒரு செவ்விந்திய குடியிருப்பை வந்தடைந்தான் ஸ்பைடர்-
அதோ அவனேதான்! என்னமாய்ப் பறந்து வருகிறான் பார்-பறவையைப் போல்!
அந்த இரு மடையர்களும் இன்னும் உயிரோடுதான் இருக்கக் கூடும்!
அவனுடைய ஆட்களை தாம் தாக்கியதற்கு பழி வாங்க வந்திருக்-கிறானோ?


ஸ்பைடர் தரையிறங்கியதும்-
எங்களை விட்டு விடு! இனி அந்த குகுமாகியே ஆணையிட்டாலும் உங்கள் ஆட்களை தாக்க மாட்டோம்- இது சத்தியம்!
இவர்கள் பிடித்து வந்த இரு நபர்களும் காணவில்லை. திடீரென்று இவர்களுடைய நடவடிக்கையில் பெருத்த மாற்றம் தென்படுகிறது. காரணம் விளங்கவில்லையே?
நடுநடுங்கியவாறு எழுந்து நின்றான் ஒரு செவ்விந்தியன்-
எண்ணவோட்டத்தைபரிமாறிக்கொள்ளும் திறன் மூலமாக இவனோடு உரையாட முடியும் என்று நினைக்கிறேன்! அருகே வாடா- பன்றிப் பயலே!
அவன் பேசவேயில்லை. இருந்தும் அவனுடைய வார்த்தைகளை என்னால் கேட்கமுடிகிறது புரிந்து கொள்ள முடிகிறது!


மௌன உரையாடல்தொடர்ந்தது-
யார் நீங்கள்? குகுமாகி என்பது யார்- அல்லது என்ன?
பேய் அரசன் குகுமாகியின் அடிமை நாங்கள். எங்களுடைய பணி அவருக்காக வேட்டையாடுவது, எதிரிகளோடு போரிடுவது, எங்களுக்கென்று எதுவுமே சொந்தம் கிடையாது!
புரிகிறது! அதனுல்தான் அரைப் பட்டினியில் இப்படி வாடித் தளர்ந்து போயிருக்கிறீர்களா? அது சரி- இன்னொரு குழுவினர் தளதளவென்று வெள்ளை சாயம் பூசிக்கொண்டு- யார் அவர்கள்?
டொகாவையும் மற்ற வீரர்களையும் குறிப்பிடுகிறீர்களா? அவர்கள் சலுகை பெற்றவர்கள்-குகுமாகியின் வாரிசுகள்?
சிறைப்பிடிக்கப்பட்ட எங்கள் ஆசாமிகள் எங்கே?
குகுமாகியிடம்- அவருடைய இருப்பிடத்திற்கு கொண்டு சென்றிருக்கிருர்கள்?


அவர்கள் சுட்டிக் காட்டிய திசையில் விரைந்தோடினான் ஸ்பைடர்-
நம்மிடம் இரக்கத்தோடு நடந்து கொண்ட அந்த நபரை குகுமாகியின் கிராமத்திற்குள் நுழைந்த எவரும் உயிரோடு திரும்பியதில்லை என்ற உண்மையை சொல்லி எச்சரிப்போம்!
ஊஹூம்- நம் எச்சரிக்கையை அவர் செவிமெடுக்கப் போவதில்லை- இரு பெரும் சக்திகள் மோதிக் கொள்ளப் போகின்றன- என்ன விளைவு நேருமோ தெரியவில்லை!
இறுதியில்- சில குடிசைகளுக்கு மத்தியில்-
மாஸ்டர் மீது கை வைக்க என்ன துணிச்சல்?
144


அங்கே டாக்டர் ஆக்ரோவும் அவனுடைய உதவியாளன் ஜேஸனும் தூணோடு கட்டப்பட்டிருந்தனர்-
இப்போது உன்னை என்ன செய்கிறேன் பார்!
விசாரிக்க குள்ளனை விட்டு வைப்போம். இந்த தடியன் ஒரேயடியாக அலட்டிக் கொள்கிறான். உடனே தீர்த்துக் கட்டிவிட வேண்டியதுதான்!
ஆனால் பழுக்கக் காய்ச்சிய அந்தக் கத்தி டொகாவாவின் கையை விட்டுக் கிளம்பவேயில்லை-
என்ன மாயம்- அப்படியே சிலை போல் உறைந்து நின்று விட்டானே?
Oooo
அவன் மீது மயக்க வாயுவை பிரயோகித்திருக்கிறேன்- அவ்வளவுதான்!
145


மற்றவர்களை வலைத்துப்பாக்கியைப் பயன்படுத்தி கட்டிப் போடுகிறேன் மதியூகமாக அவர்களை சமாளிக்க உனக்கு போதுமான மூளை கிடையாது- உடல் வலிமையை பயன்படுத்தி அவர்களை வீழ்த்து!
உன்னைப் பற்றிய மாஸ்டரின் கணிப்பு நூற்றுக்கு நூறு சரி என்பதை நேருக்கு நேர் பார்த்து விட்டேன்!
உன் பாராட்டு ஒன்றும் எனக்குத் தேவையில்லை- பிதற்றிக்கொண்டிராமல் காரியத்தில் இறங்கு!


ஆனால் திடீரென்று பீதியோடு அலறி-னான் அந்தச் செவ்விந்தியன்-
குருமாகி! ஆத்திரத்தில இரத்தச் சிவப்-பாகிவிட்டிருக்கிறது அந்த விழிகள்! தன் வீரர்கள் தோற்கடிக்கப்பட்டதற்கு பழி வாங்க ஆவேசத்தோடு வந்திருக்கிறது!
புகை மண்டலம் விலகியதும், பார்வையில் பட்ட உருவத்தைக் கண்டு ஸ்பைடர் கூட ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான்-
ஓ- இதுதான் பேயரசனா?
ஓ குருமாகி தெய்வமே! எங்களை ஏதும் செய்து விடாதே!


ஜேஸன் முன்னால் பாய்ந்தான்-
இவனைப் பார்த்து மிரட்சியடையும் ஆள் நானல்ல! உருவம் பெரிதாக இருப்பதால் பெரிய கொம்பன் என்று ஏற்றுக் கொள்ள முடியாது!
ஆனால்-
ஆவ்- என்னைவிட பலசாலி தான்! அப்பப்பா- என்ன உறுதி!


ஆஆஆ!
பளார்!
முட்டாளே! என் அறிவுரையை கேட்கக்கூட பொறுமையின்றி நீ அவசரப்பட்டுவிட்டதால் விளைந்த விபரீதம்- இப்போது பார்!
மறுகணம் -
நீ என்னைவிட நூறு மடங்கு பலசாலி ஸ்பைடர்- சந்தேகமேயில்லை!
அப்படியில்லை அப்பனே! உன்னை விட நான் இலட்சம் மடங்கு புத்திசாலி- அவ்வளவுதான்!


அந்த புகைமூடத்தில் கலந்திருந்த ஒரு வகை வாயு சுவாசித்தவுடன் பலமிழந்து போகச் செய்துவிடும் ஆற்றல் கொண்டது என்பதை மதியூகமாக சட்டென்று புரிந்து கொண்ட நான், என் மூக்குத் துவாரத்தினுள் சிறு வடிகட்டும் கருவிகளை திணித்துக் கொண்டதால் தப்பித்தேன்!
எதிரி தள்ளாடியவாறு பின் வாங்குதைப் பார்த்து கேலியாக நகைத்தான் ஸ்பைடர்.
பேயரசன் கோவில் என்று இந்த ஆடம்பர குடிசைக்குப் பேரிட்டு, அப்பாவி மனிதர்கள் கஷ்டப்பட்டு கொண்டு வந்து சேர்க்கும் உணவு பொருட்களை உண்டு கொழுத்து போயிருக்கிறாய்! உன் பித்தலாட்டம் புரிந்து விட்டது!



அருகே தொங்கிக் கொண்டிருந்த ஒரு கயிற்றை பாய்ந்து பற்ற முனைந்தான் பேயரசன்-
உன் முகமூடியை கிழித் தெறியாமல் விடப்போவ தில்லை நான்!
எதிரெதிர் சுவர்களிலிருந்து வெளியேறிப் பாய்ந்து வந்த விஷ ஊசிகளின் இலக்கிலிருந்து தப்ப, வலைத் துப்பாக்கியை பயன் படுத்தி, மேலே வலை பின்னி பாய்ந்து ஏறிக் கொண்டான் ஸ்பைடர்-
பிரமாதமான ஏற்பாடு-ஆனால் ஸ்பைடரைப் பொறுத்தவரை இவையெல்லாம் அற்பமான சூழ்ச்சிகள்! என் மற்ற புலன் களைப்போலவே செவிகளும், நுட்பமான செயல்திறன் கொண் டவை. மறைவிடத்திலுள்ள விற்களிலிருந்து அம்புகள் கிளம் பிய போது எழுந்த நுணுக்கமான ஓசையை கேட்டு எச்சரிக்கையடைந்து விட்டேன்!


பிறகு-
ஓ-நெருக்கடி வேளைகளில் தப்பியோட பயன்படும்
இரகசிய வழியா இது? அனைத்தையும் நன்றாகத் தா
திட்டமிட்டிருக்கிறீர்கள் மேன்மைதகு பேயரசர் அவர்க
உங்களுக்கு அடுத்தபடியாக மிகுந்த மதிநுட்பம் படைத்த பேர்வழி இந்த ஸ்பைடர் தான் - மாஸ்டர்!
மறுபடியும் வலைத் துப்பாக்கி இழைகளை உமிழ்ந்தது-
ஆனால் என்னிடம் செல்லாது எந்த தந்திரமும்!


நான் சொன்னேனில்லையா எவ்வளவு சுலபமாக அவனை வீழ்த்தி விட்டான்- பார்த்தீர்களா?
நான் எதிர்பார்த்ததுதான்- அருகில் சென்று உறுதி செய்து கொண்டுவிடலாம்!
இதோ இருக்கிறார்- உங்களுடைய பேயரசர்! தின்று கொழுத்திருக்கிறானே தவிர இவனும் உங்களைப் போல் சாதாரண நபர்தான்- வேடம் புனைந்து உங்களை ஏமாற்றி வந்திருக்கிறான்!
அயோக்கிய ராஸ்கல்- உன்னை-


அவனுக்குரிய தண்டனையை வழங்கும் பொறுப்பை உங்களிடமே விட்டு விடுகிறேன்!
தான் தேடிக்கொண்டிருக்கும் நபர் தன் அருகிலேயே நிற்கி உண்மை ஸ்பைடருக்குத் தெரியாது-
இத்தனை காலமும் எங்களை பட்டினிப் போட்டு, அடிமைகளாக நடத்தி வந்திருக்கிருய்-
யங்டவுனுக்கு நாம் திரும்பி செல்ல உன் செவ்விந்திய தோழர்களிடம் குதிரைகளை கேட்டுப்பாரேன்-
குதிரை சவாரி என் போன்ற மேதைகளுக்கு பெருமையளிக்காது!
ஹெலி-கார்
அதையடுத்து-
ஓ-கோ! உன் குரலை இனம் கண்டு கொள்ளும் திறன்படைத்த தானியங்கி வாகனமா-இதை வடிவமைத்த உன் அபார மதிநுட்பத்தை எவ்வளவு பாராட்டினுலும் தகும்-மிஸ்டர் ஸ்பைடர்!


மயக்க வாயுவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட டொகாவா கொதிப்படைந்தான்-
எங்களுக்கு கொடுமை இழைத்த உன்னையும் பழிவாங்காமல் விட மாட்டோம்-டொகாவா!
சூழ்ச்சியை அம்பலப்படுத்தி என் வீழ்ச்சிக்கு காரணமான அந்த குரங்கு மூஞ்சிப் பயலை கொன்று விட்டுத்தான்-மறுவேலை-
பழுக்கக் காய்ச்சிய வாள் ஒன்று காற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்தது-
ஸ்பைடர்-உன்னைக் குறிவைத்துத் தான் வருகிறது-குனிந்து கொள்!
அவசியமில்லை! இந்த ஹெலி-காரை வடிவமைத்தது சாதாரண மூளையில்லை!


பாய்ந்து வந்த வாள் வழிமாறி விலகிப் பாய்ந்தது-
ஒரு பட்டனை நான் அழுத்தினால் போதும். சட்டென்று ஹெலி-காரை சுற்றி ஒரு லேசர்-தடுப்பு உருவாகி விடும்!
பட்!
ஹெலிகார் யங்டவுனை நோக்கிப் பயணத்தை தொடங்கியது-
யங்டவுனில் வந்து இறங்கியதும்-
அந்த பயந்தாங்கொள்ளி யங்டவுன் வாசிகளிடையே நீங்கள் ஒரு விதிவிலக்கெனத் தெரிகிறது! உங்களுக்கும் விஞ்ஞானத்தில் கூடுதல் ஞானமிருக்கிறதென்று நினைக்கிறேன்!
விஞ்ஞானத்திலா? நோ! இல்லை- நான் யங்டவுனின் மேயர்- இந்த இளைஞர்- ம்- வந்து- போலீஸ் கமிஷனர்!
அதோ திரும்பி வந்து விட்டார்கள்- ஸ்பைடருக்கு எந்த ஆபத்தும் இல்லை நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்ற அவரால் மட்டுமே முடியும்!
அங்கே அவசர வேலைகள் நிறைய இருக்கின்றன எங்களுக்கு- விடைபெறுகிறோம் ஸ்பைடர்!
156


சில நிமிடங்களுக்குப்பின்- பொங்கி எழுந்த சினத்தினுல் சிவந்து போனது ஸ்பைடரின் முகம்-
ஆனுல்- ஆனுல் நானல்லவோ யங்டவுன் மேயர்- இவர் அல்லவோ போலீஸ் கமிஷனர்- நீ குறிப்பிடும் நபர்கள் யங்டவுன்வாசிகளே அல்ல!
அப்படியானுல் அவன் ஆக்ரோவாகத்தான் இருக்கவேண் டும். சே கையில் கிடைத்தும் நழுவவிட்டுவிட்டேன! ஸ்பைடரையே ஒருவன் ஏமாற்றி விட்டானே- சே!
இந்த வழியாகத்தான் ஓடினுர்கள்- குண்டாக இருந்தவன்ரேடியோ செட் போன்ற ஏதோ ஒன்றை கையில் வைத்திருந்தான்!
அவர்களே நான் சும்மா விடப் போவதில்லே!
157


அதிர்ஷ்டம் இம்முறை ஸ்பைடரின் பங்கில் இருந்தது-
இந்த கிடங்கை நாம் இரண்டாவது தளமாக பயன்படுத்துவோம் ஜேஸன்! ஒரு பயல்-
அதோ- பிடித்து விட்டேன்!
அங்கே பாருங்கள்!
OWN PACKING CORP
ஜேஸன் சுட்டிக் காட்டிய திசையில் நோக்கிய ஆக்ரேச கால இயந்திரத்தை நோக்கிப் பாய்ந்தார்-
காட்டுத் தீ- இந்தப் பக்கமாக பரவி வருகிறது!
ஸ்பைடரின் ஹெலிகாரை நோக்கி வீசப்பட்ட அந்த பழுக்க காய்ச்சிய வாளினல் ஏற்பட்டிருக்க வேண்டும் இந்த காட்டுத் தீ!
58


நிகழ்காலத்திற்கு உடனே நாம் திரும்பி விடுவது நல்லது!
மீண்டும் ஸ்பைடரை ஒரு மாயச் சூழல் ஆட்கொண்டது-
மறுபடியும்?
தொடர்ந்து யங்-டவுண் நகரமே வேறொரு கால-கட்டத்திற்குப் பயணமாகியது!

# அத்தியாயம் 2: 12-ம் நூற்றாண்டில்...







திடீரென்று எழுந்த ஆக்ரோஷக் குரல் வந்த திசை நோக்கி இருவரும் திரும்பினர்-
யா- யாரவன்- இப்படி தொப்பென்று என்மீது வந்து விழுவது? தொலைத்துக்கட்டுகிறேனா இல்லையா- பார்!
ரசிக்கும்படியாக இல்லையே மாஸ்டர்!
வேறொரு காலகட்டத்திற்குள் புதிய சூழலுக்குள் ஸ்பைடர் வந்து குதித்த இடத்தில் குதிரை மீது கவசமணிந்து அமர்ந்திருந்தான் ஒரு வீரன்-
அதோ ஸ்பைடர்- அவன் நம்மை பார்த்துவிடலாகாது! வா-, நழுவி விடுவோம்!
என்னைத் தள்ளிவிட்டவன் எவன்? முதலில் என் தலைக்கவசத்தை சரிசெய்து கொண்டால்தான் பார்க்க முடியும் எதையும்!


மறு சணம்-முரட்டு வனவிலங்கு ஒன்று தன்னை நோக்கி ஆக்ரோஷமாக சீறிக்கொண்டு வரு-வதைக் கண்டு சிலிர்த்தெழுந்தான் ஸ்பைடர்-
நான் வந்தடைந்த இடம் சரியில்லை!
உன் எஜமானரை குதிரையிலிருந்து முரட்டுத்தனமாக தள்ளிவிட்டவனை கொல்லாமல் விடாதே!
ஆனால் அந்த விலங்கு ஸ்பைடரை நெருங்கியபோது-
கொழுத்திருக்கும் விலங களோடெல்லாம் போரிடுவ ஸ்பைடர் போன்ற மேதை களுக்கு பெருமை சேர்க்க
அப்பாடா-ஒருவழியாக கழற்றி விட்டேன்! என் வளர்ப்பு பிராணி எதிரியை வீழ்த்தும் அரிய காட்சியை காணும் வாய்ப்பை எங்கே இழந்து விடுவேனோ என்று பயந்தேன்!


மறுகணம்
இந்த சிறு கருவி மனித செவிகளுக்கு கேட்காத அல்ட்ரா ஸோனிக் தொனியில் வெளிப்படுத்திய பிளிறலை கேட்டுவிட்டு தறிகெட்டு ஓடுகிறது அந்த விலங்கு!
முரட்டுத் தனத்துக்கும் வெறிச் செயலுக்கும் பெயர்போன என் பன்றி, காட்டுமுயலைப் போல் இப்படி மிரண்டு ஓடுகிறதே? என்ன விஷமம் செய்தாயடா அதனிடம்?
அதைக் கேட்டு வெறி கொண்டவன்போல் விகாரமாக இனித்தான் அந்த மனிதன்-
ஜிஸ்மோ? அல்ட்ரா-ஸோனிக்? ஒரு இழவும் புரியவில்லை! ஆனால் உன் ஜம்பம் சுத்த வீரனான என்னிடம் பலிக்காது!


எதிரி கோடரியை சுழற்றி எறிய முற்பட்டபோது-ஸ்பைடரின் வலைத் துப்பாக்கி சீறியது-
புஷ்!
உன் சவடால் வார்த்தைகளை நிருபிக்க நீ வேறு ஏதாவது உபாயத்தை கையாண்டு பார்!
என்ன இதெல்லாம்-நம்பவே முடியவில்லை-கனவு காண்கிறேனா?
குன்றின் உச்சிக்கு குதிரையில் வந்தேன்-எதிரே புதுமையானதொரு பிரதேசம் தென்பட்டது-வித்தியாசமான கவச உடையணிந்த மனிதன் ஏதேதோ விபரீதமான கருவியையெல்லாம் ஆயுதமாக பிரயோகிக்கிறான்?
ஆனால் இதையெல்லாம் கண்டு பயந்தோடிப் போகிறவனல்ல இந்த கரடி - முகத்தான்!
உன் சக்தியை வீணாக விரயம் செய்கிறாய்!


எதிரி கத்தியை வீசியபோது ஸ்பைடர் சற்றே தூரம் விலகிக்கொண்ட போது-
அட-என் இடை பெல்ட்டை வெட்டி விட்டதே!
எனக்கும் சில தந்திரங்கள் தெரியும்- இதோ - நீளும் தன்மை கொண்ட வாள்!
எனக்கு கோபமூட்டாதே- ஓடிப்போய் விடு!
உன் விஷமத்தனமான கருவிகள் எல்லாம் இனி உனக்கு துணை நிற்கப் போவதில்லை- போகவேண்டியது நானல்ல-நீதான்- இந்த உலகை விட்டே!


ஸ்பைடரின் கையிலிருந்த பென்ஸில் போன்ற கருவி வெண்ணிற புகையை பீச்சியடித்தது...
ஹாவ் . என்ன ஆயிற்று எனக்கு... அப்படியே காற்றுஎன்னை அலக்காக தூக்கிச்செல்கிறதே— எங்கோ?
இனியும் நாம் ஒருவரை யொருவர் எதிர்த்துக் கொண்டிராமல் பிரிந்து விலகிச் சென்றுவிடுவது தான் நல்லது-எனவேதான்
ஆர்டினியும் பெல்ஹாமும் ஓடோடிவந்து தங்களுடைய பாஸோடு சேர்ந்து கொண்டனர்...
அந்தப்பயல் அங்கே மேலேஎன்ன செய் கிருன் பாஸ்?
புவிஈர்ப்பு இழப்புகருவியை நான் பிரயோகிக்க வேண்டிய நெருக்கடியை உண்டு பண்ணிஞன்....
பாவிப்பயல் எங்கேபோய் சேருகிருன்என்று எட்டிப் பார்க்கலாம்.. வாருங்கள்!


யங்டவுன் இருந்த மேட்டுப்பகுதியை ஒட்டி கீழே விரிவான குடியிருப்பு ஒன்று இருந்தது ..
நம் அண்டை கிராமத்தினர் கொதிப்படைந்து போயிருப்பது தெளிவாக தெரிகிறது!
ஆம், நம் கரடிமுகத்தான் போய் தரையிறங்கும் காட்சியை கவனியுங்கள்
ஆவ்! என்னைப் பிடியுங்களடா முண்டங்களா!
காய்ந்த சருகுபோல் காற்றில் பறந்து வருகிறானே... இது எப்படி சாத்தியம்?


அவமானம் ! எனக்கு இந்த கொடுமையை இழைத்த அந்த சண்டாளர்களின் கிராமத்தை உடனே தாக்கி அழிக்க வேண்டும் — புறப்படுங்கள்!
மேட்டுப்பகுதியை மறு பக்கமிருந்து ஏறமுடியாது. இந்தப் பக்கமாகத்தான் முயற்சிக்க வேண்டும்!
யங்டவுனில் —
மிஸ்டர் ஸ்பைடர்!
அவரை தொந்தரவு செய்யக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்... அந்த ஆக்ரோபயலை எப்படி தேடிக்கண்டுபிடிப்பது என்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறார்...
அங்கே கீழே கவனி — நம்மை தாக்க வருகிறார்கள்!


ஆர்டினி பயந்து கொண்டே மெள்ள ஸ்பைடரின்தோளைத் தொட்டான் ..
ஸாரி.. பாஸ்! ஆபத்து நெருங்கிக்கொண்டிருக் கிறது நம்மை—அங்கே பாருங்கள்!
இதுரொம்ப அற்பவிஷ யம் என்னை தொந்தரவு செய்யவேண்டுமா இதற்கெல்லாம்?
அந்தபெட்ரோல் வேனை இப்படி கொண்டு வந்து நிறுத்தி குழாயை திறந்து விடுங்கள்...
உன் யோசனை புரிந்து விட் டது! இனி நீ சிந்தனையை தொடரலாம் • மிச்சத்தை நாங்கள் பார்த்துக்கொள் கிறோம்!
குன்றின் சரிவில் பெட் ரோல் கொட்டியது...
இதுபோதும்!
வத்திப் பெட்டி யாரிடம் இருக்கிறது?
169


மறுகணம்—
ஓடுங்கள்... ஓடுங்கள்— தீ... தீ!
ஆபத்து பின்வாங்குங்கள்... சீக்கிரம்!
மேலும் கொதிப்படைந்தான் பன்றிமுகத்தான்...
என் கிராமம் அழிக்கப்பட்டு விட்டது! அந்த கருப்பு சைத்தானையும் அவனுடைய மனிதர்களையும் கொன்று குவிக்கும்வரை நான் ஓயப்போவதில்லை...!


ஒரு மணிநேரம் கழித்து – ராட்சஸ கவணி
லிருந்து பெரிய பாருங்கல் ஒன்று பறந்து
வந்தது யங்டவுனை நோக்கி
ஆபத்து – விலகி
ஒதுங்குங்கள்... !
முதலில் பீதியை விளைவித்து
அவர்களை தளர்ச்சியடையச்
செய்வோம்- பிறகு நேரடி
தாக்குதலில் இறங்குவோம்!
அடுத்தடுத்து வந்துசேர்ந்த பாருங்
கற்கள் யங்டவுனிலிருந்த வீடுகளை
தரைமட்டமாக்கத் தொடங்கின....
டமார்!



சில நிமிடங்களுக்குப் பின் —
எதையோ இந்தப் பக்கமாக இழுத்துவருகிறார்களே- என்ன அது ?
ஸ்கேலிங்-டவர்! மேட்டுப்பகுதியில் ஏறி யங்-டவுனுக்குள் புக இது ஒரு மாற்று யுக்தி!
ஆனால்... இந்த எதிரிகளை உன் உதவியில்லாமல் சமாளிக்க முடியாது எங்களால்!
ஸ்பைடர்... நீ என்ன தீர்மானத்திற்கு வந்திருக்கிறாய்என்று ஓரளவு யூகிக்க முடிகிறது ...
இந்தச் சிறு ஆபத்தை நீங்களே சமாளித்துக் கொள்ளுங்கள்... நான் உடனேபோய்—


அடுத்து வந்த பாருங்கல், ஸ்பைடரின் ஆக்ரோயற்றிய எண்ணலோட்டத்தை அறுத்தது...
ஆவ் என் ஹெலி-கார்...!
ஸாங்!!


கீழே விழுந்த தன் ஹெலிகாரை நோக்கி ஸ்பைடர் ஓடியபோது—
ஆபத்து...பாஸ்-
ஹூம் நான் கணித்ததை விட நிலவரம் படுமோசமாகிக் கொண்டுபோகிறது!


நல்லவேளை சேதம்அதிக மில்லை! அவசர வேளை யில் தரையிறங்கப்பயன் படும் காற்று-ஜெட் அமைப்பை இயக்கப் போகிறேன் இப்போது!
பயங்கர புயல் வந்து தாக்கியதுபோல் எதிரிகளின் ஸ்கேலிங்-டவர் சுக்கல் சுக்கலாகிப்போனது ..
இனிஎன்னிடம் வாலாட்டதுணிய மாட்டார்கள்.
ஆஆஆ!
புஸ்ஸ்ஸ்ஸ்ஸ


ஓடுங்கள்...
ஓடுங்கள்!
பிரமாதம்..
பாஸ்!
கர்ர்ர்ர் !
கோபத்தில் குதித்தான் பன்றிமுகத்தான்...
கொண்டு வாருங்கள்
இன்னொரு டவரை!
பாய்ந்து ஏறுங்கள்
அதனுள்ளே.. !
வ...வ.. வந்து-மறுபடியும்
தாக்க வேண்டும் என்கிறீர்
களா...ஸார்?



அப்படித்தான் உத்தரவிடு கிறேன்-அந்தடவுண் தரை மட்டமாகும்வரை தாக்கு வதை நிறுத்தவே கூடாது ஆமாம்
சாதாரண மனிதர் களோடு போரிடலாம் ஆனுல் அவன் மனி தனே அல்ல — ராட்சஸன்!
நாயே! என்னிடமா எதிர் வாதம்செய்கிருய்? உன்னே
ஸார்இதெல்லாம் பிர யோஜனப் படாது! நான் சொல்வதை கேளுங்கள்
அந்த கருப்பு வேடதாரி ஒரு மாயப்பிசாசு என்று நம்பு கிருர்கள் இவர்கள்-அதனுல் தான்உன்னேவிட அவனிடம் அதிகம் பயப்படுகிருர்கள்...
அப்படியென்ருல் தோல் வியை ஒப்புக்கொள்ளச் சொல்கிருயா என்னே?
176


இல்லை! மாந்த்ரீகன் ஸ்ராக்கின் மாளிகை அருகேதான் இருக்கிறது கணிசமான தொகையை ஊதிய மாக நாம் கொடுத்தால் அந்த கருப்பு வேடதாரியை ஒழிக்கும் பொறுப்பை அவன் ஏற்றுக் கொள்வான்-
....பிறகு மற்றவர்களை ஒழிப்பது சுலபம்! பிர மாதமான யோசனைதான்!
சரி . கிளம்பு போகலாம்!
என்ன நானுமா—? உங்களுடன் அங்கே வரவேண்டுமா?
பன்றிமுகத்தானும் அவனுடைய பயந்தாங்கொள்ளி சகாவும் பழையதொரு கோட்டையைநோக்கி குதிரையில் விரைந்தனர்...
ஆயிரம் வயதை தாண்டியவன் அவன் என்று சொல்லக் கேள்வி. கோபம் வந்தால்எதிரே இருப்பவனை புழு பூச்சியாகுமாறு சபித்து விடுவானும்...!
பெருமைமிக்க ஸ்ராக் தன் பொன்னான நேரத்தை இந்த வெற்றி வீரன் பன்றி-முகத்தானுக்காக கொஞ்சம்ஒதுக்க வேண்டும் என்று கெஞ்சி கேட்டுக்கொள்கிறேன்!


அவர்களின் கோரிக்கைக்கு மறுமொழியாக எதிரே ஒரு புதுவகை பாலம் ஒன்றுஉருவானது..
பன்றிமுகத்தானே உன்னைப்பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்! தீய காரியங்களில் உனக்குள்ள ஈடுபாடு என்னை மகிழ்விக்கிறது..வா - உள்ளே!
இ இ...து என்ன வகையான பாலமோ ... புதிராக இருக்கிறது!
கோட்டையின் நுழைவாயிலை அவர்கள் சமீபித்ததும்—
உங்களுக்கு புரியாத புதிரான விஷயங்களைக்கண்டு மிரட்சியடைந்து நின்று என் பொன்னான நேரத்தை வீணடிக்காமல் வேகமாக நடந்து வாருங்கள் என்னருகே!







இருள் மண்டிக்கிடந்த மோசமான ஹாலில், பன்றி முகத்தான் தன் கோரிக்கையை ஸ்ராக்கிடம் விவரித்தான்...
உங்களோடு ஒப்பிடுகையில் மந்திரதந்திர வேலைகளில் அவன்ஒரு அற்பன்.. ஆனால் புராணங்களில் சொல்லப் படும் மாந்த்ரீகன் மெரிலினை விட நிச்சயம் அவன் ஒருபடி உயர்ந்தவன்தான்!
மெரிலின்? அந்த உதவாக்கரை பயலின் பெயரை என்னெதிரே உச்சரிக்க உனக்கு என்ன துணிச்சல்?
ஸ்ராக்கின் கோபாவேசமான கீச்சுக்குரலைக் கேட்டு வெளவால்களும், எலிகளும் வெருண்டன...
மெரிலின் ஒரு பித்தலாட்டக்காரன் அவனைவிட ஸ்ராக் ஆயிரம்மடங்கு மகிமைவாய்ந்தவன்··புரிந்துகொள்


பன்றிமுகத்தான் தந்திரத்தில் சரியான குள்ள நரி..
மேன்மை மிக்கவரே, அந்தப் பயலின்பெயரை நான் இங்கே உச்சரிக்க காரணம் இருக்கிறது! அந்த மெரிலினின் மறு அவதாரமே இந்த கருப்பு வேடதாரி என்று பேசப்படுகிறது!
என்ன இவன்தான் மெரிலினா? நீ கொடுக்கும் பொன்னிலும், வெள்ளியிலும் இனி எனக்கு அக்கறையில்லை
அந்த போலி மாந்த்ரீகனின் ஏமாற்று வித்தையை அம்பலப்படுத்தி இந்த ஸ்ராக்கிற்கு நிகரான மாந்த்ரீகன் இப்புவியில் எவனுமே இல்லை என்று நிரூபிக்கப் போகிறேன்!
சில நிமிடங்களுக்குப் பின்—
நீங்கள் போகலாம் ! காலை பொழுது விடியுமு அந்த 'மெரிலின்' ராஸ் என் காலடியில் அடிமை கிக் கிடப்பான்!


ன்றிமுகத்தானும், அவனுடைய தொடை நடுங்கி தளபதியும், தங்களுடைய இடத்தை நோக்கி பயணமாயினர்...
நம் பிரச்னே தீர்ந்தமாதிரி தான்! அவனே ஸ்ராக் வீழ்த்தியபின் ஒருமணி நேரம் கழித்து யங்டவுனே நாம் தாக்க தொடங்குவோம்;
சுலபமாக வெற்றியை ஈட்டி விடலாம்!
ஸ்ராக்கின் அழைப்பைக்கேட்டு, படபடவென்று சிறகடித்தவாறு ஹாலினுள் வந்தமர்ந்தன... இரண்டு ராட்சஸ கழுகுகள்—
உடனே போய் இவனே என்னிடம் தூக்கிவாருகள்...
181


இரவு கவிழத் தொடங்கிய வேளையில் — யங் டவுனில்—
இனி மறுபடியும் நம் வழிக்கு வர 'தில்' இரு
காது பாஸ், அந்த அற்
பதர்களுக்கு!
சரி...சரி– என்னை தொந்தரவு செய்யாதே! என் சிந்தனை முழுவதையும் ஒருங்கு விப்புசெய்து அந்தஆக்ரோ பயல் விவகாரத்தை நான் ஆராய வேண்டும்!
ஒருமணி நேரம் கழித்து....தீவிர சிந்தனையில் தன்னை மறந்து மெள்ள நடந்து போய்க்கொண்டிருந்த ஸ்பைடரை நெருங்கிவிட்டன ஸ்ராக்கின் மரண தூதர்கள்—
ஆம்...விஞ்ஞானத்தை விஞ்ஞானத்தாலேயே முறிக்க வேண்டும்!


சடாரென்று கழுத்தில் ஒரு பயங்கர அடி....
ஹே...எ... என்ன இது?
சுயவுணர்விழந்து சரிந்த ஸ்பைடரை காலில்பற்றி எடுத்துக்கொண்டு தங்க ளுடைய திரும்பு பயணத்தை மேற் கொண்டன அத்த ராட்சஸ கழுகுகள்



பின்னர்.. ஸ்பைடருக்கு நினைவு திரும்பியபோது—
மிக ஆழமானதொரு பாழுங்கிணற்றினுள் கிடக்கிறேன்—
திரும்பி நோக்கிய ஸ்பைடர் திடுக்கிட்டான்...
ஓ... நான் தப்பிச்சென்று விடாமலிருக்க காவல் நிற்கின்றனவா . இந்த ராட்சஸ கழுகுகள்?


ஸ்பைடரின் மயக்க வாயுத் துப்பாக்கி சீறியது...
அடுத்து- வலைகளைப் பின்னி ஏணியாக்கி மேலே ஏறத் தொடங்கினான்...
என்னை இங்கே வரவழைத்தது யாரென்று இப்போதுதெரிந்துவிடும்
என்னைத் தூக்கி வந்த உங்களுக்கு இதோ என் பரிசு!
ஸ்பைடர் தப்பி வெளியேறிவிட்டதைக் கண்ட ஸ்ராக் அதிர்ச்சியடையவில்லை ..
கீழே தூங்கி வழியும் பறவைகள் உன்னுடையவைதான்— இல்லையா?


ரி... மெரிலின் — நேரம்
பொன்னது உனக்கும்
னக்கும்! போட்டியை
தொடங்குவோமா!
மெரிலின்?- என்ன
உளறுகிறான்?ஆவ்-சுவர்
கள் நெருங்குகின்றன...
ஒன்றோடொன்று!
சுவர்கள் ஓரளவு மிகநெருக்கமாக
வந்து நிலைத்த பின்....
இப்படி நகரும் சுவர்களை
நிர்மாணிப்பது பெரிய
வித்தைஅல்லதான் —
இப்போது பார் !
ராட்சஸ கோடரி ..விலகி
ஒதுங்க கொஞ்சம்கூட
இடம் இல்லை!


மறுபடியும் வலைத் துப்பாக்கி இயங்கியது -
இந்த யுக்தியும் அற்ப மானதுதான் என்னைப் பொறுத்தவரை! — பார்த்தாயல்லவா!
இந்த ஸ்பைடர் எப்படிப் பட்டமேதை என்று இப் போது உனக்கு புரிய வைக்கப் போகிறேன்!
ஸ்பைடர்?.. எப்போதிலிருந்து உனக்கு இந்தப்பெயரை சூட் டிக்கொண்டிருக்கிருய்மெரிலின்? ஒரு அற்- மான பூச்சியின் பெயர்-உனக்குபொருத்தம்தான்
வரலாற்றுப் புகழ் வாய்ந்த மந்திரவாதி மெர்லினின் மறு அவதாரம் தான் ஸ்பைடர் என்று நம்பிக் கொண்டு இருந்தான் கிழவன்!


ஸ்ராக்கை ஸ்பைடர் துரத்தி ஓடியபோது —
ஹாஹஹா! விலகும்தரை! உள்ளே கிடப்பவை அத்தனையும் கொடிய விஷப் பாம்புகள்!
வலைத்துப்பாக்கியை உருவி எடுக்கக் கூட அவகாசமில்லை....!
தன் ஜெட் அமைப்பை இயக்கினான் ஸ்பைடர்
பாம்புகள் மீது விழுந்து, அவை சாக நான்காரணமாக இருக்க விரும்பவில்லை....எனவே—
பரவாயில்லையே!— சமர்த்தன்தான் நீ...!


நெருங்கி கைகலப்பில் இறங்கி ஆட்டத்தில் விறு விறுப்பை ஏற்படுத்த தீர் மானித்துவிட்டேன்— இதோ வருகிறேன்!
ஆனால் மந்திர தந்திரங் களில்தேர்ந்தமேதைகள் கைகலப்பு போன்றமட்ட மான வழிமுறைகளை ரசிப்பதில்லை... எனவே-
சட்டென்று, தரையிலிருந்து பிய்த்துக் மேலெழும்பியது ஒரு சக்கரம்!
ஊப்ப்...!
பார்த்தாயா ஸ்பிரிங் அமைப்பின் செயல் வேகத்தை!


தன்னை சமாளித்துக்கொண்டு அந்த சக்கரத்தின் மீது எழுந்து நின்றான் ஸ்பைடர்...
ரொம்பவும்தான் துள்ளுகிறாய்-ஸ்ராக்!
தைரியமிருந்தால் உள்ளே வா— தெரியும் சேதி!


ஒரிரு கணங்களுக்குப்பின்—
தொலைந்தாய்... இத்தோடு!
இன்னுமொரு... ஸ்பிரிங் அமைப்பு!


ஓ..இப்படியொரு ஆற்றல்
உனக்குஇருப்பதை கணக்
கில் எடுத்துக்கொள்ள
மறந்துவிட்டேனே!
என்னை வென்றுவிட
லாம் என்று கனவு
காணாதே!
எல்லாமே ஸ்பிரிங் அமைப்
புகள்! வயதான இவனால்
தனியாக எப்படி இவற்றை
நிர்மாணிக்க சாத்தியமா
யிற்று?



ஸ்பைடரின் கேள்விக்கு விரைவிலேயே விடை கிடைத்தது...
இது என் கண்டுபிடிப்பு! இன்னும் சற்று கிட்டே வந்துபாரேன்!
ஸ்ராக் ஒரு விசையை இழுத்தான் ...
இப்போது என்னுடைய இன்னொரு பொறியினுள் சிக்கிக்கொள்ளப் போகிறாய் மெரிலின்!
இந்த உயிரினங்கள் என்ன வகையை ... ஹேய்ய்ய்!


படுபயங்கரமாக அழுத்து கின்றனவிலக்கித் தள்ள முடியவில்லை...
பரிதாபம்! இன்னொரு விசையை நான் இழுத் ததும் அழுத்தம் உச்ச மடையும். அத்தோடு உன்கதை முடிந்துவிடும்!
ஆனால், ஸ்பைடர் முந்திக்கொண்டான்
ஹே....ஏ என்ன செய்கிறாய்?
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
எதையும் உடனே அறுத்துத்தள்ளிவிடும் ஆற்றல் கொண்ட லாசர் கதிர்களை பீச்சுகிறேன் —


பிறகு...
விசை துண்டிக்கப்பட்டு விட்டது—எனக்கு விடுதலை!
சக்கரம் தறிகெட்டு உருண்டோடி வருகிறது—
தன்னைக் குறிவைத்து அசுர கதியில் உருண்டோடிவந்த ராட்சஸ சக்கரத்தை தடுத்து நிறுத்த பலமோ, அதன் பாதையிலிருந்து விலகிக் கொள்ள அவகாசமோ இல்லாத நிலையில் மரண ஓலம் எழுப்பினான்... ஸ்ராக்!
ஆ.., ஐயோ- செத்தேன்!


மாந்த்ரீகன் ஸ்ராக்கின் சரித் திரம்முடிந்தது!


விடிந்து வெகு நேரமாகி விட்டது! 'யங்டவ்னில் நான் இல்லை என்கிற விஷயம் இன்னமும் அந்த துஷ்டர் களுக்கு தெரிந்திராது!


ஆனால் உண்மை நில
வரம் அப்படியில்லை...
மீண்டும்தாக்க வருகிறார்
கள். இம்முறை நம்வசம்
பெட்ரோல் இல்லை!
ஸ்பைடர் எங்கே? என்ன
ஆயிற்று அவனுக்கு?
முன்னேறித் தாக்குங்கள்.!
இம்முறை நீங்கள் மிரட்சிய
டைய தேவையில்லை!


சொன்னேனில்லையா?-
அந்த கருப்பு வேடதா
ரியை அங்கே காணோம்!
அவன் இல்லைஎன்றால்
நொறுக்கித் தள்ளிவிட
வேண்டும்..சும்மா!
196


ஸ்பைடர் நெருங்கி வந்தபோது-
அதுதான் சொன்னேனே-
அந்த சைத்தான் எதிரணி
யில் இல்லை என்று!
அதோ..ஸ்பைடர்!
பன்றிமுகத்தான் பொய்
சொல்லி நம்மைஏமாற்றி
விட்டான்!


அடுத்து—
உங்களுக்கென்ன புத்தி
பிசகிவிட்டதா- எதிர்
திசையில் விரைகிறீர்களே?
பின் வாங்குங்கள்..
முன்னேறுங்கள்..
எதிர்த்திசையில்!


சில கணங்களுக்குப்பின் —
குன்றை நோக்கி முன்னேறி தாக்குங்கள் ஆஆஆ...
ஐயோ...பாவம்!—அவனைப் போட்டு அடித்து நொறுக்கி கிருர்கள்!
எந்த ஒரு தகுதியற்ற தலைவனுக்கும் இறுதியில் இந்தக்கதி தான்!


பன்றிமுகத்தானை அடித்துப்போட்டுவிட்டு விரைந்தோடிப்போனது அவனுடைய படை...
இனி அவனால் யாருக்கும் எந்தத் தொல்லையும் வராது!
நாம் எப்படி நம்காலத்திற்கு திரும்புவது பாஸ் — ?


வெற்றி முழக்கமிட்டவாறு திரும்பிய ஸ்பைடர் டாக்டர் ஆக்ரோவை பார்த்து விட்டான்!
டாக்டர் ஆக்ரோவும், அவனுடைய சகாவும்-
SO
ஆக்ரோ? எங்களை இப்படி வெவ்வேறு காலகட்டத் திற்கு கொண்டு போய் அலைக்கழிக்கும் துஷ்ட ஐந்து நீதான்-இல்லையா?
விவகாரத்தை இனியும் இப்படியே நீட்டிக் கொண்டு செல்ல எனக்கு இஷ்டமில்லை ஆனால்-
என்ன ஆனால்? உன் கால இயந்திரத்தை இயக்கி நிகழ்காலத்திற்கு நம் இருப்பிடத்திற்கு அனைவரையும் இப்போதே இட்டுச் செல்!
அப்படியொரு பயணத்தை மேற்கொள்ள எனக்கு ஆசை தான்-ஆனால்-இங்கே பார் பன்றி முகத்தானின் படையின் அட்டூழியத்தால் நொறுங்கி உருக்குலைந்து கிடக்கும் என் கால இயந்திரத்தை!
என்ன சொல்கிறாய்-நாம் திரும்பிச் செல்ல முடியாதா! இங்கேயே மாட்டிக் கொண்டு விட்டோமா?


அடிப்படை பார்முலா இப்போது என் வசம் இல்லை அது இருந்தாலும் கூட இன்னொரு கால இயந்திரத்தை வடிவமைக்க தேவையான சாமான்களுக் குப் கருவிகளுக்கும் எங்கே போவது?
கொடிகட்டிப்பறந்த ஸ்பைடருக்கு சரித்திர புத்தகத்தின் பக்கங்களி டையே சிக்கிக்கொண்டுவிட்ட ஒரு அற்ப புழுவைப்போல இறுதியில் இப்படியொரு இழிவான முடிவா ...சே—
திடீரென்று —
காலடியில் பூமி கிடுகிடுக் கிறதே- என்ன விபரீதம்?
அதென்ன....பேரி ரைச்சல்-அங்கே?


ஸ்பைடர் அதிர்ச்சியடைய வில்லை —
நானும் வருகிறேனே!
தலைக்குமேலே வெள்ளம் போகிறது- சாண் போனால் என்ன முழம் போனால் என்ன? போய் என்ன என்று பார்த்து விட்டு வரலாம் ஆக்ரோ நீயும் வா என்னோடு!
என்னால் முடிந்த உதவிகளை செய்யத்தயார்... ஆனால் சிந்திக்க தெரிந்த அளவுக்கு செயலாற்ற இயலாது- ஜேஸன் ஒத்தாசையாக இருப்பான்


ஓசை வந்த இலக்கை ஹெலி கார் நெருங்கிய போது —
ஓசை தேய்ந்து மறைகிறது
பார்முலா உன் நினைவுக்கு வந்து விட்டால் நாம் எப்படியாவது — அங்கே கவனி...


அடுத்து —
நாம் உறிஞ்சி இழுக்கப்படுகிறோம்



அந்த எதிர் விசையைமிஞ்சி
ஹெலிகார் சுயகட்டுப்பாட்
டில் இயங்கமுடியவில்லை ..
என்ன வகையான சக்தி
அது- எங்கே நாம்
இழுத்துச்செல்லப் படு
கிறோம்?
தொலைவிசை- ரேடியோ
இயக்கு முறையில் இயங்
கும் ஏதோஒருசக்தி ஆனால்
இந்தபண்டைக் காலத்தில்
இது சாத்தியமில்லையே!
நமக்கு நேர் எதிரே
கீழே கவனி!


மிகமிக புதிரான ஒரு நகரம்! இருபதாம் நுற்ருண்டில்கூட நாம் கேள்விப்பட்டிராத விசித்திரம்!
நாம் அதை நோக்கித் தான் ஈர்க்கப்படுகிரேம் நம் வாகனம் உயரமிழந்துவருகிறது


ஹெலிகார் தரையிறங்கியதும்—
இது என்ன மனித ஜென்மங்கள்தானா? அல்லது—
சற்று நேரத்தில் தெரிந்து கொண்டு விடலாம்


அந்த நபர் தெளிவான ஆங்கிலத்தில் இனிமையாகப் பேசினான்...
உடோபிகஸ் கிரகத்திலிருந்து பூமியை ஆராய்ந்தறிய வந்த முன்னோட்டக் குழுவினர் நாங்கள்-
முன்னோட்ட குழுவினரா? அப்படியானால் எங்களைப்போல நீங்களும் வேறொரு காலகட்டத்தை சேர்ந்தவர்கள்- இல்லையா? உங்களிடம் கால இயந்திரம் இருந்தாக வேண்டுமே!


எங்களுடைய காலத்திற்கு-சொந்த கிரகத் திற்கு செல்ல எங்களுக்கும் ஆசை தான். ஆனல் கால இயந்திரம் தலைவர் ப்ரைனின் கட்டுப் பாட்டில் இருக்கிறது ஆனல் ஊர் திரும்பும் உத்தேசம் அவருக்கு கொஞ்சமும் கிடையாது!
அந்த கால இயந்திரத்தை பயன்படுத்தி எங்களை இரு பதாம் நூற்ருண்டில் கொண்டுபோய் விட்டு விடேன்...ப்ளீஸ்!
ஒரு லிப்ட் அவர்களை கோபுரத் தின் உச்சிக்கு இட்டுச் சென்றது.
எங்களை எதற்காக இங்கே வரவழைத்தீர்கள்?
துப்பாக்கியை நீட்டி உங்களை வரவேற்க நேரிட்ட கட்டா யத்திற்கு வருந்துகிறோம். ப்ரைனின் ஆணை அது. அவருடைய ஆணையை மீறு வோருக்கு மரணதண்டனை நிச்சயம்
தலைவரின் ஆணைப்படி செய்தோம். அவரிடமே விளக்கம் கேட்டுக் கொள்ளுங்கள்...
வேகமாக நடங்கள்—



என் ராஜ்ஜியத்திற்குள் ஊடுருவத்துணிந்த நீங்கள் இங்கே வேறொரு பிரதேசத்தின் தலைவர்கள் என்று நினைக்கிறேன்!
உன் ராஜ்ஜியமா? ஹே! சரி-நாங்கள் வந்தது உனக்கு பிடிக்கவில்லை எனில் உன் கால இயந்திரத்தை பயன்படுத்தி நாங்கள் புறப்பட்ட இடத்திற்கே எங்களை நீ அனுப்பிவிடேன்!
திருப்பி அனுப்புவதா? நோ..! என் ராஜ்ஜியத்திற்குள் வந்த எவரும் எப்போதும் திரும்பிச்சென்றது கிடையாது. அற்ப பிறவிகள் நீங்கள் உங்களால் எனக்கு எந்தப் பயனும் இராது . உங்களை அழித்துவிட தீர்மானித்து விட்டேன்!
ப்ளீஸ் மாஸ்டர்! இவர்களால் நமக்கு தீங்குஏதும் நேரிடாது பாவம் பிழைத்துப்போகிறார்கள்!


அந்தகொடியவனின்வாயி
லிருந்து விஷ அம்புகளாக
வெளிப்பட்டன வார்த்தை
கள்-
ப்ரைனின் வார்த்தைக்கு எதிர்
வாதம் செய்கிறவனுக்கு உட
னடி மரணம்தான் தண்டனை...
நீயும் இவர்களோடு சேர்ந்து
செத்துப்போ- கொண்டு போங்
கள் இவர்களை-மரண குழிக்கு!
உன் திமிர்தனம் எல்
லாம் ஸ்பைடரிடம்
செல்லாது . உன்னை
இப்போது என்ன
செய்கிறேன் பார்


ஆனால்—
ஆப்...என்னால்
நகர இயலவில்லையே
முட்டாள்! என் ஆற்றல்தெரி
யாமல் உளறுகிறாய்
இன்னும்-பார்—


இவன்களையும் உடன ழைத்துச்செல்
காற்றிலுள்ள மூலகங்களை இஷ்டத்திற்கு ஆட்டிப் படைக்கும் ஆற்றல்பெற் றிருக்கிறானே!
திமிறிஓட முயற்சிக்காதீர் கள்- என் தோழர்கள் சுட்டுத்தள்ளிவிடுவார்கள்
போகிற உயிர் எப்படி போனாலென்ன?
அப்படியில்லை! விசேடதுப் பாக்கியால் சுடப்பட்டு அப்படியே மெள்ளகரைந்து அழிவதைவிட அங்கே குழி யினுள்காத்திருக்கும்மரணம் சற்று இதமானதாக இருக்கும்!


அவர்களுக்குப் பின்னால் முரட்டுக் கதவுகள் இறுக சாத்திக்கொண்டன
தப்பிப்பது எப்படி என்று வீணாக மூளையைப்போட்டு கசக்கிக் கொள்ள வேண்டாம் நம் ஒவ்வொரு அசைவையும் அங்கிருந்து கவனித்துக்கொண்டிருப்பான் அங்கிருந்தபடியே நம்மை கண்ணிமைக்கும்பொழுதில்கொன்று விட அவனால் முடியும்
அங்கிருந்து சலங்...சலங் என்று ஏதோ சப்தம் வருகிறதே!
இவைகள்...? பார்த்தால் மிருகங்கள் போலிருக்கிறது. ஆனால்—
ரோபோ மிருகங்கள்! ப்ரைனால் தொலைவிசை இயக்குமுறைகள் இயக்கப்படுகின்றன.


இவற்றை சமாளிக்க என்னால் முடியும் . !
பின்னே ஏன் வீண்கால தாமதம் செய்கிறாய்?


மறுகணம் —
இந்த சிறு கருவியும் காற்றின் மூலகங்களின்மீது ஆதிக்கம் செலுத்தும் திறன்கொண்டது. சூறாவளி ஒன்றை நொடியில் உருவாக்கிவிட்டது பார்த்தீர்களா?
அந்த மிருகங்களை சுழற்றி உறிஞ்சி அப்பால் இழுத்துச் செல்கிறது!
104



அந்த சனிப் பயலிடம் இன்னும் எத்தனையோ வழிமுறைகள் இருக்க லாம்-நம்மை அழிக்க!
அந்த ராட்சஸ மிருகங்கள் ப்ரைன் இருக்கும் கோபு ரத்தைநோக்கி அசுர கதி யில் பறக்கின்றன...
நோநோ ஆஆஆ...
நொறுங்கியது கோபுரம்- செத்தொழிந்தான் ப்ரைன்!
க்ராஷ்!
212



உடோப்பியன் வாசிகள் உற்சாக ஆரவாரம் செய்தனர்
கொடுங்கோலன் செத்தான். நமக்கெல்லாம்சுதந்திரம்.
இனி நாம் நம் காலத்திற்கு சொந்த நாட்டிற்கு திரும்பலாம்- தடைசொல்ல யாருமில்லை!
டாக்டர் ஆக்ரோவுக்கும் ஏகப்பட்ட குஷி—
இரண்டு கால இயந்திரங்கள் கைவசம் உள்ளன. இன்னொன்றை நீங்கள் பயன்படுத்தி உங்களுடைய நாட்டுக்குத் திரும்பலாம்!
கால இயந்திரத்தை எப்படி இயக்குவதுஎன்று எங்களில் யாருக்குமேதெரியாதுஅந்த பார்முலாவை ஆராய்ந்தறிவதற்குள் நமக்கு மூப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்து விடக்கூடும்!
கேட்டாயா... ஸ்பைடர்? நாம் பிழைத்தோம்!
அம்மாதிரி இயந்திரங்களின் இயக்கம் எனக்கு அத்துபடி! என்னை அவை இருக்குமிடத்திற்கு கூட்டிச் செல்!
அவசரப்பட்டு குதியாட்டம் போடாதீர்கள்– சிக்கல் இருக்கிறது!


டாக்டர் ஆக்ரோவை அவர்கள் அழைத்துச் சென்றபோது
ஆஆஆ...
என்ன வகையான விபரீதம் அது – மரங்கள் காற்றில் பறந்து வருகின்றனவே...!
நகருக்கு வெளியே ஒரு கண்காணிப்பு வாகனத்திலிருந்து வந்தது அபாய 'அறிவிப்பு ஒன்று—
பாதுகாப்பு சுவர் உடைந்து விட்டது- ராட்சஸ குரங்குகள் உள்ளே வர யத்தனிக்கின்றன


செய்தி காட்டுத்தீபோல் பரவியது
என்ன இது புது விபரீதம்?
பாதுகாப்பு ஏற்பாடாக கண்ணுக்குத்தெரியாத தடைச் சுவர் ஒன்றை நகரைச்சுற்றி நிர்மாணித்திருந்தான் ப்ரைன்கோபுரம் இடிந்து சரிந்தபோது தொடர்புதுண்டிக்கப்பட்டிருக்கக்கூடும்!
உங்கள் அனைவரிடமும் தான் துப்பாக்கி இருக்கிறதே... அந்தக்குரங்குகளை சுட்டுத்தள்ள வேண்டியதுதானே?
மெள்ள ஆவியாகி சாகத் தூண்டும் தோட்டாக்களால் அவற்றிடம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை... இப்போது எங்களால் செய்யக் கூடியது எதுவுமே இல்லை!


அத்தனை சுலபமாக தோல்வியை ஒப்
புக் கொண்டுவிட மாட்டான் இந்த
ஸ்பைடர்! ஆக்ரோ, நீ போய் மாய
தடுப்புச் சுவருக்கான சக்திவட்டத்தை
சீர்செய்ய முடியுமா பார்....நான் இந்த
சைத்தான்களை தேக்கி நிறுத்திவைக்கிறேன்...
ஜெட் அமைப்பை உச்ச கதியில்
இயக்கியவாறு அந்த மிருகங்க
ளுக்கு நேர்மேலே முடிந்த மட்டி
லும் தாழப்பறந்தான் ஸ்பைடர்.
ஒரு குறிப்பிட்ட பாதை வழியே
முன்னேறுகின்றன.... சுவரில்
அந்த இடத்தில்மட்டுமே ஓட்டை
ஏற்பட்டிருக்கக்கூடும்!


மற்ற குரங்குகளைவிட மிகவும் பெரிதாக இருந்த ஒரு முரட்டுக்குரங்கு ஹெலிகாரை நோக்கி ஆவேசமாக பாய்ந்தது.
தலைவனாக இருக்குமோ....? நான் சட்டென்று மேலே போகாவிட்டால்—ஆ..வ்...
மறுகணம்...
அம்மாடி என்னஒருகுத்து இடி இறங்கியதுபோல்!



தடுமாறி, தறிகெட்டு தொப்பென்று தரையில் விழுந்தது ஹெலிகார்.
திடீரென்று ஞாபகம் வ தவனாக ஒரு பட்டனை அழுத்தினான் ஸ்பைட
ஹெலி-கார் சேதமடைந்து விட்டது. மேலே ஏற்ற முடியாது. பழுது பார்க்கவும் அவகாசம் இல்லை!
ஹெலிகாரைச் சுற்றி அதீத வெ பத்தை பரவச்செய்து அந்த சை தான்களை அருகே நெருங்கவிட மல் பண்ணிவிட்டேன்... இனி நி மதியாக ஹெலிகாரை நான் சரி செய்யலாம்
ஒரு சில நிமிடங்களுக்குப் பின் —
ஹெலிகாரின் இயக்கம் சீராகி விட்டது...


இம்முறை மிகமிக அடர்த்தி
யான புகைமண்டலத்தை
உருவாக்கி இவற்றை திண
றடிக்கப்போகிறேன்....
ராட்சஸ குரங்குகள் செய்
வதறியாது திணறின...
ஆக்ரோ தடுப்புச் சுவரை
சரிசெய்யும்வரை எப்படி
யாவது இந்த சைத்தான்
களை முன்னேறவிடமால்
நான் தடுத்துநிறுத்தியாக
வேண்டும்!
219


புகையினூடே முன்னேற முயன்ற குரங்குகள் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்த பின் மேலேசெல்லஇயலாமல் தடைப்பட்டு நின்றன...
தடுப்புச்சுவர் மீண்டும் உயிர் பெற்றுவிட்டது போலும்ஆக்ரோ சீர் செய்துவிட்டிருக்கக் கூடும்!
எங்களனைவரையும் காப்பாற்றிவிட்டீர்கள்• உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.....
புத்திக்கூர்மையில் ப்ரைனுக்கு எந்த விதத்திலும் நீங்கள் சளைத்தவரல்ல என்பது நிரூபணமாகிவிட்டது...


ஆக்ரோ உற்சாகமாக பேசலானான் ...
உங்களுடைய காலஇயந்திரத்தையும் கணப்பொழுதில் என்னால் படித்தறிந்துவிட முடியும்
இவனுக்கு அப்படியொருதிறமை இருந்தால்தான் அனைவரும் பத்திரமாக ஊர்போய்ச் சேரமுடியும்......
கால இயந்திரத்தை ஆராய்ந்த ஆக்ரோ வெற்றி புன்னகையோடு அதன் இயக்கத்தைப்பற்றி விவரிக்கலானான்..
அந்தக் குமிழை பதினாறில்ஒருபங்கு சுழற்றி-இந்த விசையை வலப்பக்கமாக நகர்த்தி..
நம்பவே முடியாத மதிநுட்பம்! கேட்டதை நினைவில் வைத்துக் கொள்ளக்கூட என்னால் முடியவில்லை!
ஆனால் .. நான் என் அதியற்புத நினைவாற்றலால் இவன்சொன்ன அனைத்து விபரங்களையும் அப்படியே நினைவில் பதித்து கொண்டு விட்டேன்!


முறையை சரியாக தெரிந்து வைத்திருந்தால்தான் நீங்கள் பத்திரமாக யுடோபிகஸ்போய்ச்சேர முடியுமாதலால் அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்-
வாஸ்தவம்தான் - மறுபடியும் முறையைச் சொல்கிறேன்-எழுதிக் கொள்!
ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்-என்னுடையதுபோல் அல்லாமல் இந்த கால இயந்திரத்தைக் கொண்டு ஒரே ஒரு பயணம்தான் மேற்கொள்ள முடியும்!
எனக்குத் தெரிய வேண்டியது அவ்வளவுதான்!
சென்று வருகிறேன் ஆக்ரோ! இறுதிவெற்றி ஸ்பைடருக்குத்தான் என்று விரைவிலேயே தெரிந்துகொள்வாய்!


தடுத்து நிறுத்துங்கள் அவனை! இரண்டாவது கால இயந்திரத்தைதூக்கிக் கொண்டு ஓடுகிறான்!
இனி அவனை தடுத்து நிறுத்த யாரால் முடியும்?
ஹெலி-கார்
எங்களிருவரையும் இங்கேவிட்டுவிட்டு மற்றவர்களை தன்னோடு கூட்டிச் சென்றுவிடப் போகிறான்!
அப்படித்தான் தோன்றுகிறது! இந்த இயந்திரத்தை பயன்படுத்தி ஒரே ஒரு பயணத்தைத் தான் மேற்கொள்ள முடியுமெனில் நீங்களிருவரும் எங்களோடு யுடோபிகஸ் வருவதைதவிர வேறுவழியில்லை.....



தனக்கு நேரிட்ட கதியை எண்ணிவேதனை யோடு முணங்கினான் ஆக்ரோ ..
இந்த அளவுக்கு மதிநுட்பம் படைத்த நீங்கள் அங்கேஒரு அரசரைப்போல் நடத்தப் படுவீர்கள்!
ப்ரைன் போன்ற விப புத்தியுடையோர்அங் யாருமில்லை!
இவர்களுடன் செல் வோம்மாஸ்டர்எனக்கு அதில்எந்த வருத்தமும் கிடையாது!
விலகிச் சென்றுகொண்டிருந்த ஹெலி காரை வெறிக்கப் பார்த்தபடி நின்றான் ஆக்ரோ- சில கணங்கள்
எனக்கும்தான் ஜேஸன்! ஆனால்ஸ்பைடர்சொன்னது சரியாகிவிட்டது! இறுதியில் அவன்தான் வென்றான்!



சில நிமிடங்களுக்குப்பின்
விந்தை நகரம் மறைந்துவிட்டது! உன் யுடோபியஸ் பயணம் இனிதாக அமைய என் நல்வாழ்த்துக்கள் . ஆக்ரோ!
யங்டவுனை வந்தடைந்தான் ஸ்பைடர்-
அப்பாடா... இப்போது தான் நிம்மதியாக இருக்கிறது பாஸ்! எங்கே அந்த சைத்தான்கள் உங்களை தீர்த்துக்கட்டி விட்டனவோஎன்று அஞ்சிக்கொண்டிருந்தோம்.
ஆக்ரோவையும் அவனுடைய சகாவையும் எங்கே பாஸ்?


அவர்களிருவரையும் நாடுகடத்தி-நோ..நோ. இந்த கிரகத்தை விட்டே கடத்திவிட்டேன்!
பாஸ் ?நீங்கள் சொல்வது —
விளக்கம்பெற ஆளுக்கு ஆள் தொடுத்தகேள்விக் கணைகளை செவிமடுக்காமல் தன்வசமிருந்த கால இயந்திரத்தின் விசைகளை முடுக்குவதிலேயே முழுக் கவனமும் செலுத்தினன் ஸ்பைடர்
பயணம் தொடங்கப் போகிறது தயாராக இருங்கள்!


மறுவினாடி-
விந்தை அனுபவம் நிறைந்த அந்த புதிர் பயணம் முற்றுப்பெற்றது...
வந்துவிட்டோம்...!
இருபதாம் நூற்றாண்டுக்கு!


நாங்கள் இன்னமும் உயி ரோடு இருக்கிறோமென்றால் அதற்கு நீதான் காரணம் ஸ்பைடர்!
அந்த முன் மொழிவை அங்கீகரிப்பதுபோல் மெள்ளப்புன்னகைத்தவாறு ஹெலிகாரினுள் ஏறப்போனான் ஸ்பைடர்...
மீண்டும் ஒரு காலஇயந்திரத்தை தயாரித்து அந்த ஆக்ரோ இங்கே திரும்பி வந்தாலும் வரலாம். அவசியப்பட்டால் மறுபடியும் எனக்கு அழைப்பு அனுப்ப தயங் காதீர்கள்... வரட்டுமா பை..பை.!


அப்படி அவன் மறுபடியும் இங்கே திரும்பி வந்தால் இன்னுமொருமுறை இப்படி யொரு உற்சாகமர்க அனுப வம் நமக்கு கிடைக்கக்கூடும்
வேண்டாம் பாஸ்— வேண்டாம்! அந்தப் பயல் திரும்பி வரவே வேண்டாம்!
முற்றும்.

புள்ளிகளை நம்பர்படி வரிசையாக இணைத்து வேட்டைக்காரரின் இலக்கு என்ன என்பதைக் கண்டு பிடியுங்களேன்!



# இரத்தப் படலம் - II




ஆனால்-குண்டு முனையின் ஒரு பகுதியை சிதைத்து விட்டிருந்தபடியால் அவன் தன்னுடைய நினைவாற்றலை முழுவதுமாக இழந்துவிட்டிருந்தான். அதுமட்டுமின்றி எந்த விபரத்தையும் தெரியப்படுத்தும் குறிப்பு ஏடோ, பொருளோ எதுவுமே அவன் வசம் இருக்கவில்லை-இடது தோளில் XIII என்று பச்சை குத்தப்பட்டிருந்ததை தவிர!
திடீரென்று எங்கிருந்தோ வந்து முளைத்த இரு கொலையாளிகள் ஆபோ-ஷானி தம்பதியினரை கொன்றுவிட்டு, இவனையும் கொல்ல முயற்சிக்கிறார்கள். ஒரு முதல் தர போர் வீரனுக்குரிய அனைத்து திறமைகளும தனக்கு இருப்பதை புரிந்து கொள்ளும் அந்த இளைஞன் கொலைவெறியர்களை தீர்த்துக்கட்டுகிறான். அவன் யார்?
எப்படியாவது அவனை கொன்று விட வேண்டும் என்று சிலர் துடிப்பது ஏன்?
இவனை அடையாளம் கண்டுகொள்ள அந்தக் கொலையாளிகள் தங்களோடு கொண்டு வந்திருந்த புகைப் படத்தில் இவனோடு ஒரு இளநங்கையும் இருக்கிறாள். புகைப் படத்தின் பின்புறம் ஈஸ்ட் டவுனிலிருக்கும் ஒரு புகைப்படக்காரரின் முகவரி இருக்கிறது. அங்கிருந்து 600 கி.மீ. தொலைவிலிருக்கும் அந்த நகருக்குச் செல்லத் தீர்மானித்திருக்கிறான் XIII!
ஈஸ்ட் டவுனில், தன்னோடு புகைப்படத்தில் இருப்பவள் கிம்ராலாண்ட்-ஒரு காப்டனின் விதவை என்று தெரிந்து கொள்கிறான்-அதுமட்டுமின்றி, அவள் விட்டுச் சென்றிருந்த ஓர் இரகசிய குறிப்பிலிருந்து, 'செவ்விந்தியன் செல்லுமிடத்தில்' தனக்காக அவள் காத்துக்கொண்டிருக்கும் செய்தியையும் தெரிந்து கொள்கிறான். இவனைப் பற்றிய சில பயங்கர இரகசியங்களை அறிந்த லெப்டினெண்ட் ஹெம்மிங்ஸ் இவனை 'ப்ளாக் மெயில்' செய்ய முயற்சிக்கிறான்.


அவனிடமிருந்து தப்பி விலகிய XIII, சில மாதங்களுக்கு முன் நிகழ்ந்த, ஜனுதிபதி ஷெரிடனின் கொலைபற்றி புலன் விசாரணை செய்துவரும் கர்னல் அமோஸின் கையில் சிக்குகிறுன். ஜனுதிபதியை கொன்ற கொலையாளி அவன்தான் என்ற படு பயங்கர உண்மை சான்றுகளோடு நிரூபித்துக் காட்டப்படுகிறது இவனுக்கு.
அதை ஏற்றுக் கொள்ள-வோ, மறுக்கவோ இயலாத நிலையில், தப்பி-யோடி மார்த்தாவிடம் புகலிடம் நாடுகிறுன். அந்-தோ! அவனை வேட்டையாடி அலையும் 'மங்கூஸ்' கும்பல் அங்கே வந்து சேருகிறது. அவர்களிடமிருந்து XIII ஐ காப்பாற்றும் முயற்சியில் மார்த்தா மரணமடைகிறுள். மறுப்படியும் தப்பித்துக் கொள்கிறுன். XIII
ஒருபக்கம் கர்னல் அமோஸின் வலைவீச்சு-இன்னெரு பக்கம் கொலை வெறியர்களான 'மங்கூஸ்' கூட்டம்-நிம்மதியின்றி அலையும் XIII இவர்களிடமிருந்து விடுபட ஒரேவழி 'செவ்விந்தியன் செல்லுமிடத்தில்' கிரம் ராலாண்டை சந்தித்து விளக்கம் பெறுவதான் என்று தீர்மானிக்கிறுன்-


செவ்விந்தியன் செல்லுமிடத்தில்...
காப்டன் ராலண்ட்? அவர் இப்போது உயிரோடு இல்லே ஸார்!
25


இரண்டாண்டுகளுக்கு முன் நடந்த விபத்தொன்றில் இறந்து விட்டார்- அவரையும் மற்றும் மூவரையும் ஏற்றி வந்த ஹெலிகாப்டர் நடுவானில் வெடித்துச் சிதறிவிட்டது- யாரும் பிழைக்கவில்லை!
ஹம்- அவர் இறந்துவிட்ட செய்தியை ஏற்கனவே அறிவேன்!


எனக்கு தெரியவேண்டியது அவருடைய மனைவியின் தற்போதைய இருப்பிடம்- அதாவது காப்டனின் கடைசி முகவரி!
அதை நான் உங்களுக்கு தெரி-விக்க இராணுவ சட்ட திட்டங்-கள் அனுமதிக்கவில்லை- மன்னிக்க வேண்டும்!


பாதுகாப்புத்துறை மேலிடத்திற்கு நீங்கள் மனுச் செய்து பாருங்கள்- அதுதான் முறை!
வாஸ்தவம் தான்- நன்றி மேஜர்!
நம்பவே முடியாத புதிர்- எதற்கும் விளக்கம் கோரி தெரிந்து கொண்டு விடுவது நல்லது!
ஹலோ- கண்காணிப்பு அறையா? மேஜர் கலஹன் பேசுகிறேன்- சார்ஜன்டை அனுப்பு சீக்கிரம்!


அதோ வருகிறுர்-
நம் வாடிக்கை
யாளர்!
முரண்டு பண்ணுமல் வந்துவிடு
எங்களோடு! அது தான்
உனக்கும் நல்லது-
எங்களுக்கும் நல்லது!
?!!
ஏன்- எதற்காக- நான் என்ன
தப்பு செய்தேன்!
எங்களுக்குத் தெரியாது- பேசுவதை
மேஜரிடம் பேசிக் கொள். அவருடைய
உத்தரவை நிறைவேற்றுகிறேன் -
அவ்வளவுதான்!


கும்!
ஜூஜூஜூ!
முஷ்!
ணங்!
சத்!


ஸாரி-
சார்ஜண்ட்!
நீ-


எனக்கு வேறு வேலை இருக்கிறது!
ணங்!


மொத்த படைப்பிரிவும் ஜெனரல்- M.Pக்கள் மூவர் உள்பட மொத்தம் ஏழுபேரை நான் மருத்துவ-மனைக்கு அனுப்பும்படி செய்து விட்டான்!
அவனை கைது செய்ய எத்தனை பேர் தேவைப்படும் என்கிறீர்கள் நீங்கள்?



பரவாயில்லை- அவனிடம் நீங்கள் எதையும் உளறிவிடவில்லையே?
இல்லை- ஆசாமி அவன் தான் என்று உறுதியாக நம்புகிறீர்-களா நீங்கள்?
அதை உறுதி செய்து கொள்ளத்தான் இங்கே நான் வந்திருக்கிறேன்- உங்களால் ஆனதை நீங்கள் சரிவர செய்துவிட்டீர்கள்- உடனடியாக எனக்கு தகவல் தெரிவித்ததையும் சேர்த்து!
நாம் வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம் ஜெனரல்!
US Army


ஆயுதங்களுக்கு இங்கே வேலையில்லை இளைருனே! ஜெனரல் பென் காரிங்டன் ஒரு நண்பனாகவே வந்திருக்கிறேன்!
இப்போது ஒரு ஜெனரலா? கௌரவம் காட்டியிருக்கிறது எனக்கு- இவர்கள் என்னிடம் என்னதான் எதிர்பார்க்கிறார்கள் என்னதான எதிர்பாக்-கிறார்கள் என்று நீங்களாவது சொல்ல முடியுமா - ப்ளீஸ்!
அட- கொஞ்சமும் நம்பும்படியாக இல்லையே விந்தை தான்!
??



உன் பெயர் ஸ்மித்-
அதாவது ஆலன்
ஸ்மித்- அப்படித்-
தானே மேஜர்
கல்ஹனிடம்
சொன்னாய்!
உங்களுடைய இராணுவ அதிகாரி
களைப் போலவே நீங்களும் என்னை
நடத்த தீர்மானித்தால் நீங்கள்
சொல்வதை எல்லாம் நான்
ஆமோதிக்கிறேன் ஜெனரல்!
ஒரிஜினல் குடும்பப்
பெயர் மாதிரிதான்
ஒலிக்கிறது. இல்லையா
லெப்டினென்ட்
ஜோன்ஸ்?
வாஸ்தவம்தான்
ஜெனரல்!
தன் திறமையைப் பற்றி
ரொம்ப கர்வம் கொண்டிருப்-
பவர்களுக்கு, உண்மை நில-
வரத்தை உணர்த்துவதில்
பலே கெட்டிக்காரி இந்த
லெப்டினென்ட் ஜோன்ஸ்.
உன் விஷயத்திலும்தான்!
இந்த ரீதியில் நீங்கள்
பேசினால் உங்கள்
கூற்றை உடன்
சோதித்தறிய விரும்பு
கிறேன் ஜெனரல்!


F-4


கேட்டு கேட்டு சலித்துப் போன அதே கேள்வியை உங்களுடைய கீழ்மட்ட அதிகாரிகள் திரும்பவும் என்னிடம் கேட்டு வாங்கிக் கட்டிக் கொண்டது பத்து மணி நேரத்திற்குமுன். நான் சிவிலியன். வாரண்ட் இல்லாமல் என்னைக் கைது செய்யவோ, கேள்வி கேட்கவோ உங்களுக்கு அதிகாரம் கிடையாது!
நன்றாகத்தான் வாதாடு-கிறாய் ஸ்மித்!


நீ ஒரு சிவிலியன் என்று சொல்கிறாய். ஆனால் ஒரு முதல் தர போர் வீரனை போல் எதிரடி கொடுக்க எப்படி முடிகிறது உனக்கு?


உன் பெயரை ஆலன் ஸ்மித் என்று சொல்கிறாய். அதை நிரூபிக்க ருசுவும் உன் வசம் கிடையாது. அது பொய்யான பெயர் என்று உனக்கே தெரியும். ஏனென்றால் பழைய சம்பவம் எதுவுமே உன் நினைவில் இல்லை!


உன்னை சோதித்த இராணுவ மருத்துவ நிபுணர் கூறியிருக்கிறார் மூன்று மாதங்களுக்கு முன் நடந்தது எதுவுமே உன் நினைவில் இல்லை என்று. நீ யாரென்றே உனக்கு தெரியாது மிஸ்டர் ஸ்மித்!
நினைவாற்றல் தான் இல்லையே தவிர நீ சம்பாதித்துள்ள மற்ற திறமைகள் உன்னிடம் எப்போதும் போல் தொடர்ந்து இருந்து வருகிறது!
ஆனால் கடந்த மூன்று மாதமாக நீ என்ன செய்தாயென்று மேஜர் காலஹனிடம் கூற மறுத்துவிட்டாய் இல்லை? ஆனால் அதை யூகிப்பதில் சிரமமே இல்லை. நீ யாரென்று தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறாய். இங்கே நீ வந்ததும் அதற்காகத்தான்!


உன்னைப் பற்றி தகவல் தெரிவிக்கக் கூடியது இந்த புகைப் படம்தான். இதை உன்னிடம் திருப்பித் தருகிறேன். படத்தில் இருக்கும் இளைஞன் நீ உன்னோடு இருப்பவள் காப்டன் ராலாண்டின் மனைவி கிம் இல்லையா?
நீ யார் என்பதே தெரியாதிருக்கும் நிலையில் உன்னால் கிம்மை அடையாளம் காண முடிந்தது?
அது உங்களுக்குச் சம்பந்தமில்லாத ஒன்று!
ஹூம்-அப்படி அலட்சிய படுத்தி விட முடியாது. தம்பி ஏனென்று கேட்கிறாயா? கொஞ்சம் பின்னோக்கி பார்ப்போம்.
நாம் போரில் ஈடுபட்டிருந்த சமயம் அப்போது நானொரு கர்னல். என் மேலதிகாரி ஒரு கொரில்லா படையை உருவாக்கி, எதிரிகளை ஊடுருவும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். அவர்களுக்கு 'ஸ்பேட்ஸ்' என்று பெயர். இந்த வார்த்தை உனக்கு பரிச்சயமானதாக தோன்றுகிறதா?
இல்லை!


நிகரற்ற ஆற்றல்—செயல் திறனில் தனித்தன்மை — அதிலிருந்த ஒவ்வொரு- வரும் எதிரணியில் நாசம் விளைவிப்பதில் ஒரு ஏவுகணைக்கு சமம்- தெரியுமா?
அவர்களில் ஒரு சுடர் நட்சத்- திரம் ஸ்டீவ் ராலாண்ட்-தன் சகாக்களோடு அவன் பயணம் செய்த ஹெலிகாப்டர் வெடித்து விட்டதென்றறிந்தபோது என் வாழ்க்கையிலேயே முதன் முறையாக வாய் விட்டு கதறி அழுதேன்!
நெஞ்சை நெருடுகிறது ஜெனரல். ஆனால் என்னுடைய ஆர்வம் எல்- லாம் இப்போது அவருடைய விதலை மீது!
ஆனால் விபத்தில் ராலண்ட் சாகவில்லை என்ற இரகசிய உண்மையை நானறிந்தபோது எத்தகைய உணர்ச்சி என்னுள் பிரவகித் திருக்குமென்று உன்னால் கற்பனை செய்ய முடிகிறதா, ஸ்மித்?


அது அவனுடைய அதிர்ஷ்டமாக இருக்கலாம்! அந்த கதாநாயகன் இப்போது எங்கே?
அதிக தொலைவில் இல்லை மிஸ்டர் ஸ்மித்! அவன் அருகே, மிக அருகே-
அவ்வளவு ஏன்- இந்தக் கணத்தில் இதோ என் எதிரே நிற்கிறான்!
அந்த ஸ்டீவ் ராலாண்ட் நீ தான்!


உனக்கு மெடல் கொடுத்து
உன்னை நான் காப்டனாக
நியமித்த அந்த நாள் இப்-
போதும் என் நினைவுத்
திரையில் நிழலாடுகிறது!
இது அதிரடிப் படையில் நீ
சேர்ந்த போது எடுக்கப்-
பட்ட புகைப்படம்!
??
N° BX0756917-0
இது நேற்று பிற்பகல்,
மேஜர் கலஹன் உன்னை
பிடித்த படம்.
அடக்
கடவுளே!
N° S0790991-6


தானும் மேஜரும் ஏன் இப்படி நடந்து கொள்கிறோம் உன்னி டமென்று இப்போது புரிந்தி-ருக்குமே உனக்கு. இதைவிட இன்னும் அழுத்தமான வேறொரு சான்று இருக்கிறது!


பெருவிரல் ரேகை ராலாண்டின் பைலில் உள்ளது இது!
இது உன்னிடமிருந்து நேற்று எடுக்கப்பட்டது!
இரண்டும் கச்சித மாகப் பொருந்து கிறது பார்!
???




மேஜர், காப்டன் ராலாண்டுக்கு ஒரு அறையை ஏற்பாடு செய்யுங்கள். அவருக்கு இப்போது தனிமை ரொம்ப அவசியம்!


ஸ்டீவ் ராலாண்ட்-காப்டன்
ஸ்டீவ் ராலாண்ட் ஊஹூம்,
இது எந்த விளக்கமும்
தரவில்லை எனக்கு!
சூன்யம்-இன்னும்
அதே சூன்யத்
தோற்றம்தான்!
ஒழிந்து போ!
டொங்! டொங்!


உங்களுக்கு கச்சிதமாகப் பொருந்தக் கூடிய இராணுவ சீருடை. நாளை நீங்கள் அணிய வேண்டுமென்பது ஜெனரலின் வேண்டுகோள்!
ஹா.
என்ன இருந்தாலும் நீங்க-ளும் இராணுவத்தை சேர்ந் தவர்தானே, இல்லையா?
ம்ம்.

254





பயங்கர ஹெலிகாப்டர் விபத்திலிருந்து எப்படி நீ தப்பி பிழைத்தாய்? கடந்த இரண்டு ஆண்டுகளாக என்னதான் செய்து கொண்டிருந்தாய் காப்டன்?
நான் என்னிடமே கேட்டு கொண்டிருக்கும் விடை தெரியாத கேள்விகள் இவை ஜெனரல்!
பாதுகாப்பு அமைச்சகத்திற்கு உன்னால் ஏகப்பட்ட தலைவலி ஏற்படப் போகிறது குறிப்புகளின்படி நீ- அதாவதுகாப்டன் ஸ்டீவ் ராலாண்ட் செத்துப் போய் இரண்டு வருஷம் ஆகிவிட்டது! ஆனால் நீ திடீரென்று வந்து நிற்கிறாய்!
சரி, சரி, அதைப் பற்றி நீ அலட்டிக் கொள்ள வேண்டாம்! தேவையான ஏற்பாடுகளை நான் கவனித்துக் கொள்கிறேன். அது சரி, உன் தோளில் பச்சை குத்தப்பட்டுள்ள XIII என்ற அடையாளம் எதைக் குறிக்கிறது? முன்பு அது உன்னிடம் கிடையாது!



உங்கள் கேள்விக்கு என் பதில்; எனக்கு எதுவுமே தெரியாது. நான் விளக்கம் தேடி அலையும் பல விஷயங்களில் இதுவும் ஒன்று!
பழையவற்றை நீ நினைவிழந்து விட்டாயோ என்னவோ என்னிடமிருந்து பல விஷயங்களை மறைக்கப் பார்க்கிறாய் ஸ்டீவ்!
உனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் கனமானவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவானஒரு நிஜம். நீ விரும்பினால் நானுனக்கு உதவி செய்ய முடியும்!
ஸாரி ஜெனரல் காரிங்டன், என்னால் எதையுமே நம்பமுடியவில்லை!
என்னைக் கூடவா?


பரவாயில்லே உனக்கொரு
வாய்ப்பு கொடுத்தேன்!
??



ஜெனரல் என்ன இதெல்லாம்?
இவர்களுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?
என்ன சாதிக்க முடியும் நீங்கள் - காப்டன் கைவசம் எத்த ஆயுதமும் இல்லாத நிலையில்?
கத்தி செருகும் நீடைவாளை கையிலெடுக்க வேண்டும் சீக்கிரம்!



சினிமாவில் வருகிற ஷூதிரி. இப்படியொரு முயற்சி செய்து பார்க்கலாம்!
கவண் போல அமைத்து பனியை வாறி வீசினர்-
ஊ ஊ ஊ ஷ்!


ஆ-ஆ....
அது உன் கவனத்தை திசை திருப்ப- என் அன்பே!


பெண்கள் மலர்கள் போல் என்பார்கள். நீயானால் இப்படி முரட்டுத்தனமாக நடக்கிறாயே?
விடுங்கள் என்னை!


சக்!
டமால்!


நிறுத்து!


நாடகம் இன்னும் முடியவில்லையா ஜெனரல்?
உன்னுடைய திறமைகள் இன்னமும் மங்கிவிடவில்லை!
சமீபத்தில் நீ முறைப்படி பயிற்சி எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்காதென்பதால் கொஞ்சம் அடக்கமாகவே செய்யுமாறு ஜோன்ஸிடம் எச்சரித்திருந்தேன்!
புரிகிறது! நீங்கள் ஒரு ஜெனரல் என்றபோதும் உங்கள் முகரையை பெயர்க்க வேண்டும் போல ஒரு வெறி என்னுள் பொங்குகிறது!


போதும் உன் திமிர்த்தனம்- ராலாண்ட்-நீ நிகழ்த்திய ஒவ்வொரு அசைவும் அந்நாளில் நான் உனக்கு சொல்லிக் கொடுத்த பாடம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்!
எந்த ஒரு அசம்பாவிதத்தையும் முறியடித்து எதிரி யாராயினும் வெற்றி கொண்டு அதிபராக்கிரமசாலியாக இன்று நீ விளங்க தளமமைத்து தந்தவன் நான்! உன்னை ஏறத்தாழ என் மகனாகவே கருதிக் கொண்டிருக்கிறேன் ஸ்டீவ்!
அனுல், இன்று நீ என்னை நம்பவில்லை. இனி உன் இஷ்டத்துக்கு எங்கும்போய் தொலை. உனக்கு சட்டத்தில் இல்லாத விடுப்பை இராணுவம் வழங்குகிறது. ஜோன்ஸ் உன்னை உன் வீட்டிற்கு இட்டுச் செல்வான்!


என்-என்னுடைய வீடு!
அது எங்கே இருக்கிறது?
ஸவுத் பார்ஹ், காப்டன் இளம் பிராயத்தில் நீங்கள் வசித்த இடம்!


இந்த ஊரைப் பற்றிச் சுருக்கமாய் சொல்வதனுல் மக்கள் தொகை- 6882 சர்வீஸ் ஸ்டேஷன்கள்-3 சூப்பர் மார்க்கெட்-2 மருந்துக் கடைகள்-2 சர்ச்-1 மதுபானக் கடைகள்-2


பரப்பளவு- 15000 ஹெக்டேர்கள். இதில் பெரும்பான்மை நிலம் உங்-கள் தந்தைக்குச் சொந்தம்! மக்கள் தொகையில் 75 சதவிதத்தினர் அவரிடம் வேலே செய்பவர்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டில் இருநத மாதிரியே இன்றைக்கும் இருக்கிறது!
என் - தந்தை-
எனக்கொரு தந்தை-எனக்கொரு குடும்பம்-என்ருல் ஜீரணிக்கவே முடியாத தகவல்கள்!
உங்களுடைய குறிப்பேட்டில் காணப்படும் விபரங்கள் இவை, காப்டன.
உன்னிடம் எனக்கு பிடித்தமான அம்சம் என்னவென்ருல், ஒரு நல்ல கம்ப்யூட்டர் மாதிரி மளமளவென்று குறிப்பிட்ட பா-தையில் காரியங்களே செய்து கொண்டே போவது.
இதை ஒரு பாராட்டாகவே ஏற்றுக் கொள்கிறேன் காப்டன்!


அதோ. அங்கே தெரிகிற மாளிகை தான் உங்களுடையது காப்டன்.
இடப்பக்கம் குறுகலான சாலே வழியே நீ செல்லலாமே!


காரைவிட்டு இறங்கி இப்படி எங்கே ஓடுகி றீர்கள்- காப்டன்?
உன் பைனகுலரை கையிலெடுத்துக் கொண்டு என் பின்னால் வா!


வித்தியாசமாக ஏதாவது-
அப்படித்தான்!


நான் பிழைத்தெழுந்து வந்திருக்கும் உண்மை என் தந்தையை தவிர வேறு யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை என்று சொன்னாயல்லவா?
ஆமாம்- அது விஷயத்தில் ஜெனரல் காரிங்டன் ரொம்ப எச்சரிக்கையாக இருந்தார்!


நீங்கள் யாரை அல்லது எதை எண்ணி மிரட்சி-யடைகிறீர்கள் காப்டன்?
என் வாயைக் கிளற முயற்சிக்காதே!
என் குடும்பத்தினரைப் பற்றி ஜென-ரல் சொன்ன விபரங்களை நினைவுப் படுத்திக் கொள்ள விடு! முதலில் ஆறு ஆண்டுகளுக்கு முன் கார் விபத்தில் என் தாய் மாண்டு போனாளாம்! என் பணக்கார தந்தை கெர்மி ராலாண்ட் பாரிய வாயு தாக்கி நடமாட்டமிழந்து போனாராம்!
அடுத்து அவர்களுக்கு நான் ஒரே பிள்ளை. ஆனால் நான் இராணுவத்தில் இருந்ததால் என் சித்தப்பா மாட் நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்!
பின்னர் ஓராண்டு கழித்து அதா-வது என் "மரணத்திற்குப்" பின் என் தந்தை தன்னை பேணி வந்த பெலிஸிட்டி என்ற நர்ஸை மறுமணம் செய்து கொண்டார்!
அப்படியானால் இறந்ததாகக் கருதப் பட்ட வாரிசாகிய ஸ்டீவ் ராலண்ட் மீண்டும் உயிரோடு வருவதை இரண்டு நபர்கள் இரசிக்கப் போவதில்லை என்றாகிறது!


மனக்கிலேசத்தை ஏற்-படுத்துகிறதோ அது?
இல்லை- நான் எச்சரிக்கையாக நடந்துக்கிட வேண்டும் என்று-கிறது! என் வரவு ஏகப்பட்ட சிக்கல்களுக்கு வழி வகுக்கலாம்!
என்னைப் பற்றிய உங்களுடைய குறிப்பேட்டில் என் மனைவியை பற்றி மிக குறைவான தகவல்களே உள்ளதே- ஏன்?
கிம் ராலாண்ட், அவளைப் பற்றி எங்களுக்கு அதிக-மாக தெரியாததுதான் காரணம்!
நீங்கள் இறந்து விட்டதாக அதி-காரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டதும் திடீரென்று தலைமறைவாகி விட்டாள்-முகவரி தெரிவிக்கா-மலேயே- தனக்கு சேர வேண்டிய விதவை பென்ஷனை பெறக் கூட அவள் வரவில்லை!
ஒஹோ!
அவளை நீங்கள் நெருக்கமாக நேசித்தீர்களா?
இதற்கொரு பதில் சொல்லத் தெரியவில்லை எனக்கு!
நான் எதிர் பார்த்தேன்! இதை!

274




ஏதாவது விவகாரமென்றால் ஜெனரலுக்கோ


ஏதாவது விவகாரமென்றால் ஜெனரலுக்கோ எனக்கோ தகவல் அனுப்ப தயங்காதீர்கள். அவருக்கு உங்கள் மீது ஏகப்பட்ட அபிமானம். இந்தாருங்கள் போன் நம்பர்!
மிக்க நன்றி!
நீங்கள் தொடங்கவிருக்கும் மறுவாழ்வில் அதிர்ஷ்டம் துணை புரிய என் நல் வாழ்த்துக்கள் காப்டன்!


அத்தியாயம்:2
அங்கே வீட்டினுள் -
நிலவரம் இப்படியே நீடிக்க முடியாது மாட்!


பழமரங்கள் இருந்த நிலத்தில் பாதியை கால்நடைகளுக்கு தீனியாக புல் வளர்த்ததிலிருந்து எங்களில் பலருக்கு வேலையில்லாமல் போய்விட்டது. இப்போது கோதுமை விளையும் நிலத்தில் பாதியை தரிசாக போட தீர்மானித்திருக்கிறீர்கள்! இதை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை மாட்!
தேச அளவிலான உபரி கோதுமை விளைச்சல் கட்டுப்பாட்டை நாம் புறக்கணிக்க முடியாது. பழ மரங்களைப் பொறுத்தவரை அவை முன் போல் லாபம் ஈட்டுவதில்லை. அதனால் தான் புல் வளர்க்க தீர்மானித்தேன்!
எங்களுடைய நலனையும் நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்!
காட்டுப் பகுதிக்கு அப்பாலுள்ள 2000 ஹெக்டேர் தரிசு நிலத்தையாவது, நாங்கள் விவசாயம் செய்ய அனுமதி தரணும்!


மாட் மெள்ள திரும்பினர்-
பாரிச வாயுவால் பாதிக்-
கப்பட்ட கிழவரின்
ஜாடைக்காக-
ம்ம்-
இல்லே- அனுமதிக்க
முடியாது!


வறுமையால் வாடுகிறோம்!
ராலாண்டின் அடக்கு முறை இனியும் செல்லாது!
உனக்கு எந்த அதிகாரமும் கிடையாது மாட்!
இனியும் உங்கள் பேச்சை கேட்க நாங்கள் தயாரில்லே.
கொஞ்சம் அமைதியாக இருங்கள்-
சொல்வதை கேளுங்கள் தோழர்களே!
க்ளேவ் நீ சொன்னது சரி. அடித்து நொறுக்-குவோம் வாங்க!
அடி-விடாதே!
ஷெரீப்புக்கு தகவல் கொடு-பெலி-ஓடு.


உன் அட்டகாசம் தாங்கவில்லை!
கும்!
அந்தப் பெண் பெலிஸிட்டி-பெரியவரின் இரண்டாம் தாரம்-
போன் பண்ணுகிறயா போலீஸுக்கு நடக்காது!
டுமீல்!
ஆஆ!
நீயும்தான்-எப்படியெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்தாய்-


சதக்!
ஸாரி என் அன்பு விவசாயியே! உங்களுடைய கூற்று முழுக்க முழுக்க தவறு என்று நான் சொல்ல மாட்டேன்- ஆனாலும் எதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறதல்லவா?


யாரிவன்?
நானென்ன கனவு காண்கிறேனா- ஸ்டீவ் ராலாண்டல்லவா?
ராலாண்டின் மகன்!
நம்ப முடியாத விசித்திரம்!
செத்துப் போய் விட்டதாக அல்லவா சொன்னார்கள்!
அது பொய்யான தகவல்- நான் உயிரோடு தான் இருக்கிறேன்! தயவு செய்து எல்லோரும் வெளியேறுங்கள்- என் குடும்பத்தாரிடம் நிறைய பேச வேண்டியிருக்கிறது- அவசரமாக!


பேய், பிசாசுகளில் உனக்கு நம்பிக்கையுண்டா?
எத்தனை பெரிய அதிர்ச்சி நமக்கு- கொஞ்சம்கூட நம்பும்படியாக இல்லை!
க்ளேவின் கையில் பாய்ந்த கத்தி நடந்தது கனவோ, பிரமையோ அல்ல என்று ஊர்ஜிதப்படுத்துகிறது!
பெருத்த மாற்றத்தை நாம் எதிர் பார்க்கலாம்!
ஓ! நோ தந்தையோ மகனோ சொந்த நலன் தான் அவர்-களுக்கு முக்கியம்!
RED


அதிக ஆர்ப்பாட்டமின்றி வந்து சேரத் தான் நான் நினைத்திருந்தேன்!
ஸ்டீவ்- நி-நிஜமாகவே நீதானா?
ஓ- ஜெர்மியின் மகன் நீங்கள்!
நீ பெலிஸிட்டி அல்லவா- ஆம் அப்படித்தானிருக்க வேண்டும்!
நல்வரவு ஸ்டீவ்- நெருக்கடியான சூழலில் தலையிட்டு உதவியதற்கு மிக்க நன்றி!
டமார்!
அடக்கடவுளே- யார் அது? மிஸ்டர் ஸ்டீவ் ராலண்டு!


ஓ- மிஸ்டர் ஸ்டீவ்! உன் பொருட்டு நான் ஆண்டவனிடத்தில் நிறைய முறையீடு செய்து வந்திருக்கிறேன். இறுதியில் என் பிரார்த்தனைக்கு செவி சாய்த்து விட்டான் இறைவன்-. அற்புதம் நிகழ்ந்து விட்டது மிஸ்டர் ஸ்டீவ்!
ஆமாம்- மேக்சி !
உங்களுக்கு ஏற்கனவே - இந்த விஷயம் தெரியுமா ஜெர்மி?
ஆமாம்- அங்கிள் மாட்! அப்பாவுக்கு ஏற்கனவே தெரியும்- ஆனால் சில தினங்களுக்கு முன்புதான்!
!?


இல்லையா-
அப்பா!
என்னதான் நடந்தது ஸ்டீவ்- நீ
உயிரோடு இருப்பதாக ஏன்
எங்களுக்கு முன்பே
தெரிவிக்கவில்லை?
விசித்திரம்-
ஆச்சரியம்-
வேறென்ன?


கடந்த சில மாதங்களாக நடந்த சம்பவங்களை விரிவாக எடுத்துரைத்தான் தன் உறவினர்களுக்கு-
இதுதான் நடந்தது!



விசேட படைப்பிரிவில் நானொரு காப்டனாக இருந்திருக்கிறேன்- விபத்தில் நான் இறந்து விட்டதாக அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது!
கடந்த இரண்டு ஆண்டுகளில் எனக்கு என்னதான் நேர்ந்தது என்று எனக்கு கொஞ்சமும் தெரியாது. இன்று- எனக்கொரு வீடு, அதில் என் அப்பா, புதிய மாற்றாந்தாய் ஒருத்தி, அங்கிள், ஆண்ட்டி அவர்களுடைய மகன் டேவிட்- இருப்பதை தெரிந்து கொண்டேன்!


சிறு வயதில் என்னை மார்பிலும் தோளிலும் போட்டு வளர்த்த அன்பு மேக்கி- மொத்தத்தில் ஒரு இனிய குடும்பச் சூழலுக்கு நான் வந்து சேர்ந்திருக்கிறேன் இப்போது!
ஏனோ, துரதிர்ஷ்டவசமாக என் நெஞ்சில் மகிழ்ச்சியோ, திருப்தியோ ஏற்படவில்லை. மாறாக ஒருவித சோகம் என்னைக் கவ்வுகிறது!
ஒரு வேளை நான் இங்கே சந்திக்க எண்ணி வந்த நபர் இங்கே இல்லாதது காரணமாக இருக்கலாம். என்னை நீங்கள் அனைவரும் மன்னிக்க வேண்டும்!


ஸ்டீவ் என்ன இது– எங்கே போகிறாய்-
கொஞ்சம் நில்- ஒரு முக்கியமான
விஷயத்தை சொல்ல விரும்புகிறேன்!



உன் மனைவி கிம் பற்றி விபரம் தெரிய வேண்டும் உனக்கு-இல்லையா? அந்தப் பேச்சை உன் தந்தையின் முன்னல் எடுக்க நான் விரும்பவில்லை-அதனுல் தான் அங்கே வாளாவிருந்தேன்-
ஏன் அப்படி!
உங்களுடைய திருமணம் முடிந்து திரும்பும் வழியில் ஏற்பட்ட விபத்தில்தான் உன் தாயார் இறந்து போனுர்- உன் தந்தைக்கு இந்தக்கதி ஏற்பட்டது-என்ற விஷயம் நினைவிருக்கிறதல்லவா உனக்கு? அப்போதிருந்து அவளைப் பற்றி பேச்செடுத்தால் அவருக்கு மகா கோபம் வந்துவிடும்-அப்படியொரு வெறுப்பு- அவள் மீது!
ஒகோ!
அவள் இங்கே வரப்போவதில்லை என்கிறீர்களா?
ஆமாம்-நீ வலியச் சென்று இராணுவத்தில் சேர்ந்து விட்டாய்!


எங்களோடு கொஞ்ச நாளாவது தங்கிச் செல்ல உனக்கு இஷ்ட-மில்லையா-ஸ்டீவ்!
நன்றி-எனக்கு இஷ்டமில்லைதான்!
அவனுக்கு தனிமை தேவை, பெலி—விடு-அவனை! இஷ்டம் போல் செல்லட்டும்! சமீபத்தில் பலத்த அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறன்!
வாஸ்தவம்தான்! அங்கிள் மாட், இன்னொரு விஷயம்-யாராவது செவ்விந்திய தோழன் இருந்தானு எனக்கு?
ம்ம்-இல்லை என்றுதான் சொல்வேன்!


அவர்களோடெல்லாம் சேர்ந்து பழகுகிற சுபாவமில்லை உனக்கு-!
வா-உன் அறைக்கு அழைத்து செல்கிறேன், ஸ்டீவ்!
நீ போனபிறகு, மேக்கியை தவிர வேறு யாருமே இந்த அறையினுள் பிரவேசித்தது கிடையாது!
ஓ-!


உன் வேதனை எனக்குப் புரிகிறது-ஸ்டீவ்-நான் உனக்கு சொல்ல விரும்புவதெல்லாம்-
எனக்கு கொஞ்சம் தனிமை தேவை-பெலிஸிட்டி-ப்ளீஸ்!
உன்னிடம் பரிவோடு நடந்து கொள்ளலாமே என்று-
உன் நல்லெண்ணம் எனக்கு புரியாமலில்லை! அதுசரி-உன்னைப் போல் ஒரு இளநங்கை முடக்கமாகிக் கிடக்கும்பணக்கார வயோதிகர் ஒருவரை மணந்து கொள்ளக் காரணம்?
அதற்கும் காரணம் பச்சாத் தாபம் தானு?


பணக்கார பண்ணையாரின் மகன் இராணுவத்தில் ஒரு சுடர் நட்சத்திரம்-ஒரு சிலரின் கண்ணோட்டத்தில் பயங்கர கொலைகாரன்-புதிரான ஒரு மனைவி-விவகாரம் ரொம்ப விபரீதமாகத்தானிருக்கிறது!
இது ஒரு இதமான இடமோ இல்லையோ, கர்னல் அமோஸோ, 'மங்கூஸ்' கொலை வெறியர்களோ இங்கே என்ன தேடி வந்துசேருமுன் இடத்தைக்காலிபண்ணி விட்டு ஓடிப்போய்விட வேண்டும்-
ஆனல்-எங்கே செல்வது? செவ்விந்தியன் எவனையும் நானறியேன். அப்படியிருக்கையில் 'செவ்விந்தியன் செல்லுமிடத்தை' எப்படி கண்டறியப் போகிறேனே - ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!


ஆனுலும் அந்த நாய் திரும்பி வந்து சேர்ந்துவிட்டதால் நம் திட்டம் அடியோடு நாசமாகி விட்டது.
நான் அப்படி நினைக்கவில்லை, அன்பே! ஒரு வகையில் நிலவரம் நமக்குசாதகமாகிவிட்டிருக்கிறது!
எனக்கு ஏன் முன்கூட்டியே நீ சொல்லவில்லை பெலி- இப்படி இந்த ராஸ்கல் வந்து திடுமென குதிக்கப் போகிறுன் என்பதை!
அதனுல் எவ்வித பயனும் இராது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்- அதனுல்தான்!
ம்ம்-இப்படி செய்தால் என்ன?


பிறிதொருநாள் செய்யத் திட்டமிட்டிருந்
ததை அவனுடைய வரவால், சீக்கிரமே
செய்து முடிக்க ஒரு வாய்ப்புக் கிட்டி
யிருக்கிறது நமக்கு. முடிந்தால் நாளைக்
கே ஒரு தொடக்கம் கொடுத்து விட
தீர்மானித்திருக்கிறேன்!
மறுநாள்-
ம்ம்-புகைப்படக்காரரா? ஜோ
தாத்தா தன் மருந்துக் கடையில்
சில காமராக்கள் வைத்திருக்
கிறார்-இரண்டாவது சந்தில்-
இடப்பக்கம்!
நன்றி-
பையா!
MOTOR

298




ஆக-இந்த ஆசாமிகள் சொன்னது நிஜம்தானு? மாண்டவன் மீண்ட விநோதத்தை என்னவென்பது-ஆகா!
எனக்கு உங்களால் ஒரு காரியம் ஆகவேண்டும்!
சொல்! உனக்காக நான் எதையும் செய்யக் காத்திருக்கிறேன்-தம்பி!
தங்கள் வசம் உருப்பெருக்கிக் காட்டும் வசதி கொண்ட புரஜெக்டர் இருக்கிறதா?
ஓ-யெஸ்! என் பிரத்யேக ஆய்வுக் கூடத்தில் இல்லாதது ஏதும் உண்டா? வா-போகலாம்!


இந்தப் படத்தில் நான் என்ன செய்ய வேண்டும்!
என்லார்ஜ் செய்ய வேண்டும்!
!?
ஒரு செவ்விந்தியன்!
ஆமாம் சந்தேகமில்லாமல்!


அடுத்து?
அந்தப் பகுதியை மையமாக வைத்து மேலும் என்லார்ஜ் செய்ய முடியுமா?
முயற்சிக்கிறேன்- ஒரு வேளை படம் தெளிவில்லாமல் தெரியலாம்!
அதோ- அதோ- ஒரு வீடு- வீடு மாதிரி ஒரு கட்டிடம்!
செவ்விந்தியன் செல்லுமிடத்தில்- ஓ! அப்படியா சமாச்சாரம்! புதிருக்கான விடை இத்தனை நாளும் என் வசமே இருந்திருக்கிறது இத்தனை நாளும்!
??


அடுத்து அந்த ஏரி எங்கே இருக்கிறது என்று கண்டு பிடிக்க வேண்டும்!
தம்பி- புகைப்படத்தை எடுத்துச் செல்ல மறந்து விட்டாயே- இந்தா!
திட்! தடால்!
??
கடகடா!
படார்!


தடதடா!
என்ன - இது?
சொந்தப் பிரச்சினை ஜோ!




டிஷ்!
ஆவ்!


நீ இங்கே வந்து எங்கள் விவகாரத்தில் தலையிடாமல் ஒதுங்கிப் போயிருக்-கலாம் காப்டன்!
உ-உங்களுக்கு என்ன வேண்டும்!
பழிக்குப் பழி-வேறென்ன?

F.11




யாரும் அசையக் கூடாது. ஜாக்கிரதை!


ஸ்டீவ் - உனக்கு ஆபத்தில்லையே?
இல்லை - நன்றி!
நாம் பிறகு சந்திப்போம் - ராலாண்ட்!
போதும் - க்ளேவ்! நான் மனம் மாறும் முன் இங்கிருந்து ஓடிப் போய் விடு!
அவர்களை தப்பியோட அனுமதித்து விட்டீர்களே - ஏன்?
இது பெரு நகரமில்லை மிஸ்டர் ராலாண்ட் - பிரச்சனையைத் தீர்க்க நாங்கள் கையாளும் வழிமுறையே வேறு!


அத்தோடு, அந்த மாதிரியான அசம்பாவி-
தத்திற்கு அவர்கள் மட்டுமே பொறுப்பாளி
கள் அல்ல என்று உறுதிபட சொல்வேன்!
உங்கள் வழிமுறை சரியல்ல காப்டன்-
இது காட்டுப் பிரதேசம் அல்ல!
உங்களுடைய சொந்த நலன் கருதி, நகரில்
சில தினங்களுக்காவது உங்களை வெளிப்
படுத்திக் கொள்ளாதீர்கள்!
ஓ.கே. ஷெரீப்-
நன்றி!
மிஸ்டர்-
ஸ்டீவ்!


ஒரு ஆசாமி உங்களை தேடிவந்தார் சின்னக் குளத்தினருகே உள்ள பூங்காவில் உங்களுக்காக காத்திருப் பதாக சொல்லிவிட்டுப் போனார்!
ஓகோ!


நீங்கள் படுவேகமாகத் தான் செயலாற்றுகிறீர்கள் கர்னல் அமோஸ்-
அப்படியில்லை-ராலாண்ட்! பாதுகாப்பு அமைச்சகத்தில் நீ ஒரு பிரபல புள்ளியாக பேசப்பட்டு வருகிறாய் என்பது தான் காரணம்!
என்னைப் பற்றிய பைல் கிடைத்தாக்கும்! பழைய சம்பவங்கள் அனைத்தும் என் நினைவிலிருந்து நழுவிவிட்ட விஷயம் புரிந்திருக்குமே? என்னிடமிருந்து எதையும் கேட்டறிய முடியாது-கர்னல்!
வாஸ்தவம்தான்! ஆனால் ஒரு உண்மையை நீ மறந்துவிட்டாய் நம்பர் XIII-நீ நினைவாற்றலை இழந்து விட்டாயே, இல்லையோ-பிரசிடெண்ட் ஷெரிடனை கொலை செய்தது நீதான்!


கொலையாளியின் துப்பாக்கியிலிருந்த கைரேகை அடையாளமும், உன் கைரேகையும் ஒத்துப் போகின்றன! ஆனால் நீயோ சம்பவம் நடப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே 'செத்துப் போய்விட்டதாக அதிகாரபூர்வமான குறிப்புகள் உள்ளன! உன் மீது பழிவிழுவதற்கு இடமேயில்லாது போகிறது! இப்படிப்பட்ட தொரு திட்டத்தை தீட்டி, XIII என்ற பெயரை உனக்குக் கொடுத்து ஜனாதிபதியைக் கொல்லச் செய்த அந்தக் கூட்டம், உண்மையிலேயே பெரிய கெட்டிக்காரர்கள் தான் ராலாண்ட்!
உனக்கு ஞாபகம் இல்லாவிட்டாலும் கூட, நடந்தது இது தான்–ஹெலிகாப்டர் விபத்தில் காப்டன் ராலாண்ட் இறந்து விட்டதாக உலகத்தையே நம்ப வைத்து விட்டு, நீயும் உன் மனைவியும் இரகசியமாக, தூரத்து, ஈஸ்ட் டவுனில் போய் குடியேறியிருக்கிறீர்கள்! அங்கே நீ 'ஜாக்' என்ற மாற்றுப் பெயரை பயன்படுத்தியிருக்கிறாய்! ஏற்கனவே ஒத்துக் கொண்டபடி பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு, ஜனாதிபதி ஷெரிடனைக் கொலை செய்ய தயாராகயிருந்தாய்! ஒரு வருடம் காத்திருந்தாய்!
இறுதியில் மேலிடத்து உத்தரவு வந்தவுடன் ஜனாதிபதியை சுட்டு விட்டாய்! கொலையை செய்தது 'செத்துப் போன' ஒருவன் என்பதால் புலன் விசாரணை நின்று விடுகிறது! மொத்தத்தில் பிரமாதமான திட்டம்தான்! ஆனால் கண்ணில் விழுந்த மணலாக ஓரிரு உறுத்தல்கள்!


ஒன்று-கொலே செ ்ப் பயன்படுத்தப் பட்ட துப் பாக்கியுடன் நீ நி ்தை ஒரு போட்டோ கிராபர் தற்செயலாக ப பிடித்தது! அதை அறிந்த வுடன் சதிக் ின் தலைவன் மிரண்டுபோய் உன்னைத் தீ ்ுக்கட்ட 'மங்கூஸ்' எனும் கும்பலே அனுப் ்க்கிருன்! அவர்களிடமிருந்து நீ உயிரோடு ்பிவிட்ட போதிலும், தோட்டா ஒன்று உன் ்து பாய்ந்து, உன் நினைவாற்றலே அழித்து விட்டது!
அதுநாள் வரை யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொண்டிருந்த நீ, நினைவாற்றலே இழந்தவுடன் வெளியே நடமாட ஆரம்பித்தாய்! அத்தோடு மட்டுமல்லாமல் உன் கடந்தகாலத்தைப் பற்றி அறிய முயற்சி செய்தாய்! நீ தான் காப்டன் ராலாண்ட் என்று அறிந்தவுடன் திருப்பவும் உன் குடும்பத்துடன் வந்து சேர்ந்திருக்கிருய்!
நல்லது கர்னல்! என்னை


நல்லது- கர்னல்! என்னை ஒரே-யடியாக கைது செய்து கொண்டு போய்விடுங்கள்- இந்தகண்ணாமூச்சி ஆட்டம் போதும்!
ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேன்-நான்ஒரு நீதிபதியோ போலீஸ் அதிகாரியோ அல்ல. குற்றத்தைசெய்த கையை தண்டிப்பதல்ல என் இலட்சியம்...ஜனாதிபதியை கொலை செய்ய திட்டமிட்ட தலையை கண்டுபிடிப்பது?
உங்களுடைய முயற்சிக்கு என் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறீர்களா கர்னல்? நல்ல வேடிக்கை- நான் யார் என்றே எனக்கு தெரியாது- நான் எப்படி இதில் உங்களுக்கு உதவ முடியும்?
உன் மனைவியை தேடிக் கண்டு பிடிப்பதன் மூலம்!
என்- என் மனைவியா?
அவள் தலைமறைவாகி எங்கோ பதுங்கிக் கிடக்கிறாள். காரணம் அவளுக்கு நிறைய உண்மைகள் தெரியும் என்பது என் கணிப்பு!
315


அவளுடைய இருப்பிடம் உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான்! வடமேற்கிலுள்ள சிறியதொரு கிராமமான மவுண்ட்டவுனில்மூன்றுவாரங்களுக்கு முன் கிம் ராலாண்ட் தென்பட்டிருக்கிறாள். துரதிர்ஷ்டவசமாக அதன் பிறகு எங்கே போனுள் என்ற தகவல் இல்லை!
அவனை வெளிக் கொணர என்னை தூண்டில் புழுவாக, இரை ஆடாக பயன்படுத்துவது உங்களுடைய நோக்கமா?
பலே- சட்டென்று புரிந்து கொண்டு விட்டாய்!
உன்னைத் தேடி கொலை வெறியோடு மங்கூஸ் இங்கே விரைவில் வந்து சேருவது உறுதி! நான் கொஞ்சம் முந்திக்கொண்டுவிட்டேன்- அவ்வளவுதான். உனக்கு நல்லது எதென்று நீயே தீர்மானித்துக் கொள்!




சத்!


மிஸ்டர் டேவிட்டின் அறையா? அந்தக் கோடியிலிருந்து இரண்டாவது அறை- மிஸ்டர் ஸ்டீவ்!


அத்தியாயம்-3
ஹலோ- டேவிட்! நான் வந்தது இடைஞ்சல் இல்லையே!
வாருங்கள்- ஸ்டீவ்! எனக்கொன்றும் இடைஞ்சல் இல்லை- மறுபடியும் அனைத்தையும் பழக்கப் படுத்திக் கொள்ள முயற்சித்தீர்களா?
ம்ம்- உன்னிடம் அட்லஸ் இருக்கிறதா? அல்லது வடமேற்கு பிரதேசம் பற்றிய தேசப்படமாவது-
உங்களுக்கு அதில் குறிப்பாக அப்படி என்ன விபரங்கள் தெரிய வேண்டும்!
ஓர் ஏரி! மவுண்ட்டவுன் என்ற


ஓர் ஏரி! மவுண்ட்டவுன் என்ற சிற்றூருக்கு அருகாமையில் இருக்கும் ஏரி!
இதைத் தெரிந்து கொள்ள அட்லஸ் தேவையில்லை- பிக் பிரதரை கேட்டால் பதில் கிடைத்து விடும்!
யாரது பிக் பிரதர்?
ஸ்கூல் கம்ப்யூட்டர்! நாம் இருபதாவது நூற்றுண்டில் இருப்பது மறந்து விட்-டதா உங்களுக்கு? இதோ-
இவான்ஸ் காலேஜ்-BB 14 சமிக்ஞை பெறப்பட்டது. ஹலோ டேவிட், உன் கேள்வி என்ன?
ஏரி- 100 கி.மீ. தொலைவில்! மவுண்ட் டவுனிலிருந்து-


அங்கே ஐந்து ஏரிகள் இருக்-கின்றன - உங்களுக்கு எது தேவை?
எதன் கரையில் செவ்விந்தியர்கள் வசிக்கிறார்களோ அந்த ஏரி!
ஓ.கே. முயன்று பார்ப்போம்! செவ்விந்தியர்கள்-வசிக்கும் ஏரி எது?
பதில்:-
ஒகநாகன் ஏரி
ப்ளாட்ஹெட் ஏரி
கெல்லோனி ஏரி
அப்படி மூன்று ஏரிகள் இருக்கின்றன ஸ்டீவ்!
!?


கூடுதலாக ஏதேனும் தகவல் இருந்தால் குறிப்பாக எந்த ஏரி என்று தெரிந்துவிடும்!
என்னிடமிருப்பது இந்த புகைப்படம் ஒன்றுதான்!
இது பயன்படக்கூடும் படத்திலிருப்பது உங்கள் மனைவியா?
ஆமாம்- அப்படித்தான் நம்புகிறேன். என்னை புரிந்து கொண்டாயல்லவா? இந்த ஏரியை நான் இனம் கண்டு கொள்வதன் மூலம்.
புரிகிறது- பின்னணியில் தெரியும்! இந்த மலைத் தொடரின் வளை கோட்டை ஒரு கூடுதல் தகவலாக கொடுப்போம்- கம்ப்யூட்டரிடம்!


மலைத்தொடரின் வளைவு கோட்டை இனம் கண்டு கொள்ளும் திறன் இருக் கிறது அதற்கு! ஏரிக்கு வடக்கே அது இருப்ப தாக முயற்சிப்போம்.
நேர் தெற்கே! இல்லை மேற்கே- கிடையாது!
கெல்லோனி ஏரி!
சாமர்த்தியம் பார்த்தீர்களா?
ஓ- உனக்கு என் பாராட்டுக்கள், டேவிட் மிக்க நன்றி!


கெல்லோனி ஏரி! இங்கிருந்து சுமார் 2000 மைல் தொலைவில் இருக்கிறது. கர்னல் அமோஸின் கவனத்தை ஈர்க்காமல் எப்படி நான் அங்கே போய்ச் சேர முடியுமோ தெரியவில்லை!
ஜெனரல் காரிங்டன்! ப்ளீஸ் - மிக அவசரம்!


அதே சமயம்-
நான் ரெடி பெலி -- அந்த சாத்தான் எங்கே?
மொட்டை மாடியில், சூரிய அஸ்தமண அழகை இரசித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்! உங்களுக்கு 15 நிமிட அவகாசம் கொடுத்து விட்டு அங்கே செல்கிறேன்-சரிதானா?
ஸ்டீவ்!


உங்களை எங்கெல்லாம் தேடுவது? இரவு உணவுக்கு முன் உங்களை சந்திக்க வேண்டும் என்றார் அப்பா!
ஓ.கே. இதோ போகிறேன்!
நேற்று நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொண்டு விட்டேன்!
பரவாயில்லை- நான் எதையுமே மனதில் வைத்துக் கொள்வதில்லை!
அப்பா- என்னைப் பார்க்கவேண்டும் என்றீர்களாமே?


அப்பா!
மைகாட்!


மடார்!
ஆஹவ்!
பிரமாதம் மாட்!


உங்களுடைய மனைவியும் மக-னும் உணவுக்காக இன்னும் சில நிமிடங்களில் கீழே இறங்கி வந்துவிடக்கூடும். கொண்டாருங்கள் துப்பாக்கியை! உங்களுடைய கை ரேகையை அழித்து விடுகிறேன்!
சாதித்துவிட்டேன் பெலி- நாம் திட்டமிட்டபடி!
கிழவரை கொலை செய்தவன் நான். ஆனல் பழி அவருடைய மகன் மீது விழப் போகிறது- நாம் பெரும் சொத்துக்குவாரிசுகளாகிவிட்டோம் டியர்!
தவருக சொல்கிறீர்கள் டார்லிங்!
வாரிசு- நானொருத்தி மட்டும்தான்!
டுமீல்!
டுமீல்!
அதையடுத்து ஷெரீப்புக்கு நிதானமாய் போன் செய்தாள் பெலி-


அடிமுட்டாளே-
புரிந்ததா?
ஹலோ-
ஷெரீப்!


சீக்கிரம் வாருங்கள்- இங்கே ஸ்டீவுக்கு திடீரென்று வெறி பிடித்தாற் போலாகி விட்டது. என் கண-வரையும் மிஸ்டர் மாட்டையும் கொன்று விட்டார்! அவரை அடித்து வீழ்த்தி விட்-டேன்! மிகப்பிரயாசை யின் பேரில்! எனக்குக் கூட காயம்!
மிஸஸ் ராலாண்ட்?
என்ன நடக்கிறது அங்கே? ஹலோ- ஹலோ - போனை வைத்து விடாதீர்கள்! ஹலோ-
எல்லா கார்களும் உச்ச வேகத்தில் விரையவும். ராலாண்டின் மாளிகையில் ஏகப்பட்ட ரகளை!
கிழவர் ஜெர்மியைக் கொல்ல பயன்படுத்தப் பட்ட துப்பாக்கியை ஸ்டீவின் கைகளில் திணித்து விட்டாள்!


பயலே தலையில் ஒரே போடு போட்டால் போதும்! 15000 ஹெக்டேர் நிலமும் எனக்கே சொந்தமாகி விடும்!
டமீல்!


யுத்தங்கள் விசேட படைப்பிரிவு வீரர்களின் மனத்தில் உள்ள ஈரப்பசையை ஒட்ட துடைத்துவிடும் போலிருக்கிறது. சொந்த தந்தையைக்கூட கொலை செய்யுமளவுக்கு!
ஹலோ கர்னல் - தயவு செய்து உடனே புறப்பட்டு வாருங்கள் இங்கே! நிலைமை விபரீதமாகப்போய்க்கொண்டிருக்கிறது!


அடக் கடவுளே—
என்ன இது?
ஐயோ!
?!


கொலை! கொலை!
டேவிட் சத்தியமாகச் சொல்கிறேன்- இந்த படுபாதக செயலை செய்தவன் நானல்ல!
அந்தப் பையனை விட்டு விலகு ராலாண்ட்- அப்படியே கீழே துப்பாக்கியையும் போடு!


வீட்டைச் சுற்றி என்
ஆட்கள் நிற்கிறார்கள்.
சரணடைந்து விடு!
!?


அவனிடம் துப்பாக்கி இருக்கிறது. வாய்ப்பு எடுத்துக் கொள்ளாமல் அவன் கண்ணில் பட்டால் தயங்காமல் சுட்டு விடுங்கள்!
குமீர்!
நோ-
குமீல்!
எதற்காக குறுக்கிடுகிறீர்கள்- யார் நீங்கள்?
கர்னல் அமோஸ்! அரசாங்கப் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். அந்த மனிதன் உயிரோடு இருக்கவேண்டியது அவசியம் மிகமிக முக்கியமானதொரு காரணத்திற்காக!


அட சரிதான் போய்யா! அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லே! என் அதிகார வரம்புக்கு உட்பட்ட இடம் இது-உள்ளே வீழ்ந்து கிடப்பவர்களை கேளுங்கள்-அந்த கிறுக்கனை இனியும் உயிரோடு விட்டு வைக்க வேண்டுமா என்று!
கடவுளே-ஏன்-எதற்காக இப்படி?
மெள்ள-மெள்ள-ஆம்புலன்ஸ் இதோ வந்துவிடும்-சற்று நேரத்தில்!


அவனை சீக்கிரமே கைது செய்துவிடுவோம் மேடம்-நிச்சயமாக!
தாங்க்யூ-ஷெரீப்-ரொம்ப மிரண்டு போயிருக்கிறேன்- நான்!
இது என்ன புதுவகையான சிக்கல்? நிஜமாகவே அவனுக்கு புத்தி பேதலித்து விட்டதா-என்ன?




அதோ-அங்கே
கூரை மீது-


விபரீதமாக எதையாவது செய்து வைக்காதே-ராலாண்ட்-நீ வகையாக சிக்கிக் கொண்டு விட்டாய்-


அப்பொழுது-
விர்ர்ர்ர்ர்ர்ர்ர்
??
பட் பட் பட் பட் பட்
டமில்! டமில்!




342


தப்பிக்க முயற்சிக்கிறான்-
சுட்டுத் தள்ளுங்கள்!
டமீல்!
டமீல்!


சமயத்தில் வந்து உதவியதற்கு மிக்க நன்றி!
சீக்கிரம் உள்ளே வாருங்கள்!
வணக்கம் ஜெனரல்!
வாப்பா ராலாண்ட்! ஏதோ யுத்த களத்தில் நிகழ்வது போலிருக்கிற தில்லையா? சரி- இப்போது நாம் எங்கே செல்ல வேண்டும்?
ராலாண்ட் குறிப்பிட்ட செல்லோனி ஏரிப்


ராலாண்ட் குறிப்பிட்ட கெல்லோனி ஏரிப் பகுதியை நோக்கிப் பறந்தது ஹெலிகாப்டர்!
எழுந்திரு ஸ்டீவ்! இலக்கை அடுத்த பத்தாவது நிமிடம் அடைந்து விடுவோம்- உன்னோடு ஜோன்ஸ் வருவதை நீ நிஜமாகவே விரும்பவில்லையா?
ஆமாம்- நான் தனியாக செல்ல விரும்புகிறேன்!
சரி உன் இஷ்டம்! இரண்டு மணி நேரத்தில நன்றாக விடிந்து விடும்- வரை படத்தில் உள்ள விபரப்படி ஏரியின் வடபகுதியில் மனித நடமாட் டமே கிடையாது! அங்கே உன்னை இறக்கிவிட லாம் என்று நினைக்கிறேன்- சரிதானே!
ஓ.கே. ஜெனரல்!



மற்ற விஷயங்களைப் பற்றி உன்னிடம் எதுவுமே நான் கேட்கவில்லை- கவனித்தாயா?
கவனித்தேன்! மிக்க நன்றி ஜெனரல்-
போலீஸார் ஏன் உன்னை துரத்தி அலைகிறார்கள் என்பதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. உன்னையும் என்னையும் பிணைக்கும் உறவில் இந்தப் பிரச்சினை எல்லாம் ஊடுருவ முடியாது ராலாண்ட்!
என்றாவது ஒருநாள் நானே உங்களுக்கு அனைத்தையும் விளக்க ஒரு வாய்ப்பு கிட்டும் என்று நம்புகிறேன் ஜெனரல்!
ஓ.கே. ஸ்டீவ்! என்னோடு தொடர்பு கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று உனக்குத் தெரியும்- கடந்த சில மணி நேரமாக, பத்து வயது குறைந்துவிட்ட பிரமையில் என் மனம் உற்சாகம் கொள்ள வகை செய்தமைக்கு


மற்ற உதவிகளுக்கும் சேர்த்துதான்!
நன்றி- சென்று வா!




உன்னிடமும் விடை பெற்றுக் கொள்கிறேன் லெப்டினெண்ட்!
உங்களுடைய முயற்சி வெற்றி பெற என் வாழ்த்துக்கள்!
ஓ.கே.
யெஸ்!




இந்த ஏரி சுமார் 12 கி.மீ நீளம் இருக்கலாம்! இந்த வீடு- அப்படியொன்று இன்றும் இருக்குமானல் கிழக்கு கரை பகுதியில் இருக்க வேண்டும!




அதோ- அந்த வீடு தான்- ஹாய்!
நிதானம் தேவையடா பயலே- எல்லாமே வெகு சுலபமாக நடந்தேறுகிறது! அது மட்டுமல்ல எப்படியல்லாமோ ஆபத்து வந்து சூழ்ந்து கொள்கிறது உன்னை- உன் ராசி அப்படி!




இரண்டாவது கோப்பை
காப்பி- உ ளுக்குத்
தான் க்!
ஒவ்வொரு நாள் காலையும் உங்களுக்
காக அதை தயாராக வைத்துக்
கொண்டு காத்திருப்பேன்!
கிம்!..
ஓ! ஜாக்- என் எதிர்பார்பு
வீண் போகவில்லை!
ஆமாம் கிம்- ஒருவழியாக உன்னை
தேடி கண்டுபிடித்து விட்டேன்!


உங்களுடைய நினைவாற்றலை நீங்கள் இழந்து விட்டதுதான் எப்படி என்று என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை! இருந்தும் நீங்கள் எப்படியோ என்னைத் தேடி வந்து சேர்ந்து கொண்டு விட்டீர்கள்!
பலவாரங்களாக உங்களை எதிர்பார்த்து இங்கே நான் பதுங்கி இருந்தேன். நிச்சயமாக என்னைத்தேடி இங்கே எப்படியும்வந்து சேருவீர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு! நாம் சேர்ந்து வாழ்ந்த காலத்தில், ஆரம்ப நாட்களை இங்கே தான் இனிமையாக கழித்தோம்-, நினைவிருக்கிறதல்லவா!
இந்த விஷயம் உனகது எப்படித் தெரியும்?


"அவர்கள்தான் எனக்கு தெரிவித்தார்கள். அத்தோடு உங்களிடம் ரொம்ப ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று என்னை எச்சரித்தார்கள்!
'அவர்கள்' என்றால்- யார் அந்த 'அவர்கள்?'


இனியும் சுற்றி வளைத்துப் பேசி பொழுதை வீணடிக்க வேண்டியதில்லை. நேரடியாகவே விஷயத்திற்கு வருவோம். நினைவாற்றலை நீங்கள் இழக்காதிருந்தால் நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்குத் தெரியும். இழந்துவிட்டிருந்தாலோ உங்களுடைய கேள்விக்கு பதில் சொல்ல எனக்கு அதிகாரம் கிடையாது. உங்களால் எங்கள் அனைவரின் தலைக்கும் ஆபத்து வந்துவிடும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது!
?!!


'அவர்கள்' 'எங்கள்'- என்ன இது பூடகமான பேச்சு! கிழ் போதும்! இந்த மூடு மந்திரம்- போதும்- போதும்!
போதும்! போதும்!
என்னே ஏன் ஜாக் என்று அழைக்கிருய்- என் உண்மைப் பெயர் அதுவல்ல என்று உனக்குத் தெரியாதா?
வாஸ்தவம்தான்- ஆனல் இந்தப் பெயரோடு தான் எனக்கு அறிமுகமானீர்கள்!
என்ன உளறல் இது- உன் கணவன் ஸ்டீவ் ராலாண்ட் இல்லையா நான்?
ஓ, ஜாக்! எல்லாவற்றையும் மறந்துவிட்டீர்கள் நீங்கள்!


என்ன சொல்கிறாய் நீ? அப்படி-யானால் அந்த விரல் ரேகைகள்-உருவ ஒற்றுமை- என்னுடைய ராலாண்ட் குடும்பம்?
அனைத்தையும் மறந்து விட்டீர்கள்!
ஆமாம்-எதுவுமே என் நினைவில் இல்லை!
சரி- இப்போது நிஜத்தைச் சொல்! நான் யார்- நான் யார் கிம்?


ஓ-நோ!
இந்த பைத்தியக்கார விளையாட்டை இதற்கு மேலும் தாங்கிக் கொள்ள முடியாது என்னால்! உண்மையில் நான் யார்- நீ யார்? ஜனாதிபதியை நான் கொலை செய்தது நிஜம்தானா? நிஜம் என்றால் ஏன்- எதற்காக அந்த பாதகச் செயலை செய்தேன்? ஏதோ ஆடுமாடுகளுக்கு அடையாளமிடுவதுபோல் இப்படி உனக்கு அடையாளமிட்டிருக்கும் பயங்கர கும்பல் எது?
போதும் நிறுத்துங்கள் ஜாக்! விபரமாக சொல்கிறேன்- கேட்டுக் கொள்ளுங்கள்!
XVII


'கறுப்பு சூரியன்' சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் அடங்கிய பைல் என் படுக்கையறையில் இருக்கிறது- எடுத்து வருகிறேன்!


சே! நாசமாகப் போக-
நான் நம்ப மாட்டேன்!
சைத்தானே!


உன்னை கைது செய்கிறேன்-
கொலை செய்த குற்றத்திற்காக!
ராலாண்ட்- தூர எறி
துப்பாக்கியை!


கொலே குற்றம் சாட்டப்படடு, ராலாண்ட் மீது விசாரனே நடந்தது!
ஒரு தொழில்முறை குற்றவாளியின் ஆயுதம் யுவர் ஆனர்! சைலன்ஸர் பொருத்தியிருப்பதிலிருந்து குற்றம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதொன்று என்பது உறுதியாகிறது!
என்னேக் கொல்ல அவர் திரும்பியபோது கையில் அகப்பட்ட சிறியதொரு சிலேயை வீசி அவரைக் காயப்படுத்தி தப்பித்துகொண்டேன். அவருக்கு மூளேபிசகிவிட்டதென்று அஞ்சுகிறேன்!
இவரும் இவருடைய தந்தையும் ஆருண்டுகளுக்கு சந்தித்துக் கொள்ளவேயில்லே. ஜெர்மி இவரை மன்னிக்கவேயில்லே—அவருடைய திருமணத்திற்காகவும் இராணுவத்தில் சேர்ந்ததற்காகவும்!
இம்மாதிரி ஒரு வீரனே பெற்றமைக்காக நாடு தலே நிமிர்ந்துபெருமைபட்டுக்கொள்ளலாம் நான் சொல்ல விரும்புவது இவ்வளவுதான்!


சிறுவனாக இருந்தபோது எல்லோரிடமும் அன்பாகப் பழகுவான். யுத்தம் ஒருவேளை இவருடைய மனத்தை கெடுத்திருக்கலாம்!
இவன் ஒரு சரியான வெறியன், மிஸ்டர் ஜட்ஜ்- பாருங்கள் என் உள்ளங்கையில் உள்ள தழும்பை!
மவுண்ட் டவுன் அருகேயுள்ள கில்லோனி ஏரியைப் பற்றி விபரம் சேகரித்துக் கொண்டு இருந்தார்!
பெரிதாக்கப்பட்ட புகை படத்தில் பீர் மரங்களுக்கு மத்தியில் ஒரு சிறு வீடு தென்பட்டது!


உடனடியாக நான் மவுண்ட் டவுனிலிருக்கும் என் சகாக்களுக்கு எச்சரிக்கை விடுத்தேன். ஹெலிகாப்டரில் இவனோடு இருந்த நபர்களைப் பற்றி விவரம் சேகரிக்க முடியவில்லை!
நான் அரெஸ்ட் செய்த போது இவனுடைய கையில் இந்த 34 S&W துப்பாக்கி இருந்தது. அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் யார்–என்ற விபரம் எனக்குத் தெரியாது!
கடைசியாக ஒரு சாட்சி–ம்ம்-கர்னல் அமோஸ் என்பவர் நேரில்வர இயலவில்லை என்று குறிப்பிட்டு தன் வாக்குமூலத்தை கடிதம் மூலம் அனுப்பியிருக்கிறார்!
அது அவசியமில்லை-குற்றவாளி ஏதேனும் சொல்லவிரும்புகிறாரா-என்று கேட்போம்-மேற்கொண்டு நடவடிக்கைகளை கவனிக்குமுன்!


நான் என்ன சொல்லி என்ன பயன்? என்மீது சுமத்தப் பட்டுள்ள இந்த குற்றம் மிக அழகாக ஜோடனை செய்யப் பட்டிருக்கிறது! ஆனால் ஒரே ஒரு உண்மையை மட்டும் அழுத்தம் திருத்தமாக சொல்ல விரும்புகிறேன்- இங்கே இருக்கும் சிலருக்கு அதை தெரிந்து கொள்ள ஆர்வம் நிறைய இருக்கும்!
நான் ஸ்டீவ்ராலாண்ட் அல்ல!
இதற்கு என்ன அர்த்தம்?
இவனுக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது!


இப்படி சொல்வதன் மூலம் தண்டனையிலிருந்து தப்பித்து கொள்ளமுடியும் என்று குற்றவாளி எதிர்பார்த்தாரென்றால் பரிதாபத்திற்குரியது! அவருடைய சட்டவிரோத செய-லுக்கு முழுக்க முழுக்க அவரை பொறுப்பாக்கி, மரண தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்று கோர்ட்டாரை நாங்கள் கோர வேண்டி வரும்!
பரிதாபத்திற்குரிய என் கட்சிக்காரர் தன் நினைவாற்றலை இழந்துவிட்டது மட்டுமின்றி, பகுத்தறிவாற்றலையும் இழந்துவிட்ட ஒரு மன நோயாளி என்று தோன்றுகிறது. தண்டனை வழங்குமுன் இந்த உண்மையையும்கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமாய் கனம் கோர்ட்டார் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்!

368


குற்றவாளி ஒரு மன நோயாளி என்ற வாதத்தை ஏற்றுக் கொண்டு, மன நோயாளிகள் மறுமலர்ச்சி விடுதி ஒன்றில் பலத்த பாதுகாப்புக் கிடையில் ஆயுள் தண்டனையை அனுபவிக்க உத்தரவிடுகிறேன்!
JUDGE J. BOWLER
முற்றும்?!
XIII'ன் தேடல் படலம் ஓயவில்லை! இரத்தப் படலம் - பாகம் 3
விரைவில்-!

# ஹாட்-லைன்!

வாசக நண்பர்களே,

"Hot line" என்ற இந்தப் புதிய பகுதி உங்களுக்கும் எனக்கும் இடையிலானதொரு பாலம் போன்றது! நமது இதழ்களைப் (லயன், திகில், மினி) பற்றிய முன்னேட்டங்கள், வரவிருக்கும் மாற்றங்கள், அறிமுகமாகயிருக்கும் புது ஹீரோக்கள் போன்ற 'அட்வான்ஸ்' செய்திகளை தெரிவிப்பதற்காகவே இந்தப் பகுதி! அதுமட்டுமல்ல-நமது இதழ்களைப் பற்றிய கேள்விகளை அடிக்கடி எழுதியனுப்பும் வாசகர்களுக்கும் இந்தப் பகுதியில் பதில் எழுதப் போகிறேன்!

எடிட்டர் சார்,

லயன் காமிக்ஸில் 'டேஞ்சர் டயபாலிக்', ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி!, இரத்த வெறியர்கள் இவையெல்லாம் விரைவில் வருகிறது என்று சொல்லியிருந்தீர்கள்! அவை என்னுயிற்று?

—P. ரமேஷ், 8-A, தெற்கு வீதி,
திருவிழந்தூர்.

'*டேஞ்சர் டயபாலிக்*' வருகிறுரென்று விளம்பரம் செய்து கிட்டத்தட்ட 2-ஆண்டுகள் ஆகி விட்டது நிஜம்தான்! இடையே வேறு புதிய ஹீரோக்களை அறிமுகப் படுத்தியதால் 'டயபாலிக்' கை கவனிக்க முடியாமல் போய்விட்டது! இனியும் தாமதிக்கப் போவதில்லை! 'டயபாலிக்' டிசம்பர் லயனில் வரயிருக்கிருர்! ஆனல் நீங்கள் நினைப்பது போல் அவர் ஒரு ஹீரோ அல்ல - வில்லன் (ஸ்பைடரைப் போல்) மேற்கொண்டு விபரங்கள் இதழில் -

ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி ஜனவரி '88 லயனில் வரயிருக்கிறது! "இரத்த வெறியர்கள்" (டெக்ஸ்வில்லர்) வெளிவர கொஞ்சம் தாமதமாகும். அது மிகப் பெரிய கதை என்பதால் ரூ. 2/- விலையில் வெளியிட முடியாது. '88' "*கோடை மலரில்*" அநேகமாக அது வெளிவரும்.

● ● ● ●

எடிட்டர் சார்,

முன்பெல்லாம் "திகில்" காமிக்ஸில் "விசித்திர உலகம் இது" என்ற கட்டுரை தொடர் வந்து கொண்டிருந்ததே-ஏன் இப்போது நிறுத்தி விட்டீர்கள்?

-S. கோபால், 19, பழனி ஆண்டவர்-
கோவில் தெரு, ஆரணி.

"*திகில்*" காமிக்ஸ் பாக்கெட் சைஸ்"க்கு மாறியதிலிருந்தே கட்டுரைகள், துணுக்குகள் போன்றவற்றைப் போட இடமில்லாது போய்விட்டது

*''விசித்திர உலகம் இது''* தொடரைத் தொடர முடியாது போனதற்கு இதுவும் ஒரு காரணம்! வாசகர்கள் விரும்பினால் அத்தொடரை புதுப்பிக்க முயற்சி செய்யலாம்!

● ● ● ●

என்ன சார்?

ஸ்பைடரின் ''மிஸ்டர் மர்மம்'' கதையை விளம்பரப் படுத்தி 3 வருஷம் ஆகிறது-புக்கை காணோமே? எனக்குப்பிடித்த ஜான் மாஸ்டர், ஹென்ரியையும் 2 வருஷமாக் காணவில்லை! இவர்களையெல்லாம் எப்போது போடுவதாக உத்தேசம்?

**S.** தெட்சிணாமூர்த்தி, 4-A, தெற்கு வீதி, திருவாரூர்.



*''மிஸ்டர் மர்மம்''* கதையை உடனே வெளியிடுவதில் ஒரு சிக்கல் உள்ளது! அந்தக் கதையில் ஸ்பைடர் பழையபடியும் வில்லனாக செயல்படுகிறான்! *'திடுதிடுப்'* பென அதை இப்போது போட்டு விட்டால் ஸ்பைடரின் நீதிக் காவலன் image பாழாகிவிடும்! உங்களுக்கும் குழப்பம் ஏற்படும்! ஆகையால் முருங்கை மரத்தில் வேதாளம் ஏறுவதைப் போல் திரும்பவும் ஸ்பைடர் வில்லனாக மாறுவதை உங்களுக்குக் காட்டிவிட்டு, பிறகு *'மிஸ்டர் மர்மத்தை'* வெளியிடலாமென்று இருக்கிறேன்! அது சரி, உங்களுக்கு ஸ்பைடரை வில்லனாகப் பார்த்தது பிடிக்கிறதா? ஹீரோவாக இருப்பது பிடிக்கிறதா? என்று எழுதியனுப்புங்களேன்!

ஜான் மாஸ்டர் & ஹென்றியைப் பொருத்தவரை அவர்களின் சாகஸங்கள்தான் முடிந்துவிட்டனவே.. ஜான் இன்று டென்னிஸ் ஆடிக்கொண்டு உலகை சுற்றி வருகின்றார்! ஹென்றி வழக்கமான கோணங்கித்தனங்களுடன் அவரைச் சுற்றி வருகிறான்!



● ● ● ●

ஆசிரியர் விஜயன் அவர்களுக்கு,

உங்களுடைய திகில் காமிக்ஸை தவறாமல் படிக்கும் வாசகன் நான். கதைகள், படங்கள் படுசூப்பர். உங்கள் மீது எனக்கொரு கோபம்-பின்ன என்ன சார், இவ்வளவு அருமையாக ஓவியங்கள் வரைபவர்களின் பெயர்களை வெளியிட மாட்டேன் என்கிறீர்களே-!

**N** ராணி மைந்தன்,
51, சின்ன மாரியம்மன் கோயில் தெரு,
ஈரோடு-3.

நீங்கள் கேட்பதிலும் நியாயமிருக்கிறது மிஸ்டர் ராணி மைந்தன்! இனி வரும் இதழ்களில் ஓவியங்களின் பெயர்களை மட்டுமன்றி அவர்களது போட்டோக்களையும் பிரசுரிக்க முயற்சிக்கிறேன்! அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள உங்களுக்கு (வாசகர்களுக்கு) ஆர்வமிருக்கிறதா என்பதை முதலில் தெரியப்படுத்துங்கள். மெஜாரிட்டியின் தீர்ப்புப்படி முடிவெடுக்கிறேன். சரிதானே?

எடிட்டர் சார்,

ஈகிள்மேன் கதை ஒன்றை விரைவில் வெளியிட்டால் என்ன?

M. சரவணக்குமார், M. பூபாலன்,
M. குணசேகரன், ஜேடர்பாளையம்,

'ஈகிள்மேன்' கதைகள் உலகப் பிரசித்தி பெற்ற 'வால்ட் டிஸ்னி' நிறுவனத்தால் உருவாக்கப்பட்டவை. துரதிர்ஷ்டவசமாக அவர்கள் இதுவரை இரண்டே கதைகளை மட்டும் இந்த வரிசையில் வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றுள் முதல் கதையை '86 கோடை மலரில் வெளியிட்டிருந்தோம். இரண்டாவது கதை அடுத்த மாதம் லயனில் வெளி வருகிறது! அதற்கப்புறம், 'வால்ட் டிஸ்னி' என்றைக்கு புதிய கதைகளை உருவாக்குகிறதோ, அன்றைக்குத்-குத்தான் மூன்றாவது ஈகிள் மேன் கதை!






பி: கு:- ''ஹாட்-லைன்'' வெறும் கேள்வி-பதில் பகுதி மட்டுமல்ல-! இதில் உங்கள் கருத்துக்கள், விமர்சனங்களுக்கும் இடமுண்டு! நமது இதழ்களைப் பற்றிய பொதுவான கருத்து - இன்னும் என்னென்ன எதிர்பார்க்கிறீர்கள்- போன்ற விபரங்களை உங்கள் போட்டோவுடன் அனுப்புங்கள்! சிறப்பான விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்!

சரி, இந்த முதல் 'ஹாட்-லைன்' முடிக்கும் முன்னர் ஒரு சிறு போட்டி-!

இதுவரை நமது இதழ்களில் (லயன், திகில், ஜூனியர், மினி லயன்) அறிமுகமாகியுள்ள ஹீரோக்கள் எத்தனை பேர் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு பட்டியல் ஒன்றினை அனுப்பி வையுங்கள்! சரியான பட்டியலை அனுப்பும் வாசகருக்கு ரூ. 101/- பரிசு! (ஒரு முறை மட்டும் அறிமுகமாகி பின்னர் தொடராத ஹீரோக்களைக் குறிப்பிட வேண்டாம். உதாரணத்திற்கு துப்பறியும் வீரர் ஜேஸன் 'இஸ்தான்புல் நாடகம்' இதழில் மட்டும் தோன்றினார். அது போன்ற ஹீரோக்களை விட்டு விடுங்கள்!)

விடைகளை 10-11-87-க்குள் அனுப்பி வையுங்கள்!

S. விஜயன்


ஹாங்காங்கில் ஆர்ச்
வீ-கு என்ற பணக்கார வியாபாரி ஒரு-வரின் அழைப்பின் பேரில் விக்டர், தாம்சன், ஆர்ச்சி- மூவரும் ஹாங்காங் வந்திருந்தனர்-
நண்பர்களே, என் கூட்டாளி கினேவ் ஜென்யாவை பயங்கரவாத கும்பல் ஒன்று கடத்திச் சென்றுவிட்டது. அவரை மீட்டு வரும் பணியை உங்களிடம் ஒப்படைக்கிறேன்!
கணிசமான தொகை உங்களுக்கு ஊதிய-மாக அளிக்கப்படும்- பாதி முன் தொகை-யாகவும் மறுபாதி பணி நிறைவேற்றப்-பட்டவுடனேயும் கொடுக்கப்படும்!
ஆர்ச்சி ஒப்புக் கொள்கிறது!
ஒப்பந்தம் ஏற்பட்டது-
மறுபடியும் எங்களை வம்பில் மாட்டி விட்டாய்- இல்லையா?
சரி- சரி- பீற்றிக் கொள்ளாதே!
நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரே தகவல்- கடைசியாக கினேவ் யாமி என்னும் புறநகர்ப்பகுதியில் காணப்பட்டார் என்பதுதான்!
இந்த விஷயத்திலும் எலெக்ட்ரானிக் மூளைதான் ஏதாவது வழி கண்டு பிடிக்க வேண்டும்!
கலபம்- ரிக்ஷாவில் நாம் இப்போது யாமி செல்கிறோம்!
இரும்புப் பிசாசை ஏற்றிச் செல்வதா? ஊஹூம்! நான் மாட்டேன்- ஆளை விடுங்கள்!


சென்று ஒரு தீர்மானத்-
கு வந்தது ஆர்ச்சி-
இழுக்கும்-
போகலாம்!
ஏன் அலட்டிக் கொள்கிறாய்? சொன்னால் கேட்கவா போகிறான்!
வேக கட்டுப்பாட்டை மீறி ஓடாதே- ஜாக்கிரதை!
டிராபிக் போலீஸ்-காரன் முறைக்-கிறான், பார்!
பயல் அதையெல்லாம் இலட்சியம் பண்ணவே மாட்டான்!
தோழர்களின் வரவை சிலர் கண்காணித்துக் கொண்டு இருந்தனர்-
அதோ வந்து விட்டார்கள்- என்ன செய்ய வேண்டும் என்று உனக்கே தெரியும்!
'தங்க ட்ராகனின்' உத்தரவு தெளிவானது!
இங்கே எங்கேயாவது நிறுத்து ஆர்ச்சி!
ஹே- அந்த லாரி டிரைவருக்கு என்ன பைத்தியமா?
நேராக நம்மை குறி வைத்து வருகிறானே?
குடித்திருப்-பானோ?
நம்மீது மோதுவதுதான் அவன் நோக்கம்!
ஆர்ச்சி- செயலில் இறங்கு! க்ளாவ் 'கென்யானை நாம் கண்டுபிடிப்பதை இங்கே யாரோ விரும்பவில்லை!


முதலில் தோழர்களை ஒதுக்கி விட்டு அப்புறமாக லாரியை கவனிக்கும் ஆர்ச்சி!
விடாதே- மடக்கி நிறுத்து!
ஆர்ச்சிக்குத் தெரியாத என்ன செய்ய வேண்டும் என்று!
பலே- ஆர்ச்சி!
ஆர்ச்சி சமர்த்து- யாருக்கும் ஆபத்தில்லை!
டிரைவர் அதோ இறங்கி ஓடுகிறான்!
விரட்டிப்பிடி அவனை நம்மை எமலோகம் அனுப்ப முயன்ற சண்டாளன்!
கருணை காட்டாதே னிடம்- சக்கையா பிழிந்து விடு!
டெலஸ்கோபிக் கரத்தை பயன்படுத்து!
ஆகா- அப்படியே செய்து விடுகிறேன்!
மறுவினாடி- ஆர்ச்சியின் கரம் நீண்டது-
எங்கே மேலே ஏறி தப்பிக்கப் பார்க்கிறாய்?
அடேயப்பா- அந்த இ மனிதனுக்குத்தான் எவ்வளவு வலிமை!
பால்கனி போச்சு- வீட்டுக்காரனுக்கு யார் பதில் சொல்வது?
யார் அவனை அனுப்பியது- எதற்காக நம்மை கொல்ல முயற்சிக்கிறார்கள்... போன்ற கேள்விகளுக்கு அவனிடமிருந்து பதிலைப் பெற முயற்சி செய், ஆர்ச்சி!


அவனை தலை குப்புற பிடித்துத் தூக்கி உலுக்கிறது இருமுறை-
ம்ம்- வாயைத் திற!
அவன் குறிப்பிடும் இடம் ஆற்றின் மறுபக்கம் இருக்கிறது. அங்கே தான் கிளைவ் சிறை வைக்கப்பட்டிருக்க வேண்டும்!
நாம் அடுத்துச் செல்ல வேண்டிய இடம் அதுதானில்லையா?
'தங்க ட்ராகன்' கும்பல் என்னை அமர்த்தியது. டின் ப்ரு தீவில் பழைய கோவிலுள்ள அந்தக் கும்பலின் ஆணையை மறுப்பவர்க்கு மரணம்தான் பரிசாக கிடைக்கும்!
அதையடுத்து-
மீன் குவிக்கப்பட்டிருக்கும் இந்த படகை விட்டுவிட்டு நீ வேறுபடகை தேர்ந்தெடுத்திருக்கலாம் ஆர்ச்சி!
அதோ தெரிவதுதான் டின் ப்ரு தீவு!
படகை நேராக அங்கே ஓட்டு!
அந்த பாய்மரக் கப்பல் நிற்கிற தோரணையே சரியாகப்படவில்லை எனக்கு!
சட்டென்று கிளம்பி நம்மை நோக்கி விரைந்து வருகிறது- விபரீதம்தான்!
யாரோ துப்பு கொடுத்திருக்கிறார்கள்- நம்மை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்!
தாம்சன்- பதுங்கிக் கொள்!
ஆர்ச்சி மீது பட்டுச் சிதறின தோட்டாக்கள்-
அவர்களை குறிவைத்து வீசி எறி!
வேறு ஆயுதமில்லை. நம் கை வசம்!


குறி வைப்பதில் ஆர்ச்சி
கில்லாடி! இதோ-
தக்!
பிபிபி!
ஐயோ- இரும்பு
மனிதன் இங்கேயே
வந்து விட்டான்!
அத்தனை பேரும் அம்பேல்!
கப்பலை செலுத்தும் பொறுப்பை
நீ ஏற்றுக் கொள்!
இப்படி மீனை ஆயுதமாக
பயன்படுத்தி எதிரிகளை
வீழ்த்தியதாக சரித்-
திரமே கிடையாது!
ஹே- யாராவது வந்து எனக்கு
ஒத்தாசை செய்தால் என்ன?
நாம் நிதானமாக செயல்படவேண்டியது
அவசியம்- க்னேல் அங்கே இருக்கும்
பட்சத்தில் நாம் இடையில் புகுவதால்
ஆத்திரப்பட்டு எதிரிகள் அவரைக்
கொன்று விடலாகாது!
கோவிலின் கதவுகள் மூடிக்கிடக்கின்றன-
திடீர் தாக்குதலுக்கான முன்னேற்பாடா-
கவும் இது இருக்கலாம். எதற்கும்
ஆர்ச்சியை முன்னால் அனுப்பலாம்!
அதோ இருக்கிறது-
பழைய கோவில்!
கப்பலை கட்டிப்போட்டுவிட்டு
வருகிறேன்! நீங்கள் நடங்கள்!



சுதவை திறக்க பலாத்காரத்தை பிரயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை!
க்ராஷ்!!
உள்ளே-
வரவேற்பு சரியில்லையே?
டாங்க் கும்பலின் வரவேற்புக் குழு!
கொல்!
தோழர்கள் பதுங்கிக் கொள்ளவும்!
ஆஆஆ!
அடி - விடாதே!
முதலில் இவர்களை ஒழுங்கு பண்ணி விட்டு...
இவனை தடுத்து நிறுத்த வழியே கிடையாதா?
பிறகு தேடலாம் கினவ் கென்யானை!
திடீரென்று ஒரு கதவு திறந்து கொண்டது-
முட்டாள்தனமாக எதையாவது செய்ய முயற்சிக்காதீர்கள். ஏற்கனவே என் டாங்க்சகாக்கள் கொதித்துப்போயிருக்கிறார்கள். உங்களுடைய ரோபோவை என் ஆணைக்குக் கீழ்ப்படிய உத்தரவிடுங்கள்!
பாராட்டுக்கள் தோழர்களே- நீங்கள் தேடி வந்திருக்கும் கினவ் கென்யான் நான் தான்!
என்ன?
நிஜம்தானா?
எல்லாமே என் ஏற்பாடுதான். இங்கிருந்து மி·கு மியூஸியத்திற்கு சுரங்கப்பாதை அமைக்க உங்களுடைய ரோபோவின் சேவை தேவைப்படுகிறது. நீங்கள் சம்மதிக்க மாட்டீர்கள் என்று தெரியும் எனவேதான் இப்படியொரு சூழ்ச்சி!



இயற்கையாகவே ஒரு குகைப் பாதை இந்த தீவிலிருந்து நீண்ட தூரத்திற்கு செல்கிறது- அந்தப் பாதையை மியூஸியம் வரை கொண்டு செல்லவேண்டும்-மறுத்தால் இக்கணமே சுடப்படுவீர்கள்!
உன் மார்பு அறையிலுள்ள துளையிடும் விசைக் கருவியை பயன்படுத்து ஆர்ச்சி-
ஏற்பதை தவிர வேறு வழியில்லை நமக்கு!
அந்த கிராதகனின் ஆணைப்படி ஆர்ச்சி நடந்து கொள்ளாவிடில் தோழர்கள் கொல்லப்படுவது உறுதி-ஹூம்
நீருக்கு அடியில் சென்றது அந்த குகைப் பாதை-
பி-கு மியூஸியம், பழுது பார்க்க என்று தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது-
விலைமதிப்பற்ற நவரத்தின கற்களும், அரிய கலைப் பொருட்களும் ஏராளமாக குவிந்து கிடந்தன அங்கே-
ம்-வேகமாகத் தோண்டு-
பணிவாகவே நடந்துகொள் ஆர்ச்சி-இல்லையேல் இந்தக் கிராதகன் எங்களை ஈவிரக்கமின்றி கொன்று விடுவான்!
துளையை அகற்ற ஆர்ச்சி சுற்று ஜெட்டை பயன் படுத்தப் போகிறது இப்போது!


சுவரில் மோதிய காற்று, சூறாவளியாக திரும்பி வந்தது-
அருமையான தந்திரம்- ஆர்ச்சியின் மதியூகத்துக்கு நிகரே கிடையாது!
ஆர்ச்சியிடம் வாலாட்டத் துணிந்த எவருக்குமே இந்தக் கதிதான்!
அவன்தான்- விடாதே!
தூசிப் படலம் ஒருவாறு அடங்கியபின்-
பின்னர்-
ஹாங்காங் போலீஸாருக்கு ஓட்டு மொத்தமாக ஒரு கும்பலையே அன்பளிப்பாக கொடுத்து விடலாம்!
பணிவாக நடந்துகொள்-என்று நான் சொல்லும்போதே எனக்குத் தெரியும்- இப்படி விஷமமாக ஏதோ செய்து வைக்கப் போகிறது ஆர்ச்சி என்று!
நாம் ஒன்று சொன்னால் அவன் தன் இஷ்டத்திற்கு எதையாவது செய்வதே வழக்கமாகி விட்டது!
ம்-வேகமாக செலுத்துங்கள்- இல்லையேல்-
பின்னர்-
ஸாரி-என் கூட்டாளி இத்தனை மோசமானவர் என்று நான் கற்பனை செய்து பார்த்ததுகூட இல்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்!
சாப் ஸ்டிக்கை வைத்துக் கொண்டு அட்டகாசம் பண்ணுகிறான் பார்-பார்க்கிறவர்கள், ரோபோக்களும் நம்மைப் போலவே சாப்பிடும்போலும் என்று நினைத்துப் போவார்கள்!
ஆர்ச்சிக்கு எதற்கு சாப்பாடு- இந்தக் குச்சியை எப்படிக் கையாள வேண்டும் என்று தோழர்களுக்கு செய்து காட்டுகிறது ஆர்ச்சி!


கொலை அரங்கம்
மருந்தூட்டப்பட்ட மயக்க நித்திரையிலிருந்து விழித்தெழுந்தாள் மாடஸ்டி...
ம்ம்ம்- இப்பொழுது நான் எங்கே இருக்கிறேன்! காரோட்டிக் கொண்டு போகும் போது, சாலை- யோர பள்ளத்தில் இன்- னொரு கார் கிடப்பதைப் பார்த்து நின்றது வரை ஞாபகமிருக்கிறது. பிறகு-
வில்லி...!
ஹலோ... இளவரசி! இரண்டு நிமிடங்களுக்கு முன்னர்தான் எனக்கும் மயக்கம் தெளிந்தது இப்போது நாம் ஒரு படகில் இருக்கிறோம்.!
குத்துச் சண்டை போட்டி ஒன்றை பார்ப்பதற்காக காஸினோ அரங் கத்திற்குச் சென்றேன்
எதற்காக நம்மை இப்படி கடத்திக் கொண்டு வந்திருக்கி றார்களோ -தெரிய வில்லையே?


அங்கேஎன்னோடு அறிமுகம் செய்துகொண்ட ஓர் அழகான பெண் தன் மாளிகைக்கு விருந்தாளியாக
என்னை அழைத்துச் சென்ருள். அவள் எனக்கு கொடுத்த **விஸ்கியில்** மயக்கமருந்து கலந்திருக்கக் கூடும்
வாருங்கள், என்னோடு—
கப்பலின் பிரதான ஹாலில்...
உங்களைகடத்திவர எவ்வளவு பிரயாசை மேற்கொண்டேன்— எவ்வளவு பணம் செலவிட்டிருக்கிறேன் —என்றுதெரியுமா?
வில்லி இந்த ஆளைத் தெரியுமா உங்களுக்கு
உற்றுப்பார் புரியும்!
இல்லை ஆனல் ஏற்கனவே அறிமுகமானமுகமாகத் தோன்றுகிறது!
பெல்மேன்! அடக் கடவுளே கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏதோ முப்பது வயது ஏறிவிட்ட முதுமை தெரிகிறதே— உன்னிடம்!
ஆமாம்,...! பெண்ணே!
தென் அமெரிக்காவில் நான் இலாபகரமாக தொழில் நடத்தி வந்த நாளில் நீங்கள் குறுக்கிட்டு அத்தொழில் நசித்துப்போகச் செய்ததுமட்டுமின்றி, தலைமறைவாகிவிட்ட எனக்கு வலைவீசி விடாமல் துரத்தி வந்தீர்கள் :.



உங்களிடம் அகப்பட்டுக் கொள்வதை தவிர்க்க பெருவியன் சுரங்கங்களில் ஐந்தாண்டு கால கட்டாய அஞ்ஞான வாசத்தை மேற்கொண்டதால் தான் இன்று எனக்கு இந்த பரிதாப நிலை-
இதற்கு நீங்கள்தான் பொறுப்பாளிகள் — உங்களை பழிதீர்க்கும் முயற்சியின் முதற்கட்டமே இந்தக் கடத்தல் விவகாரம்!
இதோ - வலப்பக்கம் நிற்பவன் ஒரு செவ்விந்தியன் பெயர் சார்லி அடுத்தவன் அப்பர்மேன்; மூன்றுமவன்-- டெம்ஸ்டர்! மூவரும் மனிதவேட்டையாடுவதில் ஈடிணையற்ற சூரப்புலிகள்!
உங்களை வேட்டையாடி கொல்லப் போகிறார்கள்! மூவாயிரம் பவுண்டுகள் கூலி பேசியிருக்கிறேன்.
நாம் இப்போது ஒரு சிறிய தீவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம் .. தீவு மொத்தமும் மனித நடமாட்டமேஇல்லாத, மரம் செடி கொடிகளற்ற பொட்டல் வெளி— அதுதான் உங்களுக்கு நான் தேர்ந்தெடுத்திருக்கும் அரங்கம்!
கைவிலங்கு...?
உடுத்திய ஆடையோடு அப்படியே நீங்கள் தீவில் இறங்க அனுமதிக்கப்படுவீர்கள்.


ஒருபாட்டில் குடிநீர்! உனக்கு ஒரு ரிவால்வர்- கார்வினுக்கு ஒரு கத்தி மட்டும் தரப்படும்!
இந்த ஆயுதங்கள் ஒன்றும் உங்களை காப்பாற்றப் போவதில்லை. வேட்டைகொஞ்சம் உயிரோட்டமாக இருக்கட்டுமே என்றுதான் இதை தருகிறேன்.
அதையடுத்து—
நீங்கள் புறப்பட்டுச் சென்ற இரண்டு மணிநேரம்கழித்து என் ஆட்கள் புறப்பட்டு வருவார்கள்- உங்களைத் தேடி!
இந்தாருங்கள் உங்களுடைய பயண மூட்டை!
ஏற்கனவே கோணல் புத்திஇப்போது சுத்தமாக மறை கழன்று விட்டதுஎன்று நினைக்கிறேன்!
சாவின் பிடி அவன் மீது இறுகி வருவது பார்த்த மாத்திரத்திலேயே புரிகிறது-நாம் செத்தொழிந்தசேதியை கேட்கவே உயிரை பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறான் போலும்!
கூடுதல் பணம் தருவதாக ஆசைகாட்டி இந்தகொலையாளிகளை விலைக்கு வாங்கி விட முடியாதா?
தொழில் முறை கொலையாளிகள் அந்தமுரடர்கள்
இல்லை மனிதவேட்டையில் வென்று பரிசு பெற வேண்டும் என்கிற வெறி இருக்கிறது அவர்களிடம்!
நாம் எங்கேயாவது ஒளிந்து கொண்டு அவர்கள் நம்மைதேடியலைந்து அலுக்கச் செய்வது ஒரு யுக்தி...வில்லி!


ஒருசில தினங்கள் தாக்குப் பிடித்தால் அவர்கள் சோர்ந்து போவது நிச்சயம்! ஏதாவது உணவுசேகரித்துக் கொண்டு தலைமறைவாக வேண்டும்!
அதற்கு முன்னதாக,
கொஞ்ச நேரம் நனைந்த
டும்! அந்த செவ்விந்திய
மோப்ப சக்தியைப் பயன்
நம்மைக் கண்டுபிடிக்க
இருக்க அந்த ஏற்பா
அவர்கள் புறப்பட்டுச் சென்று இரண்டுமணி நேரம் ஆகிவிட்டது!
அப்படியானால் கிளம்புங்கள்! நான் கொடுத்த துப்பாக்கியும், கத்தியும் தங்களை காத்துக்கொள்ள பயன் படும் என்று நிஜமாகவே நம்பி விட் டார்கள் அந்த முட்டாள்கள்!
ஏற்கனவே நாம் திட்
படி தீவை மூன்று பிரி
நாம் தனித்தனியே மு
சியை மேற்கொள்வோ
யாரும் எக்காரணம்
கொண்டும் பிறர்
எல்லையினுள் ஊடுரு
வக் கூடாது !
அருமையான இடம்!- தொலைவில் வருவோரையும் தெளிவாக காண முடியும்— பின் புற வழியும் இருக்கிறது! உண்ண ருசியான மீன் நண்டு வகைகள்!
வில்லி-பெல்மேன் கொடுத்த தண்ணீர் சரியான உப்புக் கரைசல்!
ஆமாம்! அவனு
ம் தாக்கம் இது
என்றால் இந்த
கியிலும் தோட்
இல்லாதிருக்க
அப்படியா..?


தோட்டாக்கள் இருக்கின்றன ! எதற்கும் ஒன்றை திறந்து பார்த்து விடட்டுமா!
தோட்டா வெளியேற முடியாதபடி குழாய் அடைக்கப்பட்டிருக்கிறது! இப்படியே விசையை இழுத்தால் சில விரல்களை நான் உடனடியாக இழக்கநேரிடும்!
பெல்மேன் இன்னமும் கொஞ்சம் கூட மாறவில்லை!
துப்பாக்கியில்லை... குடிக்க தண்ணீர் இல்லை - ஆனாலும் இங்கே தொடர்ந்து நாம் மறைந்து கிடக்க தடையேதுமில்லை!
இந்த தீவும் ஓரளவு மிகப் பரந்த இடம் தான்!
இரவில் நாம் வெளியேறி நடமாடலாம்—ஆபத்து வந்துவிடாது!
வில்லி .. விபரீதம்!- அங்கே பாருங்கள்!
அப்பர்மேன் நேராக நம்மைநோக்கிவந்து கொண்டிருக்கிறான்-
இது எப்படி சாத்தியம்...?
அப்பர்மேன் நின்றான்...
அங்கே அவன் ஏதோ செய்கிறான். என்ன வென்று உங்களுக் காவதுபுரிகிறதா


காம்பஸில் திசை பார்ப்பது போல் தெரிகிறது! ஆனால் திசையைத் தெரிந்து இவனுக்கு என்ன ஆகப் போகிறது?
வில்லி - எனக்கென்ன சந்தேகமென்றால் நம் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்கும் கருவி ஏதேனும் நம்மீது பொருத்தப் பட்டிருக்கிறதா என்பதே!
ஹாய்-புரிந்து விட்டது.இந்த கத்தியிலும் ஏதேனும் விஷயம் இருக்கலாம் என்று அப்போதிருந்தே எனக்கு சந்தேகம்!
பெல்மேன் ஒத்த முறையில் தான் திட்டமிட்டிருக்கிறான்-தண்ணீர்...உப்புக் கரைசல் ரிவால்வரோ.. கையிலேயே வெடிக்கக்கூடியவகையில்! எனவே இந்தக் கத்தியிலும் நிச்சயம் ஏதோ ஒரு விஷமம் இருக்கத்தான் வேண்டும்!
இதோ- கைப்பிடியிலிருக்கிறது ஒருநுண்ணிய டிரான்ஸ்மிட்டர், இதன் சமிக்ஞையை பெறும் ஆற்றல் கொண்ட கருவியைத் தான் அப்பர்மேன் அங்கே கையாளுகிறான்....
தன் 'இரை' பதுங்கிக்கிடக்கும் இடத்தை துல்லியமாகத் தெரிந்து கொண்டு விட்டான் அப்பர்மேன்!
உன் உடையிலிருந்து கிழித்தெடுத்துண்டுத் துணியை இப்படிக் கொடு இளவரசி!
எத்தனுக்கு எத்தன் நாம் என்று திருப்பிப் போம்!


15 நிமிடங்களுக்குப்பின் இடைவெளி 20 கஜ தூரமே இருக்கையில்...
என்ன இது....வந்து—
அவர்களைக் காணோமே-கத்திமட்டும் இன்னமும் இங்கே இருக்கிறதே!
ஏமாற்றி விட்டார்கள் – சே!
ஓ.கே இளவரசி!
பிரமாதம் வில்லி! வாருங்கள் ஓடிச்சென்று அந்த ரைபிளைக் கைப்பற்றுவோம்-மற்ற இரு தடியர்களும் எந்த வினாடியும் இங்கே வந்துசேரக்கூடும்!
கிழிந்த துண்டுத்துணியும் ஒரு கூழாங்கல்லையும் கவணாக பயன்படுத்தி அப்பர்மேனைவீழ்த்தினார் கார்வின் ..
புலிகளையே வேட்டையாடி பழக்கப்பட்டவன்... அவை இப்படி கவண் எறிவதில்லையாதலால் உஷாராக இருக்கத் தவறிவிட்டான் பாவம்!
கொன்றுவிட்டேனோ என்றும் பயந்தே போனேன். வெறும் மயக்கம்தான் – சீக்கிரமே நினைவு திரும்பி விடும்!
அவன் வாயை கிளற வேண்டும்!


விஷயத்தை கக்கு வானு. என்பதுதான்...
அதற்கு ஒரு சிறு நாடகமாடுவோம்!
சிறிது நேரம் கழித்து அப்பர் மேனுக்கு சுயவுணர்வு திரும்பிய போது அருகில் நடந்த உரையாடல் அவன் காதில் விழுந்தது.
அவனுக்கு சுயவுணர்வு திரும்பும்வரை பொறு இளவரசி!
இந்தவேட்டையை மூவரும் எப்படி திட்டமிட்டிருக்கிருர்கள் என்று கேட்டறிவோம்!
லேசில் மசிய மாட்டான்- இவனை வழிக்குக் கொண்டுவரவெகுநேரம் பிடிக்கும்....
எனவே,மேலும் விவாதிக்காமல் கையில்உள்ள கத்தியை அவனுடைய நெஞ்சில் செருகிவிட்டு வாருங்கள்- போவோம்!
ஐயோ ..வேண்டாம்— என்னைக்கொல்லாதீர்கள் எல்லா விபரத்தையும்— கக்கிவிடுகிறேன்!
அப்பர்மேன் சில விபரங்களை தெரிவித்தான்...
தீவை மூன்று பகுதிகளாக பிரித்துக்கொண்டு தனித் தனியே முயற்சியை மேற் கொண்டீர்களாக்கும்
...ஆமாம்சென்றவாரம் இந்தத்தீவை ஆராய்ந்தோம். என் பையில்ஒரு வரைபடம் இருக்கிறது



மரண பீதி ஏற்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக வதைபட்டு சாக வேண்டும் நாங்கள் என்று விரும்பக்கூடியவன் பெல்மேன். அப்படியிருக்கையில் எங்களுடையமரணத்தை துரிதப்படுத்தும் வகையில்...
எதற்காக துப்பாக்கியிலும் கத்தியிலும் அம்மாதிரி விஷமம் செய்ய வேண்டும்?
காரணம்—பெல்மேன் செத்துக்கொண்டிருக்கிருன்!
இந்த வேட்டை உங்களுக்கு ஒரு சித்திரவதையாக அமைய வேண்டும் என்றுதான் ஆரம்பத்தில் திட்டமிட்டான். ஆனல், மூன்று தினங்களுக்குமுன் மறுபடியும் ஒருமுறை ஹார்ட் அட்டாக் வந்துவிட்டது. மரணம் நெருங்கி விட்ட உண்மை தெளிவாகி விட்டது அவனுக்கு
இன்று சூரியன் மறைவதற்குள் வேட்டை ஒருமுடிவுக்கு வந்து விடும் என்பது அவனுடைய எதிர்பார்ப்பு. அதற்காகத் தான் துப்பாக்கியும் கத்தியும் சூழ்ச்சியுடன் உருவாக்கப்பட்டது
அங்கே இரண்டாவது வேட்டையாளன்!
இந்த வேட்டையை சூரியன் மறைவதற்குள்ளாகவே முடித்து விடலாம். ஆனல் முடிவு பெல்மேன் எதிர்பார்ப்பதைப் போலிருக்காது!
டெம்ப்ஸ்டர் தன்திசையறியும் கருவியில் கவனமாக இருந்தா
ஹே அதிர்ஷ்
தின் பார்வை எ
மீது திரும்புகிற


என் எல்லைக்குள் வருகிறார்கள்! அப்பர்மேன் அவர்களை துரத்திவந்துகொண்டிருக்கக்கூடும்- இன்னமும் சுடும் வாய்ப்பு கிட்டாமல்! டெமஸ்டர் பயலே வாய்ப்பை கோட்டைவிட்டுவிடாதே!
அரைமைல் தொலைவில் செவ்விந்தியன் விழிப்போடு காத்திருந்தான்...
என் எல்லைக்குள் பிரவேசிக்கப்போகிறார்கள் !
சமிக்ஞை அனுப்பும் டிரான்ஸ்மிட்டர்பொருத்தப்பட்டிருந்த கத்தி அப்போது டெம்ஸ்டரின் எல்லையையும் சார்லியின் எல்லையையும் பிரிக்கும் கணவாய் பகுதியில் இருந்தது
அப்பர்மேனின் வரைபடத்தின்படி இந்த இடம்தான் நமக்கேற்ற இலக்கு...
இருவருமே இந்த இடத்தை குறிவைத்து விரைந்தோடி வருவது நிச்சயம். உயிர்பலி கொள்பவனுக்கு போனஸ் தொகை உண்டல்லவா!
அந்த செவ்விந்தியன் மிக ஆபத்தானவன்...
சில நூறுகஜங்கள்முன்னாள் சென்று நல்லதொரு இடத்தை தேர்ந்தெடுத்து பதுங்கி நின்றாள் மாடஸ்டி
ஆம்...என்னிடம் ரைபிள் இருக்கிறபடியால் அவனை நான் கவனித்துக்கொள்கிறேன்....நீங்கள் டெம்ஸ்டரை கவனியுங்கள்....


ஓடிவராமல் பதுங்கி மெள்ள நகர்ந்து வந்தான் என்றால் பிரச்னைதான் ..
ஐந்து நிமிடங்கள் நிசப்தத்தில் கரைந்த பின்—
நில் அப்படியே !
சார்லிதான் ! நிலைமை தலைகீழாக்கி விட்டது!
ரைபிளை அப்படியே கீழேபோடு...கத்த எண்ணாதே—மூளை சிதறிவிடும்!
மனித வாடையை முப்பது கஜ தொலைவிலேயே மோப்பம் பிடிக்கும் ஆற்றல் எனக்குண்டு பெண்ணே!
அவன் ஏன் என்னை உடனே சுடவில்லை?
விஷமத்தனமாக எதையும் செய்ய நினைக்காதே!
இருவரையும்கொன்று போனஸ் தொகை மொத்தத்தையும் பெற எண்ணுகிறான் என்று நினைக்கிறான்!
இன்னொரு சந்தர்ப்பத்தில் செவ்விந்தியன் ஒருவனை ஒளிந்திருந்து நீ தாக்க முனைந்தால் காற்றின்போக்கில் நிற்க வேண்டும் நீ.... புரிகிறதா?


...இல்லையேல்எதிரி சுலபமாக மோப்பம் பிடித்துவிடுவான் -
பேசிக்கொண்டே மெள்ள நெருங்கி வந்து துப்பாக்கியால் என்தலையில்ஓங்கி ஒரு போடு போட நினைக்கிறானே?
சோதித்துப் விடலாம்!
கைகளை உயர்த்த வேண்டாம் பெண்ணே கீழேபோடு!
நினைத்தேன்! ஓசையின்றி அடித்து வீழ்த்த திட்டமிடுகிறான் - வில்லியையும் தானே கொல்ல நினைக்கிறான்!
ரைபிளின்முனை தன் மண்டையை வைத்து இறங்கி போது...
சட்டென்று குனிந்து மின்னல் வேகத்தில் சுழன்றாள் மாடஸ்டி...
அந்த அதிரடி தாக்கு எதிரி கொஞ்சமும் எதி பாராத ஒன்று...


அஹ்...!
இனி இவன் இப்போதைக்கு விழித்தெழப் போவதில்லை!
குகைவாய் பகுதியினுள் வேகமாக வந்து கொண்டிருந்தான் டெம்ஸ்டர்...
அங்கே கிடப்பது... அப்பர்மேனின் தொப்பியும் அல்லவா இங்கேஎன்ன செய்துகொண்டிருக்கிறான்?
அந்த செவ்விந்தியனின் எல்லையை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது நான் முந்திக் கொள்ள வேண்டும்!
ஏதோ செய்தி எழுதி வைக்கப்பட்டிருக்கிறது அதனுள்!
தொப்பியை நெருங்கினான் டெம்ஸ்டர்— மிகுந்த எச்சரிக்கையோடு ..
அந்த துண்டுக் கடிதத்தில் அப்படி என்ன செய்தி இருக்கமுடியும்?


டியாண்டேர்ய்!
மறுகணம் டெம்ஸ்ட ரின் கையிலிருந்த ரைபிள் பறந்தது
நான்தான் எழுதி வைத் தேன் அதை!
அமைதியாக அங்கே போய் உட்கார் — கொஞ்சநேரம்!
அப்பர் மேனை வீழ்த்தி விட்டீர்களா...என்ன?
ஆமாம் இந்நேரம் சார்லியின் விவ-காரமும் முடிந்து விட்டிருக்கும் அங்கே!
அலன் சரியான விஷமி ப்ளைஸியை அவன் கொல் வது நிச்சயம்!
அப்படியொரு விபரீதம் நிகழ்ந்தால் நீயும் செத் தொழிவாய்- எனவே உன் கூற்று பொய்யாகட்டும் என்று பிராத்தனை செய்!
என்னைக் கொன்று விடப் போகிறாயா?
தெரியவில்லை! உன்சகா டெம்ஸ்டார் வீழ்த்தப் பட்டுவிட்டசெய்தி சமிக் ஞையாக வந்து சேர காத்திருக்கிறேன் இப்போது


அங்கே எப்படிப்பட்டதொரு முடிவு நிகழ்கிறது என்பதை பொறுத்தது உன் தலைவிதி!
பல நூறு கஜங்களுக்கு அப்பால்—
நன்றாக பிணைத்து விட்டேன் உன் கைகளை என்று நம்புகிறேன்!
சிறுபாரசூட் ஒன்றை தன் கவணில் வைத்து சுழற்றி வீசினார் கார்வின்...
ஓசை எழுப்பினால் ஆபத்தாகிவிடலாம் – எனவே தான் இப்படியொரு யுக்தி!
இதை இளவரசி பார்த்தால் நீ வீழ்த்தப்பட்டு விட்டாய் என்று புரிந்து கொள்வாள்!
இருமுறை அவன் துப்பாக்கி முழக்கம் செய்தால் சார்லியை அவன் மடக்கி விட்டான் என்பது செய்தி!
டுமீல்! டுமீல்!
ஹலோ... இளவரசி பிரச்னை ஏதுமில்லையே?
மாட்டிக்கொள்ளவிருந்தேன்- நல்லவேளை....நம் இருவரையும் வீழ்த்தவேண்டும் என்ற பேராசையால்பயல் தோற்றுப் போனான்!


இருவரையும் நான் பார்த்துக் கொள்கி றேன்· நீங்கள் போய் அப்பர்மேனையும் இங்கே இட்டு வாருங் கள்!
சூரிய அஸ்தமனத்திற்கு அ
மணி நேரம் முன்பாக அந்த
தீவின் உட்பகுதியில் வெகு
தொலைதூரத்திலிருந்துரை
முழக்கம் தொடர்ச்சியாக
கேட்டது...
இருள் கவிழத்தொடங்கியது
மிஸ்டர் பெல்மென்! அதோ சமிக்ஞை! வேட்டை முடிந்து விட்டது!
கார்வினும் ப்ளேஸியும் செத்தொழிந்தார்கள்!
வேட்டையர்களை ஏற்றிச் செல்ல மோட்டார் படகு விரைந்து வந்தது...அங்கே
இன்றிரவு அவர்கள் கரை யிலேயே தங்கப்போகிறார் களாம்...நீங்கள் இருவரும் தான்! இறங்குங்கள்... ம் ம் சீக்கிரம்!
வழக்கமான அலைவரிசை
வெஸ்டன் நம்மோடு தொ
கொள்ள நேற்றிலிருந்து
தொடந்து முயன்று கொ
ருப்பான் கப்பலிலுள்ள
மூலம் அவனோடு பேசமு
போம்!


தயடுத்து —
எஞ்சின் அறையில் மற்றவர்கள் சரணடைந்து விட்டார்கள் —
நீ....யார்?
என்னை விடுங்கள்- எனக்கு
தில்சம்பந்தமே கிடையாது!
ல்மேன் வாடகைக்கு என்
ப்பலை அமர்த்திக்கொண்
ன் அந்த மூன்று கொலை
ளிகளும் கப்பலில்இருக்கை
ல்விவாதம் செய்ய எனக்கு
தரியமில்லை....!
மூடு வாயை! பெல் மேன் எங்கே இருக்கிறான்?
பெல்மேன் இறந்து விட்டான் நீயும் கார்வினும் கொல்லப் பட்டுவிட்டதாக சமிக்ஞை வந்ததும் அவனுடைய உயிர் பிரிந்து விட்டது!
கும்போது சந்
தாஷமாகவே செத்
ருக்கிறான் என்று
தான்றுகிறது!
தற்கு அருகதையற்
வன் என்றபோதி
ம்... தொலைகிறான்!
குட் மார்னிங்... மிஸ் ப்ளெஸி!
ஹலோ .. வெஸ்டன் க்ருபர் அந்த மூவரையும்கரைசேர்த்துவிட்டு ஓடிப்போய்விடு இங்கிருந்து!
போலீஸில் புகார் செய்யப்போவதில்லையா நீங்கள்!






# வாசகர் கடிதம்!

● S. சுகுமாரன், உடுமலைப் பேட்டை-642 126.

கராத்தே டாக்டரில் டக்ளஸின் தந்திரமாக மடக்கு தங்கள் (கருப்பர் இன) இயக்கத்திற்கு நன்கொடை 25,000 டாலர் பெற்ற திறமை கண்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன். இந்தப் புத்தகத்தில் இணைத்து வந்துள்ள சூப்பர்மென் கதையில் மிக அற்புதமாக இருந்தது!

● ஆர். யுவகுமார், அரும்பாக்கம், சென்னை-6.

படங்களோ தத்ருபமாக வரையப்பட்டிருந்தன. அதில் இடம் பெற்றிருந்த கதைகளோ விறுவிறுப்பாக அற்புதமாக இருந்தது. மொத்தத்தில் லயன் அட்டகாசம் போங்கள்.

● R. அமுதா, வடுகன்குட்சிபூர்.

லயன் காமிக்ஸ் இதழின் அதி அற்புத தீபாவளி மலரைப் பற்றிய ஆயிரமாயிரம் கற்பனைகளுடன் காத்திருக்கிறேன் தூங்கும்போது கனவில்கூட லயன் காமிக்ஸ் தீபாவளி மலர் அடிக்கடி வருகிறது!

மின்னல் வேகத்தில் செயல்பட்டு எதிரிகளை அதிர அடிக்கும் 'கராத்தே டாக்டர்' பலே டாக்டர்தான்! இவரை அடிக்கடி லயன் காமிக்ஸில் சந்திக்க விரும்புகிறேன்.

'சூப்பர் மென்! படு சுவாரஷ்யம்! அமேஸான் நதிப் பள்ளதாக்கில் நானே பயணம் செய்வது போன்ற திரில்! லயன் காமிக்ஸ் என்றாலே எப்போதுமே தீபாவளி லட்டுதான்!

● A. அருண்ஜெயசுதா, திசையன்விளை.

கராத்தே டாக்டர், சூப்பர்மேன் கதை படித்தேன் மிகவும் டக்கர். இதே போல் இதுவரை எந்த காமிக்ஸும் கதைகளை அள்ளி வழங்கியதும் இல்லை, வழங்க போவதும் இல்லை லயன் காமிக்ஸை தவிர. தீபாவளி ஸ்பெஷல் டிரெய்லர் படித்தேன் அத்தனையும் சூப்பர் ஹீரோக்கள்.

'ஹாட்லைன்' பகுதி பக்கம் 370ல் உள்ளது!


கல்லறைக் கூண்டு
வாங்க கண்ணுகளா-இந்த பிண ஊர்வலத்தை பாருங்களேன்! அதோ நிற்கிறானே-அவன் தான் ஆமோஸ்! பாவம் மண்டையைப்போட்டு விட்டான்! அதுதான் அவனுடைய சவப்பெட்டி! பூமியில் புதைக்கப்படாமல் எப்பொழுதும் நேராகவே நிற்கப் போகிறது! உயிருடன் இருக்கும்போது எல்லோரையும் ஆட்டி வைத்தது போதாதென்று இறந்த பின் இன்னும் அதிகமாக கூத்தடிக்கப் போகிறான் பாருங்கள்!
என் கணவராவது ஓய்வாக இருப்பதாவது- நல்ல கதைதான்!
அப்பாவின் குரூரத்திற்கு எல்லையே கிடையாது. சவப்பெட்டியை நடுவீட்டில் வைத்துக் கொண்டு- சே!
வாழ்க்கையின் நடுவே மரணம் குறுக்கிடுகிறது! ஆமாஸின் உடலை நிரந்தர ஓய்வெடுக்க அனுமதிப்போம்!
எஜமானர் இறந்து விட்டாரா? இல்லவே இல்லை- எப்பொழுதும் இருந்த மாதிரியே இதோ நிற்கிறாரே!
கமான், ஆமோஸ் உயிருடன் இருந்த நாட்களைப் பார்ப்போம்! ஒன்பது துணிகளைக்கொண்ட அந்த சவுக்கை பாருங்கள்- என்னமாய் விளாசுகிறான்!
இதை வைத்து நாலு வாறு வாறினால் பெட்ஸியை மணக்கப் போவதாகப் பிதற்ற மாட்டாய்! பணமில்லாத ஒரு பிச்சைக்கார நாயை நீ மணக்கக் கூடாது!
எனக்குக் கீழ்ப்படிய மறுக்கிறாயா? என் சவுக்கை எடுத்து வா!
இல்லை அமாஸ், ப்ளீஸ்- என்னை மன்னித்து விடுங்கள்!



அறிவில்லா சைத்தானே!
நோ மாஸ்டர்- அதை அடிக்காதீர்கள்!
வாயை மூடு, இல்லையெனில் சவுக்கின் அடுத்த இரை நீதான்!
ஆனால் அந்தோ பரிதாபம்- மிரண்டு போன குதிரை திமிற ஆமோஸ் கீழே விழுந்தான்-
ஜார்ஜ், ஓடிப்போய் டாக்டர் லீயை அழைத்து வா. அப்பாவுக்கு பலமாக அடிபட்டிருக்கிறது!
இதோ போகிறேன் சார்!
அடிபட்டால் எப்படி வலிக்கும் என்பதை ஒரு முறையாவது அனுபவித்துப் பாருங்கள்!
ஆமோஸ், ஆடாமல் அசையாமல் படுத்து ஓய்வெடுத்தாலொழிய உங்கள் உயிருக்கு நான் உத்தரவாதம் தர முடியாது!
எல்லோருக்கும் நான் சட்டென்று ஒழிந்துவிட்டால் நிம்மதி! ஆனால் நான் உங்கள் ஆசையை நிறைவேற விட மாட்டேன்!
கடவுளே, இந்த மனிதர் என் கணவர்! அவரைபற்றி தவறாக நினைக்கக் கூடாது!


ஆனால்-
இந்தச் சவுக்கை இனி நீங்கள் ஏந்தப் போவதில்லே. எவருக்குமே கருணை காட்டாத உங்கள் ஆத்மாவுக்கு கடவுள் கருணை காட்டுவாராக!
அன்றிரவே மகன் டாம் தனது ஏழைக் காதலி பெட்ஸியைத் தேடிப் போகிருன்-
இன்னும் ஆறு மாத காலம் காத்திருப்போம் டியர்! அதன் பின் நாம் திருமணம் செய்து கொள்ளலாம்!
டாம்- அதற்குப்பின் நமக்கு சொர்க்கம்தான்!
சொர்க்கமா? ஹீ-ஹீ! அடுத்த நாள் உயில் வாசிக்கப்படுகிறது. அதன் வாசகங்களை நீங்களும் பாருங்கள் கண்ணுகளா!
கண்ணாடி சவப்பெட்டி ஒன்றில் என உடல் நேராக நிறுத்தி வைக்கப் பட வேண்டும்! என் கண் இமைகளை திறந்த நிலையில்லைக் கப்பட்டு தைத்துவிடவேண்டும்! உயர்த்திய என் கையில் சவுக்கு இருக்க வேண்டும்! இந்த ஆணைகளின்படி நடக்கவில்லையானல் என் சொத்துக்களும் எஸ்டேட்டும் உள்ளூர் குடிகாரன் ஜோஸப்புக்குப் போய்ச் சேரும்! என் குடும்பத்தாருக்கு ஒரு பைசா கூட கிடைக்காது! அதுமட்டுமல்ல உயிர் உள்ள வரைக்கும் அவர்களை நான் ஆவியாக சுற்றிக் கொண்டேயிருப்பேன்!
அவர் நம்மை இப்படி முறைத்துப் பார்த்துக் கொண்டே இருக்க நாம் எப்படி இந்த வீட்டில் குடியிருப்பது?
அம்மா, கலலேப்படாதீர்கள். ஒரு வருடத்துக்குள் அவர் உடம்பு பொடிப் பொடியாக உதிர்ந்து போய் விடும். வெறும் எலும்புக்குவியல்தான் மிஞ்சும்!
விரைவில்-
பெட்ஸி, நீ டாமை உன் கணவஞக ஏற்றுக் கொள்கிருயா?
ஆம், ஏற்றுக் கொள்கிறேன்!
காவல்காரன் போல ஆமோஸின் பிணம் நின்று கொண்டிருக்கும் அந்த வீட்டில் எப்படி குடித்தனம் நடத்தப் போகிருள்!
நினைத்தாலே பயங்கரமாயிருக்கிறதே!

GRIMM'S 52 - 7-27





ச்சரிக்கைகள்
தொடர்ந்தன-
டமால்!
டம்!
ஏ-ஏ-ஏ-ஏ...!
அமைதியாக
இரு!
நாம் அவரைப்
புதைப்பதால்
இதை விடவா
மோசமான
தொல்லை
ஏற்படப்
போகிறது!
பன்மடங்கு பயங்கரமாக
இருக்கும் என்று அவர்
எச்சரிக்கிறார். அவர்
ஆவி எப்பொழுதும் நம்-
மையே சுற்றிக் கொண்
டிருக்கும்.
னால் டாமுக்குத் தெரியாமலே,
ரு நம்பிக்கையான அடிமை
வேலைக்காரனை நள்ளிரவு வந்து
ார்க்கச் சொல்கிறாள் பெட்ஸி.
இல்லை மேடம்;
நான் அப்படிச்
செய்தால் எஜ-
மானின் ஆவி
என்னைக்
கொன்றே
விடும்!
ார்ஜ், நீ மட்டும் குழி தோண்டி இந்த
சவப்பெட்டியை அதற்குள் தள்ளிப்
புதைத்து விட்டாயானால் டாமிடம்
சொல்லி உன் விடுதலைக்கு நான்
ஏற்பாடு செய்கிறேன்!
சரி, நீபோ, மழைபெய்து நிலம்
மிருதுவாகத்தான் இருக்கிறது.
நானே குழிதோண்டிக்
கொள்கிறேன்!


மறுநாள் காலைப் பொழுது-
ஒழிந்தது சனியன்! நிரந்தரமாக என்று நம்புவோம்!
என்ன அதிசயம்! அப்பாவின்
கதவு தட்டுதல், சாமான்கள்
போன்ற விளையாட்டுக்கள்
இல்லாதது விந்தைதான்
ஆறு மாதங்கள் கழிந்த பின்னும் இன்னும் அதே இனிமையான, அமைதி நீடிக்கிறதே?
நாம் அதற்கு பெட்ஸிக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும்!
WHERE HE BELONGS

40A

# "ஊடு"

"ஊடூ-சூன்யம்" கதையைப் படிக்கும் முன்னர், இந்த முன்னுரையை கொஞ்சம் படித்துப் பாருங்களேன்!

"ஊடு" என்பது ஒரு மதம்! துர் தேவதைகளையும், பில்லி-சூன்யக் கடவுள்களையும் வழிபடும் மதம்!

இதன் மூலம் உருவானது 16 ம் நூற்றாண்டில்! மேற்கிந்தியத் தீவுக் கூட்டத்தில் ஒன்றான 'ஹாய்டி'யில் (HAITI) வேலை செய்து வந்த ஆப்பிரிக்க அடிமைகளே இதன் சூத்ரதாரர்கள்!

"ஊடு" மதத்தின் முக்கிய கோட்பாட்டின்படி எல்லாவற்றின் பின்னணியிலும், சக்திவாய்ந்த ஆவிகள் பல செயலாற்றிக் கொண்டிருக்கின்றன! இந்த ஆவி உலகோடு தொடர்பு கொண்டு வழிபடுவதே "ஊடு"

"ஊடு" மதத்திற்கு பயங்கரமானதொரு பரிமாணமும் உள்ளது! "ஊடு" வை பின்பற்றும் சில இரகசியக் கூட்டங்கள், கொலை, நரமாமிசம் சாப்பிடுதல், சூன்ய வேலைகளை செய்தல் போன்ற பயங்கர செயல்களில் ஈடுபட்டு வருகின்றன! 'போகோஸ்' என்றழைக்கப்படும் சூன்யக்காரர்களிடம் குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுத்து விட்டால், ஆவிக் கடவுள்களின் உதவியுடன் எதிரி மீது சூன்யத்தை ஏவி விடுவார்கள்! எதிரியின் சாயலில் ஒரு சிறு பொம்மையை செய்து கொண்டு, அவரது உடமைகளில் ஒன்றை (தலை முடி, மோதிரம், போன்றவை) பொம்மை மீது பொருத்தி விட்டால் பொம்மைக்கு ஏற்படும் கதியே எதிரிக்கும்! பொம்மையை கண்ணில் குத்தினால், அங்கே எதிரிக்கு கண் குருடாகி விடுமாம்! இதுபோன்ற சூன்ய வேலைகளை செய்வது "சமேதி பிரபு" என்ற மரணக் கடவுள் தானாம்!

"ஊடு" மந்திரம் நிஜமாகவே செயல்படுகிறதா?" என்று கேட்டால், ஒரு விதத்தில் "ஆமாம், நிஜமாகத் தான்" என்றே சொல்ல வேண்டும்! அமெரிக்காவின் ஹார்வார்டு பல்கலைக் கழக புரபஸரான டாக்டர் வால்டர் கேனன் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். "ஊடு" வின் சாபத்திற்கு ஆளாகிவிட்ட நபர்கள் நிறையப் பேர், பயத்திலும், அதிர்ச்சியிலுமே செத்துப் போயிருக்கிறார்களாம்! வேறு சிலர் மர்மமான முறையில் செத்துப் போயிருக்கிறார்களாம்!

"ஊடு" இன்று உலகம் முழுவதும் பரவியிருக்கிறது! 1978ல் எடுக்கப்பட்டதொரு கணக்கின்படி நியூயார்கில் மட்டும் கிட்டத்தட்ட 30 ரகசியக் கூட்டங்கள் இருப்பதாகத் தெரிந்தது!

"ஊடு" வை நம்புவதோ - நம்பாமலிருப்பதோ உங்கள் இஷ்டம்!

# ரிப்போர்ட்டர் ஜானியின் சாகஸம்!




இந்த நகரமைப்பின் திட்ட இயக்குனரான லெபோஸ் எனும் நபரும் மர்மமான முறையில் காணமல் போய் விட்டது! அல்லது-
இந்த அஸ்திவாரத்தின் அடியில் அல்லது அருகில் ஒரு பீட்ருட் காட்டில் அவன் புதைந்து போயிருக்கலாம்! நானே வந்து கேள்விகள் கேட்க... அங்கே யாரது?
மிரட்சி ஒன்றுதான் இப்படி தலைதெரிக்க ஓட வைக்கும். ஏன் அப்படி தட்டுத் தடுமாறுகிறான்?
அப்படி எங்கேதான் ஓடுகிறான்?


கருப்பு கண்ணடி! ஒருவேளை, அவன்... குருடனு?
டங்!
ஏய், நில்-அப்படியே.
அங்கே ஏகப்பட்ட குழிகள் இருக்கின்றன, அத்தோடு


வெட்டுபள்ளங்கள்! அவன் பாதாளத்தில் விழுமுன் எட்டிப்பிடிக்க முடியாமல் போய் விடுமோ-



சரக்!
இந் , இதுக பற்றிக்கொள்.
க்கு உதவுவதுதான்
என் நோக்கம்
நோ! நோ!


ஹப்! செத்து தொலைக்க விருந்தாய், நல்லவேளை.
அதுசரி, எங்கே அப்படி ஓடுகிறாய்?
விடு, என்னை உறுதியளித்திருக்கிறாய் என்னிடம். குரலை மாற்றிகொண்டால் தெரியாதென்று நினைத்தாயா? அந்த சண்டாளர்கள் கூட்டத்தை சேர்ந்தவன் நீ! என்னை நீ இப்போது காப்பாற்றியது பிறகு வசமாக கொல்வதற்குத்தான்.
பொறு. நான் சொல்வதை
என்னால் இனி எதையுமே பார்க்க முடியாதென்பதை வைத்து ஆதாயம் தேட நினைக்கிறாய். ஆனால் அது நடக்காது.


என்னை மன்னித்துவிடு-வேறு வழியில்லாமல் போனதுனக்கு நிஜமாகவே உனக்கு உதவ நினைக்கிறேன். என்னை நம்பு.
பொய்-நாடகமாடுகிறாய்
நிதானமாக இரு. என் பெயர் ஜானி-பத்திரிக்கை ரிப்போர்ட்டர். ஒரு கட்டுரை எழுத தேவையான தகவல் சேகரிக்க இந்த பக்கமாக வந்தேன். நீ-நீ யார்?
நிஜமாகவே நீ பத்திரிக்கைகாரன் தானா?


சத்தியமாக!வா என் காருக்கு செல்வோம்.உன் விடு பக்கத்தில் தான் இருக்கிறதா?
என் பெயர்,மார்க்.நீ அவர்களில் ஒருவனே என்று நினைத்துவிட்டேன்!
அவர்கள்என்ருல் யார்?நிதானமாக எல்லாவற்றையும் கூறு.நீ என் மீது பூரணநம்பிக்கை வைக்கலாம்.
இப்படிதான் அவர்களும் சொன்ஞர்கள்-ஏமாத்துவிட்டேன்.விவகாரம்ஆரம்பமானது நேற்றுதான்!
ஆனல் இடையில் ஏகப்பட்ட வருடங்கள் ஒடிவிட்டது போல் பிரமை ஏற்படுகிறது. என் மோட்டார் சைக்கிளில் நேற்று கானகத்தினருகே போய்க் கொண்டிருந்தேன்.
...திடீரென்று—



சுயவுணர்வு திரும்பியபோது, நானொரு குகையினுள் இருப்பதை உணர்ந்தேன். என்னை சுற்றி-ஓ அதை என்னவென்று சொல்வது?
அங்கே" அப்படி என்னதான் இருந்தது?
உன் பெயர் மார்க். தந்தை பணக்கார தொழிலதிபர். செல்வந்தர்களிடமிருந்து பெருந்தொகை வசூலிக்கப்படவேண்டியது அவசியம். மீட்புத் தொகையாக பத்து மில்லியன் ப்ராங்குகளை உன் தந்தையிடம் கறக்கப் போகிறோம்!
என்னை இங்கே அடைத்து வைக்கப் போகிறீர்களா?
சட்டவிரோதமாக யாரையும் நாங்கள் அடைத்து
உன்னை ஏதும் செய்ய


சட்டவிரோதமாக யாரையும் நாங்கள் அடைத்து வைத்தபோவதில்லை. நீ உன் வீட்டிற்கு திரும்பிச் சென்று பணத்தோடு இங்கே வர போகிறாய். அதற்கிடையே.....
ஏ என்னை என்ன செய்ய போகிறாய்?
உன்னை ஏதும் செய்ய போவதில்லை. அந்த பொம்மையை கொடு
நன்றாக கவனி.....!
இதோ-
ஆ-ஆ-ஆ-வ்!


என் கண்ணில் பயங்கர வலி. நிஜமோ மனப் பிரமையோ தெரியாது!
அதன் பிறகு கண்ணில் ஏதோ வேறு நீடிக்கிறதாக்கும்?
பொம்மையின் மறு கண்ணிலும் ஊசியை செருகி விட்டான். நான் அவர்களின் சூன்யத்தில் இருப்பதாகவும் படிப்படியாக பார்வை போய்விடுமென்றும் சொன்னான்!
உன் தந்தை பணத்தை பத்திரப்படுத்தி வைத்திருக்கும் பெட்டகத்தின் இருப்பிடம் உனக்கு தெரியும் எங்களுக்கு பத்து மில்லியன் ப்ராங்குகள் வேண்டும்!
இப்போது நீ வீட்டுக்கு திரும்பிச் செல்கிறாய். உன்னை மீண்டும் இங்கே அழைத்துவர எங்களில் யாரேனும் ஒருவர் வருவோம். இப்போது உன் கண்களை துணி கொண்டு கட்டப்போகிறேன்.
கண் கட்டை அவிழ்த்தபோது நான் என் வாகனத்தருகே இருந்தேன். வேறு யாரையுமே காணோம். கண்களில் தீராத எரிச்சல். வீடு சேர்ந்தபோது பைத்தியம்போலானேன். முன் போல் எதையும் பார்க்கவே கடும் முயற்சி எடுக்க வேண்டியிருந்தது.



ஹலோ, மார்க் ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?
மோட்டார் சைக்கிள் பழுதாகி வழியில் நின்றுவிட்டதால் ஏற்பட்ட எரிச்சல், கண்ணில் லேசான வலி- தானாகவே போய்விடும்.
அவர்கள் தூங்கச் செல்லும்வரை படிப்பதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தேன்-
குட் நைட்—
நான் செய்கிற காரியம் சரியல்ல தந்தையிடம் பிரச்னையை பேசியிருக்க வேண்டும். ஆனால் ரகசியத்தை யாரிடமும் கூறினால் நிரந்தரமாக குருடாக்கப்படுவேன் என்று கூறியிருந்தனர்
திடீரென்று என் கண்ணெதிரே எல்லாமே படுபயங்கரமாக உருவெடுத்து ஆட்டம் போட்டன.


பீதியால் நான் அலற முற்பட்டபோது-
கத்தாதே காரியம் கெட்டுவிடும்-நீ நிரந் தரமாக பார்வையை இழந்துவிடுவாய். ம் சீக்கிரம் எடு நோட்டு கட்டுக்களை.
பத்தாயிரம் ப்ராங்குகள் கச்சிதமாக-பலே!
அடுத்து என்ன செய்யப் போகிருய்?
நீயும் என்னுேடு வருகிருய்-என் கார் வெளியே நிற்கிறது.
என்ஞல் எதையுமே பார்க்க முடியவில்லை. அவன் கைதாங்கலாக அழைத்துச் சென்ருன். பிறகு-


நல்ல பையன்!நேர்மையாக நடந்துகொண்டாய்.விரைவிலேயே ஊடு சூன்யத்தின் ஆதிக்கத்திலிருந்து நீ முழுமையாக விடுபடுவாய்.அதுவரை கறுப்பு கண்ணாடியை அணிந்துகொள்.
பிறகு என்னை வெளியே கொண்டு வந்து இங்கே இறக்கிவிட்டு சென்றார்கள்.பிறகு நடந்ததுதான் உங்களுக்கு தெரியுமே-
என்னுடைய முட்டாள்தனமான செய்கை அந்த பணம்? என் அப்பா உண்மையை அறிந்தால்....
வேதனையில் துடித்துப்போவது நிச்சயம்.ஆனால் புரிந்துகொண்டு விடுவார்.உங்கள் வீடு எங்கே இருக்கிறது சொல்-


பயப்படாதே. இதோ வந்துவிடுகிறேன்-
இருவரையும் கண்காணித்துக் கொண்டிருந்தது ஒரு உருவம்-
கனவல்ல, நிச்சயமாக யாரோ ஒருவன் இங்கே நின்று எங்களை கவனித்துக்கொண் டிருந்தான். அட, மறைந்துவிட்டானே!
சற்று நேரம் கழித்து—
இன்னொரு மோட்டார் சைக்கிள் விபத்தா?
மார்க்! என் மகனே!
பின்னர்—


என் பெயர் ஜானி-பத்திரிக்கையாளன். நானே நடந்ததை விவரிக்கிறேன்-நீங்கள் அனுமதித்தால்
பின்னர்—
ப.பத்து மில்லியன் ப்ராங்குகள்! அடபாவி என்ன தைரியம் உனக்கு!
சார்லஸ்! அவனே பார்வையிழந்து நிற்கிருன், நீங்கள் பணத்தைபற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உடனே டாக்டர் க்ரீனுக்கு போன் செய்துவரவழையுங்கள்
வேண்டாம் மம்மி.....!
ஜானியிடம் உளறியதே தப்போன்று தொந்துகொண்டிருக்கிறேன். விஷயம் தெரிந்தால் மிக மோசமாக பழிவாங்கிவிடுவார்கள்.
ஆமாம். ஆனால் நான் இதை அப்படியே விட்டு விட விரும்பவில்லை. இம்மாதிரி வழக்குகளில் ரகசிய விசாரணைகளை மேற்கொள்வது ன் ஸ்பெஷாலிடி என்று தெரியும். இதையும்.....
பயங்கர கனவு போல் தோன்றுகிறது. நம்பவே முடியலே. சபிக்கபட்டதோர் இடம் இது என்று தோன்றுகிறது!
ஆம். முதலில் உதவாக்கரை திட்ட இயக்குனர் லெபோஸ் மர்மமான முறையில் மறைந்து அல்லது இறந்து
போதும்... நிறுத்தி தொலையுங்கள்.



மம்மி! எனக்கு பார்வை திரும்பி விட்டது. என்னால் அனைத்தையும் பார்க்கமுடிகிறது சொன்ன வார்த்தையை காப்பாற்றி விட்டார்கள்!
இது ஒரு விந்தைதான்!
எனக்கு இந்த ஊடு சூனியத்தில் நம்பிக்கையே இல்லை. இதற்கு வேறொரு வியாக்யானம் இருக்க வேண்டும்.
பணம் பெரிதல்ல, மார்க் நலம்தான் முக்கியம். நீ விசாரணை செய்யும்போது புது விவகாரம் ஏற்பட்டு மார்க்குக்கு கேடு வந்துவிடக்கூடாது.
என்னஒருபயங்கரமானஅனுபவம் அப்பப்பா! என் பார்வை விரைவில் முழுமையாக திரும்பிவிடும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.
எனக்கும் அதில் சந்தேகமில்லை போய் நன்றாக ஓய்வெடு. பிறகு வந்து உன்னை பார்க்கிறேன்.
மாயமும், மந்திரமும் அல்ல — விழிபடலத்தில் ஏதோ ஒரு களிம்பை தடவியிருக்கணும், அல்லது பார்வையில் தற்காலிக பாதிப்பு ஏற்படுத்தும் மருந்து செலுத்தப்பட்டிருக்கணும்.
நவநாகரீக பாரிஸிலிருந்து 55 மைல் தள்ளியிருக்கும் பூலோக சுவர்க்கம் நகரமைப்பில் ஊடு சூன்யமா? இந்தக் காலத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் போலிருக்கிறது!


அதுசரி, திடீரென்று எட்டிப் பார்த்து விட்டு மறைந்து விட்ட அந்த உருவம் என்னாயிற்று?
நான் எதிர்பார்த்தபடியே, முற்றுப்பெறாத நீண்ட கால்வாய் அமைப்பு.
இது எங்கேதான் போகுது? போய்தான் பார்ப்போமே.
நீண்ட நிலத்தடி பயணத்திற்கு பின்
பேச்சுக்குரல்!


உன் பெயர் ஜானி...
ஊடூ உன்னை தண்டிக்க தீர்மானித்துள்ளது. நீ யாராயிருந்தாலும்,குருடாகி போவாய்.
இதோ...பார்வை போய்விட்டது!
மார்க்குக்கு நேர்ந்த அதே கதி!
ஆனால்,ஜானி அறியாத ஒரு புதிர்-அதே கணத்தில் அருகேயுள்ள ஒரு பண்ணை வீட்டில்—
ஹா...ஆ ஆ!
ஜானி!என்ன ஆயிற்று?
ஏ-என்னால் எதையுமே
ஏ-எப் படி திடீ
நான் குருடாகிப் போ


ஜூஸி! என்ன ஆயிற்று? ஏன் அப்படி அலறினாய்?
எ-என்னால் எதையுமே பார்க்க முடியவில்லை!
எ-எப் படி திடீரென்று! நோ!
நான் குருடாகிப் போனேன், மர்காட்
இதுதான் ஊடு சூன்யத்தின் தலைமையகம் போலும்- இன்னும் முன்னேறிச் சென்று ஆராய்வதில் தப்பில்லை.
ஹே...!


ஆட்டத்தில் நான்தான் வென்றேன் ! முகமூடியை அகற்றி நீ யார் என்று
அதை அனுமதிக்க மாட்டேன்!
ஓரஸி... அமைதியாக உட்கார் டாக்டரை வரவழைப்போம்..! விபரீதமாக ஏதும் நடந்து விடாது- நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்வோம்!


பயங்கரம் .. படுபயங்கரம்- நான் எப்படி அமைதியாக இருக்க முடியும்!
ஊசி- இதோ டாக்டரை வரச் சொல்கிறேன்!
நீ செய்கிற காரியம் சரியல்லமிஸ் மர்காட்?
உன் சகோதரி ஊடு சூன்யத்தின் பிடியில் இருக்கிறுள். அவள் நிரந்தரமாக பார்வையை இழந்து விடுவதை நீ விரும்பமாட்டாய் என்று நம்புகிறேன்.
யா– யார்? எங்கேஇருந்து வருகிறது...குரல்?
அந்த திரையின் பின்னுல் ..
ஊஸிகுணமடையவேண்டுமானுல் ஐந்து மில்லியன்கள் எங்களுக்கு வந்துசேரவேண்டும்... விபரம் பின்னுல் வரும்.போலீஸில் புகார் செய்யமுயன்ருல் ஊஸி நிரந்தரமாக பார்வையை இழந்துவிடுவாள் ... ஜாக்கிரதை!
!?


யாரையும் காணோமே!
யார் பேசியது?
நடப்பது எதையுமே நம்பமுடியவில்லை!
மர்காட்- எனக்கு பயமாக உள்ளது!
அங்கே-
பின்னுலிருந்து தாக்கிவிட்டான் .. பேடிப்பயல்! என்னை ஏன் அவர்களுடைய இரகசிய மறைவிடத்திற்கு இழுத்து வந்தார்களோ?
என்னிடமிருந்து எதையுமே அவர்கள் மறைக்க விரும்பவில்லை! பொம்மை .. ஒவ்வொரு கண்ணிலும் ஊசி செருகப் பட்டு.... 'லூஸி' என்ற பெயருடன்!



்த ஜூயி எனும் பெண்ணைக் கண்டுபிடித்து ...சித்தாக வேண்டும்- ஏற்கனவேஅவளுக்கு என்ன ஆகியிருக்கிறதோ தெரியவில்லை!
எதிர்பார்த்தேன்!- பாதை அடைபட்டுக் கிடக்கிறது! நான்வெளியேறிச்செல்வதை இங்கிருப்போர் விரும்பமாட்டார்கள்தான்!
ஹ்ம்ம்- வேறு வழி ஏதாவது இருக்க வேண்டுமே!
ஹே ! கம்பளத்தின் கீழே மண்ணே சமீபத்தில் அகற்றியிருப்ப தாகதோன்றுகிறதே!
புதிர்தான்!


ஏ என்ன — இது?
லெபோஸ்! திட்ட இயக்குநர்! இனி யாருடைய குடியையும் கெடுக்க மாட்டான்! தன் சொந்த குடியிருப்பு பகுதி மண்ணிலே புதையுண்டு கிடக்கும் பரிதாபம்! இதுபூலோக சுவர்க்கமல்ல நரகம்!
நெற்றிப் பொட்டில் ஒரு ஊசி... ஊடு என்றொரு முத்திரை! கொஞ்சம்ஏமாந்தால் எனக்கும் இவனருகே இடம் ஒதுக்கி விடுவார்கள்!
இனியும் இங்கே தாமதித்தால் பித்துப் பிடித்துவிடும் துளை ஒன்றிருந்தால் இரண்டு வாயில்கள் நிச்சயமாக இருப்பதுண்டு! மாற்றுப் பாதையை-


ஹோ...!
பெருச்சாளி- அது ஒன்று தான் இப்போதைக்கு குறைச்சல்!
இந்தப் பக்கமாகத்தான் ஓடியது...
காற்று உள்வாங்கி வருகிறது! அத்தோடு பெட்ரோல் நாற்றம்! அதாவது, இது ஒரு...


சதி வலை...!
டமால்!
தருணத்தில் சுதாரித்துக் கொண்டதால் பிழைத்தேன்..
சே., படுபயங்கரமான அனுபவம்! ஆனால், தீமையிலும் ஒரு நன்மை. வெடி விபத்தினால் அடைப்பு நீங்கி பாதை உருவாகி விட்டது!



அப்பாடா வெளிக்காற்றை சுவாசிக்க எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது! இனி ஹாலி டெமாணெட் எங்கே இருக்கிறன் என்று தேடிச் செல்லவேண்டும்!
பக்கத்து கிராமத்தில் ஓரளவு விபரம் கிடைத்தது —
ரொம்பவும்தான் அகோரமாககாட்சியளிக்கிறேனே.. பார்க்கிறவர்கள் மிரள்கிறுர்கள்!
அவன் குறிப்பிட்ட பண்ணை..அதோ தெரிகிறது. இரு சகோதரிகள் மட்டுமே வாழ்கிறர்களாம்.. எங்கும் ஒரே செல்வச்செழிப்பாக கண்ணில்படுகிறது


சுடாதே..! நிறுத்து!
யார் நீ!
கைகளை உயர்த்தியே வைத்திரு!
ஜானி— ரிப்போர்ட்டர்
மன்னிக்க வேண்டும்.. உங்களுடைய சகோதரி ஓஸிக்கு ஏதாவது பிரச்னையா?
நீ..நீ – உனக்கு எப்படித் தெரியும்?
தான் கண்டதை சுருக்கமாக எடுத்துரைத்தார் ஜானி..
ஓஸி- கேட்டாயா? பணயத்தொகையை நாம் கொடுத்து விட்டால் மார்க்குக்கு சுகமானது போல் உனக்கும் பார்வை திரும்பி விடும்!


இந்த சூனியம், மாந்த்ரீகம் என்பதெல்லாம் சுத்தபேத்தல்! ஏதாவது களிம்பை உபயோகித்து நாடகமாடுகிறுர்கள். அல்லது —
ஓ..யாரோ வெளியேறி ஓடுகிறுர்கள்!
அதெப்படி சாத்தியம்? லூஸி வெளியேபோகவே இல்லையே?
இருங்கள் நான்போய் பார்த்து வருகிறேன் ..
ஹே என்ன இது?
நாளை மாலை நீயும்
பொந்தில் வைக்க
வேண்டும். போலீஸ்
விடுவாள்.
சண்டாளர்கள்...! பணத்திற்கு ஏற்பாடு செய்து தொலைக்கிறேன் — வேறுவழி!
திரும்பவும் வலியுறுத்திச் சொல்கிறேன். இது ஒரு ஏமாற்றுவேலை பித்தலாட்டம்!
ஒருவேளை நிஜமாகவே இருந்து விட்டால்...! ஆபத்தோடு விளையாட எனக்கு தைரியமில்லை!
அதுசரி...! நாளை பணயத்தொகையை நானும் லூஸியுமாக எடுத்துச் செல்கிறோம் — நீங்கள் சம்மதித்தால்!


லெபோஸின் பிணம் காணப்பட்டது குறித்து ஜானி போலீஸுக்கு தகவல் தெரிவித்ததையடுத்து 'பூலோக சுவர்க்கம்' பகுதியில் ஏகப்பட்ட அமளி....கமிஷனர் போர்டனின் தலைமையில் விசாரணை நடந்து கொண்டிருந்தது
யெஸ்..கமிஷனர்
உன் மேதைத்தனமான உள்ளுணர்வின் மற்றுமொரு சாதனை இது... இல்லையா ஜானி? இந்த குழாய் பாதையை நீ கண்டுபிடித்து குகையினுள் நுழைந்து சரியாக குறிப்பிட்ட இடத்தில் மணலை அகற்றி
உன் கூற்றை அப்படியே நம்ப நானென்றும் அடிமுட்டாளில்லை, ஜானி!
என்ன.. கமிஷனர் ஸார்... நீங்கள் இப்படி —
நான் என்ன மாங்காய் மடையன் என்று நினைத்தாயா?
மார்க்கின் அப்பாவிடமும், மர்காட்டுக்கும் கொடுத்த வாக்குறுதி. நோ...ஊடு சூன்யத்தைப்பற்றி இவரிடம் சொல்லக்கூடாது உடனே, அதிகாரபூர்வமான புலன் விசாரணைக்கு ஆணையிட்டு விடுவார் .. அது நல்லதல்ல!


சரி விடு - நான் உன்னை வற்புறுத்தப்போவதில்லை! லெபோஸுக்கு எப்படிமரணம்சம்பவித்திருக்கிறது தெரியுமா? நெற்றிப் பொட்டில் ஊசியை செருகியிருக்கிறார்கள்
கொடூரம்!
இந்த கிராமத்து ஜனங்கள் அனைவரும் சந்தேகத்திற்குரியவர்கள்.. உதாரணமாக- மார்க்வின் குடும்பத்தினர். அவர்கள் மகன் ஸில்வெஸ்டர் முப்பத்தாறு வகையான துறைகளில் ஒன்றன்பின் ஒன்றாக ஆர்வம் காட்டி அலுத்துப்போனவன்... அவர்கள் குடும்பமே நொடித்துப்போவதற்கு லெபோஸின் மோசடிதான் காரணம் என்று சொல்கிறார்கள்!
அது சரி, அந்த டெமாளெட் சகோதரிகளைப்பற்றி உனக்கென்ன அக்கறை?
ம் .வந்து..குறிப்பிடும்படியாக ஏதுமில்லை! இயற்கை சூழல் பற்றி ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறேன். அது சம்பந்தமாக—
நன்றாக கயிறு திரிக்கிறாய் ஜானி. அதைநிஜம் போல சொல்லும் உன் திறமையை பாராட்டுகிறேன்!
ஹே!
அன்று மாலை—
பணம் ரெடி! ஊஸியோடு நீங்கள் செல்ல விரும்புகிறீர்கள்—இல்லையா?


மாற்றம் ஏதுமில்லே! சொன்ன வாக்கை காப்பாற்றுவார்கள் என்று நம்புகிறேன். இல்லேயேல், இப்படி அவஸ்தை படுவதைவிட தற்கொலே செய்துகொண்டு விடுவேன்..
முட்டாள்தனமாக உளராதே! லெபோஸை ஒருவழியாக கண்டுபிடித்துவிட்டார்கள் போலிருக்கிறது - அவன் கொலேயுண்டு புதைக்கப்பட்டிருந்த செய்தியை நீங்கள் ஏன் நேற்றே எங்களிடம் சொல்லவில்லே!
முதல் தகவல் போலீஸுக்கு போய்ச் சேரவேண்டும் என்பதால்!
ஆனாலும் நீங்கள் ரொம்ப அழுத்தமான ஆசாமிதான்
தொழில்முறை அவசியம் அப்படி!
இந்த ஊடுசூன்யத்தை பிறர் மீதுஏவும் கிராதகர்களுக்கும் லெபோஸின் மரணத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதுபோல் தோன்றுகிறதே!
இருக்கலாம்..லூஸி-புறப்படு..நேரமாகிறது!
இந்தாருங்கள் பணம் கஷ்டமான நேரம் இது..! ரொம்ப சிரமம்..!விவேகமாக நடந்து கொள்ளுங்கள் ஜானி!
என்னே பூரணமாக நம்பலாம்!


ஜானி, எனக்கு கலக்கமாக இருக்கிறது!
பயப்படாதே.. விபரீதமாக ஏதும நடந்துவிடாது. முன்னல் செல்.. நான் நெருக்கமாக பின் தொடர்ந்து வருகிறேன்
மார்க் விஷயத்திலும் இப்படித் தான் நடந்தது?
ஊடு ஆசாமிகள் அந்த குடியிருப்பை அல்லதுபக்கத்து கிராமத்தைசேர்ந்த ஆசாமிகளாக இருக்கக்கூடும்... முக மூடியை மாட்டிக்கொண்டு நடமாடு கிறார்கள்!
நான் நேராக செல்லலாமா!
யெஸ்...பயப்பட ஏதுமில்லை!


எதிரே ஏதாவது ஆபத்து வந்தால் நான் சமிக்ஞை செய்கிறேன்...
ஆவ்!
ஏ..ஏ..ன்ன... நடந்தது?
நல்லவேளை அதள பாதாளத்தில் பாயவிருந்தாய்!
புரிகிறது...வேண்டுமென்றே என்னை சோதித்திருக்கிறாய்... என்னை நீ நம்பவில்லை— அப்படித்தானே?
ஆமாம்...ஒப்புக்கொள்கிறேன், லாஸி! பள்ளத்தில் நான் விழுந்திருந்


ஆமாம் . ஒப்புக்கொள்கிறேன், லூஸி! என்னால் இன்னமும் இந்த சூனியம், மாந்த்ரீகம் விவகாரங்களை நம்பமுடிய வில்லை.. அதனால்தான்! ஆனால் — இப்போது..உன்னை நம்புகிறேன்!
பள்ளத்தினுள் நான் விழுந்திருந் தால் என்ன ஆகியிருக்கும்— யோசித்துப்பார்... நீ என்ன யோக்கியமான பத்திரிக்கையாளனா அல்லது நம்பிக்கைத் துரோகியா?
கோபப்படாதே . லூஸி
வா வேகமாக போகலாம்! கெடு நேரம் நெருங்கிவிட்டது!
வெகு தொலைவில் —
ஏன் நின்றுவிட்டாய்?
உஷ்ஷ்!
அதோ...,நிற்கிறார்கள்



யர்கள் போலிருக்கிறார்கள் !
இளைஞன்! இந்தப்பக்கத்து ஆட்களாகத்தானிருக்கும்... அவர்களுடைய கவனத்தை ஈர்த்துவிடலாகாது நம்மை பார்த்தால் காதலர்கள் போலும் என்றெண்ணி பேசாமல் சென்றுவிடுவார்கள்.....
நீங்கள் சொல்வதை வைத்து, அவர்கள் ஆர்னார்டும் அவருடைய மகன் ரீனுடும் என்று நினைக்கிறேன்... இருவருமே இன்ஜினீயர்கள்!
கடந்து போய்விட்ட கள்... இனி நாம் நம் வழி ல போகலாம் வா
நாடகமா வதில் சமர்த்த நீ!
உஷ்! அதோ 'அவர்களே' தான்
கடவுளே!
பணம்?


இதோ இருக்கிறது! ஆனல் லூஸிக்கு பார்வை திரும்பி விடும் என்று நாங்கள் நம்ப என்ன ஆதாரம் இருக்கிறது?
கேள்வி கேட்காதே! மர்காட்தானே உடன் வந்திருக்க வேண்டும். நீ ஏன் வந்தாய்? உத்தரவை மீறியகுற்றத்திற்குஊடுசார்பில்நான் தண்டனே வழங்கியாக வேண்டும்!
இனிமேலாவது நீ உன் வழியைப்பார்த்துக் கொண்டுபோ என்று அறிவுரைகூறுகிறேன். வந்ததுதான்வந்தாய் இரண்டு அற்புதங்களே கண்டு களித்துவிட்டுப்போ முதலில்..
லூஸி இன்னும் சற்று நேரத்தில் பார்வையை திரும்பிப்பெறப் போகிருள்— இதோ...!
அடுத்து... நான் வேறொரு சூனிய வேலைக்கு தொடக்கம்தரப்போகிறேன்!
ஹா..ஹா..!


அருகில்-
அங்கே ஓர் இளைஞனோடு நாம் பார்த்த யுவதி லூஸிதானே!
ஆமாம்! அவளுடைய கண்டிப்புக்கார அக்காவின் காதுக்கு இந்த காதல் விஷயம் எட்டினால்
ஹா
ஹாஆஆ !
ஹா... இதோ— இது ரீனட்.. உனக்கு!
ரீனட்? என்ன ஆயிற்று உனக்கு - திடீரென்று?
ஹாஆஆ!



444



புதியதொரு ஊடு சூன்ய சர்பவம் தொடங்கிவிட்டது. நாங்கள் விடை பெறுகிறோம்.. பின்தொடரமுயற்சிக் காதே.. மீறினல், ஓ்ரஸி நிரந்தர மாக குருடாக்ப்போவாள்..
பிறகு வந்து உங்களை சந்திக்கிறேன்!
ரீஜட்.. என்ன ஆயிற்று உனக்கு?
எ..எனக்கு எதுவுமே கேட்கவில்லே. நீங்கள் பேசுவதைப் பார்க்கிறேன். நான் செவிடாகிப்போய்விட்டேன்
வா.. உடனேபோய் ஒரு டாக்டரை பார்ப்போம்!
ஓ..கதவு திறந்து கிடக்கிறதே- எப்படி?
டாக்டரை அழைக்காதே! நாளேக்குள் ஐந்து மில்லியன்களே தயார் செய்.. இல்லேயேல் ரீஜட் நிரந்தரமாக செவிடாகிப் போவான்— ஜாக்கிரதை!


445



அங்கே-கானகத்தில்-
ஊடு சூன்யத்தின் பாதிப்புக்கு இம் முறை உள்ளான நபர் யாராக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?
பொம்மை மீது ரீனுட் என்று எழுதப்பட்டிருந்தது!
இதோ.. லூஸியை பத்திரமாக திரும்ப கொண்டுவந்து ஒப்படைத்து விட்டேன். லூஸியின் பிரச்னை ஓய்ந்தது. நான் விடைபெறுகிறேன். வேறொரு இடத்தில் அவசர வேலை இருக்கிறது எனக்கு......
சிறிது நேரம் கழித்து —
மிஸ்டர் ஆர்னூர்டு? நான் உங்களுடைய மகனிடம் அவசரமாகபேசவேண்டும்
இல்லை... அவன் சுகவீனமாகஇருக்கிறுன், என்ன விஷயம்? யார் நீ..?
முதலில் நான் உள்ளேவந்து கொள்கிறேன்-நம்மையாரே னும் கண்காணித்துக் கொண்டிருக்கக்கூடும்..
சரி.. வா — உள்ளே?
ஓ...ஊடு முகமூடி! உங்களுடைய
ஓ.. அது எப்படி
நான் ஒரு பத்திரிக்கை ரிப்போர்ட்டர்


ஓ...ஊடு முகமூடி! உங்களுடைய மகன்ஏற்கனவே ஊடுசூனயத்தின் பாதிப்புக்குள்ளாகி விட்டானா..?
ஓ.. அது எப்படி உனக்குத் தெரியும்?
பொறுங்கள். இந்த ஊடு முக மூடியை எங்கே கண்டெடுத்தீர்கள்?
இங்கேதான் உள்ளே நுழைந்தபோது.. நான் கதவை திறந்ததும் 'அவன்' பேசத் தொடங்கினான்!
வலுவான கூட்டம்தான் போலும்! நவீன யுக்திகளையெல்லாம் கையாளுகின்றனர்- இந்த முகமூடியை சோதிக்க வேண்டியிருக்கிறது - முதலில் உங்கள் மகனைப்போய் பார்ப்போம்!
நான் ஒரு பத்திரிக்கை ரிப்போர்ட்டர் பெயர்..ஜானி! உங்களுடைய மகனுக்கு நேர்ந்ததுபோன்ற அசம்பாவிதங்கள் ஒரு தொடராக நிகழ்ந்து வருகின்றன. அதை ஆராய்ந்து வருகிறேன்...ரீனட் கேட்கும் சக்தியை இழந்துவிட்டானே
ஆமாம்! ரொம்பவும் அதிர்ந்து போயிருக்கிறான். அனைத்தையும் சற்று விபரமாகச் சொல்!
ரீனட்!
அதோ..! அதோ!



வந்து அங்கே உட்கார்
...ப்ளீஸ்!
யாரையும் காணோம்....நான்
எதிர்பார்த்ததுதான்!
எழுத்துமூலமாக நான் உன்னைச்
சில கேள்விகள் கேட்க விரும்பு
கிறேன்!


ஸாரி. என்னை மன்னித்து விடு!
டமால்!
போலீஸையோ, டாக்டரையோ அழைக்கக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள்...
இரண்டாவது நபரான லூஸி-களுக்கும் விரைவிலேயே திரும்பிவிடும்- இரவில் அவர்கள் யாரும் அறியாவண்ணம் ஒருவகை களிம்பை விழிகளில் தடவி விட்டிருக்கலாம் என்றொரு சந்தேகம் எனக்கு.
இருக்கலாம்..! பணத்தை கொடுப்பதா அல்லது போலீஸுக்கு போவதா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்...உங்களை நான் பிறகுவந்து சந்திக்கிறேன்!


கதவை திறந்தவுடன் இயக்கம் பெறும் வகையில் அமைக்கபட்டிருந்த ஒரு டிரான்ஸிஸ்டர் மூலமாய் ஊடு முகமூடியை 'பேச'' வைத்திருக்கலாம்!
ஜுஸி வீட்டிலும் இதே போல் திரை மறைவில் டிரான்ஸிஸ்டர் மறைத்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம்.
வீட்டைசுற்றி ஒரு நோட்டம் விட்டுப் பார்ப்போம்.


வித்தியாசமான காலடி
தடங்கள்...
சரேல்!
சதக்!
நான் முந்திவிட்டேன்.
இல்லையேல் அவன் இட
த்தை நான் பிடித்துக்
கொண்டிருப்பேன்!


ஓ, நீதான் 'ஊடு'வா?
இல்லே இல்லே-அனைத்தையும் நான் விபரமாக கூறுகிறேன்.
நீ கேட்கும் சக்தியை இழந்துவிட்டாய் என்பது பொய்தானே?
எ-எப்படி கண்டுபிடித்தீர்கள்? நீங்கள் புத்தகத்தை எறிந்தபோதும் அலட்டிக் கொள்ளவேயில்லையே!
தம்பி! காது கேட்காது என்றாலும், புத்தகம் திடீரென்று விழுந்ததால் ஏற்பட வேண்டிய சிறு அதிர்வைகூட நீ காட்டாததால் நாடகமாடுகிறாய் என்று தெரிந்தது.
போலீஸுக்கு தெரிவிக்க போகிறீர்களா?
இல்லே ஒரு சிறு கூட்டம் நடத்த போகிறோம். நட முன்னால்!
பின், மார்க்கின் வீட்டில்—
உன் செய்கையை நம்பவே முடியலே மார்க்! பெற்றோரிடமிருந்து பணத்தை திருடுவது. சே!
அந்த பணத்தை விரயம் செய்தது மகாமோசம்


ஓாஸி நீ இப்படி செய்வாயென்று நான் நினைக்கவேயில்லை. பணம் சம்பாதிக்க நான் படும்பாடு-
இப்பணம் நம் பெற்றோர் விட்டுச் சென்றதுதானே. ஏன்தான் பணம் பணமென்று அலைகிறாயோ?
பன்னத்தை நோக்கி உன்னை நான் அனுப்பியபோது திறமையான நடிகை போல என்னமாக நாடகமாடினாய்
சரியாகச்சொன்னீர்கள். நானும் மற்றவர்களும் ஒரு நாடககுழு அமைக்க தீர்மானித்தோம். அதற்கு பணம் கேட்டபோது மறுக்கபட்டது. எனவே இப்படி நாடகமாடினேம்.
இன்னும் நம்பமுடியலே. ரீனட் உன் தாய் இறந்த பின் உன்னை என் நண்பனுக்கே நடத்தினேன் இல்லையா? இருந்தும் நீ...
சரி சரி, பணத்தை சீக்கிரம் திருப்பிக்கொண்டு வந்து கொடுங்கள் இல்லையேல்...
ஒரு நிமிடம் பொறுங்கள்-
அதுசரி. உங்கள் மூவரில் லெபோஸை கொன்றது யார்?

453


ஆமாம்,நெற்றியில் அவனுக ஊசியை செருகிக் கொள்ள முடியாதல்லவா? கொலே குற்றம்,யோசித்து பாருங்கள்.
ஆனல் அதுபற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது!
ஒருவர் குருடாக,செவிடாக நாடகமாடியபோது,மற்றவர்கள் ஊடு சூனிய மாந்த்ரீகனுகவும்,அவன் சகாக்களாகவும் வேஷம் போட்டார்கள் இல்லையா?
நீங்கள் அனேவரும் திறமையான நடிகர்கள்தான்.ஆனல் அது கடைசி வரை கை கொடுக்காது.லெபோஸை ப்ளாக் மெயில் செய்ய முயன்றிருக்கிறீர்கள்,அது பலிக்காததால் அவனே கொன்றுவிட்டீர்கள்.
இல்லே!சத்தியமாக அதில் எங்கள் பங்கு எதுவுமில்லே
பணத்தை நாங்கள் திருப்பி தர முடியாது.ஏனெனில் இப்போது அது எங்களிடமில்லே
ஆமாம்,நாங்கள் பங்கு போட்டுவிட்டோம்.ஊடு சூனிய வேடதாரிகள் நாங்களல்ல
ஊஹூம்,பின் அவர்கள் யார்?
அதைப்பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது இந்த ஊடு விவகாரத்தில்-நாங்கள்-நாங்கள் "டம்மிகள்" தான்! எங்களே ஆட்டுவிப்பது, திட்டமிடுவது எல்லாமே அந்த மர்ம ஆசாமிகள் தான்!


பணத்தை தேடியலேந்தது உண்மைதான். எந்த் யுக்தியும் தோன்றவில்லே. கட்டுமான வேலே நடந்து வந்த ஒரு கட்டிடத்தில் அடிக்கடி கூடி விவாதித் தோம். ஒரு மாலேயில்...
அசையாதீர்கள்! பணம் நிறைய் கிடைக்கும் உங்களுக்கு, நீங்கள் புத்திசாலித்னமாக நடந்து கொண்டீர்களானல்!
வழிமுறையை நாங்கள் சொல்கிருேம். ஆனல் நீங்கள் மறுத்தால் விளேவு விபரீதமாக இருக்கும்.
'சாவதே மேல்' என்று நீங்கள் நினேக்கும்வரை உங்களே அணு அணுவாய் சித்ரவதை செய்வோம்!
நாங்கள் உங்கள் நண்பர்களாகவே இருக்க வேண்டுமானல், லெபோஸை நீங்கள் கொன்றதாக எழுதபட்டுள்ள இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நீங்கள் மூவரும் கையெழுத்திடவேண்டும்.



நாங்கள் மிரண்டுவிட்டோம். மறு பேச்சின்றி வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டோம்.
ஆமாம், எங்கள் 'குடுமி' இப்போது அவன் கையில்
நாங்கள் அடுத்து செய்ய வேண்டியதை எடுத்துரைத்தான். முதலில் மார்க்-ஏனெனில் அவன் அப்பாவிடம் நிறைய பணம் இருந்தது.
நான் பூலோக-சுவர்க்கத்தைப் பற்றி எழுத வந்திருக்கும் போது, மார்க் குருடனைப் போல் நடித்தானே-அது எனக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நாடகமா-அல்லது தற்செயலான விபத்தா?
கட்டிட இடிமானங்களுக்கிடையே உள்ள அவர்களது இருப்பிடத்திலிருந்து உங்கள் வருகையை நோட்டமிட்டனர்- அதன்பின்னரே என்னை அனுப்பினர்கள்-
மார்க் பணத்தை கிளப்பிக்கொண்டு வந்தது நீதானில்லையா?
ஆமாம், எங்களுக்கு அதில் பங்கு தருவதாக சொன்னன்.
மறுத்தோம். எங்களோடு ஒத்துப் போக விரும்பினன். இரண்டு தேட்டையிலும் கால் பங்கை எங்களுக்கு கொடுத்தான்.
கால் பங்கா?
மிஞ்சியிருக்கும் பணம் இப்போ எங்கிருக்கிறது?
நாங்கள் ரகசியமாக சந்தித்து வந்த கட்டிடத்தில் ஓர் மறைவிடத்தில்.


உங்கள் பாஸ் யார், அவன் சகாக்கள் யாரென்று நிஜமாகவே உங்களுக்கு தெரியாதா?
தெரியாது. யூகிக்க முயன்றும், முடியலே
அந்த ஊடு உங்கள் மூளையில் உதித்த ஒரு கற்பனை என்றுசொல்கிறேன் நான்
இல்லே, அப்படியொரு கூட்டம் நிச்சயமாக உள்ளது. அவர்களின் லட்சியதிற்கு நிறைய பணம் தேவை போலும்.
அவர்கள் சொன்னதை கேட்கும் சீடர்களும் இருந்திருக்கிறார்கள்
ஆமாம், கேட்ட பணத்தை எப்படியாவது கொடுக்கும் கும்பல்.
போய் ஒளித்துவைத்திருக்கும் பணத்தை எடுத்து வாருங்கள்.
கட்டிட இடிமானங்களில் பணத்தை ஒளித்து வைத்திருந்த இடத்திற்குச் சென்றனர்.
அது, இங்கேதான் இந்த கல்லின் பின்னால், ஓ!
ஹேய்- பணத்தைக் காணோம்! இ; இந்த சீட்டு தான் உள்ளது!
வாக்கை மீறி விட்டீர்கள்.... உங்களுக்கு எதுவுமே கிடையாது. ஊடுவுக்கு எதிரான காரியத்தைச் செய்த குற்றத்திற்கு தண்டனை இல்லாமல் போனதே என்று சந்தோஷப் படுங்கள்!
- ஊடு


மறுநாள் கமிஷனர் அலுவலகத்தில்
முன்னமே நீ எனக்கு தெரிவித்திருகலாம்
வாக்களித்திருந்தேன் அதோடு பெற்ரோர், பிள்ளைகளிடையே திருட்டாக கருதபடாது. லெபோஸ் கொலைபற்றி தான் புரியவில்லை!
ஊடு சூன்யம் பற்றி என்ன நினைப்பது என்றே தெரியவில்லை!
யாரைபோய் விசாரிப்பது!எங்கே என்று தேடுவது?
பாதிக்கப்பட்டவர்களோடு எனக்கு நட்பேற்பட்டிருக்கு.மற்றவர்களுடன் இதை விவாதிக்க விரும்புகிறேன்.எனக்கு அவகாசம் தேவை.
சரி,ஆனல் நெருப்போடு விளையாடுகிருயென்பதை நினைவில் வைத்திரு.
எனக்கு மிகவும் பிடித்த விளையாட்டாயிற்றே அது.
விடுகள் கட்டுவதற்கு முன்பணம் வாங்கிக் கொண்டு மோசடி செய்த லெபோஸால் மிகவும் பாதிக்கப்பட்ட மார்க்வின் குடும்பத்தைச் சந்திக்கச் சென்ருர் ஜானி-
ஹலோ-ரிப்போர்டர் ஜானி ஸாரா? வாருங்கள் உள்ளே! அன்று இரவு போல் அல்லாமல் பார்க்க சகிக்கும்படியாக உள்ளது உங்கள் தோற்றம்!
ஹா! ஹா! அன்று வழி சொல்லியதற்கு தேங்க்ஸ்!
ஸில்வெஸ்டர் யாரது?


பத்திரிக்கையா, ளர்கள் மீதுஉங் களுக்குவெருப்பு ஏதுமில்லேயே.... மிஸஸ் மார்க்வின்?
உள்ளே வாருங்கள். வீடு அரைகுறை யாக நிற்கிறது.எல் லாம் லெபோஸின் மோசடியால் வந்தது
ஓ,மம்மி-கொஞ்சம் சும் மா இருக்கிருயா?
என்ன விஷயமா வந்தீர்கள்? லெ போஸ் செத்ததற்கு நாங்கள் வரு ந்தவேயில்லே. அவனே கொன்றவ னுக்கு பூலோக சுவர்கத்தின் வாசலில் சிலே வைக்கணும்.
எங்களுக்கு அதிர்ஷ்டம் போ தாது. ஸில்வெஸ்டர் பல துறைகளில் நிபுணத்வம் பெற்றும் பயனில்லே. இவன் அப்பா அகால மரணமடை ந்ததால் எல்லாம் கெட்டன.
மம்மி,இவரிடம் ஏன் இதையெல்லாம் கூறுகிருய்?
ஸார், மம்மி சொன்னதுபோல் லெபோ ஸின் மரணத்தில் சந்தோஷமோ வருத்தமோ கிடையாது.
அது போகட்டும். இங்கே ஊடூ சூன்யம் நடப்பது பற்றி ஏதாவது தெரியுமா?
ஊடூ சூன்யமா? அப்படியென்ருல்!
ம்ம் ஒருவகை மந்திர ஜாலம்
ஹே நோ-நாங்கள் கேள்விபட்டதேயில்லே ஆனுல் இவ்விஷயங்களில் ஆர்வம் காட் டும் கிறுக்கு மனிதர் இருக்கிருர்!
மிஸ்டர் வஜ்ஜாராவை குறிப் பிடுகிருயா மம்மி?


சிறிது நேரம் கழித்து—
நன்றி மிஸஸ் மார்க்வின். மிஸ்டர் வஜ்ஜாராவின் முகவரி தெரியுமா?
அதோ அவரே வருகிறார்! இந்த வயதிலும் வழக்கமாக தினசரி சைக்கிளில் ஒரு சுற்று போகிறார்.
மீண்டும் நன்றி மிஸஸ் மார்க்வின்.
ஹலோ, மிஸ்டர் வஜ்ஜாரா, உங்களோடு பேசவேண்டும். நானொரு பத்திரிக்கை ரிப்போர்ட்டர்.
ரிப்போர்ட்டர்கள் என்றாலே எனக்கு பிடிப்பதில்லே.
ஆண்டில்லில் நீங்கள் வாழ்ந்து வந்ததாகக் கேள்விப் பட்டேன்! ஊடு சூன்யம் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்குமே?
ஹோ?


?
டோங்!
ஸாரி ஸார்.காயமேதும் படவில்லையே?
ஆண்டில்லஸ் பற்றியோ அங்கு நிலவும் பழக்கவழக்கங்கள்பற்றியோ என்னிடம் பேசாதே அதை மறக்கவே இங்குவந்தேன்.
ஊடு முகமூடியை ஒரு ஞாபகார்த்தமாக கொண்டுவந்தீர்களா?
அனைத்தையும் எரித்துவிட்டேன். ஊடு சூன்யம் பற்றி பேச சொன்னார்கள். முழு விவரத்தையும் அறிய ஆர்வம் காட்டினார்கள்.
யார்?யாரவர்கள்?
செத்துப் போன லெபோஸும், அவனது உறவினர்களும் தான்! நிறைய கேள்வி கேட்டார்கள்! ஊடு சூன்யத்தால் தனக்கு ஏதோ ஏற்படப் போகிறதென்று லெபோஸ் பயந்து கொண்டிருந்தான்! ஆ-ஆனால் நடந்ததற்கு நான் காரணமல்ல!


ஆன்டில்ஸிலிருந்து நான் கொண்டுவந்த பணத்தை இங்கே முதலீடு செய்தேன்! "பூலோக சொர்க்கத்தில்" நானும் மர்காட்டும் பங்குதாரர்கள்! லெபோஸ் எங்கள் பணத்தையெல்லாம் மோசடி செய்து விட்டதை அறிந்தவுடன் அவன் மீது சூனியத்தை ஏவி விட்டேன்!
இப்போ அதை எண்ணி வருந்துகிறீர்களாக்கும்..?
இருக்கலாம். என் மன அமைதியை கெடுக்காதே-குட்பை,
விநோதமான மனிதர்! ம்ம்-பூலோக சொர்க்கத்தின் வாசிகளைப் பற்றி கொஞ்சம் கொஞ்சமாய் புரிகிறது! இங்கு நடக்கும் அத்தனைக்கும் கருணகர்த்தா செத்துப் போன லெபோஸ்தான்!
பணம் பறிக்க 'ஊடு' ப்ளாக் மெயில் செய்திருக்கக்கூடும். அவனை கொன்ற பிறகு மற்ற மோசடிகளில் இறங்கியிருக்கவேண்டும்
ம்...பரவாயில்லே, இனி—


ஹே!...ஹா ஆ ஆ
டமார்!
இருட்டு,ஒரே கும்மிருட்டு
முடிவே இல்லாமல்—
பின்னர்-சுயவுணர்வு திரும்பியதும்,விழிகளை
திறந்த ஜானிக்கு மரண பயத்தால் முதுகுத்
தண்டு ஜில்லிட்டுப் போனது—
ஆ!ஐயோ என்னல் எதை
யுமே பார்க்க முடியலே!
குருடாகி விட்டேன்!
29

464


பார்வையை நிரந்தரமாக
இழந்துவிட்டாயா இல்லையா?
-யாருக்கு தெரியும்?
ஜாக்கிரதை!
கண்ணாடியை தொடாதே. கண்ணாடியை எடுத்தால் அக்கணமே உன் கண்களை குத்தி கிழிக்கும்படி ஒரு பொறி அதில் இருக்கிறது.
நீ ஒரு கிறுக்கன்!


இருக்கலாம், ஆனும் நான் நீண்ட காலம் வாழ்வேன் என்பது நிச்சயம். உன் விஷயத்தில் அந்த நிச்சயம் கிடையாது.
பிதற்றுகிறாய்!
தைரியமிருந்தால் அந்த கண்ணாடியை அகற்றி பாரேன், என்ன நடக்குதென்று
நீ ஒரு கிராதகன்

465


ஊடு என்பது ஒரு மாந்த்ரீக வழிபாட்டு முறை! இன்றைய சமுதாயம் ஊடுவை நம்ப மறுக்கிறது! அந்த அறிவிலி-களுக்குப் பாடம் புகட்டவே நாங்கள் செயல்படுகிறோம்! வீணாக எங்கள் விஷயத்தில் மூக்கை நுழைத்த நீ அழியப் போகிறாய்!
ஊடு பற்றி விசாரணையா நடத்துகிறாய்? இங்கேயே அடைந்து கிடந்து செத்தொழி!
உனக்கு துணைக்கு ஒரு நபரையும் விட்டுச் செல்கிறேன். இதோ—
யார்...யார் நீ?
மார்க்...!
கிளிங்!


ஜானி என்ன இது கொடுமை
எனக்கு எதுவுமே தெரியாது. இந்த கண்ணாடியை கழற்றினால் விபரீத விளைவு ஏற்படுமென்று சொன்னான். ஒருவேளை நான் குருடாகிவிடலாம்!
நீ எப்படி?
என்னை பிடித்துக் கொண்டு வந்து அடைத்து விட்டார்கள். ரகசியத்தை உளறிவிட்டதால். என் தந்தை மீது ஊடு சூன்யத்தை ஏவி கொன்றுவிட போவதாக சொன்னார்கள்.
முதலில் இங்கிருந்து வெளியேற வேண்டும். இருவரும் முனைந்தால் நடக்கலாம். நீ எங்கிருக்கிறாய்?
உனக்கு இடபக்கத்தில். நாம் எப்படி கதவை உடைத்துகொண்டு வெளியேற முடியும்?
அவசரபடாதே. யாரேனும் கதவை திறந்துவரும்போது நம் கைவரிசையை காட்டலாம்!
நல்ல யோசனே!
பல மணி நேரம் கழிந்தபின்—
கிரீச்!
ஜாக்கிரதை- கதவை
ம், கண்ணாடியை நீ அகற்றவேயில்லேயே.
சரி அவனை எழுப்ப வேண்



ஜாக்கிரதை- கதவை திறக்கப் போகி-ருர்கள்!
ம்,கண்ணடியை நீ அகற்றவேயில்லையே-சமர்த்துதான்.......
ஏனிப்படி கத்துகிருய்?எனக்கு பார்வைதானில்லையே த்விர, காது நன்ருகதான் கேட்கிறது. மார்க் தூங்குகிருன்!
சரி அவனை எழுப்ப வேண்டும். நீ போய் சுவரோடு சேர்ந்து நில்!
எழுந்திருடா,சோம்பேறி நாயே!
சத்!
கதவின் பின்ருலிருந்த மார்க் பாய்ந்தான்-


ம்...சீக்கிரம்,இவனை நான் இறுக பிடித்துக்கொண்டு விட்டேன்!
ஹா ஆ ஆ! ஐயோ!
உப்
விழுந்து கிடக்கிறான்.கட்டி போட்டுவிட்டு வெளியேறிவிடுவோம்.ம் சீக்கிரம்.
அப்பாடா— தப்பிவிட்டோம்
என்னை வழி நடத்திசெல்.ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால் என்னை எச்சரிக்கத் தவறாதே.
சே,என்னை கையாலாகாதவனாக முடக்கி
நில்லுங்கள்.இப்படி சொல்லாமல் கிளம்பிவிட்டால் எப்படி?


சே,என்னை கையாலாகாதவனாக முடக்கி போட்டு விட்டார்களே.பழிவாங்கும் நோக்கத்தோடு இதை செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எண்ணம் ஈடேறப் போவதில்லை.
நில்லுங்கள். இப்படி சொல்லாமல் கிளம்பிவிட்டால் எப்படி?
குருடனும், பொடியனுமாகச் சேர்ந்து கம்பி நீட்டப் பார்க்கிறீர்களா? ஹெ! ஹெ! ஹெ!
மார்க்,இப்போது மணி என்ன?
ம்...பன்னிரண்டை நெருங்கி கொண்டிருக்கிறது
அப்படியானால் எதிரி இங்கே இருக்கிறான்
என்ன—



கும்!
முன்னதாகவே திட்டமிட்டிருந்த சங்கேத பாணியில் மார்க் பதிலளித்ததால் ஜானிக்கு எதிரியை கண்டு கொள்ள முடிந்தது- மணி பன்னிரெண்டு என்ருல் எதிரி எதிரே இருக்கிருன் என்றும் 'மணி ஆறு என்ருல் பின்னே இருக்கிருன் என்றும் பொருள்படும்-
நம் யுக்தி பலித்து விட்டது! ஆசாமி அம்பேல்!
பாராட்டுகள் அப்புறம் இங்கிருந்து ஓடிடலாம் எனக்கு உதவி செய்.
கண்ணுடியை கழற்றிஞல் ஆபத்தாகிவிடாதா?
சரியான பித்தலாட்டம், ஏமாற்று வேலைஎன்றுதான் நினைக்கிறேன்!
உள்ளே விழுந்து கிடப்பவனை உனக்கு தெரியாது... இவனை?
நாம் இங்கிருந்து ஓடிவிடுவது நல்லது. என் தந்தையின் உயிருக்கு ஆபத்து வரக்கூடும்.



அதற்கு முன்னர் உன் ஆசைப்படி இவனது முகமூடியை கழற்றிப் பார்க்கிறேன்! இதோ.
யாரென்று தெரிகிறதா?
மற்றவனை போல இவனும் அந்நியன்.
ஊடு ஆசாமியின் முகமூடியைக் கழற்ருமலேயே பொய் சொனஞன் மார்க்.
நாம் எங்கே யிருக்கிருேம் இப்போது?
தெரியவில்லை. நெளிந்து வளைந்து செல்லும் குகை புதிராக இருக்கு!
சுற்றி சுற்றி வருகிருேமோ என்று தோன்றுகிறது
வெளியேறும் வழி கண்ணில் படாமலா போகும்?
இதோ வந்து விட்டோம்- நம் பிரச்சனைகளெல்லாம் தீரப் போகிறது! பாதை இதோ.
ஓகோ அப்படியா! அதிர்ஷ்டம் தான் என்று சொல்!


அதோ நிற்கிருர்கள் நிச்சய மாக தெரிகிறது.மார்க் பொய் சொல்கிருன்.ஏன்?ஏனிந்த பித்தலாட்டம்?
வேறுவழியில்லே—
பொய்!அத்தனேயும் பொய் ஏமாற்று வேலே!
சுட்டு வீழ்த்து,அவனே!


விரட்டி பிடி-அவன் அதிக தூரம் போயிருக்க முடியாது.
ஊப்...ப் !
கும்!
ஹேய்!
அவனிடம் ஆயுதம் இருக்கிறது வா-நாம் ஓடி போய்விடலாம்


அவர்கள் எங்கே?
இந்த வழியாகத்தான் ஓடினார்கள்.
வாடா ராஸ்கல் உன்னோடு கொஞ்சம் பேச வேண்டியுள்ளது! ஏன் இநத மாதிரியெல்லாம் நாடகம் ஆடுகிறாய்?
என் தந்தையை கொன்று விடப்போவதாக பயமுறுத்தினார்கள்!
பொய் பேசுவதுதான் உன் தனிக் குணமாச்சே!
வாயிலருகே உன்னை கொண்டு வந்து சேர்க்குமாறு கூறினார்கள் அதாவது என் தந்தையின் உயிர்...
எனக்கு பயம்.என்தந்தை மீது ஊடுசூன்யத்தை ஏவி விடுவார்களோ என்று...
முட்டாள்! அத்தனையும் ஏமாற்றுவேலை.
இங்கே கிடந்தவனைக் காணோமே. ஹூம் நான் எதிர்பார்த்ததுதான்!



உன் தந்தைக்கு என்னமும் ஆகாது! இந்த ஊடு கும்பலின் தலைவன் ஒரு மன நோயாளி- பித்துப் பிடித்தவன்! இது எல்லாமே அவனது ப்ளாக்-மெயில், சூழ்ச்சிதான்! என் கறுப்புக் கண்ணாடி-யும் அதே போல் தான்!
இன்று காலை என் தந்தை போன்ற பொம்மையை இங்கே பார்த்தேன். அதன் உடம்பில் ஓர் ஊசி செருகப்பட்டிருந்தது.
பின்னர்—
இதோ, வந்துவிட்டோம். உன்தந்தை நலமாக இருப்பதை நீ நேராகவே பார்த்து உறுதி செய்துவிடலாம்.
அ, அங்கே நிற்பது டாக்டர் க்ரீனின் காரல்லவா? ஏ ஏன்?
ஏதோ விபரீதம். நிச்சயமாக ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறது.
மார்க்!
மார்க் எங்கே போயிருந்தாய்? உன்னை எங்கெல்லாம்தேடுவது? உன் தந்தை இறந்துட்டாரடா.


சே என்ன கொடுமை!மார்க்கும் அவன் தாயாரும் சோகம் தாளாமல் பைத்தியம் போல் புலம்புகின்றனர்.ட்ராயர்ட் எப்படி இறந்தார் டாக்டர்?
இயற்கையான மரணம்தான்.திடீரென்று இதயம் நின்றிருக்கிறது.
அதிர்ச்சி அல்லது தீவிர உணர்ச்சிவசப்பட்டால் இப்படி நேரிடும்.
இருக்கலாம்.ஆனல் என்ன ஒரு ஒற்றுமை!
ஒற்றுமையா?
ஓ ஒன்றுமில்லே,நானுக பேசிக் கொள்கிறேன்,ஸாரி.
சே கொஞ்சம்கூட நம்பும்படி இல்லே.இது எப்படி நடந்தது?
நான் வெளியே போயிருந்தேன். அவர் மட்டும் வீட்டில் இருந்தார். திரும்பி வந்து பார்த்தால்,ஐயோ
ஜானி,இது 'அவன்' செயலாகதான் இருக்கும்.அவனே விடக்கூடாது,கைது செய்தாக வேண்டும்.
சரியாக சொன்ஞய் மார்க்!
பின்னர்,கமிஷனர் அலுவலகத்தில்-
இந்த ஒற்றுமையையோ ஊடு சூன்யத்தையோ நாம் நம்பமாட்டேன் ஜானி! ஆனல் நீ நிறைய ஆபத்தை விலைக்கு வாங்கியிருக்கிறுய்! இம்முறை நானும் வருகிறேன்- அதிகாரப் பூர்வமாய்


நீயா, நானு என்று அவனுக்கும் எனக்குமிடையே நடந்த கண்ணாமூச்சி ஆட்டம் அது கமிஷனர்.
நீங்கள் இடையில் நுழைந்தால் ஆட்டம் தடையாகும். "ஊடு" தலைமறைவாகிடகூடும்
'ஊடு' யார்?
இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட யாரோ ஒருவன்! எல்லோருமே சந்தேகத்திற்குரியவர்கள் தான்-'ஊடு' வால் சந்தேகப்பட்டவர்களைக் கூட அந்தப் பட்டியலில் சேர்க்கலாம்!
பாதிக்கப்பட்டவர்களையுமா? அந்தப் பையன்களையும், பெண்ணையுமா குறிப்பிடுகிறாய்!
அவர்களை மட்டுமல்ல-அவர்களது பெற்றோர்களையும் தான்!
ஆ-ஆனுல் அவர்கள் தான் ஏரானமான பணத்தை "ஊடு" விடம் இழந்திருக்கிறார்களே!
மார்க்கின் அப்பாவையும், லூசியின் சகோதரியையும் பொருத்தவரை அதுசரிதான்! ஆனுல் அர்னூர்டுக்கு இதுவரை பண இழப்பு ஏதும் கிடையாது!
இவர்களைத் தவிர, வேறு சிலரையும் கண்காணிக்க வேண்டும்! கிழவன் வஜ்ஜாரா- அந்தப் பல கலை வல்லுனன் சில்வெஸ்டர்- ஒரு முக்கிய விஷயமென்னவென்ருல், "ஊடு" வுக்கு இந்தப் பகுதி முழுவதும் ரொம்பப்பழக்கப்பட்டதாய் உள்ளது- சொந்த வீட்டைப் போல!


ஸாரி ஸார்-வயதான ஒருவர் உங்களை இப் போதே பார்க்க, அடம்பிடிக்கிறார்.
எதற்காகவாம்?
லெபோஸ் விவகாரம் பற்றி பேச.தன் பெயர் வஜ்ஜாரா என்று சொன்னார்.
ஏற்கெனவே அவரைபற்றி உங்களிடம் கூறி யிருக்கிறேன், கமிஷனர்.
வரச் சொல்!
கமிஷனர் வந்து-ஆனால், நீ எங்கே...இங்கே?
ஜானிக்கு.எங்களோடு தொடர்புண்டு மிஸ்டர் வஜ்ஜாரா-அமருங்கள்
லெபோஸின் மரணம் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?
சரியான அயோக்யன்.மனை சொந்தக்காரர்களிடமும் பணத்தைக்கறந்து விட்டான்
வேலையை முடிக்காமலேயே தான் நொடித்துப் போய்விட்டதாக அறிவிக்க முனைந்தான்.
அதனால் ஆத்திரபட்டு அவன்மீது சூன் யத்தை ஏவினீர்கள்-இல்லையா?


ஆமாம். அதற்குமுன் மனை உரிமையாளர்களும் பங்குதாரர்களும் அவனுடன் கூட்டம் போட்டோம் ஏகப்பட்ட அமளி.
லெயோஸ், இந்த 'பூலோக சுவர்க்கம்' குடியிருப்பு சங்கம் நாசமானது உன்னால்தான். எங்கள் பணத்தை ஏப்பமிட்டுவிட்டாய்
கடன் தாங்காமல் விழி பிதுங்குதுஎங்களுக்கு.
எங்களுக்கும்தான். நீ சுலபமாக நழுவ முடியாது. அதை அனுமதியோம்!
ஆத்திரப்படாதீர்கள். பிரச்னைகள் விரைவில் தீரும். பெருந்தொகை ஒன்று எனக்கு வரவிருக்கிறது.
பொய், ஏமாற்றுகிறான்.
சுரண்டல் பேர்வழி!
ஆளாளுக்கு கையை ஓங்கி கொண்டு ஆவேசமாக கத்தியபோது, விளக்கு அணைந்துவிட்டது. இருட்டினூடே ஓர் குரல் தீனமாக ஒலித்தது.
யாருடையது?
அயோக்கிய ராஸ்கல்! உன்னை வெட்டி புதைக்காமல் விடப்போவதில்லை நாங்கள்!



பின் விளக்கு வந்தபோது,லெபோஸின் முகம் சவமாக வெளுத்து கிடந்தது.என்னையே வெறிக்கபார்த்தான்–கத்தியது நானாக இருக்குமோ என்பது போல்!
ஆனல் கத்தியது நீங்களில்லையா?
சத்தியமாக இல்லை.அந்த குரலில் கொலைவெறி இருந்தது.எங்களை தவிர்த்து வேறு யார் குரலோ அது என்பது போல் வெகு அந்நியமாக இருந்தது.
அறையினுள் வேறு யாரேனும்ஒளிந்திருந்தனரோ?
இல்லை, நாங்கள் உடனே விளக்கேற்றிவிட்டோம்.வேறு யாரும் அங்கு இல்லை.எங்களில் ஒருவர் தான் கத்தியிருக்க வேண்டும்!
தாமதமாயென்றாலும், இப்படி ஒரு வாக்குமூலம் கொடுத்ததற்கு நன்றி மிஸ்டர் வஜ்ஜாரா.
இதைபற்றி நீ என்ன நினைக்கிறாய் ஜானி? யாரோ பழிவாங்க லெபோஸை கொன்றிருப்பார்களோ?
இருக்கலாம்,அப்படியொரு சாத்தியக்கூறு உண்டுஸார்!
மீண்டும் 'பூலோக சுவர்க்கத்'திற்கு ஜானி வந்தடைந்தார்—
U PORSCHE D



விரல்விட்டு எண்ணிவிடுகிற அளவு நபர்கள், இந்த அரைகுறை நகரமைப்பில் வந்து தங்க வேண்டியதிருந்திருக்கிறது. இல்லாமையும் இயலாமையும் மனக்கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்களுள் ட்ராயர்ட், டெமானட் சகோதரிகளான பணக்காரர்களும் உண்டு லெபோஸ் உள்பட!
பணக்காரர்களை சுரண்ட-ஊடூ சூன்யத்தை கையாள யாருக்கோ உதித்திருக்கிறது. பொம்மைகள் ஊசிகள், எல்லாம் ஏமாற்று வேலை.
விநோதமான முகமூடி-ஊடூ சூன்யம் பற்றி வஜ்ஜாரா சொன்ன ஏகபட்ட தகவல்களின் பிரதிபலிப்பு!
ஊசியை பொம்மையில் செருகியதும் தொலைவில் விளைவேற்படுவதெல்லாம் பொய். ஒருவேளை குற்றவாளியை மார்க்கின் தந்தை பார்த்திருக்கலாம்! அவரது திடீர் மரணத்திற்கு அது காரணமாயிருக்கலாம்!
இந்தப் பொம்மை-
அடக் கடவுளே-நான் அதை எப்படி மறந்தேன்!



தான் இனி செய்ய வேள் டியது மகிழ்ச்சி தரும் காரியமல்ல- ஆன ரம் வேறு வழி-யில்லை! டாக்டர் க்ரீனை -டனே பார்த்-தாக வே ம்!
விரைவில் டாக்டருடன் விரைந்தார் ஜானி-
ஓ...உனக்கு உதவ நான் தயார்! என்ன தேடுகிறாய் என்று கேட்கலாமா?
ஒரு புதிருக்கான விடை டாக்டர்.
சடலத்தைத் திருப்பிப் போட்டால் தான் ஆராய முடியும்?


விரைவில்-
பயங்கரமான உண்மை!பிணத்தை சோதித்ததில் உன் யூகம் சரியான-தென்று உறுதிப்படுகிறது.
குற்றவாளியை யூகிக்கமுடிகிறது. ஆனால் இந்த தடயம் போதுமானதா?உங்கள் இந்த உதவிக்கு மிக்க நன்றி டாக்டர்.
'ஊடு' நான் நினைக்கிறவனாகத்தானிருக்கும். ஆனால் அவன் வக்கீலை அமர்த்தி சட்டத்திலிருந்து தப்பிவிடக்கூடும் அழுத்தமான ஒரு ருசு வேண்டும். அது வரை மூச்சுக்காட்டக் கூடாது
நேராக தாக்கினால் ஆசாமி சுதாரித்திலாம். ம்ம் சிந்தித்து செயல்பட வேண்டும்.
ஆர்வத்தை தூண்டும் 'பூலோக சுவர்கத்'திற்கு மீண்டும் அன்று மாலையிலேயே ஜானி சென்றார்—
அவனுடைய சகாக்கள் யார்? இங்குள்ளவர்கள் தானா? அல்லது இதற்கென கொண்டுவரப்பட்ட அன்னியர்களா?
சந்தடியின்றி, அடிமேலடி வைத்து மெள்ள முன்னேறி வந்தன மூன்று உருவங்கள்—


அந்த இனிய மாலைப்பொழுதில், அரைகுறையாக நின்ற தங்கள் வீட்டினுள் ஆர்வத்தோடு டி.வி.யின் முன் அமர தொடங்கினர் பூலோக சுவர்க்கவாசிகள்—வெளியே நிலைமை வேறு விதம்..
உதவி கோரி குரல்கொடுப்பதில் பயனேதும் இராது. அவர்கட்கு கேட்காது. கேட்டாலும் அலட்டி கொள்ள மாட்டார்கள்.
என்னிடம் ஆயுதமில்லை. மூன்று பேரை சமாளிப்பது கடினமான காரியம்தான்.
தப்பிக்க ஒரே வழி தான்! என் காரிலிருந்து அப்பால் இட்டுச் செல்ல வேண்டும். பின்னர் ஒரே ஓட்டமாய் காருக்கு வந்து தப்ப வேண்டும்!


பார்த்துவிட்டான். சுடக்கூடும். நான் எங்கேயாவது பதுங்கிகொள்ள வேண்டும்
இந்த இடம் நிரந்தர பாதுகாப்பு தராது, இருந்தாலும்
அவனை சுற்றி வளைத்துகொண்டனர். அந்த சுருக்கு வேகமாக இறுகிக் கொண்டே வந்தது.


என்னை சுட்டிருக்கலாம் ஏன் சுடவில்லே?
ஒரு சனியன் ஒழிந்தது!


கதவோ, ஜன்னலோ இல்லை
வெளியேறி ஓட வகையில்லை
இங்கே நின்று சற்று
ஆசுவாசபடுத்திக்க
லாம்.ஓ இங்கே ஒருவன்



இன்னொருவனையும் வீழ்த்தி விட்டேன்!
ஜானியின் விழிப்புணர்ச்சி-ஆபத்திலிருந்து காப்பாற்றும் ஆருவது புலன் எச்சரிக்கை விடுவிக்க ஒரு கணமே தாமதித்தது! அதற்குள்-
க்ராக்!
ம்ம்-ஒரு வழியாக சுய-உணர்வு உனக்கு திரும்பி விட்டது அல்லவா!
ஆமாம், டாக்டர் சில்வஸ்டர் மார்க்வின்! அடடா, 'டாக்டர்' என்று சொல்லிவிட்டேன்! சாரி'பெயில்'ஆகிப் போன டாக்டர்" என்று நான் சொல்லியிருக்க வேண்டும்! இல்லையா?
மூடு வாயை!



தொட்டவை அனைத்திலும் தோல்வி-எதிலுமே நிலைக்க முடியவில்லை என்கிற ஆத்திரம்-எரிச்சல்-உலகத்திலுள்ள அத்தனை பேர்மீதும் காரணமற்ற வெறுப்பு-இங்கே "பூலோக சுவர்க்கத்தில்" நல்லதொரு எதிர்காலம் அமையும் என்று நம்பிக்கை கொண்டாய்-
ஏன்-அதில் என்ன தப்பு?
துரதிஷ்டவசமாக, மோசடி பேர்வழி லெபோரஸ் உன் அற்ப சொற்ப பணத்தையும் விழுக்கி ஏப்பம் விட்டுவிட்டான்! பழிவாங்கத் தீர்மானித்தாய்!
உண்மைதான்! தொடர்ந்து உயிர்வாழ லெபோஸுக்கு உரிமை கிடையாது என்று தீர்மானித்தேன்!
கிழவன் வஜ்ஜாராவின் "ஊடு சூன்ய" உளறல் களைக் கேட்டிருக்கிறாய் நீ! எல்லோரையும் பழி வாங்க இது அருமையான வழி என்று நினைத் திருக்கிறாய்! முதலில் லெபோஸை நெற்றியில் குத்தி கொலை செய்துவிட்டு "ஊடு சூன்யம்" என்ற புரளியை கிளப்பி விட்டாய்!
ஆமாம்! இந்தக் குடியிருப்பிலிருந்த எல்லோருமே என்னை வெறுப்படையச் செய்தனர்! கோழைகள்! கஞ்சர்கள்! சே!
நைச்சியமாகப்பேசி சில அப்பாவிகளை ஊடு சூன்ய வேலைக்கு உன் சகாக்களாக்கிக் கொண்டாய். ப்ளாக் மெயில் செய்து பணம் பறித்து, பின்னர் இங்கிருந்து ஓடிப்போய்விடுவதுதான் உன் திட்டம்!
அதுவேதான்! நாடக குழு அமைக்கத் துடித்த இளைஞர்கள் சுலபமாக என் வலையில் விழுந்து விட்டார்கள்-
அப்போதுதான் நீ வந்தாய்-உன்னைப்பற்றி நிறையக் கேள்விப் பட்டிருந்தேன்! உன்னோடு மோத விரும்பினேன்-!
அது சரி- மார்க்கின் தந்தையை ஏன் கொன்றாய்?
42


"ஊடு" யாரென்று அவர் சரியாக யூகித்து விட்டதுதான் காரணமா?
ஆமாம்! அவர் சாகவேண்டியது அவசியமாயிற்று! இல்லாவிட்டால் என் சாபங்களுக்கு வேறு யாரும் பயந்திருக்க மாட்டார்கள்!
அவருடைய மனைவி இல்லாத வேளையில் உள்ளே புகுந்தேன். அவரை மயக்கமடையச் செய்தேன்–அடுத்து உன்னை நான் இப்போது செய்யப் போவது போல்-
அந்த மரண அடையாளங்கள்?
ஓ அதையும் நீ தெரிந்து கொண்டு விட்டாயா? உன்னை ரொம்பவும்தான் துள்ள அனுமதித்து விட்டேன் போலிருக்கிறது. உன் நேரம் நெருங்கி விட்டது - உறுதி!
அந்த அடையாளங்கள் ட்ராயர்ட் போல் வடிவமைக்கப்பட்ட பொம்மையில் இருந்த அதே அடையாளங்கள்- மிச்சத்தை யூகிப்பதில் சிரமம் இருக்கவில்லை. இனியும் எதற்கு அந்த முகமூடி? கழைந்து எறி மார்க்வின்! இப்போது நீ என்னைக் கொல்ல உத்தேசித்திருக்கிறாயா?
நிச்சயமாக!
பிரபல ரிப்போர்ட்டர் ஜானியை இந்த உலகைவிட்டே அனுப்பி வைத்த பெருமையை இழக்க நான் விரும்பவில்லை-
எப்படி என் மரணம் நிகழ்ந்தது என்று
நீ அக்கு பங்சர் முறையை கற்றிருக்
கழுத்தின் பின் பகுதியிலுள்ள ஒரு

440


எப்படி என் மரணம் நிகழ்ந்தது என்று பெரும்புதிராக இருக்கும்-அக்கு பங்க்சர் முறையில் மரண அடையாளமாக ஓர் ஊசி குத்திய சிறுதுளை மட்டுமே என் உடலில் இருக்கும்!
ஹாஷ்ஹா-நீயும் அக்கு பங்க்சர் வகுப்புகளுக்கு சென்று வந்திருப்பாய் போலிருக்கிறது!
நீ அக்கு பங்க்சர் முறையை கற்றிருக்கிறாய்.மற்ற பாடங்களை விட்டொழித்தது போல் பின்னர் அதனையும் நீ விட்டொழித்தாய்! குறிப்பிட்ட ஒரு நரம்பு மையத்தில் ஊசியை குத்தினால் மரணம் சம்பவிக்கும் என்ற உண்மை உனக்கு மறந்துபோய் விடவில்லை!
கழுத்தின் பின் பகுதியிலுள்ள ஒரு நரம்பை துளையிட்டு, மார்க்கின் தந்தையை கொன்றிருக்கிறாய்! அந்த பொம்மையிலும் அதே இடத்தில் ஊசி குத்தப்பட்ட அடையாளம் இருந்தது!


எனவே, அது இயற்கையான மரணமல்ல, உன் கைவரிசைதான் என்று உறுதிப் பட்டது!
இவ்வளவு விபரங்களை நீ தெரிந்து வைத்திருப்பதால் இப்போது நான் உன்னை எப்படிக் கொல்லப் போகிறேன் என்ற விபரத்தையும் முன் கூட்டியே விளக்கப் போகிறேன்!
டாக்டர் க்ரீனுக்கு எல்லா விபரமும் தெரியும் என்பதை நினைவூட்டுகிறேன்-ஜாக்கிரதை!
ஆபத்துதான்- ஆனாலும் துணிந்து விட்டேன்!

491


என் செய்முறை என்னவென்ருல்- 10வது 11வது முதுகெலும்புகளுக்கிடையே உள்ள டௌஞ என்னும் புள்ளியில் ஊசியை செருகி-
ஸில்வெஸ்டர்!
ஆரம்பம் முதலே உன் செய்கைகளை கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். எனக்கு உன் மீது சந்தேகம் வலுத்தது. ஆனல் நம்பமுடியாமல் திணறினேன்!
மம்மி! குறுக்கே வராதே- உன் வேலையை கவனித்துக் கொண்டு போ! உனக்காக- நம் நன்மையைக் கருதியே இத்தனையும் செய்தேன்!
அந்த ஊசியை தூர எறியப் போகிருயா இல்லையா?
என்னைத் தடுக்காதே- பயலுக்கு அத்தனை இரகசியமும் தெரிந்து விட்டது! இவனை தீர்த்துக் கட்டிவிட்டு, இங்கிருந்து பணத்தோடு ஓடிப்போய் எங்காவது ஒரு மூலையில் நிம்மதியாக வசதியாக வாழ்வோம் நாம்!
இறுதியாக எச்சரிக்கிறேன். அந்த ஊசியை கீழே போடு!




வெளியீடு எண்: 42
பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626 123, போன்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி-626 123.




**கோல்-கீப்பரை நோக்கி மூன்று ஆட்டக்காரர்-களும் பந்தை உதைக்கிறார்-கள்! யாருடைய பந்தை அவர் பிடிக்கிறார்!**



**கையை எடுக்காமல் ஒரே மூச்சில் இந்த டிசைனை வரைந்து பாருங்கள்!**




சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்து அநாதையானவன் ப்ரூஸ்! அவனது பெற்றோர்களை கண் முன்னரே ஒரு கயவன் சுட்டுக் கொன்றிருந்தான். சினந்து எழுந்த ப்ரூஸ் தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு குற்றத்தை ஒழிக்கும் BAT MAN ஆக மாறினான். பகலில் தொழிலதிபராக நடமாடும் ப்ரூஸ், இரவில் BAT MAN உடையணிந்து அநீதியை ஒழிக்கும் அற்புத வீரராக இரகசியமாக செயல்படுகிறார்.



மிடுக்கு நடை போட்டுக் கொண்டு, விழிப்போடிருந்த காவலாளியின் பின்னால்-
ஒரு குற்றத்தின் ட்ரயல்!
ஓசையின்றி கதவை தள்ளித் திறந்து உள்ளே நுழைந்-தான் ஒரு ஆசாமி-
சட்டென்று பிடரியில் ஒரு அடி-காவலாளி சுயவுணர்விழந்து விழுந்தான் -
ணங்!
ஆ!
திரும்பி கதவருகே சென்ற அந்தப் போக்கிரி ஏதோ கிசுகிசுத்தான்-
ஒழுங்கு பண்ணி-விட்டேன் - ஆர்ப்-பாட்டமில்லாமல்!


பத்து செகண்டு-களுக்குப்பின் அவ-னுடைய சகாக்கள் உள்ளே வந்தார்கள். வெளியே காவல் நின்ற இரு காவ-லர்களையுல் தள்ளிக் கொண்டு
மூன்ருவது காவலாளி விழுந்து கிடந்த இடத்தை அடைந்ததும் அந்த இரு காவலாளிகளையும் அடித்து வீழ்த்துகிருர்கள்-
முதல் போக்கிரி மெள்ள உட்புற கதவை திறக்கிருன்
அவனை எதிர் கொண்ட நபர்-
ஆ! பாட்மேன்!


சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கி ஒருமுறை முழங்கியது-
டுப்!
ஆவ்!
தொலைந்தாய் இத்தோடு-
முடிந்தது உன் சரித்திரம்!

498


சட்டென்று ஒரு விசில சப்தம்-
பிரமாதம்! ஜமாய்த்து விட்டீர்கள்- ஒத்திகையை இத்தோடு முடித்துக் கொள்வோம்!
ஆனல்- இன்றிரவு நாம் மேற்கொள்ளப் போகும் முயற்சியின்போது பாட்-மேன் இப்போது போலல்லாமல் நம்மீது பாய எப்படியொரு யுக்தியை கடைப்பிடிப்பான் என்று யூகிக்கவே முடியாது!
எனவே நாம் மிக மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்!
பாட்மேனே வீழ்த்தியதும், பெட்டகத்தை திறந்து அள்ளிக் கொண்டு ஓடி வந்து விட வேண்டும்- அப்படித்தானே?
ஆமாம்- என் ஆராய்ச்சிகளுக்கு ஏகப்பட்ட பணம் தேவைப் படுகிறது!
எல்லாம் நல்லபடியாக நடந்து முடிந்தால்- நான் பரம எதிரி BAT MAN செத்து ஒழிவதோடு, பல மில்லியன்கள் நமக்கு சொந்தாகிவிடும்!

# பெங்குவின் உருவான கதை...!




கேட்க இனிமையாகத்தான் இருக்கி-
றது. ஆனல் அந்த கிராதகன் நிச்சய
மாக அங்கே வருவான் என்று
எப்படி சொல்கிறீர்கள்?
சங்கேத முறையில் நான் எழுதி வைத்-
திருக்கும் பட்டியலே அவன் நகல்
எடுத்துச் சென்றிருக்கிருன்!
சரியான இடத்திற்கு, சரியான
நேரத்திற்கு நிச்சயமாக அவன்
வந்து சேருவான் என்று உறு-
தியாக நமபுவோம்! மற்றவர்
களைப்போல BATMANஐ கண்டு
அஞ்சி ஓடிட இந்தபெங்குவின்
கோழையலல! நேருக்கு நேராய்
மோதி அவனை அழிக்கப்
போகிறேன்!
அதன் முதற்கட்டமாக
இன்று இரவு RC ல்-
அதாவது ராய்ஸ் கெமிக்
கல்ஸில் BATMANக்கு
சமாதி கட்டப்போகிறேும!


பண்டைக்கால ராட்சஸ பறவைகளை இம்முறை-யும் பயன்படுத்துகிறோமா?
இல்லை- அவசியப்பட்டால் கடைசிக் கட்டத்தில் கொண்டு வருவோம்!
என்ன - முடிந்ததா என் சிலை?
சரித்திரம் படைத்தவர்கள் வரிசையில் என் உருவச் சிலையும் இடம் பெறும் பொன்னாள் அதிக தொலைவில் இல்லை!
NELSON
ALEXA


இதற்கிடையே, அங்கே பாரக்ஸைடு டென்னிஸ் கிளப்பில் செல்வந்தர் ப்ரூஸ் தன் சிநேகிதி ரீனுவோடு சுவாரஸ்யமாக டென்னிஸ் ஆடிக்கொண்டிருந்தார்- மிகப் பெரிய தொழிற் சாம-ராஜ்ஜியத்தை கட்டிக் காக்கும் முதலாளி என்ற வேஷத்தில் உலவ் வரும் ப்ரூஸ், இரவு வேளையில், BATMAN ஆக செயல்பட்டு வரும் ரகசியம் உலகிற்குத் தெரியாது!
பிரபல தொழிலதிபர் ப்ரூஸின் வாழ்க்கையில் ஒருநாள் என்ற தலைப்பில் தான் எழுதப் போகும் கட்டுரைக்கு விபரம் சேகரிக்க அங்கே வந்திருந்த பத்திரிக்கை நிருபர் செஸ்டருக்கு ஏகப்பட்ட சலிப்பு-
எப்போது பார்த்தாலும் பெண்களோடு உல்லாசம் அல்லது விளையாட்டு- எப்போதுதான் வேலையில் ஈடுபடுவாரோ? காலையிலிருந்து இன்னும் ஒரு வரிகூட எழுதவில்லை நான் - உருப்பட்டாற் போல்தான்!


அடுத்து-
செஸ்டர்- எங்களை கொஞ்ச நேரம் தனிமையாக இருக்க விடுகிறாயா- ப்ளீஸ்!
ஷ்யூர் ஸார்!
என்னை பாரிஸ் கிளைக்கு மாற்ற உத்தேசித்திருக்கிறார்கள், எங்கள் ஆபீஸில்! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் இதைப் பற்றி? நான் போய்விடட்டுமா?
முக்கியமான ஆனால் இரகசியமான வியாபாரம் என்று சொன்னார்-என் கட்டுரையில் கட்டாயம் இடம்பெற வேண்டுமே அது!
ம்ம்-ம்-மேஜை விரிப்பின் மீது என்னவோ கிறுக்கியிருக்கிறாரே-என்ன அது?
ப்ரூஸின் சிந்தனை பெங்குவின் மீது லயித்திருந்தது- அவரையும் அறியாமல் மேஜை விரிப்பின் மீது ஏதையோ கிறுக்கிக் கொண்டிருந்தது அவருடைய கை! பெங்குவினின் முதல் தாக்குதல் RC என்ற தொழிற்சாலையின் மீது நடக்கும் என்ற விபரம் அவர் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது!
செஸ்டர்- இன்றைக்கு இவ்வளவுதான்- உன்னை ஏமாற்றி விட்டேன் என்று தோன்றுகிறது- ஆனால் இன்றுமாலை ஒரு முக்கியமான இரகசியமான வியாபாரத்தில் ஈடுபடப்போகிறேன்!
R.C.- இது ஒரு டிரேட்-மார்க் அல்லவா? ஏற்கனவே பார்த்திருக்கிறேன் இதை!
ம்-வந்து-ரீனு- வர வர பிரச்னைகள் கூடிவிட்டன - ஏகப்பட்ட சிக்கல்கள்-
என்னைக் கொஞ்சம் அவற்றில் கவனம் செலுத்த விடேன்!
மீண்டும் நாளை சந்திப்போம்!
ம்ம்-கண்டு பிடித்துவிட்டேன்! ப்ரூஸ் அந்தக் கம்பெனியை வாங்கப் போகிறார் அல்லது அதுமாதிரி வேறு ஏதோ ஒன்று-


இரவு வேளை! கோதம் நகரின் வடகரை தொழிற்பேட்டையில் பரந்து விரிந்து தலை நிமிர்ந்து - ராய்ஸ் கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் தொழிற்சாலை கட்டிடம்
நேரம் - சரியாக மணி 7-23.
ROYCE CHEMICALS


பக்கவாட்டு நுழை வாசலில்-
வாயைத் திறந்தாயோ பிணமாகிப் போவாய்!
அடுத்து-
முக மூடியை- அணிந்து கொள்ளவும்!
மிக்கி உள்ளே நுழைந்ததும் பெங்குவின் தன் கையிலிருந்த குடையை லாவகமாக உயர்த்திப்பிடித்தான்- உண்மையில் அது குடை அல்ல- மயக்க வாயுவை பீச்சும் கருவி-
ஒன்- டு- த்ரீ- இதோ!
புஸ்ஸ்ஸ்!
இனி நாமும் உள்ளே போகலாம்!
கதவு நைச்சியமாக திறக்கப்பட்டு விட்டது- எனவே எச்சரிக்கை மணி ஒலிக்கும் அபாயம் தவிர்க்கப்பட்டு விட்டது!
மிக்கி, முதலில் நீ உள்ளே போய் அங்கே நிற்கும் காவலாளியை வீழ்த்து!
ஆனால்-
ஏதோ குளறுபடி!
காவலாளியை காணோம்- மிக்கி எங்கே?
FINANCE
SECURITY


இங்கே இருக்கிறேன். கிட்டே வந்து பாரேன்!
படார்!
ஊப்ப்- பாட்மேன்! இங்கே எப்படி-
பிடியுங்கள் அவனை!
சத்!
என்னிடம் ஏற்கனவே நீ கற்றுக்கொண்ட பாடம் போதவில்லையா பெங்குவின்!


இம்முறை கற்றுக் கொள்ள அல்ல கற்பிக்க வந்திருக் கிறேனடா முட்டாள்!
இது என் ஸ்பெஷல் தயாரிப்பு- இந்தக் கலவை உன் மீது பட்டதும் என்ன விபரீதம் விளைகிறதென்று பார்!
புஸ்ஸ்!
விஷ்ஷ்!
என்னிடம் செல்லாது உன் குள்ள நரித் தந்திரம்!


விடாதே-
அமுக்கு!
நான் போகிறேன்-
வெளியே!
தடாங்!
தற்காப்புக் கலைகளில் மன்னனான BATMANஐ அவ்வளவு எளிதில் மடக்க முடியுமா-என்ன ?


ஆனால் எதிர்பாராத விதமாக-
ஹேரி என்ன விவகாரம் இங்கே?
கலவையை உமிழும் கருவி தற்செயலாக இயக்கம் பெற்றுவிட பாட்மேன் ஒரு கணம் குருடாகிப் போனார்-
ஹா-ஹ் ஹா
அந்தக் கணத்தை எதிரி பயன்படுத்திக் கொண்டான்-
சத்!
வகையாக சிக்கிக் கொண்டு விட்டாய், தப்பவே முடியாது நீ!


நீண்ட நேரத்திற்குப் பின் பாட்மேனுக்கு சுயவுணர்வு திரும்பியது-
சுற்றிலும் ஒரே கும்மிருட்டு-
மெள்ள எழுந்து தன் மினி-டார்ச்சை அடித்துப் பார்த்தார்-
காலியாக உள்ள ஒரு ஒரு பிரம்மாண்டமான கெமிக்கல்ஸ் டாங்க்-கினுள் இருக்கிறேன் போலும்!
ஆழம் சுமார் முப்பது அடி இருக்கலாம்- மேலே மூடியிருக்கிறது!
நிருபர் செஸ்டரும் என்னோடுதான் இருக்கிறார்! தொழிலதிபர் ப்ரூஸ்-ம், BATMAN ம் ஒரே நபர் என்பது இவருக்குத் தெரியாது!



நிருபரை தட்டி எழுப்பினர் பாட்மேன்- கண்களை திறந்த செஸ்டர் கலவரத்-தோடு மலங்க மலங்க விழித்தான். நல்ல வேளையாக அவனுக்கு தலையில் லேசான காயம் மட்டுமே-
உஷ்ஷ்- ஏதோ சப்தம் கேட்-கிறது மேலே!
பாட்மேன்? உங்களையும் பிடித்து விட்டார்களா? ப்ருஸைனேயை எதிர் பார்த்து இங்கே நான் வந்தேன்!
ம்ம்- நாம் இப்போது எங்கேயிருக்கின்றோம்!
காலடிச் சத்தம் நெருங்கி வந்ததைத் தொடர்ந்து மூடி அகற்றப்படும் ஓசை கேட்டது. அடுத்து ஒளிக்கீற்று பாய்ந்தது- அவர்களை நோக்கி!
கீழே ஏதோ இறங்கி வருகிறது- என்ன அது
ஹூம்- பல வித நுட்சும கருவிகள் நிறைந்த என் இடை பெல்ட்டையும் காலி செய்து விட்டிருக்கிறார்கள்- தப்-பிச் செல்ல எந்த உபகரணமும் என் வசம் இல்லை, இப்போது!
ஊஞ்சல் போன்ற அமைப்பில் அமர்ந்து கீழே இறங்கி வந்தான் பெங்குவின்-
பின்னர் என் கல்லறையில் பொறிக்கப்படவிருக்கும் சாதனையை இப்போது நிகழ்த்தவே நான் இங்கே வந்திருக்கிறேன்!


மனிதர்கள் சாசுவதமல்ல-என்ருவது ஒருநாள் மடிந்து மண்ணேடு மண்ணுகிப் போவது உறுதி. ஆனல், என் போன்ற மேதைகளின் பெயர்கள் என்றென்றும் மக்களின் மனத்தில் நிரந்தர இடம்பெறவேண்டும் என்ற குறிக்கோளோடுதான் சாதனையாளர்களுக்கு என் மியூஸியத்தில் உருவச் சிலைகளை வைத்து வருகிறேன்-
இந்த பெங்குவினும் அந்த சாதனையாளர்கள் பட்டியலில் இடம்பெற தீர்மானித்தான். இதுவரை நான் சாதித்தது எவ்வளவோ உண்டு-
ஆனல் அவை அனைத்துக்கும் முத்தாய்ப்பாக இருக்கப் போகிறது நான் இன்று இப்போது நிகழ்த்தப்போகும் சாதனை. அது- வேறு எவராலும் சாதிக்க முடியாத-
பாட்மேனின் மரணம்!


நான் வடிவமைத்த பண்டைக் கால ராட்சஸ பறவைகளைக் கொண்டு நினைத்ததை செய்து முடிப்பேன்!
பெங்குவின் - இந்த மனிதரை வெளியேற்றி அனுப்பி வை- உனக்கும் எனககும்தான் போட்டி-இடையில், இந்த அப்பாவி என்ன பாவம் செய்தார்!
கொஞ்சம் கொஞ் சமாக மேலே ஏறத் தொடங்கினான் பெங்குவின் -
அவர் சாக மாட் டார்-செஸ்டர் ஒரு பத்திரிக்கை நிருபர் என்று அறிவேன். பாட் மேனின் சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தை நேரில் காணும் வாய்ப் பைப் பெறுவார். என் சாதனைக்கு இப்படியொரு சாட்சி வலிய கிடைத்ததை நான் ஏன் உதறி எறிய வேண்டும்?
அடுத்து, நான் என் அடுத்த தேட்வட பற்றி அங்கே திட்ட மிட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இன்னும் சற்று நேரத்தில் நான் அனுப்பி வைக்கப் போகும் எமதூதர்கள் இங்கே உன்னை வந்து சந்திப் பார்கள்-பை-பை!


பெங்குவின் மறைந்து விட்டான்-அதைத் தொடர்ந்து-
ஹாங் - ராட்சஸ பறவைகள்-
ரோபோக்கள்! நீ சற்று ஒதுங்கிக் கொண்டுவிடு- செஸ்டர்!


உலோக சிறகுகளை பட-படவென்று அடித்துக் கொண்டு கொலை வெறி-யோடு கீழே இறங்கி வந்தன அந்த இரு பறவைகளும்-
பாட்மேனை குறி வைத்து பாய்ந்து தாக்கின- ஒவ்வொரு முறையும் புலிப் பாய்ச்சலாகப் பாய்ந்து விலகி தப்பினார் பாட்மேன்-
இறுதியில் ஒரு பறவை அவரை தன் கூரிய நகங்களைக் கொண்ட கால்களால் இறுகப் பற்றிய போது
க்ரீக்க்!
அதன் வலிய அலகுகளைப் பற்றி தன் சக்தியனைத்-தையும் ஒன்று திரட்டி பிளந்தார்-


என்னிடம் பலிக்காது உங்கள் ஜம்பம்!
போய்த் தொலை சைத்தானே!
சத்!
சுலபமாக நொறுக்கித் தள்ளி விட முடியும் என்னால்!


ஆனால் இவைகளை ஒரேயடியாகச் சிதைத்து விடக் கூடாது!
தப்பி வெளியேற இந்தச் சிறகுகள் எனக்கு தேவை!
படக்!
செஸ்டர்- அங்கே கிடக்கும் பறவை-யும் இங்கே அருகே இழுத்துப் போடு!


நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாயோ- தெரியவில்லை! இப்போது நாமிருவரும் வெளியேற ஒரு யுக்தியைக் கையாளப் போகிறேன்!
அந்த உலோக பறவைகளைப் பிரித்து தேவையான பாகங்களை இணைத்து பாட்மேனின் வலிய கரங்கள் நுட்பமாக அதே சமயத்தில் துரிதமாக இயங்கின-
சிறகுகளை சேதமில்லாமல் கழற்றி விட்டேன்- மோட்டார்களையும்தான்!
எங்களிருவரின் பளுவையும் தூக்கிச் செல்லத் தேவையான திறன் சிறகுகளை இயக்கும் இந்த மோட்டார்களுக்கு இருக்கும் என்று நம்புகிறேன்!


நிச்சயமற்ற சில
நிமிடங்களுக்குப் பின்-
புறப்படுவோமா?
மோட்டார்கள் இயக்கம் பெற்றன- அதைத்
தொடர்ந்து இறகுகள் அசுர கதியில்
அடிக்கத் தொடங்கியது-
டப்! டப்! டப்!
டப்! டப்!
ஹேராய்- பலித்து
விட்டது!


சில விநாடிகளுக்குப் பின் -
இனியும் உன்னைப் பற்றி அக்கறைப் பட்டுக் கொண்டிருக்க எனக்கு அவகாசமில்லை - ஏணி வழியே கீழே இறங்கினாயானால் வேறு பிரச்சனை ஏதும் உன் வழியில் வராது. அந்த இறக்கைகளை என் நினைவுப் பரிசாக நீ எடுத்துச் செல்லலாம்!
நன்றி - அனைத்திற்கும் நன்றி!
சற்றுத் தொலைவில் தயாராக காத்து நின்றது பாட்மேனின் கார் -
அவன் எழுதி வைத்திருந்த சங்கேதக் குறிப்பிலிருந்து அவனுடைய அடுத்த கொள்ளை நடவடிக்கை நான் கணித்துள்ள மூன்று இடங்களில் ஏதேனும் ஒன்றில் நடக்கும்!
அந்த மூன்று இடங்களிலும் பென்குவின் சென்றிருக்கும் இடம் எது என்று தாமதம் இன்றி நான் கண்டு பிடித்தாக வேண்டும்!



சில நிமிடங்களுக்குப் பின்—
APEX STORAGE
தளவாட சாமான்கள் சேமிப்-
புக் கிடங்கு! தவறான இடத்-
திற்கு வந்து விட்டேனோ?
இல்லை- அதோ கீழே விளக்கு
வெளிச்சம் தெரிகிறது- ஒரு
பழைய அலமாரியின் எதிரே
குழுமி நிற்கின்றனர்!
என்னென்று
இப்போது
புரிந்து
விடும்!
டம்!
டமால்!
ஆ!
ஆ- ஐயோ-
பாட்மேன்!


கும்!
ஒப்! ஒப்!
சத்!
மடார்!


எதுவுமே பேசாமல் சண்டமாருதமாக விளாசித் தள்ளி-னார் பாட்மேன்.
ஷியூயயய
ஈடு கொடுக்க முடியாமல் எதிரிகள் சிதறியோடினர்-
டமால்!
புஸ்!




இந்த அலமாரியினுள் அப்-
படி என்னதான் இருக்கிறது
என்று இப்போது நான்
திறந்து பார்க்கலாம்!
அட- இரகசிய
உள்அறை கூட
இருக்கிறதே!
அதனுள்ளே-


முன்ருண்டுகளுக்கு முன்
திருடு போன மில்லியன்
பெறுமானமுள்ள
பத்திரங்களல்லவா
இவை!
சாக்கடையில் நெளியும் அற்பப்
புழுவே இம்முறை நீ தப்பவே-
முடியாது! கையும் களவுமாக
பிடிபட்டு விட்ட உன்னை
கம்பி எண்ண வைக்கிறேனு
இல்லையா- பார்!



மறுநாள் மதியம்-
ப்ரூஸின்
ஆடம்பர மாளிகையில்-
அற்புதமான சாகஸம் ஸார்! பேப்பரில் ஏகப் பட்ட பாராட்டு-உங்களுக்கு!
இனி அவன் வெளியே நடமாடவே முடியாது! தீட்டி விடுவார்கள்-வலகயாக!
BAT-MAN!
அன்று பிற்பகல்-பார்க்ஸைடு டென்னிஸ் கிளப்பில்-
மிஸ்டர் ப்ரூஸ் -நேற்று எனக்கு அடித்தது பாருங்கள் ஓர் அதிர்ஷ்டம்-பாட்மேன் நேற்றிரவு நிகழ்த்திய சாகஸத்தின் போது நானும் அதில் பங்கேற்றேன்-தெரியுமா?
அதெப்படி சாத்தியம்? பத்திரிக்கை நிருபர்கள் நன்றாக கதை விடுவார்கள் என்று சொல்வார்கள். ஆனாலும் இப்படியா?
முன்தினம் மேஜை விரிப்பில் ப்ரூஸ் கிறுக்கியதை பார்த்து ஒரு யூகத்தின் பேரில் ராய்ஸ் கெமிக்கல்ஸுக்கு தான் சென்றதை சுருக்கமாக விவரித்தான் செஸ்டர்-
ஆனால்-நான் கொஞ்சமும் எதிர்பாராவிதமாக பாட்மேனை அங்கே சந்தித்தேன்-என் யூகம் தவறாகிப் போனாலும் கிடைத்தற்கரிய வாய்ப்பு எனக்கு கிட்டியது-



செஸ்டர் அப்பால் சென்றதும்-
R.C. - என்று எதற்காக கிறுக்கினீர்கள்-
R-C- என்றால் ரீனு காண்ட்ரெல்-உன் இனிஷியலதான்! உன் பெயரை நான் கிறுக்கிக் கொண்டிருப்பதை செஸ்டர் தப்பாகப் புரிந்து கொண்டு ராய்ஸ் கெமிக்கல்லை நான் வாங்கப் போவதாக நினைத்து விட்டார்!
கெட்டிக்காரத் தன்மாய் சமாளித்து விட்டார் ப்ருஸ்-
அநியாயம் - அக்கிரமம்- சட்டவிரோதம்! எனக்கு எப்போது ஜாமீன் கிடைக்கும் என்று இப்போதே தெரிந்தாக வேண்டும்!
இதுபற்றி பாட்மேன் சொன்னதை ஏற்கனவே நான் உன்னிடம் சொல்லி விட்டேன்-
அங்கே ஜெயிலில்...
இந்த உன் உருவச் சிலை வாய்திறந்து கேட்கும் நாளில்தான் உனக்கு ஜாமீனில் விடுதலை கிடைக்கும்!
சை!
முற்றும்.


விச்சு & கிச்சு
அச்சச்சோ, ஸாரி கிச்சு!
அடச்சே! மனுஷனை கொஞ்ச நேரம் நிம்மதியாய் காமிக்ஸ் படிக்க விடமாட்டாயே! உன் பெட்ரூமில் போய் இந்த சனியன்களை தூக்கித் தொலைந்தால் என்னவாம்?
ஓ.கே! கிச்சு,
பின்னர், மாடியில் -
ஒன், டூ, த்ரீ! ஹப்!
ஐயையோ!
தொப்!
வ-வந்த கிச்சு, யோசனை உன்னுது தானே கிச்சு!
முற்றும்.


அடுத்த வெளியீடு
ஈகிள்மேன்
தோன்றும்
கடத்தல் வலை!
ரூ. 2/-
லயன் காமிக்ஸ்


ARCHIE
லயன்
காமிக்ஸ்
Registered No: TN/VR/09